உ

சிவமயம்.

தணிகை நபாஷிதிமாலை, தணிகையந்தாதி,

தணிகைப் பிள்ளைத்தமிழ், சிவஸ்தலமாலை, நக்ஷத்திரமாலை,

சரஸ்வதியந்தாதி, சரஸ்வதிமாலை சரஸ்வதிஸ்தோத்திரம்

இவையாவுமடங்கிய

# பலநூல் கோர்வை.

ACL-MKU
00729



MADRAS:
MANICKA VILASAM PRESS.

1923.

Price As. 6] [Postage Free.

உ

கடவுள்துணை.

# தணிகை தயாநிதிமாலை.

தி. கந்தப்பதேசிகர்

திருவாய்மலர்ந்தருளியது.

இஃது

சிறுமணவூர்,

முனிசாமிமுதலியாரவர்களால்

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாசஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1904.

உ

கணபதி துணை

# தணிகை தயாநிதிமாலை.

நீரணிமலர்கொண்டருச்சனை புரியே னின்றிருத்தாள்பணிந்தறியேன்
சீரணிதமிழாலேத்தவுமறியேன் றீவினைதொலைத்தருள்புரியாய்
பூரணியுலககாரணியிமையப் பொருப்பிறையளித்தமுக்கண்ணி
யாரணிவிமலையருள்செருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (க)

நீதியுமறியேனெறிகளுமறியே னின்றிருப்புகழனுதினமு
மோதியுமறியேனெனினும்வரங்க ளுகந்தெனக்கருள்புரிந்திடுவாய்
சாதியுங்குரவும்வேங்கைகுங்குமமுஞ் சந்தனங்களுமணங்குலவு
மாதியெம்பரமனருடிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (உ)

எண்ணிலேனுனதுசடக்கரமதனை யிருந்தவநோன்புநல்விரதம்
பண்ணிலேன்றுதிகள்படித்திலேனதிக பாவியேன்றனக்கருளுவையோ
விண்ணில்வானவர்தஞ்சிறைதனைத்தவிர்த்து வேண்டியவரங்களையளித்த
வண்ணலேதணிகைப்பதிதனிலுறையு மாறுமாமுகதயாநிதியே. (ங)

முன்செய்தீவினையோபின்செய்தீவினையோ மூண்டதுநல்குரவதனுக்
கென்செய்கேனடியேன்றுயர்களைந்துயர்வீ டெனக்கருள்செய்யுநாளுளதோ
மின்செய்நூலிடையாள்வேடர்தஞ்சிறுமி விரும்பிவாழ்தினைப்புனமதனி
லன்புசேர்கணியாய்நின்றிடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (ச)

காதரமனைத்துந்தொலைத்துனதடியைக் காட்டியுன்னடியரிற்கூட்டிச்
சீதரன்பிரமனறியொணாவீட்டிற் சேர்த்தியாட்கொள்ளுநாளுளதோ
பூதரமனையசிங்கமாசூரன் பொருகரிமுகனசுரேச
ஞாதரமனைத்துந்தொலைத்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (ரு)

மேருவைச்சேருங்காகம்பொன்னிறமாய் விளங்கல்போலுன்னடிக்கமலச்
சாருவைச்சேருமெனையுநின்னடியார் தம்மொடுங்கூட்டியாண்டருள்வாய்
தாருவைச்சேரும்வல்லிபோலிருவர் தனம்படவிளங்குதிண்புயனே
யாருவப்புடன்வானோர்பணிதணிகை யாறுமாமுகதயாநிதியே. (சு)

# தணிகை தயாநிதிமாலை.

சிவனடியவருக்கிடர்புரிந்தாலுந் தீவினைபலபுரிந்தாலும்
பவநெறிக்குரியபாவமேசெயினும் பஞ்சபாதகங்கள்செய்தாலுந்
தவநிலைகுலையத்தாழ்வுசெய்தாலுஞ் சமித்தெனைப்புரந்தளித்திடுவோ
யவனவள துவாயமர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (எ)

சிறப்பொடுபூசை புரிகிலேனெனினுஞ் சினகரம்வலம்புரியாமன்
மறப்பொடுநிலத்திற்றுட்டரோடிணங்கி வாய்மையைப்புகல்கிலேனெனினும்
பிறப்புடனிறப்பாங்கடலழுந்தாமற் பிரசமாமலர்ப்பதந்தருவா
யறப்பணிபுரிவோர்க்கருடிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (அ)

பஞ்சபாதகமேபுரிகினுமுன்னைப் பவந்தொறுந்தீமைசெய்திடினுந்
தஞ்சநீயெனவந்தடைந்திடுங்கொடியேன் றன்பிழைபொறுத்துநல்வரங்கள்
விஞ்சவேயருளியெனைப்புரந்திடலுன் மேற்பிழைசொல்பவருளரோ
அஞ்சவாகனனுக்கருடிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (கூ)

மழையிலாப்பயிர்போல்வாடினேன்கருணை மழைபொழிந்தியான்முனம்புரியும்
பிழையெலாம்பொறுத்துப்பெருவரமளித்துப் பேயனேன்காணவந்தருள்வாய்
தழையெலாங்கீழாய்விண்ணில்வேரோட்டுஞ் சலதிமாமரந்தனைப்பிளந்த
வழகனேதணிகைமலையில்வீற்றிருக்கு மாறுமாமுகதயாநிதியே. (கo)

மந்தரமனையபாவமேசெயினும் வல்வினைபலபுரிந்திடினும்
பந்தனைப்பிறப்பிலழுந்தினுமுனது பங்கயப்பாதநான்மறவேன்
சுந்தரமுகுந்தன்மருகனேயடியர் துயரெலாந்தவிர்த்தசற்குருவே
யந்தரத்தவர்நின்றருச்சனைபுரியு மாறுமாமுகதயாநிதியே. (கக)

துக்கசாகரத்திலழுந்தியெந்நாளுந் தொலைவிலாக்கவலைநோயடைந்து
மிக்கபேரறிவுகுலைந்துநான்புவியில் வீணிலேதிரிவதுமழகோ
தக்கவாழ்வருளியுலகெலாமதிக்குந் தனியரசெனக்கருள்புரிவாய்
அக்குமாலையனீன்றருடிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (கஉ)

இந்திரன்பதமுமிமையவர்பதமு மெண்டிசைக்காவலர்பதமுஞ்
சந்திரன்பதமுஞ்சூரியன்பதமுஞ் சக்கரமாயவன்பதமுங்
கந்தமாமலரோன்பதவியுமுனது கடைக்கணாலுதவியபதமே
யந்தவாறெனக்குமருடிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (கங)

வேண்டியவரங்கள்பற்பலவுதவி வேண்டியசெல்வமுமளித்துச்
சேண்டருமுனதுபாதபங்கயத்திற் செலுத்திடுபத்தியுமருளாய்
தூண்டருசெம்பொற்புயங்கள்பன்னிரண்டின் துதிப்பவர்பகையறுப்பவனே
யாண்டலைக்கொடியைப்பிடித்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (கச)

பெரியவர்தமக்குப்பிழைபுரிந்தேனோ பிறர்மனைதனைவிழைந்தேனோ
குருமொழியிகழ்ந்துபழித்துரைத்தேனோ கொடியமாமிடியினான்மெலிவேன்
றிருவருள்புரிந்துநீவினையகற்றிச் செல்வமுங்கல்வியுந்தருவாய்
அரியயன்பணியுமொருதிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (கரு)

மட்டிலாப்பாவந்தனைப்புரிந்தாலு மலரடிக்கன்பிலாதுழலுந்
துட்டரோடுறவுசெய்திருந்தாலுந் தூயநின்சந்நிதியடுத்தால்
விட்டிடாதின்னுமிருக்குமோவிதனை விரித்துநீயெனக்குரைத்திடுவாய்
அட்டமாசித்தியருள்செருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (கசு)

வாசவன்மலரோன்வேண்டுநல்வரமும் வாழ்வுநீதந்தனைமுன்ன
நீசனேன்வேண்டும்வரமுதவாம னிற்பதுநீதியோவுரையாய்
பேசியேகலியில்வரந்தருந்தெய்வம் பிறரிலையெனவுனையடுத்தேன்
ஆசறுமுனிவர்தவஞ்செயுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (கஎ)

வெந்தநீரணியும்வேதியர்மறையுள் விதித்திடும்விதிவழிநடப்ப
தெந்தநாளுனதுதிருவடிக்கன்பா யிருப்பதுமெந்தநாளுரையாய்
இந்துசேகரனுக்கோமெனும்பொருளை யிருஞ்செவியிடைப்புகல்குரவா
வந்தமாதியுநீங்கிடுந்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (கஅ)

மனந்தனிலுனதுதிருவுருநினைக்க வாயினாலுன்புகழ்வழுத்தக்
கனந்தருதலையாலுன்கழலிறைஞ்சக் கசடனேற்கென்றருள்புரிவாய்
தனந்தருமளகைக்கதிபதிதோழன் றந்தருண்மயூரவாகனனே
யனந்தனும்பணியுமொருதிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (ககூ)

பாயுமாமதஞ்சேர்மதகரிபோலப் பற்பலதீக்குசெய்திடினு
நீயுமோரறிவாமங்குசமதனா னிறுத்தியாட்கொள்ளுநாளுளதோ
தாயுமாயுயிர்க்குத்தந்தையாயுலகந் தனைப்புரந்தருள்குருபரனே
யாயுமாமறைகடேடருந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (உ0)

காலமேயெழுந்துன்றிருவடிநினைந்து காமலர்பறித்துநின்பூசை
சாலவேபுரியாதுழலுநாயடியேன் றனக்கருள்புரிவதென்றுரையாய்
நீலமாமயின்மேலேறியோர்நொடியி னிலவுலகெலாம்வலம்வருவாய்
ஆலமாமிடற்றோனருள்செருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (உக)

மாயிரும்புவியின்மனிதராய்ப்பிறந்து வண்டரைமதனெனப்புகழ்ந்து
போயிரந்துண்ணும்புலவர்நின்கமலப் பொன்னடிகாண்பதற்கெளிதோ
தாயிரங்காதபிள்ளைபோலடியேன் றவிப்பதுநீதியோவுரையாய்
ஆயிரங்கதிரோன்பணிதிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (உஉ)

சாத்திரமறிந்துன் றிருவடிக்கமலந் தன்னையுமருச்சனைபுரியேன்
பாத்திரமறிந்துபிச்சையிட்டறியேன் பாவியேனுய்யுநாளுளதோ
காத்திரம்படைத்தசிங்கமாசூரன் கவிழ்ந்திடவயில்விடுத்தவனே
யாத்திரண்மேய்த்தோன்மருகனேதணிகை யாறுமாமுகதயாநிதியே. (௨௩)

காகமுநரியுந்தமதெனுமுடலைக் காதலித்துலகெலாமலைந்து
சோகமுந்துயரும்படைத்தநாயடியேன் றுயர்கெடவருளுநாளுளதோ
மாகமுஞ்சுரரும்வாழ்ந்திடச்சூரன் மடிந்திடவேலெறிந்தவனே
யாகமம்புகலுமுயர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௨௪)

நிலையிலாப்பொன்னுநிலையிலாமண்ணு நிலையிலாப்பெண்ணையுநினைந்து
கலையிலாவுணர்வோடெங்கணுமயங்குங் கசடனேனுய்யுநாளுளதோ
தலையிலாக்கவந்தமெண்ணிலநடிப்பத் தகுவர்தஞ்சென்னியைத்தடிந்தோய்
அலையுலாஞ்சுனைசேர்தணிகைமால்வரைவா ழாறுமாமுகதயாநிதியே. (௨௫)

திக்குவேறிலையுன்றிருவடியல்லாற் றீயனேன்குறையெலாம்புகன்று
மிக்கபேரருளைப்புரிந்திடாதிருந்தான் மெய்யருள்பொய்யெனப்படுமோ
விக்கணந்தனிலேவேண்டியவரங்க ளீந்துநல்வாழ்வுதந்தருள்வா
யக்கமீராறுபடைத்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௨௬)

உனதுமாமலையைத்தினம்வலம்புரிந்து முபாசனைசெய்திரந்திடினு
மெனதுதீவினையைத்தடிந்தருள்புரியா திருப்பதுமுனக்கழகியதோ
சனகனேமுதலாமுனிவருங்கமலத் தவிசனுந்திவிண்ணவரு
மனகனேயெனவாழ்த்தெடுத்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௨௭)

பழியிலாவுடலும்பயமிலாமனமும் பாதகத்துடன்படாச்செயலும்
கழிவிலாவயதுங்குறைவிலாத்தனமுங் கடும்பகைதானிலாவரசு
மொழிவிலாவறமுமிழிவிலாக்கதியு முனதடிநம்பினேற்கருள்வா
யழிவிலாப்பதவியருள்செருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௨௮)

படைக்கலஞ்சுமந்துபகைவரைத்தடிந்து பாரெலாமொருதனியாண்டு
மடைக்கலஞ்சுமந்தமகளிரைப்புணர்ந்து மைந்தரும்வாழ்வுமேசிறந்து
கொடைக்கலமிலாதுகொடுத்திடுநிதியுங் குலவுமுன்கருணையென்றறிந்துன்
அடைக்கலம்புகுந்தேனருள்புரிதணிகை யாறுமாமுகதயாநிதியே (௨௯)

காலையிலெழுந்துமஞ்சனமாடிக் கால்களால்வலஞ்செயவுச்சி
வேலையிலடியார்பசிகெடச்சமைத்து விருந்துசெய்வித்திடவந்தி
மாலையிற்றூபதீபமுமேற்றி மகிழ்ந்திடும்பேறெனக்குதவா
யாலையங்கழனிசூழ்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௩0)

குங்குமம்புனுகுசந்தனமகரு குற்குலுகற்புரமருவேர்
பைங்கருங்குவளைதண்புனல்கொடுநின் பதமலரருச்சனைபுரியும்
புங்கவரடிக்குற்றேவல்செய்தொழுகும் புண்ணியமெனக்குவந்துறுமோ
வங்குசபாசன்றம்பியாந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௩௧)

நீதியோவுனக்குநான்வெகுநாளாய் நின்றிருச்சந்நிதியடுத்தேன்
சேதியாவையுமேசெப்பினுங்கேளாச் செவிடர்போலிருப்பதிங்கழகோ
வோதுவாயொருசொலுண்டிலையென்ன வுனக்குநானடிமையுமலவோ
வாதியேநடுவேயந்தமேதணிகை யாறுமாமுகதயாநிதியே. (௩௨)

கார்த்திகைவிரதந்தனைமறந்தேனே கந்தசஷ்டியிற்பிழைத்தேனே
தோத்திரஞ்செய்யுந்தொழின்மறந்தேனே துணையடிக்கன்பொழிந்தேனே
பாத்திரங்கொண்டுபலிக்குழலாமற் பாவியேன்றுயர்களைந்திடுவா
யாத்தர்கடுணையாய்வளர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௩௩)

கொடியவருறவேகொண்டிருந்தேனே கொடுவழக்கிடைதவறினனே
குடிமனையவள்கற்பினையழித்தேனே குற்றங்கள்பலபுரிந்தேனே
மிடியுறுதமியேன்றுயரெலாந்தவிர்த்து வேண்டியசெல்வநீயருள்வா
யடியவர்துணையாய்வருந்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௩௪)

செங்கதிருலவுமுலகெலாமுலவித் திரிந்தொருசாண்வயிற்றினுக்குக்
கங்குலும்பகலுமிரையினைத்தேடுங் கயவனேனுய்யுநாளுளதோ
சங்கரன்மகனேசதுமுகன்குருவே தயித்தியர்தங்குலப்பகையே
யைங்கரன்றுணையேயுயர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௩௫)

நாரியர்க்கிரங்கிமதனனூல்படித்து நயம்பெறுசன்னைகள்பேசிப்
போரியல்கலவிக்கொருபெரும்புலியாம் புல்லியனுய்யுநாளுளதோ
நீரியல்கமலமலரினோன்சிரத்தி னீண்டவங்குலியினாற்புடைத்தா
யாருயிர்க்குயிராய்வளர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௩௬)

குமரனாய்விருத்தக்கிழவனாயுடலங் கூனொடுநரைதிரைகொண்டு—
தமரெலாமிகழவுயிரகல்பொழுதுஞ் சரவணபவவெனாருடலங்
கமரிலேயுகும்பாலெனப்படுமவர்க்கோர் கதியுமேயிலையெனப்படுமா
லமரெலாங்கடந்ததணிகைமால்வரைவா ழாறுமாமுகதயாநிதியே. (௩௭)

கருவியோர்முப்பத்தாறினாலியங்குங் காயமோடிருவிலஞ்சுவர்க்க
மருவியேதிரிந்துபிறந்திறந்துழலு மடையனேனுய்யுநாளுளதோ
குருவியோட்டியவேட்டுவக்குலமகளிர் குலவியசாரலிற்செந்தே
னருவிபாய்ந்திழியுந்தணிகைமால்வரைவா ழாறுமாமுகதயாநிதியே. (௩௮)

மாவிருந்தினர்தம்பசிகெடவுதவும் வண்மைதந்துடல்விடும்பொழுது
பூவிருந்தவனுமாயனுங்காணுப் பொன்னடிநீழறந்தருள்வாய்
கோவினம்பயில்செந்தூர்பரங்குன்று குன்றுதோருடல்சோலைமலை
யாவினன்குடியேரகம்பயிறணிகை யாறுமாமுகதயாநிதியே. (௩௯)

செறுவியாயகர்ந்தைபலபுரிந்திடினுங் கெண்டைவாள்விழியினர்கலவி
யுறுவியாதியினாலுனைமறந்திடினு முறுபிழைபொருத்தருள்புரிவாய்
மறுவிலாக்கற்பின்வள்ளிதெய்வானை மணந்திடுமணிவரைமார்பா
வறிவினோறிவாயொளிர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௪௦)

தேனிலங்கியசொன்மாதரார்வயிற்றிற் றிங்களீரைந்துமுட்டங்கி
நானிலந்தனிலேயினிப்பிறவாம னுயினேற்கருள்புரிந்திடுவா
யூனிலங்கியவானவர்களுமறியா யோகியர்மனத்திலேவிளங்கு
மானிலேந்தாமேரனருடணிகை யாறுமாமுகதயாநிதியே. (௪௧)

மன்னவன்மகனையடுத்திடிற்பெரிய வாழ்வினையடுத்தபோதளிப்பான்
பின்னலஞ்சடையுன்பிதாவினையடுத்தாற் பெரிதுநாட்செல்லுமென்றறிந்தே
யுன்னைவந்தடுத்தேனுதலாற்செல்வ முரைத்திடுமுன்னெனக்களிப்பா
யன்னமென்னடையார்பயில்செருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௪௨)

பகலினுமிரவுமுண்டுடுத்துறங்கும் பயனலாதொருபயனறியேன்
புகலரும்பரமாநந்தவாரிதியிற் புகுவதெக்காலமோவுரையா
யிகலுமுப்புரங்கடழலெழச்சிரித்த விறையவனுதல்விழிபிறந்தோ
யகிலிடுந்தூபமுகினிகர்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௪௩)

குருபரனெனும்பேருனக்கலாதெவர்க்குக் கூறுநான்மறைகளாதலினுற்
றிருவடிநிழலிலெனைவிடாதிருத்தித் திருவருள்புரிகுவதரிதோ
பொருகரிவதனனுடுகிரவுஞ்சம் பொடிபடவயிலெறிந்தவனே
யருவுடனுருவாயொளிர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௪௪)

நித்திரைதனிலுங்குத்திரம்புரியு நினைவுளேனுன்றிருவடியைப்
பத்திரம்புனல்கொண்டருச்சனைபுரிந்து பரகதியடையுநாளுளதோ
சித்திரக்கலாபமயின்மிசையேறிச் செகமெலாநொடிவலம்புரிவோ
யத்திரவிழியார்நடஞ்செயுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௪௫)

கணுமுதிர்கருப்பஞ்சிலையிணைவளைக்குங் காமனைவென்றமாதவர்க
ணணுகிருசரணபங்கயமலரி னறவினைப்பருகுநாளுளதோ
வெணுமொருகொடியின்மேருவையணுவா யியற்றுவையிதற்குமாருக
வணுவையோமேருவாக்கிடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௪௬)

மனுநிதியைம்பொறியுன்வழிக்கொடுநடந்து மருவுமைம்புலனுகர்ந்திடினுங்
கனவொடுபேய்த்தேரெனப்படுமுலகைக் கண்டுமெய்யெனமயங்குறினு
மெனுநியென்றுனையேநினைத்தனுதினமு மேத்திடுஞ்செல்வமேயருள்வாய்
அனுதியேயுயிர்க்குத்துணையதாந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௪௭)

வையமுற்றினும்போய்க்கங்கையேமுதலா மாநதிபலபடிந்திடினுந்
துய்யநற்றலங்கடொறுமினிதடைந்து துணைக்கையாற்றொழுதுவாழ்த்திடினுஞ்
செய்யநின்றணிகைக்கிரியினையணையார் சிவகதியடைகுவதரிதே
யையமிட்டுணுமாதவருளத்திருக்கு மாறுமாமுகதயாநிதியே. (௪௮)

முந்தைநல்வினையால்வந்துமானிடராய் முதூநிலந்தனிலவதரித்தும்
வந்தனைபுரியாதுண்டுடுத்துழலு மக்களில்வானரப்பிறப்பே
நிந்தனையறியாநற்பிறப்பாகு நீதியொன்றறிகிலாமையினு
லந்தணர்மகஞ்செய்தணிகைமால்வரைவா ழாறுமாமுகதயாநிதியே. (௪௯)

வேரலிற்பிறந்தசெந்தழலந்த வேரலைமுருக்கிடுஞ்செயல்போற்
பேருடற்பிறந்தகாமமிவ்வுடலைப் பிணிபடமுருக்குமென்செய்வேன்
சாரலிற்குறவர்கிழங்ககழ்குழியிற் றாளமோடணிகொள்வச்சிரமு
மாரவேநிரைக்குமருவிதாழ்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௰)

பிறந்திறந்துழலும்பெருவியாதியையும் பெரும்பசிநோய்சுடத்தளர்ந்து
நிறங்குலைந்தொருவர்பின்றிரிந்துழலு நிரப்பெனுங்கொடுவியாதியையுந்
திறந்தருள்கடைக்கட்பார்வையாமருந்தாற் றீர்த்தருள்புரியுநாளுளதோ
வறம்பொருளின்பம்வீடருள்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௧)

திரைகடலுடுத்தநிலத்திடையழியாச் செல்வமுங்கல்வியுமறிவு
மிரப்பவர்க்கிலையென்றுரைத்திடாதுதவு மீகையுமெனக்கருள்புரிவாய்
புரக்குமைந்தருமாநிதிமணிகவர்ந்து புலவருக்கிடக்கேன்புரிந்து
வரக்கரையழித்தசெருத்தணிமலைவா ழாறுமாமுகதயாநிதியே. (௫௨)

பனித்துடல்வெதும்பும்படிதவம்புரிந்து பாரெலாம்வலம்புரிந்துழல்வோர்
தனித்திருந்தனதுதிருவடிநினைந்து சரணமென்வெனவுரையார்
கனிப்பழமிருப்பவிடுத்தருகிருந்த காயினைப்பறித்தருந்துவரோ
யனித்தமுங்கடந்துநித்தமாந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௩)

விடுத்திடற்கரியபஞ்சபாதகமே விளைத்திடுமெனக்குமெய்வரங்கள்
கொடுத்திடிலுனையார்தடுப்பவர்புரனுங் குறைகடறன்னையார்தடுப்பார்
முடுக்கருட்டவஞ்செய்யோகியர்தமக்கு முசுக்கலையேவல்செய்தொழுகு
மடுக்கலிற்சிறந்ததிருத்தணிமலைவா ழாறுமாமுகதயாநிதியே. (௫௪)

குவிகரங்கொடுநின் றனைவலம்வரவுங் குறைகழன்மனநினைந்திடவுங்
கவியறிந்துன்சீர்பாடவுமெனக்குக் கருணைநீபுரியுநாளுளதோ
புவியிலந்தணர்களனைவருஞ்சாரற் புறத்திலேயணைந்தனுதினமு
மவிசொரிந்தியாகம்விளைத்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௫)

நச்சுமாமரமேயாயினுமொருவர் நானிலந்தன்னிலேவிழைந்து
வச்சமாமரமேயாயிடிற்றண்ணீர் வார்த்திடாதுலர்த்திடுமவர்யார்
துச்சமாமாயைவினையுடலடுத்தாய் சுத்தவீடருள்புரிந்திடுவா
யச்சனேனுடனாய்த்துணைசெயுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௬)

விலங்கலைக்கடலைவெய்யசூரத்தை விழுங்கிடவெறிந்திடுமயிலால்
கலங்கலைப்புரியுமாணவமாயை கன்மமூன்றையுமழித்திடுவா
யுலங்கலைத்தகர்க்கும்பன்னிருபுயத்தி னும்பர்நாடிறைதருங்கழுநீ
ரலங்கலைப்புனையுமொருதிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௭)

முகத்திருவிழியுமூக்கிடையிருத்தி மூடிவாய்மூச்சையுட்செறித்துப்
பகைத்தவைம்பொறியுமடக்கிநெஞ்சிடையுன் பதமலரிருத்துநாளுளதோ
சகத்திருள்கடியுமுதையமால்வரைபோற் றணிகைமால்வரைமிசையடிய
ரகத்திருள்கடியுஞானசூரியனு மாறுமாமுகதயாநிதியே. (௫௮)

நாண்டுறந்தெழில்சேர்நாரியர்கலவி நறவினையநுதினநுகர்ந்து
மாண்டிறந்துலகிலினிப்பிறந்திடினு மலரடிக்கன்பெனக்கருள்வாய்
கோண்டருமுலகநிலைகுலைந்தழிந்து குரைகடன்மேருவுமழியு
மாண்டுகம்பலவுமழிவிலாத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௯)

வெங்கொலைகளவுகாமமோடரும்பொய் விளங்கறிவகற்றுகள்ளருந்த
லிங்கொருதினமுமொழிந்திடாக்கொடியே னிடர்க்கடலேறுநாளுளதோ
பைங்கருங்குவளையநுதினமூன்று பாகசாதனன்சுனையலரு
மங்கதிசயஞ்சேரண்ணலந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௦)

வெஞ்சிறைப்பிறவிவேதனையொழித்த மெய்த்தவர்சேருநின்பதத்தென்
னெஞ்சிறைக்குடியாய்நின்றிடும்படிக்கு நீடருள்புரியுநாளுளதோ
மஞ்சிறையளித்தமகடனக்கிறையாய் வானுலகெலாம்வலம்வருவா
யஞ்சிறைக்கோழிக்கொடியனேதணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௧)

செம்புயம்பணிரெண்டிருபதமாறு திருமுகமயிலயில்சேவல்
பைம்புயற்கூந்தல்வள்ளிதெய்வானை பாகமுங்காணுநாளுளதோ
கம்புயர்பருதிகரங்கொளுமுராரி கவின்பெறுமார்பினிற்பிரியா
வம்புயமலராண்மருகனேதணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௨)

பிழைத்தவைபொறுத்தல்பெரியவர்கடனும் பேயனேன்பிழையெலாம்பொறுத்
தழைத்தருள்புரிந்துன்றாமரைமலர்த்தா டலைமிசையிருத்துநாளுளதோ
கழைத்தலைவளியினசைந்திடல்வரைதான் கையெடுத்தன்பரைக்கடுகி
யழைத்தருள்புரிவதெனப்படுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௩)

எவ்வுலகமுமாண்டிறந்திடாச்சூர னிருந்திடுமயேந்திரபுரியாந்
தெவ்வுலகத்தையழித்தநின்கருணைச் செழுங்கடைப்பார்வைதந்தருள்வா
யிவ்வுலகத்தோர்பணிந்தெழுந்தேத்து மிதுவலாலிந்திரனுறையு
மவ்வுலகத்தோர்தொழவளர்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௪)

பரிகரியிரதம்பதாதிகள்சூழப் பகைவரைத்தடிந்துசெங்கோல்கொண்
டொருகுடைநிழலிலுலகெலாம்புரக்க வுனதருட்பார்வைதந்தருள்வாய்
பொருகரிமுகனுக்கிளையவனாகிப் பொன்னுலகினைப்புரந்தளித்தோ
யரிகரிமுனிவர்க்கேவல்செய்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௫)

மாதிரைகடல்சூழ்மண்ணகவரைப்பின் வாய்மையைத்துறந்துசாண்வயிற்றின்
றீதிரைக்குரியபொய்ம்மையேபேசித் திரியுமென்பவமொழிந்திடுமோ
மீதிரைத்தெழுந்துவருபிசாசரை வென்றமரர்பதியளித்தோ
யாதிக்கிறைவனருள்செருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௬)

கருக்குழிபடிந்துபிறந்திடுதுயருங் கண்கள்பஞ்சடைந்துவாய்குழறி
நெருக்கியகபத்தாலிறந்திடுதுயரு நீசனேனொழியுநாளுளதோ
தருக்களிலுதிரும்பொன்மலர்களுலித் தமனியமலையெனக்கருதி
யருக்கனுமதியும்வலம்வருந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௭)

தீர்ப்பதற்கரியவுடலபிமானந் தீர்ந்தருந்தவம்புரிந்தவரும்
பார்ப்பதற்கரியபங்கயமலர்த்தாட் பாவியேற்குண்டுகொல்கதிரோன்
றேர்பரித்திரளைவேங்கைமீதகவும் செம்முகமந்திவானீட்டி
யார்ப்பரித்தடித்துநடத்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௮)

வெம்பியாய்வயிற்றிலையிருதிங்கண் மேவியிப்புவிதனிலுதித்து
நம்பியாயிழையார்கலவியிற்றிளைக்கு நாயினேற்கருளிபமுகத்தோன்
றம்பியாயடுத்தகீயிருத்தலினற் றாணியோர்பிறவியங்கடலுக்
கம்பியாயடுத்துவளர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௯)

வாளிகல்புரியும்வடிவெகிர்நெடுங்கண் மங்கையர்போகமேநுகர்ந்து
நாளிகந்தொருவிநரகிடைவிழாம னாயினேன்றனக்கருள்புரிவாய்
கூளிகடொக்குந்தானவக்குழுவிற் குஞ்சரக்குழுவிரிந்தோட
வாளிகடொக்குஞ்சாரலந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௭0)

மெய்க்கினியனவேசெய்துநல்விரதம் விடுத்துழல்மடமையேன்வீட்டிற்
புக்கினிதிருக்குமடியவர்கமலப் பொன்னடிகருதுநாளுளதோ
கொக்கெனத்தினமுங்கொலைகுறித்தொழுகுங் கொடியதானவர்களைத்துணிக்க
வக்கினிகரத்திலுதித்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (எக)

கருடனைநினைக்கத்தொலைந்திடுவிடம்போற் கானகத்தினைப்புனக்குறத்தி
திருடனென்றுன்னைச்செப்புவோர்பிறவித் தீவிடமக்கணத்தறுமே
யொருகணப்பொழுதின்மதுரையர்பெருமா னுடலுறுவெப்பெலாமகற்றி
யருகரைக்கழுவிலேற்றிடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (எஉ)

கொங்கையங்குவடுங்கருவிழிக்கடலுங் கூந்தலங்காடுஞ்சென்றலவி
மங்கையால்குற்பணிவிடந்தீண்டி மயங்குமென்னுயிர்தனைப்புரப்பாய்
சங்கையொன்றில்லாப்பிரணவப்பொருளைத் தமிழ்வரைகுறுமுனிவரனுக்
சங்கையினெல்லியெனப்புகறணிகை யாறுமாமுகதயாநிதியே. (எங)

வானகம்புரக்கும்வாழ்வையும்விரும்பேன் மண்ணகவாழ்வையும்விழையேன்
கானகக்குறவர்போற்றுநின்பாத கமலமேகருதுவன்றமியேன்
போனகம்பதினாலுலகமுமாக்கும் பூவைவண்ணன்றிருமருகா
வானகந்துடியோடார்த்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (எச)

செவ்வையங்கனிவாய்மகளிரையணைத்துக் கொம்மைவெம்முலைத்தடத்தழுந்தி
நவ்வியம்பகமாங்கூற்றினுக்கிரையாய் நானழிந்தொழிகுவதழகோ
செவ்வியமறையோர்சோலைகடோறுந் தீயினுகுதியகம்புரிய
மவ்வியகவியநகர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (எரு)

கூம்பலங்கரமுங்குழைந்திடுமனமுங் கொண்டனுதினம்வலம்புரிவோர்
தாம்பலன்பெறும்பேறரியயன்றனக்குஞ் சாற்றரிதெனமறையுரைக்கும்
பாம்பலங்காரப்பரனெனமுத்தம் பற்பலசொரிந்துவாளைங்கு
மாம்பலஞ்சாரல்வளர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (எசு)

விடங்கலந்திடுதீம்பாலெனவுயிரை விரவுமாணவத்தினைப்போக்கி
நடங்கலந்திடுமுன்சீறடிக்கமல நன்மருந்தளித்தெனைப்புரப்பாய்
மடங்கலுங்கரியுமுழுவையுந்தவஞ்செய் மாதவர்தமக்குவானரங்க
ளடங்கலும்பணிசெய்தகமகிழ்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (எஎ)

விடைமிசைவருநின்றந்தைதன்செவியில் விளம்பியபிரணவப்பொருளைக்
கடையனேன்செவியிற்புகன்றுநின்கமலக் கழற்றுணைநீழலென்றருள்வாய்
தடையறுகதிர்த்தேர்ச்சாரதிபரியைத் தாக்குமுட்கோல்படவேய்த்தே
னடையிழிந்துகுதேனருவிதாழ்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (எஅ)

வல்லகாத்திரஞ்சேர்மதகரியெனவே மறைநெறிகடந்துதீவினையாற்
பல்லகாத்திரமாய்ப்பிறந்திறந்துழலும் பாவியேனுய்யுநாளுளதோ
நல்லகாத்திரியாவிந்திரன்றெருட்ட நறுஞ்சுனைநீலமேவுதலா
லல்லகாத்திரியாம்பெயர்பெறுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (எக)

நந்தினைப்பதுமநிதியினைப்பழித்த நறுங்களமுகத்தியர்கலவித்
தந்தினைப்படித்துவிடரொடிந்திரியுந் தமியனேனுய்யுநாளுளதோ
சந்தினையகிலைவேங்கைகுங்குமத்தைத் தடிந்தெரிகொளுவிவேட்டுவர்க
ளந்தினைவிதைக்குஞ்சாரலந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (அ0)

மாடகத்திவவியாழ்முனியுரைப்ப வள்ளிமால்வரைப்புறத்தடைந்து
காடகக்குறமான்றனைப்புணர்வேடங் கனவிலுநனவிலுமறவே
னேடகக்கமுநீரென்றுமூன்றலர வெனக்கிலையெனத்தலையிறங்கி
யாடகக்கிரிநாணுறுந்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (அக)

சமயமூவிரண்டிற்சார்ந்தவர்புகலுஞ் சமுசயப்பொருளெலாநினைந்து
கமையறுபிறப்பிலுழிந்திடாதுனது கழலிணைகருதுநாளுளதோ
விமையவர்வேடர்க்கமுதமீந்திருவி னிரும்பிழிகவர்ந்தெதிர்விருந்தா
யமைவுறவிசும்பின்வளர்ந்தெழுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (அஉ)

பொருந்திடுகற்பின்மனைவியும்பொருளும் புதல்வருமிம்மையிலளித்துத்
திருந்துமொண்கதியையம்மையினளிக்குந் திறத்தினைக்கண்டுனையடுத்தேன்
வருந்துறுபிறப்பிலமுத்துமாணவமா மலிபெரும்பகைதடிந்தோங்கு
மருந்தவர்க்காணமாயமர்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (அங)

கூனையுந்தெரியாக்குருட்டையும்பணிவோர் கொடியவெம்பிறப்பையுநீக்கி
வானையுஞ்சிந்தாமணியையும்வேண்டும் வரத்தையுந்தருதல்கண்டடுத்தேன்
றேனையுமறையோர்க்காசரீந்திடுபொற் றிரளுறுதானநீர்தனையும்
யானைமும்மதநீர்தொண்டிழிதணிகை யாறுமாமுகதயாநிதியே. (அச)

முன்னையெத்தவத்தோவந்துமானிடத்தின் முழுதுடறன்னையாரெடுத்தும்
பின்னருற்றிடுதற்கரியவிப்பொழுதே பெருந்தவம்புரிந்துனைநினையேன்
றென்னிசைக்களிவண்டினங்கள்பற்பலவாந் தேனடைமொய்ப்பவாதுலர்சே
ரன்னசத்திரங்கணிகர்த்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (அரு)

விரிந்திடும்பிறவிக்கடலகத்தழுந்தி வினையெனுந்திரைகளாலலைந்து
திரிந்திடுகாமச்சுறவினுலயருந் தீயனேன்றுயர்களைந்திடுவாய்
வருந்திடும்பகையைமாய்க்குமன்னவர்போல் வனசரர்விதைத்தசெந்தினையை
யரிந்திடக்கணிகளலர்ந்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (அசா)

தத்தலைக்கடலின்வேறுவேறுருகுஞ் சமுசயச்சமயநூல்பலவுங்
கத்தலைவிடுத்துன்கழறலைச்சூட்டிக் கசிதலையடையுநாளுளதோ
முத்தலையேகபாதருத்திரன்போன் முத்தலைபொன்மைவெண்ணிறமா
யத்தலைமுதலொன்றுயெழுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௮௭)

வரம்பெறுமகவான்முதலியோரொருபால் வணங்கமாமுனிவரரொருபால்
சிரம்பெறுகரங்கள் கூப்புநின்னவையிற் சிறியனும்வரவருள்புரிவாய்
மரம்பயில்சாரல்வளர்க்கழைவெடித்த மணிகள்வாசவனெதிராடு
மரம்பையர்முலைமேற்றெறித்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௮௮)

சுந்தரந்தனக்கோநினதுதோள்வலிக்கோ சொற்கலைவல்லபந்தனக்கோ
சந்ததமெனதாருயிரெனுமடந்தை சாமிநின்கலவியேவிழைந்தாண்
மந்தரமிமையங்கயிலைநீள்கந்த மாதனங்கண்டழுக்கறுப்ப
வந்தரங்கமதாயிருந்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௮௯)

குறித்தொருகவிநீபாடெனப்பாடாக் கொள்கைநக்கீரனைவேண்டி
மறித்தொருகவிக்காயிரந்தநின்றனையான் வலுவினிற்பாடவுமிரங்காய்
கறிக்கொடிமிளகைத்தின்றிலமந்தி கலங்கிடக்கடுவன்மாங்கனியை
யறுத்துவந்தளிக்கமகிழ்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௦)

நெல்விளைந்திடுதண்பணைதொறுமறுப்பு நென்முதனடவுமாறுப்போற்
புல்லியம்புயனுற்பிறப்புடனிறப்புப் பொருந்துதீவினைதுலைத்திடுவாய்
எல்லியும்பகலுங்கழையுதிர்முத்த மிளநிலாக்கதிர்பரப்புதலா
லல்லியுங்குவலையொடுமலர்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௧)

வேனில்வேளெனவும்விசையனேயெனவும் வீமனேயெனவுமீகில்லாப்
பாநலந்தெரியாச்சிதடரைப்புகழும் பாவலர்பவப்பிணியறுமோ
தேனிறால்வருடைபாய்தாக்கிழிந்து செங்கழுநீர்ச்சுனைநிரப்பி
யானைவீழ்குழியுநிரப்புறுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௨)

காரிருட்குழலார்கண்வலைதுடக்குங் கசடனேன்சிற்றறிவொழித்துன்
பேரருட்பார்வைக்கடல்கத்தழுத்திப் பிரிவிலாவாழ்வெனக்களிப்பாய்
கூரிருள்படைத்தகிரவுஞ்சகிரியுட் குறுமுனிகுறுகல்போன்முனிவ
ராரிருட்குகையுட்புகுந்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௩)

கரவினிலருநூல்கற்பவருறவைக் கடிந்துமெய்த்தொண்டர்பான்மிகுமா
தரவினைமருவியுடலபிமானந் தனையொழிந்திடுநெறியருள்வா
யிரவினிற்கரடிகுரும்பிதேர்ந்தளையை யிடத்தலுமுற்கைபோலெரியு
மரவின்மாமணிகண்டஞ்சிடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௪)

வாரியங்கடல்சூழ்மலர்தலையுலகில் வயிறுசாண்வளர்த்திடும்பொருட்டுப்
பாரியென்றியாதவரையான்புகழாப் பணிவிடையெனக்கருள்புரிவாய்
வீரியம்பெறுவெம்புலியினொடிரலை வேழமோடரிபகையொருவி
யாரியம்புகல்வோர்க்கேவல்செய்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௫)

மலையெனவளருமாணவமலத்தை வளம்பெறுநின்னருட்பரிவை
யிலைமலிவேலாலெறிந்ததைப்போக்கி யெனதுயிர்தனைப்புரந்தளிப்பாய்
கொலையரிமுழக்குங்குஞ்சரமுழக்குங் குலவுமந்தணர்மறைமுழக்கு
மலைகடன்முழக்கினெதிரெழுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௬)

கமலவேதனைமுன்கற்சிறைப்படுத்துங் காங்கெயனாமுனைவணங்கா
முமலவேதனையுமொருசிறைப்படுத்தி முண்டகப்பதமெனக்களிப்பாய்
விமலவேதியர்செய்வேள்வியாகுதியில் வீசுநெற்பொரியெனச்சார
லமலவெய்முத்தஞ்சொரிதிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௭)

சந்திரன்கறைபோலிந்திரன்விழிபோற் சந்தனமரத்துறுமகிபோன்
மந்திரம்பயிலுமுனதுசன்னிதியில் வருங்கொடியேனையும்புரப்பா
யிந்திரநீலமருவலாற்கருமை யேந்தலாற்செவியடுத்திடலா
லந்தில்தெய்வானைவிழிநிகர்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௮)

பிணியினாலழலாலலகையால்விலங்காற் பில்லிசூனியத்தினாற்பித்தால்
பணியினானீராற்கள்ளரான்மருவும் பருவரலகற்றியாண்டருள்வாய்
கணியினாலாரம்புடைபரந்தெழலாற் காம்பினால்வம்பினாற்காந்த
ளணியினாற்குறமான்முலைநிகர்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௯)

வள்ளியுந்தெய்வயானையுமிருபால் மருவிடச்செங்கைவேலேந்தி
துள்ளியமயின்மீதேறிநீயடியேன் றுணைவிழிகாணவந்தருள்வாய்
வெள்ளியங்கிரிபோனாரதன்றினமும் வீணையின்கானமாமமுத
மள்ளியஞ்செவியினிறைத்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௱)

தணிகை தயாநிதிமாலை-முற்றிற்று.

பண்ணார்தணிகைவரைப்பாலன்றயாநிதிச்சீ
ரெண்ணாருமாலையிசைத்திட்டான்-றண்ணாருங்
காசினியெலாம்புகழுங்கந்தப்பனென்றுரைக்குந்
தேசிகனானூறுகவிதேர்ந்து.

கணபதி துணை.

# தணிகைப்பிள்ளைத்தமிழ்.

## விநாயகக்கடவுள்.

சத்தினி பதிந்துவினை யொத்தமல பரிபாகர் தமதிதைய கூடமதனிற்
றங்குவயி ராகமாந் தறிநாட்டி யன்பெனுந் தளையையிரு காலின்மாட்டி
மெத்தினிய ஞானநீ ராட்டிநிறை சாந்தமா மென்மல ரணிந் துயிரெனும்
வீயாதகவளங் கொடுத்திட மகிழ்ந்துண்டு விளையாடு கரியை நினைவாஞ்
சித்தினியயோகியர் நெருங்குகுகை யெங்கணுஞ் செறிதிருத் தணிகை மருவுஞ்
செவ்வே டனக்கருண கிரிநாதர் நன்னயந் தேர்ந்துமகிழ் கூர்ந்துநுவலும்
பத்தினுடனூறு யிரந்திருப் புகழமுது பருகுபன் னிருசெவியினும்
பரவுநவ ரசமொன்று மறியாத சிறியனேன் பன்னுபைந் தமிழ்தமைகவே.

## காப்புப்பருவம்.

### திருமால்.

நீர்தந்த வுததிமுதிர் நிலவுலகு புகழ்கின்ற நீலமல ரெந்நாளினு
நீள்சுனையின் முப்போது மலர்கின்ற கல்லார நெடுவரையில் வீற்றிருந்து
சீர்தந்த பிரணவப் பொருளையிறை வன்றிருச் செஞ்செவியி லறிவுறுத்த
தேசிகனை வாசவ னளித்தபொற் கொடிமருவு செவ்வேளை யினிதுகாக்க
கார்தந்த மேகந் தடித்திடை விடாதுறக் கதிரவனு மோர்பாலுறக்
கலைநிறையும் வெண்மதிய மோர்பா லுறக்குலவு காட்சிநிகர் மணிவண்ணமு
மேர்கொண்டபொன்மார்பிலங்கவொருகைத்திகிரியேந்தியொரு கையில்வெண்ச
கேந்திபுல கீரேழு மனுதின மளித்துவண மேறியருள் செங்கண்மாலே. [ங்

### சிவபெருமான்.

திங்களங் குழவிவிடு வெண்கதிரு மரவின்மணி தேக்குசெங் கதிருமளவிச்
செம்பொனிற் செய்தபுரி வெண்பொனிற்செய்தபுரி சேர்த்துத்திரித்தகயிறாய்க்
கங்கைதங் குஞ்செஞ் சடாடவிக் கற்றையைக் கட்டிவைத் தெனமொய்த்திடுங்
கண்ணுதற் செந்திலத மொப்பமினி ரைம்முகக் கடவுளிணை யடிபரவுவாம்

மங்கலம் பூணவயி ராணிதன் கண்டத்து மாயைமரு வியர்கழுத்தின்
மன்னுமுயி ரகரமுதன் மருவுமங் கலமாக வளர்கடைக் கண்சிவந்து
செங்கையிலை வேலெருட்டு மலையலை யரக்கர்கிளை சிந்தியயி ராவதத்திற்
றேவருல கைப்பவனி வந்துதென் றணிகையமர் சேயைப் புரக்கவென்றே. (உ)

## உமாதேவியார்.

ஆணுருவி னுலழிவி லந்தகா சூரனுக் கஞ்சியழி யுஞ்சுரரெலாம்
அபயமென வோலமிட வஞ்சலென் றவர்களொடு மன்றுபின் பக்கமருவப்
பூணரவ மாமிறைவர் கண்சாடை காட்டலும் பொற்சிலைக் கைப்பிடித்துப்
பொருதழித் தந்தகனை யிமையவர் தமைக்காத்த பூரணியை யஞ்சலிப்பாம்
தாணுறுத லின்கட்டமுற்பொறிய தாய்க்கங்கை தங்கியிம யச்சாரல்வாழ்
சரவணப் பொய்கைதனி லாறுமக வுருவமாய்ச் சாருமறு மீன்முலைப்பால்
மாணுமலர் வாயினி னுகர்ந்துமது வார்ந்தொழுகு வனசமா மலரணையின்மேல்
வண்டுதாலாட்டவிழி துயில்கூர் திருத்தணிகை மயிலிறைவ னைக்காக்கவே. (ந)

## கணபதி.

### வேறு.

கோதற்ற மேருவன் னேட்டிலே கோமுற்ற வால்வளைக் கோட்டினுல்
ஆதிப்பொற் பாரதந் தீட்டிய வாபற் சகாயனைப் போற்றுவாம்
தாதைப்பொற் காறளை பூட்டியே தாழ்கித்தற் கோர்மொழி காட்டிநால்
வேதத்தி னுர்தணி கைக்குளே மேவுற்ற வேலனைக் காக்கவே. (ச)

## பிரமதேவர்.

### வேறு.

காய்த்தகுலைக்கதிர் வாய்த்ததினைப்புனங் காத்தகுறப்பெணின் பாற்செலாக்
காட்டின்மிகப்பசி வாட்டுமெனக்கருள் காட்டிடெனத்தனி நோக்கியே
தேய்த்தவிடைக்கொடி மாத்திரளைப்பிழி தேக்கிலையிற்கடி தூட்டவாய்
தேக்கிவினைத்திடர் நீக்குசெருத்தணி சேர்க்குமொருத்தனைக் காக்கவே
மாத்தவளத்தரு வேய்த்தவனத்தெழில் மாற்றுபனத்தியை நாக்கிலே
மாட்டியிருக்கெனும் பாட்டையுரைத்துயிர் வாய்த்தசகத்தை யுண்டாக்கினேன்
தோய்த்ததயிர்க்குடம் பொய்த்திருடித்தினி சூட்டரவப்பணைப் பாய்க்கணே
தூக்கமிகுத்தவன் மோட்டுதரப்புழை தோற்றுமலர்ப்பர மேட்டியே. (ரு)

## கங்காதேவி.

### வேறு.

தூயோர்சகரர்க் களற்றுநோய் தோயா தயர்நற் றுறக்கமேற்
சோராதமரத் தரைகஞ்வீ சூடார்சுடலைப் பொடிக்குணீர்ப்
பாயாநணயப் பொருத்தினேன் பாடார் தவமிக் கியற்றவான்
பாலாயசன்பொற் சடைக்குள்வீழ் பாகிரதியைப் பழிச்சுவாம்

தீயார்விழியிற் பொறிக்குளோர் சேயாயுதித்துக் குளத்திலே
சீதனார்கமலப் பொகுட்டின்மேல் சேராமகிழ்வுற் றுயிர்க்கெலா
மாயாவிடரைக் கொடுத்தசூர் மாவாய்மலையத் துணித்துநீள்
வானார்தணிகைப் பொருப்பிலே வாழ்வேலவனைப் புரக்கவே. (௬)

## வீரபத்திரக்கடவுள்.

### வேறு.

நேரில்தக்கன் சிரத்தினைவீட்டின னேயவெச்சனை யப்படிமாட்டின
னீழலக்கினி யைக்கரம்வாட்டின னீள்குயிற்சிறை யற்றிடவோட்டினன்
மேருவிற்கிறை யைப்புறம்பாக்கியே வேள்வியிற்றகரைத்தினுவோர்க்கெலாம்
வீறழித்திடர் பற்பலவாக்கிய வீரபத்திரன் மெய்ப்பதம்போற்றுவாம்
காருடுத்த குவட்டுறுதேக்கினைக் காமர்பச்சிலை யைத்திருவாத்தியைக்
காழகிற்சினை யைச்சுளைவேர்ப்பலாக் காயினைத்திரை யிற்பெயர்த்தீர்த்தெழீஇச்
சாரலிற்கழை முத்தினைப்பூக்களைத் தாவில்வச்சிரத் தைக்கரிக்கோட்டினைச்
சாடியிட்டரு வித்திரளார்ப்பொடு தாழ்செருத்தணி வெற்பனைக்காக்கவே. (௭)

## வைரவக்கடவுள்.

### வேறு.

விராவுமதமொடு புராரிதனையிகழ் விரோதமொழிபல வாக்கினிற்சாற்றிட
விளுவுபிரணவ முளனசதுமறை விகாதமறுபொரு டேற்றிடக்கேட்டிலன்
காரவினறிவழி பிதாவினுயர்தலை கடாவுவிரலுகி ராற்பறித்தார்ப்பொடு
கணையிரவன்முதல்விணோர்பலிகொளுங் கபாலவயிரவர் தாட்டுணைப்போற்றுவாம்
ஓராறுசிரமுடனீ ராறுபுயமுட னுகாதசிறைமயி லேற்றினுக்கேற்றிடு [ன்
மூலாசனெடிவரை செலாமுனுலகினையுலாவிவலம்வரு சீர்த்தியைப்போர்த்தவ
மராவின்மலரொடுகுராவின்மலர்நறைமருதொடைபுனைமூர்த்திநற்கார்த்திகை
வழாமலருள்குகன் கலாரகிரியுறை வலாரிமருகனை வாய்ப்புறக்காக்கவே. (௮)

## தேவேந்திரன்.

### வேறு.

கரியமதனம்புபட்டு விரகமதினொந்திளைத்து
கனியிதழ்மடந்தையர்க்கு மோகமாங்
கவலையுறுதுன்பொழித்து வினையிருசமங்கிடைத்து
கருதரியவின்பமுத்தி நாடியே
கமலமலருந்தியுற்ற கனலையுமறிந்தெழுப்பிக்
கடிகொளிடைபிங்கலைக்கு ளோடிமீள்
புரைவளியிரண்டடக்கி சுழுமுனையினெஞ்சிருத்திப்
புருவநடுவிந்துவுக்கு ளோமமே

புரியுமதிமண்டலத்தின் மருவுபரையின்பமுற்ற
பொருளினையறிந்தி யற்றும் யோகிஜேோர்
புணர்மலமொழிந்துவெற்பின் குகையிடைவதிந்துநித்தம்
புகழ்தணிகைமன்குகற்கோர் காவலாம்
தருமலர்புனைந்துகற்பின் சசிதனைமணந்துசொர்க்கந்
தனியரசியைந்து மைக்க ணேறியே
சலமழைபொழிந்திடப்பைந் தழைபயிர்விளைந்தெவர்க்குந்
தகையுணவுவந்தளிக்கு நீர்மையான்
நவளமதகுஞ்சரத்தின் முதுகிடையிவர்ந்தரக்கர்
தலையறவெறிந்துசித்தர் பாடவே
இருடியர்கணங்கள்சுற்றச் சுரர்தலைகரங்குவிப்ப
விளமுலையரம்பைமெச்சி யாடவே
இருநிதிவளங்கொழிப்ப மருவலர்புறங்கொடுப்ப
விகலறநடந்துவெற்றி கூடவே
எழுபுவியின்மன்பதைக்கு மிடர்புரிதரும்பொருப்பி
னிருசிறையரிந்தவச்சிர பாணியே. (௯)

## பலதேவர்கள்.

### வேறு.

வம்பவிழும்பரங் குன்றமுநந்தினை
வாரலைவாயுறு சீரலைவாயினும்
வாவிதண்டலைமனு மாவினன்குடியினும்
வாரகமுற்றிடு மேரகவெற்பினும்
பம்பியகுன்றுதொ றாடலினுந்திருப்
பழமுதிர்சோலையி னும்விளையாடிய
பாவலனைச்செழுஞ் சேவலனைச்சிவன்
பாலகனைத்தணி காசலனைத்தினம்
வெம்பியசூரியர் சந்திரர்மாதவர்
விண்ணவர்பண்ணமர் விஞ்சையர்கின்னரர்
வீறுமுருத்திரர் கூறுமருத்துவர்
மேதகுமோரெழு மாதர்களாதியர்
தம்பியராயுறு மொன்பதுவீரர்கள்
தக்கவிலக்கமெ னுங்கணநாதர்கள்
தள்ளரும்வெள்ளமி ராயிரம்பூதர்கள்
தாவிலராய்ப்புறங் காவலராவரே. (௧௦)

காப்புப்பருவம்-முற்றிற்று.

# செங்கீரைப் பருவம்.

புகழ்பூத்தகார்த்திகையெனுஞ்செவிலிமாதர்தன்புனலாட்டிமெய்தொடைத்துப்
புவியில் வாய்நீருமிழ்ந் தணிவிரலினூற்றேய்த்து புதுநுதற் றிலதமிட்டு
மகிழ்பூத்தபூதித் திருக்காப்பணிந்துதம் மடிமேலிருத்தி யெழில்சேர்
மணிமுலைப்பாலூட்டி மார்பணைத்துச்சிதனை மோந்துவாய்முத்தமாடி
யகழ்பூத்தசரவணப் பொய்கை யந்தொட்டின்மல ரணையிற்கிடத்தி யகல
வளியினந்தா லாட்ட வலைகயிறதாய்வளி யசைப்பத் துயின்றெழுந்து
திகழ்பூத்தவிளையாடல் பயில்செருத் தணிகையிறை செங்கீரை யாடியருளே
சேணாடரர்ச்சனைசெய் சேனாபதிக் குரிசில் செங்கீரை யாடியருளே. (௧)

மேனையெனுமாதா மகிழ்ந்தபொற்சுட்டி வெண்பிறை நுதற்கணாட
மென்முலைப்பால்கறந் தூட்டியிடுகைத் தாய் மிலைச்சுபூஞ்சுடிகையாட
வானமுறுகார்த்திகைத் தாதியர்கள் செவியிலணி மகரகுண்டலமுமாட
வாநதி யெனுஞ்செவிலி புனையுமரைமணியாட வளர்சரவணப் பொய்கையா
மானமுறுகோடா யணிந்தவயிரக்கடக மரைமலர்க்கையிலாட
வண்மைபெறுபாண்டிமாதேவி யெனுநற்றாய் வனைந்திடுசதங்கையாடத்
தேனொழுகு பைங்குவளை மலர்செருத்தணிகையிறை செங்கீரையாடியருளே
சேணாடரர்ச்சனைசெய் சேனாபதிக்குரிசில் செங்கீரையாடியருளே. (௨)

பூமியெனுநன்மாமி யசுரர்புரிவேதனை பொறுக்கலா தயர்துன்பெலாம்
போக்குவலெனத்திரு வுரத்திருகை வைத்தல்போற் பொற்கரமிலத்திலூன்றி
மீமிசையுறுந்தேவர் படுசிறையெலாங்களைய மேக்கெழுஞ் செய்கைமான
மென்மெலக்கந்தர மெடுத்தெடுத்தந்தர மிசைப்பசுந் தலைநிமிர்த்துத்
தோமிறவமாமுனி வருக்கிடரிழைத்தவொரு சூர்வலிதனைக்கறுவல்போற்
சுந்தரப்பொன்முடி யசைத்தசைத்துத்தண்டை சூழ்காற்சதங்கைகொஞ்சத்
தேமருவுகல்லார மலர்செருத்தணிகையிறை செங்கீரையாடியருளே
சேணாடரர்ச்சனைசெய் சேனாபதிக்குரிசில் செங்கீரையாடியருளே. (௩)

பொன்மலைச்சாரலி னுறுந்திருச்சரவணப் பொய்கையொருகட்டிலாகப்
பூந்தாமரைச்சேக்கை மலர்மெத்தையாகப் புனற்கரைமரங்கால்களாய்
மின்மலியுமீனின் னெருங்கிப்பரந்தவான் வெண்மலர்ப் பந்தராக
வீறுபைந்தருமலரி னிடைவிடாதொழுகுதேன் விசித்தவூசற் கயிறதாய்த்
துன்மலைகளாமலையி னொலிமுழவதாய்வளைத் தொனிமிகத்தும்பிபாடத்
தோலடிப்பறவையொலி செஞ்சிலம்போசையிற் றோன்றமகிழ் கூர்ந்துதுயிலுந்
தென்மலயமாமுனிக் கருள்செருத்தணிகையிறை செங்கீரையாடியருளே
சேணாடரர்ச்சனைசெய் சேனாபதிக்குரிசில் செங்கீரையாடியருளே. (௪)

வெள்ளிவரையிற்குடி விழைந்தபரமன்செவியில் வீறுசங்கக்குழையினை
மென்மலர்க்கைப்பிடித் துரமேவு சிரமாலை மீதேறுசோபானமாய்த்
துள்ளிக்களித்தடி சிவப்புறமிதித்துத் துவைத்துச்சுவற்கணேறிச்
சுடர்பொற்கடுக்கைபொதி வேணியையவிழ்த்திடச் சுரநதிகுதிப்பமூழ்கிப்

பிள்ளைமதியைப்பிடித் தரவின்வாய்வைத்தவண் பிரியாதமுகிலையீர்ப்பப்
பெரிதுடனங்கித் தடித்தொடு பிடித்துமழை பெய்யவிளையாட்டயர்தருந்
தென்னூபுனலூறுகற் சுனைமருவுதணிகையிறை செங்கீரையாடியருளே
சேணுடரார்ச்சனைசெய் சேனாபதிக்குரிசில் செங்கீரையாடியருளே. (ரு)

வேறு.

மழைநிகர்விழியி னருட்கடையாட மணிப்பட்டமுமாட
மார்பிலணிந்த மதாணியுமாட வரைத்தோளணியாடத்
தழைகனிவாயொழுகும்புனலாடச் சரிதொங்கியுமாடத்
தண்டைசதங்கை புலம்புபதந்திகழ் தனிநூபுரமாடக்
குழையணியும்பன் னிருசெவியாடக் குஞ்சியசைந்தாடக்
கோதறுபொன்னரை நாணரையாடக் குற்றுடைவாளாட
அழிவில்பதந்தரு தணிகையமர்ந்தவ னாடுகசெங்கீரை
யமரர்புகழ்ந்திட வசுரரைவென்றவ னாடுகசெங்கீரை. (௬)

நிறந்திகள்குஞ்சி புனைந்திடுமலரொடு நிமிர்தலையாருட
நெடுநிலதிசையெழு வரையுறழ்திணிபுய நீள்கடகமுமாட
மறந்திகழவுண ருரந்துளைபடவிடு வைவேல்வெயிலாட
மார்பில்வனைந்திடு நீபமுறுங்களி வண்டு * ததைந்தாட
சிறந்திடுசெங்கழு நீரிதழுங்குலி செறிமோதிரமாடச்
செவ்வரையிற்றிகழ் வட்டுடையாடச் சேவற்கொடியாட
அறந்திகழன்பர் தொழுந்தணிகைப்ப னாடுகசெங்கீரை
யமரர்புகழ்ந்திட வசுரரைவென்றவ னாடுகசெங்கீரை. (எ)

திருமலர்வாய்தொறு நகைநிலவாடச் செந்துவரிதழாடத்
தெரிவையர்மதர்விழி யிருபுறமாடச் சிறுநுதல்வேர்வாடக்
குருமணிமேகலை புனைவடமாடக் குலமாமயிலாடக்
கோதறுமாதவர் பூசுரர்நெஞ்சு குழைந்துகுழைந்தாடத்
தருவயிராணிபொன் மாதெனுமரமியர் தாங்களிகூர்ந்தாடத்
தாரகையாகிய தாயருமாசை தழைந்து மகிழ்ந்தாட
அரிகமலாசனர் பணிதணிகாசல னாடுகசெங்கீரை
யமரர்புகழ்ந்திட வசுரரைவென்றவ னாடுகசெங்கீரை. (அ)

வேறு.

உமையொடுபரசிவ னுலகினைவலமுனம் வந்தாவின்றேதா
னொருகனியுதவுது மிதுபொழுதகலுதி ரென்றேமுன்போதத்
தமையனொடிகல்புரி தருபிணிமுகமிசை தங்காதங்கேறிச்
சகமுழுதையுமொரு நொடியினில்வலம்வரு தந்தாய்செந்தூரா

* ததைதல்-நெருங்கல்.

கமையறுகிசர ரவிதரவயில்விடு கந்தாமந்தாரக்
கடிமலர்முடிபுனை சசிமகள்வடிவேகிர் கண்பாவுந்தோளா
சிமையமதுயரிய தணிகையிலறுமுக செங்கோசெங்கீரை
திருமகள்மருமக னெனவருகுருபர செங்கோசெங்கீரை. (கூ)

கஞ்சனிகழ்ந்து நடந்திடவங்கது கண்டேவெங்கோபக்
கனல்படுமெனமொடு மூலகினைமறைகொடு தந்தாயென்றுனீ
விஞ்சியசங்கிர கம்படுமந்திர முந்தோமென்பாயேல்
விரிபொருளெதுவது புகலுதியெனலு மயங்காநின்றானைக்
குஞ்சியுறுந்தலை பொந்துபடும்படி கொந்தாரும்பாணிக்
குருவிரல்பொதிதர வொருமுறையறைதரு குன்றேபோன்றோய்கற்
செஞ்சிலைகொண்டவ னன்றருள்சுந்தர செங்கோசெங்கீரை
திணிமலவிருடவிர் தணிகையில்வருகுக செங்கோசெங்கீரை. (கo)

சேங்கீரைப்பருவம் முற்றிற்று.

ஆ பருவம் உ-க்கு திருவிருத்தம்-உ0.

---

# தாலப் பருவம்.

பாயா * வேங்கை கிழற்பிணைமேற் பாயும்வேங்கையதிர்ப் பொலியாற்
‡பறவாக் † குளவி கிழலிருந்து பறக்குஞ்சிறையெண் காற்பறவை
காயாவத்திக் கொம்பொடித்துக் கடுகும்வயமா விணைக்கவர்ந்து
காய்க்குமத்தி மிசையிரங்கக் கனிதேர்கடுவன் கற்பகத்திற்
ருய்வானரம்பைக் கெதிர்நடிப்பத் தனிவானவரான் பாலூட்டுந்
தணியமவளங் கூறிறும்பூது தழைக்குந் தணிகாசலத்திலிருந்
தாயாயுயிரைப் புரந்தளிக்கு மரசேதாலோ தாலேலோ
அழகார்மயில்வா கனமேறு மமுதேதாலோ தாலேலோ. (க)

ஏலமரந்தக் கோலமகி லிலவங்கம்பச் சிலைமரந்தேக்
கெழிற்சந்தனங் குங்குமமரமு மெறிந்துகொளுவி வனசரர்கள்
சாலவெறுத்து வனம்புகுந்து தவஞ்செய்முனிவருதிர்சருகு
தண்ணீர்கிழங்காதிகளுண்ணும் தகைமைகாட்டு மலைச்சாரற்
கோலமகழு மளையிலராக் கொழுஞ்சுட்டெரியு மணிவெயிலாற்
குளிர்பூம்பொழிலி னிருணீங்கக் குறமாமகளிர் விழைந்தாடும்
ஆலம்பெருகுஞ்சுனைத்தணிகைக் கரசேதாலோ தாலேலோ
அழகார்மயில்வாகனமேறு மமுதேதாலோ தாலேலோ. (உ)

---

* வேங்கை-ஓர்வகைமரம். † குளவி-மலைப்பச்சைமரம். ‡ காயாவத்தி-யானை.

வெள்ளிற்கனியா லடுப்பமைத்து வேர லுகுமுத்தரிசிதனை
வேடரிந்து கொணர்ந்தளித்த வேழச்செவியா முறத்தேற்றும்
புள்ளிபடுமான் ளூற்பாய்மேற் புடைத்துக்கொழித்துத் தறித்தெடுத்தும்
பொன்னந் துடிக்கட்டாழியுறும் புதுத்தேனூடும்பெய் துலையேற்றிச்
சுள்ளியகிற்சந் தனவிறகிற் சுடர்மாணிக்கத் தீ மூட்டித்
துடுப்பாமருப்பிற் றுழாவுசிறு சோறட்டிடெயினப்பேதையர்கை
யள்ளிவிளையாட் டயர்தணிகைக் கரசேதாலோ தாலேலோ
அழகார்மயில்வா கனமேறு மமுதேதாலோ தாலேலோ. (௩)

கல்லார்சுனையிற் சுரபியினங் கறந்தபாலிற் செவ்வரம்பைக்
கனிகணழுவி விழவதனைக் கனியின்பணைவாழ் கிளியினமும்
வில்லார்வேடப் பாவையரும் விளரியிசையாழ் விஞ்சையரும்
வெற்பிற்றவஞ்செய் முனிவரரும் வேழப்பிடியின் * கரிணிகளுஞ்
செல்லார்பொழில்சேர் கோடரமுஞ் சிறக்குந்தெய்வ மடந்தையருந்
தின்றுகளிப்புற் றநுதினமுந் தீராவிரும்பூதுடனுறையும்
அல்லார்நீல மலர்த்தணிகைக் கரசேதாலோ தாலேலோ
அழகார்மயில்வா கனமேறுமமுதே தாலோ தாலேலோ. (௪)

வேரல்மணியின் குழையொருபால் வேழமருப்பின்குழையொருபால்
விளங்கும்வயிரக் குழையொருபால் விழையும்வைடூ ரியமொருபால்
நேரிலரவ மணியொருபால் நீலமணியின் குழையொருபால்
நிழல்சேர்பச்சைக் குழையொருபால் நிறமார்கனகக் குழையொருபால்
தேரும்புகழ்க்கல் லாரகிரி செட்டியெனப்பேர் படைத்ததனாற்
றெரிந்துவிலையாக் குறக்குவித்த சீர்மைபொருவுஞ் செருத்தணிகை
யாரலுதவும் பன்னிருகை யரசேதாலோ தாலேலோ
அழகார்மயில்வா கனமேறு மமுதேதாலோ தாலேலோ. (௫)

வேறு.

துணிபடுவெண்பிறை தவழ்முடியின்புடை சொரிமுகிலின்புனல்வார்
சுனையில்விழுந்ததி னுறுபுனலுங்கொடு தொடர்மதமுந்தியிடாத்
திணியகில்சந்தன மரமுதிர்குங்குமந் திகழ்துடியும்பெயராச்
செறிபனசங்கனி மலர்வழைபைங்கழை சிறுமினுங்கொணரா
மணிவயிரங்கதிர் மரகதமஞ்சன மணியினொடும்புணரா
மருவுபுலன்கெழு மருவியிழிந்திடு வளமைதழைந்தெழில்கூர்
தணிகைநெடுங்கிரி யமருநெடுந்தகை தாலோ தாலேலோ
சந்தனமும்புழு குபுனைசுந்தர தாலோ தாலேலோ. (௬)

---

* கரிணி-பெண்யானை.

# தணிகைப்பிள்ளைத்தமிழ்.

வானதியுங்குளிர் தேனடைவிண்டிழி வார்மதுவுங்கரியின்
மாமதமும்புடை சூழ்சுனையின்புனல் மண்டிக்கொண்டிழியா
வெனல்கருந்தினை சாமையிருங்குரு மிதையின்மிகப்பெருகி
யிறவுளர்முன்புரி மடைகளழிந்திட வெல்லைகடந்தோடிக்
கானமருந்தி தவழ்ந்துநிறைந்திரு கரைகளழிந்தேகுங்
கம்பலையம்பார் கம்பமுறும்படி காரொலியைச்சினவா
தானமெழுந்தணி காசலவேலவ தாலோதாலேலோ
சந்தனமும்புழு கும்புனைசுந்தர தாலோதாலேலோ. (எ)

சூதக்கனியொடு பனசக்கனிபொழில் சோர்கதலிக்கனிபுந்
துதைவயலிற்படு மெருவின்முளைத்தெழி றுன்னிய செந்நெலெலாம்
வேதக்கிழவரு ளத்துறுகாதல் விடக்கணகத்திறைநீ
மேதினிமன்னர் விடுத்திடுதானை விழுப்புனல்பூஞ்சுனைநீர்
காதற்குறவர்கள் நானத்தொடுகுடை கல்லருவிப்புதுநீர்
காலின்விழுந்தெதிர் பாயவளர்ந்தொளிர் கதிரவன்மிசையோங்குந்
தாதிற்பொலிதரு காவிக்கிரியிறை தாலோதாலேலோ
சந்தனமும்புழு கும்புனைசுந்தர தாலோதாலேலோ. (அ)

வேறு.

மருவலர்கற்பக முடியணிபொற்சசி வாழ்வீறாகாதே
மகபதிவச்சிர தானுமுவப்புறு மூர்பாழாகாதே
யிருடிகள்சித்தர்க ளாரகரியக்கர்கள் வாழ்நாள்போகாதே
யெழுகடல்சுற்றிய புடவியிடத்துறு வார்நோயாழாதே
பொருகரிபற்பல புரவிமிடைக்குறு காலாள்தேரோடும்
பொருதகைத்தியர் சிரமலைபற்றிட வாள்கோல்வேலேவுந்
தருமலர்மொய்த்திடு பரகிரியிற்குக தாலோதாலேலோ
தணிகைமலைக்கிறை யெனவருசிற்பர தாலோதாலேலோ. (௯)

நாலுமுகத்தவன் மாலையழித்திடு நாதாவாநாபி
நாசமுறச்செயு ஞானமுனிக்கருள் போதாநீள்பாதா
பாலின்மொழிக்கனி வாயுமைதற்பரை பாலாமாசீலா
பாவையெழிற்றெய்வ யானையணைத்திடு மார்பாகூதாளா
கோலவனத்துறு வேடர்மகட்கிசை கோவேகூர்வேலா
கூடலரைத்தெறு கோழிமயிற்கொடி வீராதேனார்பூச்
சாலையிருத்துள சோலைமலைக்கிறை தாலோதாலேலோ
தாவில்செருத்தணி மேவியசிற்பர தாலோதாலேலோ. (௧௦)

தாலப்பருவம்-முற்றிற்று.

ஆக பருவம் ௩-க்கு - திருவிருத்தம்-௩௰.

# சப்பாணிப் பருவம்.

இரைத்துத்திரைத்து நுரை பொங்குகடலோரேழு மிணையறுகிடங்கதாக்
விடைப்படுவரைப்பெலாந் திருவுலாப்போந்துவரு மேழ்பெருந்தெருவதாக்
நிரைத்துத்தழைத்தபொழி லேழுமுய்யானமா நேமிவரைநெடியமதிலா
நீர்ப்புறக்கடலாடு தெப்பக்குளத்தினியல் நோகமேருவரைசூழ்
வரைப்பனைத்தும்புறக் கோயிலாத்தணிகைமலை மருவுமந்தப்புரமதாய்
மன்னுயிரெலாம்புரந் தாண்டாசுபுரிகின்ற வள்ளிதெய்வானைகணவா
தரைக்குளுயர்கும்பமுனி முடிவைத்தசெங்கைகொடு சப்பாணிகொட்டியருளே
சரவணப்பொய்கைதனி லவதரித்திடுமுருக சப்பாணிகொட்டியருளே. (க)

மலையலையையங்கையி லடக்கியிகல்வாதாவி மலையலை வயிற்றடக்கி
வண்டமிழெனும்புதிய தென்கலையுடன் பழய வடகலையைநாவடக்கி
நிலவலையமுத்தாரந் தாழ்ந்துதென் றிக்கின்மே னிமிர்தலைத்தாளடக்கி
நீணிறவிடத்தினை மிடற்றடக்குங்கயிலை நிமலனையுளத்தடக்கிக்
குலவியகறுப்பநிறை மாதரெனமந்தநடை கொண்டுவளர்தென்றலெனுமோர்
குழவியைத்தன்வழி னடக்குபலயத்திலமர் குறுமுனிக்கருள்குரவனாய்த்
தலைமைபெறுவீட்டுநெறி காட்டுதணிகைக்கிறைவ சப்பாணிகொட்டியருளே
சரவணப்பொய்கைதனி லவதரித்திடுமுருக சப்பாணிகொட்டியருளே. (உ)

பொன்மலையைவெள்ளிவெற் பாக்கியுயர்வெள்ளிப்பொருப்பைநீலக்கிரியதாய்ப்
புதுக்கியிந்திரநீல வெற்பைமாணிக்கப் பொருப்பாக்கிமாணிக்கமா
மின்மலையினைப்பவள மாக்கிமரகதவெற்பை வெள்வயிரவெற்பதாக்கி
விண்ணுலகைமண்ணாக்கி மண்ணுலகைவிண்ணாக்கி விரிகதிரைமதியமாக்கி
நன்மதியினைக்கதிர தாக்கிவிண்ணவர்கடமை நானிலத்தவர்களாக்கி
நானிலத்தவர்கடமை யுரகராக்கிப்புதுமை நாட்டுவிளையாட்டயர்தருந்
தன்மவிடையேறுமா னருள்தணிகைவளர்குழவி சப்பாணிகொட்டியருளே
சரவணப்பொய்கைதனி லவதரித்திடுமுருக சப்பாணிகொட்டியருளே. (ங)

பருந்தினொடுநிழல்செலும் பான்மையெனவிஞ்சையர்கள் பயிலுமியலிசைகள்பா
பாங்கருறுவேங்கையின் பனிமலர்ச்சினைமேவு பைந்தோகைகேட்டுறங்கும் [டப்
முருந்தினொடுமுத்தமுறழ் மூரற்கொடிச்சியர்கள் முருகுவாய்வைத்தருந்தி
முருகனெதிர்சாரல்வெறியாட்டயர்தமேனுக்கியே முதைப்புனமிதைப்புனஞ்சூழ்
குருந்தினொடுகொன்றைமிசை யமர்பசுங்கிளிகண் மகிழ் கூர்ந்துபூவைக்கிசைக்கு
குளிர்தணிகைவெற்பினி லிருந்துமானிடவடிவு கொண்டுபுனமெய்திவள்ளி [ங்
தருந்தினையினிடியிரந் தேற்றநீளங்கைகொடு சப்பாணிகொட்டியருளே
சரவணப்பொய்கைதனி லவதரித்திடுமுருக சப்பாணிகொட்டியருளே. (ச)

கிம்புரிப்பூணமர் மருப்பெனுமுலக்கைகொடு கேழ்நிறச்சந்தவுரலிற்
கேடில்சாதிக்காய் லவங்கமொடுகர்ப்புரங் கீறுதக்கோலமேலம்
வம்புறுகொடிச்சியரி டித்தவாசப்பொடிகள் வாங்கியெழில்விஞ்சைமகளிர்
வளர்கதிர்க்கற்றைநால் பீதாம்பரத்தைவிலை மாற்றிடும்வள்ளிமலையிற்

கொம்புமுற்றலர்வேங்கை மரமாய்விருத்தனாய்க் குன்றவர்தமக்கொளித்துக்
குறமான்றனக்குமயல் பூட்டியெழில்காட்டியணை குமரனேநிமலவழலாந்
தம்பமுற்றவனுதவு தணிகாசலக்கடவுள் சப்பாணிகொட்டியருளே
சரவணப்பொய்கைதனி லவதரித்திடுமுருக சப்பாணிகொட்டியருளே. (ரு)

## வேறு.

உரகமுழக்கிய யொலியையடக்கிடு முழைகளுரப்பொலியவ்
வுழையினுரப்பொலி தனையுமடக்கிடு முழுவைமுழக்குகொடு
வரியினிரைப்பொலி நலியவடக்கிடும் வழுவைசிலப்பொலியவ்
வழுவைசிலப்பொலி மறையவடக்கிடும் வயவரிகார்ச்சனைகள்
சரபமதிர்ப்பொலி யரியின்மிடுக்கொலி தனையுமடக்கியிடுந்
தருவனமொய்த்திடு சரியருவித்திகழ் தணிகைமலைக்கிறையாங்
குருபரசித்திர மயில்வருதற்பர கொட்டுகசப்பாணி
குறுமுனிவற்கரு மறைபுகலுத்தம கொட்டுகசப்பாணி. (சு)

தவரைவளைத்திடு சவரர்வடிக்கணை தைத்திடுமெய்த்தேகந்
தனையுதறக்கணை நிகர்கருமுட்பட வெய்த்திடுமைக்கேழல்
அவிர்பிறையிற்பிறழ் வளையெயிறிற்றிட முற்கலையைப்பாயு
மதுவுமருப்புக வெதிர்புலிகொட்புற முட்டியெடுத்தேகி
யிவர்சருவிற்படு மருவிதினைப்புன முற்றேடிக்காவி
னிழிநறவத்தொடு செழியமலர்த்தடம் வற்றுமற்பாயுங்
குவளைதழைத்திடு தணிகைமலைக்கிறை கொட்டுகசப்பாணி
குறுமுனிவற்கரு மறைபுகலுத்தம கொட்டுகசப்பாணி. (எ)

சுந்தரமொய்த்திடல் கண்டுவெயப்புலி குஞ்சரமெனவியவாக்
கடுகியடித்திட மழைகள்தடித்திடி கான்றிடவுளநாணி
வந்தெதிருற்றிடு கைம்மலைதன்னையு மைம்முகிலெனவிகழா
மதுநுகர்மக்களி னறிவழியச்சரி மலைமுழையுட்புகுதுஞ்
சந்திரன்வந்திட முந்துகுறத்தியர் தண்ணிழலாடியெனச்
சந்தனகுங்கும வொண்டிலதம்புனை தனியெழிலைப்பார்க்குங்
கொந்தலர்பைங்குவளைத்தணிகைக்கிறை கொட்டுகசப்பாணி
குறுமுனிவற்கரு மறைபுகலுத்தம கொட்டுகசப்பாணி. (அ

## வேறு.

நிரையுலகெங்கணு முலவியிறப்பொடு மிப்போது
நிகழ்வருஞ்செய லறிதருநற்றவ னட்போடும்
புரியுமகந்தனி லெழுதருசெச்சை மதத்தாலே
பொருநுகொடிஞ்சின முடுகியனைத்து மழித்தேகல்

கருதிமறிந்திடு சூரபயத்தொடு முற்போதக்
கருணைபுரிந்தச வலியையடக்கி யடித்தேறுந்
தருசிகர்செங்கையி லொருமுறைகொட்டுக சப்பாணி
தணிகைநெடுங்கிரி வருமிறைகொட்டுக சப்பாணி. (௯)

வேழமுகத்தவ னோடிகலிக்கனி யைப்பேணி
மேதினிசுற்றுறு மாதிரமெட்டு நொடிப்போதில்
சூழுமயிற்பரி யேறிமணிக்கட லிற்போகிச்
சூரனையட்டுயர் வானவர்பொற்பதி யிற்கூடி
வாழவளித்தொரு வாசவன்பெற்ற மடப்பாவை
வாய்வதுவைத்தொழில் யாவுமுடித்திடு மெய்த்தேவ
தாழுமறக்கொடி நாயககொட்டுக சப்பாணி
தாவில்செருத்தணி வேலவகொட்டுக சப்பாணி. (௧௦)

சப்பாணிப்பருவம்-முற்றிற்று.

ஆக பருவம் ௪-க்கு திருவிருத்தம் ௪0.

# முத்தப்பருவம்.

தூங்குந்துளைக்கைப் பிறைமருப்புச் சொரிமும்மதர்தாழ் கவுளூறற்காற்
சுழலுஞ்சிறுகட் புகர்முகத்துத் தும்பிநிகருஞ் சம்புமுதிர்
வீங்குங்கனிகள் விழுந்தழிந்து விரிசாரருவி யொழுகிமய
வெற்பின்றவத்தா லவதரித்து விளங்குந்தெய்வப் பிடிமணந்து
நீங்கிலைந்து முகத்தேவர் சிங்கமெனவும் பெயர்படைத்துச்
செழிக்குந்திருவா லங்காட்டிற் றேவர்வணங்க நடம்புரியு
மூங்கிலளித்த முத்தமருள் முத்தேமுத்தந் தருகவே
மூலாத்திரியி லெழுஞான முளையேமுத்தந் தருகவே. (௧)

வழங்குமயமா மகம்புரிந்த மன்னன்புதல்வ ரனைஞ்சகரர்
வானத்திறைவன் புரிந்தநெடு வஞ்சமறியா மாநிலத்தைக்
கிழங்கினகழ்மண் ணெலாமருந்திக் கீழ்ப்போய்த்தவஞ்செய் திடுமுனிபாற்
கிளரும்பரிகண் டவற்சீறக் கிளத்துமுனிவன் றவக்கனலாற்
சழங்கிமாய்ந்து நிரையமுறுந் தன்மைவினவிப் பகீரதனூர்
தவமாறயுத வாண்டியற்றச் சதுமாமறையோ னுலககன்று
முழங்கிவரும்வா னதியளித்த முத்தேமுத்தந் தருகவே
மூலாத்திரியி லெழுஞான முளையேமுத்தந் தருகவே. (௨)

விதிநாவமர் வெள்ளோதிமமும் விண்டுவுரஞ்சேர் பொன்னனமு
மேவுங்கொழுங்கண்மலர்பூத்து விளையும ரோர்க் கருட்செந்தேன்
பொதிசேதாம்ப விதழவிழ்ந்து புரைதீர்கங்கா நதிகுலவி
பொலியும்பவள வனமடர்ந்து பொன்ருதணிமங் கலவளையின்
கதிர்வாய்ந்தைங்கைக் களிற்றினுக்குங் கவுணியனுக்குந்திரு முலைப்பால்
கறந்துகொடுத்த நேமியம்புட் கஞலியுயிர்கள் பலவளித்து
முதிராநீலக் கடலளித்த முத்தே முத்தந்தருகவே
மூலாத்திரியி லெழுஞான முளையேமுத்தந் தருகவே. (ங)

விளரித்தீஞ்சொலரமகளிர் விழைந்துகுடையு மயிர்ச்சாந்தும்
விண்ணின் றிழிகார்த் திகைமடவார் விம்மிச்சுரக்குமுலைப்பாலுங்
இளர்மைக்கருங்கணுமைகறந்த கிண்ணத்தொழுகு முலைப்பாலுங்
கேடில்கூலத்தருமலரிற் கிண்டிமளியாற் சொரிதேனுந்
தளர்விற்சங்குமீன்போதா தாராதாரை குருகுண்டு
தழைப்பத்தவஞ்செய்சரவணத்தின் றண்ணீர்மிசையா யிரமிதழ்த்தேன்
முளரிப்பூஞ்சேக்கையிற்குலவு முத்தேமுத்தந் தருகவே
மூலாத்திரியிலெழுஞான முளையே முத்தந்தருகவே. (ச)

பெய்வாய்மூக்குக் கண்செவியின் வழிபோய்விடயங்களையருந்தி
விரவும்வினையாற்சுழல்பிறவி வேலைகடக்குங் கருத்துடையார்
ஐவாய்வேட்கை யவாவொழிந்திட் டாருதாரப்படியேறி
யாறேடாறங்குலமீதி லறியுநிமலப் பெருவெளியில்
கைவாய்மழுவுங் கறைமிடறுங் கண்ணார்நுதலும் பிறைமுடியுங்
கவினத்தோன்றுஞ் சிவனிடத்திற் கலந்தவுமையாளுடன்பிறந்த
மொய்வானறுமீனுவந்தளித்த முத்தேமுத்தந் தருகவே
மூலாத்திரியிலெழுஞான முளையேமுத்தந் தருகவே. (ரு)

வேறு.

கயிலைவெற்பும்பனிகொ ளிமயவெற்பும்புதிய கனகவெற்புங்குறைகடீர்
கடவுள்வெற்புஞ்சமர புரியின்வெற்பும்பலவு கனியும்வெற்பும்புனிதமா
மயிலைவெற்புந்தழலி னருணைவெற்பும்பொதிய மலயவெற்புங்கலைநிலா
மதியவெற்புங்கதிரி னுதயவெற்புஞ்சுருதி மறையின்வெற்புங்கொடியுரு
நியமவெற்புஞ்சுடிகை யுரகவெற்புங்களிறு நியதியர்ச்சனைபுரியவாழ்
நெடியவெற்புந்திகிரி வடிவவெற்பும்வதுவை நிகழுவெற்பும்விடையதாஞ்
சயிலவெற்பும்பழைய குடியிருக்குங்குமர தருகமுத்தந்தருகவே
தணிகைவெற்பின்கணம ராறுமுகப்பொன்குழவி தருகமுத்தந்தருகவே. (சு)

இருடியர்க்கும்பழைய வுரகருக்குந்துயரி லிமயவர்க்குங்கிரணமா
ரெரிகதிர்க்குங்குளிரு மதியினுக்கும்புவியி லெவர்களுக்கும்வழியதாய்
வரவிடுத்தங்கவர்க ளறிவழித்தஞ்சியுயிர் மடியிருட்கங்குலெனவே
மதிமயக்குங்குருகு பெயர்படைத்தண்டமுறு மலையினுட்சென்றுதுயர்கூர்

உருவுடைத்தம்பியரு முயரிலக்கம்பெயரு மொளிபெருக்குங்கணவரோ
டுயிர்படைத்தங்கணெழ மலையொடத்தும்பிமுக னொடுகணத்தஞ்சிவிழவே
தருமலர்ச்செங்கையுறு மயில்விடுக்குங்குமர தருகமுத்தந்தருகவே
தணிகைவெற்பின்கணம ரறுமுகப்பொன்குழவி தருகமுத்தந்தருகவே. (எ)

மழையின்முத்துந்தவள மதியின்முத்துங்கமல மலரின்முத்துங்கரியினீள்
வளர்மருப்பின்கணுளி ளருமுத்துங்கதலி வருகனிக்கண்பொழிநிலா
விழையுமுத்துங்குருகு தலையின்முத்துங்கமுகின் மிடையுமுத்துந்தெரிவைமார்
மிடறின்முத்துங்கிருடி யெயிறுமுத்துங்கிளையின் விளையுமுத்தும்பணையினூர்
கழையின்முத்தும்டணில முதவுமுத்துஞ்செநெலின் கதிரின்முத்தும்புனலுலா
கயலின்முத்துஞ்சலவர் முழுகுநத்தின்வயிறு கனலுமுத்தும்புகழதாய்த்
தழையுமுத்தும்புனையு மணியுரத்தின்குமர தருகமுத்தந்தருகவே
தணிகைவெற்பின்கணம ரறுமுகப்பொன்குழவி தருகமுத்தந்தருகவே. (அ)

வேறு.

தருவுஞ்சுரபியு மணியுங்கடைவிழி தத்துமருட்பார்வை
தனைநம்புறவிரு புறமுஞ்செறிதர மொய்த்தகடற்சேனை
மருவுஞ்சபைதனி லெவரும்பணிசெய வுற்றகொலுக்கூட
மணியின்கணமொளி ரணையின்புடையர சுற்றசசிக்கோவின்
றிருவெண்கரிதரு மொருபைங்கொடிபடர் வெற்றிமணித்தோளிற்
றிகழ்சந்தனமகில் புழுகுமபுனைதரு சித்ரமயிற்பாக
முருகுண்டளியின முலவுந்தணிகையின் முத்தமளித்தருளே
முதிருஞ்சுவையமு தொழுகுந்துவரிதழ் முத்தமளித்தருளே. (கூ)

உனதின்புறுகவி புகலென்றனுதின முற்றறிவித்திடவு
முயர்செந்தமிழ்சிறி தறைகின்றிலனென வொட்டுகவிப்புலவ
னனமின்றெனமது ரையிலந்தணனடர் வற்கடமுற்றிடலு
மழுதன்பொடுதொழ வறிசுந்தரனருள் பொற்கவியைச்சொலவே
யினிதன்றிதுபொரு ளெனவந்திறைதரு குட்டமடுத்திடுநோ
யிடருங்குகையுறு சிறையுந்தவிர்தரு நற்கவிசொற்றிடலு
முனிவின்றெதிர்வரு முருகன்றணிகையின் முத்தமளித்தருளே
முதிருஞ்சுவையமு தொழுகுந்துவரிதழ் முத்தமளித்தருளே. (கய)

முத்தப்பருவம்-முற்றிற்று.

ஆக பருவம் ரு-க்கு திருவிருத்தம்-ருய.

# வருகைப் பருவம்.

கண்ணனுங்கனகிற வண்ணனுந்திருநுதற் கண்ணனுமொருங்குறைதல்போற்
கருமலையிடத்துறச் செம்மலைவலத்துறக் கவினும்வெண்மலையிடையதாய்ப்
பண்ணமருநந்திநதி புடைசூழவிடையிடைப் பைஞ்சுனைவயங்கமீச்செல்
பயோதரம்வயாநலி வுறக்கொடிகடாக்கல்பல பாவையர்மருத்துவஞ்செய்
துண்ணிலவுநீர்மக வுயிர்த்திடவிலாப்புறத் தொண்கரத்தால்வருடல்போ
லோங்குமுடிமேலூன்று வெள்ளிவீழன்னமழை யொழுகுநீரருவியிழிதல்
தண்ணிலவுகல்லார மாலையணிமாண்புநிகர் தணிகைநாயகன்வருகவே
தடாமலப்பிணியெனை யடாதுசிற்சுகமருள் சடானனக்குருவருகவே. (௧)

நாவலம்பெயர்புனை பொலந்தகடணிந்தெனை நனையிதழ்முறுக்கவிழ்ந்து
நவிர்வண்டுணைதொளிர் விளக்கேற்றிவைத்தெனை நறுமலர்கடுறுசெண்பகக்
காவிலந்தணர்புரியு மோமவங்கியினிமிர் கரும்புகைப்படலமீப்போய்
கடவுளர்க்காயுளை வளர்த்துமுகின்மேனிபொதி காட்சியாற்களிதுளும்பித்
தூவுமின்குலவுநகை வாய்நவின்றூறிமதி தோறுமும்மாரிபொழிநீர்
துன்னுதண்பணையில்வளர் செஞ்சாலியோங்குகதிர் சூரியன்பரிகடினவே
தாவிலின்புறுகுடிகள் மேவுதண்ணடைகுலவு தணிகைநாயகன்வருகவே
தடாமலப்பிணியெனை யடாதுசிற்சுகமருள் சடானனக்குருவருகவே. (௨)

ஆசினியின்முட்புறக் கனிபழுத்தொண்புவி யதிர்ந்திடவெடித்தவிடரி
னவிர்சுளைவிரிந்துநறை யொழுகுமணமெண்டிக்கு மளவுகால்வழியினேடி
மூசுவண்டினமளவி மொய்த்தனிதியின்புதையல் முன்கண்டுகவரும்வறியோர்
முறைமைகடெரித்திடுஞ் சாரலுறுசோலைகளின் முதிர்கறிக்கொடியின்மிளகைக்
கூசுகருமிளமந்தி தின்றழுதல்கண்டுவன கோடரந்தேனினடையைக்
கொண்டுவந்ததனு விடைப்பிழிந்திடலுமகிழ் கூர்ந்துவிளையாடுபணைசூழ்
தாசரதியாசிரிய னாகியுயர்வாழ்வுதரு தணிகைநாயகன் வருகவே
தடாமலப்பிணியெனை யடாதுசிற்சுகமருள் சடானனக்குருவருகவே. (௩)

கானத்தையொத்தபைங் கதலியின்புலியடிய காய்க்குலையறுத்துமீப்போய்
கமுகிளம்பாளைமடல் கீறிமுப்புடையதெங் கம்பழமுதிர்த்தெழுந்து
வானத்தகட்டைப் பிளந்துமழைசிதறியுயர் மதியினுறுமானைமுட்டி
வான்மீனைச்சினந் தாகாயகங்கையிடை வளர்சுறவின்முட்டகர்த்துக்
கூனத்தையொத்தகண் டத்தரம்பையர்செவிக் குழைமகரமுங்கிழித்துக்
கோளகையிடித்துப் புறங்கோத்தநீரிற் குதிக்குமிளவாளையுகளுந்
தானத்தினொடுமருவி நீராறுபாய்வயற் றணிகைநாயகன்வருகவே
தடாமலப்பிணியெனை யடாதுசிற்சுகமருள் சடானனக்குருவருகவே. (௪)

வாட்டடங்கட்செறி யுழத்தியர்சரோருக மலர்க்களையெடுத்தருந்தி
மருமலர்க்கைக்கோப் புடன்குரவையாடுமொலி மஞ்சினொலியைப்புடைப்ப
நாட்டருஞ்சுவைகடரு தொழுவரைப்போர்மேனயந்திவர்ந்தேறுமுழவர்
நாவலோவென்றுகூ விளிகொளுஞ்சும்மையலை நரலையைத்தட்பவயலின்

ஈட்டருங்கட்டரள முதிர்கரும்பைத்தறித் தேந்திரத்திட்டுமள்ளர் [தோற்
எறிபுமுட்கோல்கொடு கடாவைத்தெழிக்குமொலி யிடியொலியைமாற்றவணி
ரூட்டுணைச்செஞ்சூட்ட வனமுலவுபண்ணைசூழ் தணிகைநாயகன் வருகவே
தடாமலப்பிணியெனை யடாதுசிற்சுகமருள் சடானனக்குருவருகவே. (ரு)

வேறு.

கன்னற்குதலைச்செங்கனிவாய்க் கலசமுலைப்பொற் கடைசியர்தங்
கருங்கண்மலரைப்பூந்தடத்திற் கமலத்தருந ... றுக்கவிழும்
நன்னர்க்குவளை யெனவறுகால் நாடிப்பெடையினொடுஞ்சுழலும்
நகைத்தண்டரளம் பொழிசில்வால் நறும்பூங்குமுதம்வாய்விரியும்
பின்னற்குழலைமேகமெனப் பெருகுங்க... மயில்கவும்
பிறழும்வளைக்கை கஞ்சமெனப் பிரியாதனங்களுவந்தேறும்
வன்னப்ப... சூழ் செருத்தணிகை வாழ்வேவருகவருகவே
மலையானுதவு முமையாள்கண் மணியேவருகவருகவே. (சு)

தென்றற்கொழுந்து தவழ்பொழிலிற் செறிபூங்குழைசேர்வழைநிழலிற்
றினையின்கதிர் ... றருவியிழி தீந்தேனுண்டுவாய்குதட்டுங்
குன்றக்குகைவாய் ...மாட்டெரு... சூடநேர்செருத்தலுகுதீம்பால்
கு...டம்பலவுநிரப்பியிடக் குதிக்குங்கயல்களுண்டுமயல்
துன்றிக்கமல மிசையுறங்குந் தூநீர்மருதம்பற்பலசூழ்
சோலையுயர்விண் கற்பகப்பூஞ் சோலையெனப்பொன்மலர்களுலு
மன்றற்குவளையலர்தணிகை வாழ்வே வருகவருகவே
மலையானுதவு முமையாள்கண் மணியேவருகவருகவே. (எ)

பிறப்புமிறப்பு மெவ்வுயிர்க்கும் பிறழாதமருந்திறம்போலப்
பெருகும்புனல்பாய் வயல்கடொறும் பின்னற்கதிரின்செந்நென்முதிர்ந்
தறுப்பும்படுப்பு முழுதுபரம் படிந்துவிதைத்துநடுநடவும்
அகலாதுழவர் செறிபணைசூழ்ந் தழகார்கன்னற்காடுழக்கி
யொறுக்குமதவா ரணம்பிடியோ டுலவித்திரியுஞ்சாரல்வளர்ந்
தோங்குமூங்கிற் றலையின்மயி லுலவுங்கழைக்கூத்தரின்கவி
மறப்பிலிறும்பூ துறுந்தணிகை வாழ்வேவருகவருகவே
மலையானுதவு முமையாள்கண் மணியேவருகவருகவே. (அ)

வேறு.

தகுவர்முடிகளுருளவெயிறு தரளநிரையினுதிரவாய்
தடிகளுதிரமொழுகவயிறு சரியமலையை யனையதோள்
தொகுகைநெடிய மிடறுகழல்க டுடைகளிடைகடுணியவே
சுழலும்விழிகள் சிதறவலகை சுலவுகழுகுநரிகளும்

புகுதவயிலை யெறியுமிறைவ புகரிறணிகைவரையில்வாழ்
புனிதமுருகவரியின்மருக புலவர்மலர்கள் பொழியநீண்
மகுடகிரைகளசைய விசையமயிலு மசையவருகவே
மறுகுமெமது பிறவியகல வருகவருகவருகவே. (கூ)

சரணமலர்களசையவிருது தழிவுகழலுமசையவே
சகலவுலகும் விலையிலறுவைதழையு மிடையுமசையவே
யருணகிரண கடகமசைய வயிலுமசையவழிவிலா
வழகுபுயமுமசைய விருவரணையு மருமமசையவே
முரணுமகர குழைகளசைய முறுவலணியுமசையநீர்
முழுகுதணிகை வரையிலலரு முருகுகுவளையணிகொடார்
மருவுமுடிக ளசையவிசைய மயிலுமசையவருகவே
மறுகுமெமது பிறவியகல வருகவருகவருகவே. (கய)

வருகைப்பருவம் முற்றிற்று.

ஆ பருவம் சு-க்கு திருவிருத்தம்-சுய.

# அம்புலிப் பருவம்.

சந்ததமுமிறைவர்விழி தோற்றினுயிவனிறைவர் தனிநுதல்விழிப்பிறந்தான்
ருவுமொருமானைப் புணர்ந்தாயிவன்குறவர் தருமானையும்புணர்ந்தான்
நந்துகலையீரெட்டு மன்னினுயறுபத்து நாலுகலையிவனுணர்ந்தான்
நாகமணியீசர்முடி யேறினுயிங்கிவனு நாகமணிமுடியேறினன்
வந்தபுலவர்க்கமுத மீந்தாயிவன்புலவர் வந்திக்கவமுதமீவான்
வாலிபமறுங்குழவி யாகினுயிவனென்றும் வாலிபக்குழவியானன்
அந்தவகைதெரிதிநீ தென்றணிகைவெற்பனே டம்புலீயாடவாவே
அறிவாளர்சித்தமுறு மறுமாமுகத்தனுட னம்புலீயாடவாவே. (க)

பேதம்.

மேருவினையென்றுநீ வலமாகவருவையிவன் மேருதலைகீழாக்கினன்
விளம்புமுபதேசகுரு விற்பிழைத்தாயிவன் விளம்புகுருவுரைநயந்தான்
சாருவடிவழிதிநீ யிவனுமழியாதுவளர் சாருவடிவாயிருந்தான்
சந்ததமுநீங்காக் களங்கமுற்றாயிவன் சார்ந்திடுகளங்கமில்லான்
சீருடையவத்திரி விழித்தாதுவாகியென் டிக்கினுஞ்சிதறினையிவன்
சிவனுதற்கட்டழற் பொறியாய்த்தருப்பையிற் சேர்ந்துமகவுருவமானன்
யாருமுணர்கிற்சதிக மாந்தணிகைவெற்பனே டம்புலீயாடவாவே
அறிவாளர்சித்தமுறு மறுமாமுகத்தனுட னம்புலீயாடவாவே (உ)

உரோகணியிடத்ததிக மோகமானுயிவனு மொளிராரல்பாலுவந்தா
னுயர்தலையுவாவினிற் கலையழிந்தாயிவனு முயர்தலையுவாவிலழியான்
சராசரவுயிர்க்குணவு நல்கினுய்ஞானியர் தமக்கழிவில்வீடளித்தான்
றணிநாளினுக்கரச னுகினுயிவனமரர் தங்களுக்கரசனுனன்
இராவினிடைவானத் தெழுந்துதிரிவாயிவ னிராப்பகலிலாவிடத்தான்
இழிவிலாச்சிறுவிதி சபித்திடப்படுவையிவ னெழில்விதியினைச்சிறைசெய்தான்
அராவினுக்கஞ்சா மயிற்றணிகைவெற்பனே டம்புலீயாடவாவே
அறிவாளர்சித்தமுறு மறுமாமுகத்தனுட னம்புலீயாடவாவே. (௩)

தானம்.

தக்கனிடுசாபந் தவிர்த்திடுவனரைதிரைக டாங்குமுடலுங்கூனியே
சாய்ந்துகிழமாகிநீ சாந்துயருநீக்குவன் சகலகலையுந்தெரித்த
மிக்கருவில்லைப் பிழைத்தபழிநீக்கிடுவன் மெய்க்களங்கமுமறுப்பன்
வெங்கதிர்க்கஞ்சியொளி யவியாமலருளுவன் விடவரவினச்சறுப்பன்
பக்கமிருபாலுமுன் பக்கமேபோலவளர் பான்மையுமறிந்துதவுவன்
பைங்கூழினுக்கிறைமை யல்லாமலுலகுபதி னாலினுக்கிறைமைதருவன்
அக்கதைதெரிந்துதணி கைக்கிறைவனோடமர்ந் தம்புலீயாடவாவே
அறிவாளர்சித்தமுறு மறுமாமுகத்தனுட னம்புலீயாடவாவே. (௪)

புறவிருளைநீக்கியிடு முனதுநெஞ்சகலாது புக்கவிருளைத்துரப்பன்
பொங்குமலைகடல்கண்டு மகிழுனக்கலையாத பூரணக்கடலளிப்பன்
குறைமதியமாமுனக் கருண்ஞானமோனநிலை குலவுநிறைமதியளிப்பன்
கொடியவரவுக்கஞ்சு முன்றனக்குலகங் கொடுங்கயிற்றரவாக்குவன்
மறுகமுதவுருவாகு முன்றனக்கழியாத வாயமுதமொழியீகுவன்
வானெலாமுலவிடு முனக்கரியசிற்ககன வானமுறுநிலையளிப்பன்
அறுதிபெறுவென்சொலைவி னுய்த்தணிகைவெற்பனே டம்புலீயாடவாவே
அறிவாளர்சித்தமுறு மறுமாமுகத்தனுட னம்புலீயாடவாவே. (௫)

வேறு. தண்டம்.

சேவூருஞ்சிவனீர்மேவுஞ்சடை சேர்வாய்நன்றிதுவானுலுந்
தேனுர்பைங்கழைபூவாரம்பிறை சீர்சால்வெண்குடையானுலுங்
காவாழிந்திரன்வானோர்நுங்கமுன் கால்வாய்பொங்கமிர்தானுலுங்
கானுரும்பயிருணுரும்படி காய்வாய்தண்கதிரானுலு
நீவாவென்றிவனோதாமுன்பெதிர் நீதான்வந்திலையானுயேல்
தீன்காலின்றனையோவாயம்புய நோராகுந்துபரீவானுல்
மாவார்பைங்கழுநீர்வாழுங்கிரி வாவாவம்புலிவாவாவே
மாதேவன்குகனோடாடும்படி வாவாவம்புலிவாவாவே. (௬)

தாயாயின்பருள்சேய்வாவென்றலுந் தாழ்வாய்வந்திலைபோவாயேற்
றூய்வாய்வந்திலமோதாநின்றிருள் சார்வாய்வஞ்சகனுய்நீயுந்
தேய்வாய்வெங்கயநோயால்வெங்கதிர் சேர்போதுன்கதிர்வீவாயே
தீயாரும்பணிவாயாலுண்டிடர் தீராதங்குழல்வாய்வானிற்
றூய்தாநின்குருமாலாமங்கனை சூதால்வந்தணைசோரார்நீள்
சோமாபெண்பழிபோமாறுங்கறை சூழாவண் வடிவாமாறு
மாயாதொண்கழு நீர்வாழுங்கிரி வாவாவம்புலிவாவாவே
மாதேவன்குகனோடாடும்படி வாவாவம்புலிவாவாவே. (எ)

வேறுகுஞ்சுரர்மாயோனண்புறு வேதாவுந்தொழுதேயேகி
வீடார்தம்பதிசோமாவொண்கதை மேலோருஞ்சொலவோர்வாய்நீ
கூறுமுன்வருவாயேனன்றருள் கூர்வாய்வண்புகழ்சேர்வாயே
கூசாதன்பொடுநீவாவெம்பணி கோளாரும்பகைதீர்வாயே
சீறுவந்தெதிர்மாய்சூரன்செரு தீராநின்றதுமாபாவந்
தேயாநின்றதுவாழ்வீகின்றது தேனுருஞ்சுனையார்பானல்
மாறுதம்புவியோர்தாழுங்கிரி வாவாவம்புலிவாவாவே
மாதேவன்குகனோடாடும்படி. வாவாவம்புலிவாவாவே. (அ)

வேறு.

வானிலுறுவோரந்தணர்கள் வாடியழுதேதுன்புறலு
மாயைதருசூரன்சிரமும் வாழுமரிமாவின்சிரமுந்
தானமுடிதோயுங்கிரியுந் தாருகனும்வீழும்படிமுன்
சாடுமயிலேவுங்கரநீ டாள்கடொழுவாரம்புவியில்
ஊனமிலராவிங்குவரோ தோடியுழல்வாய்நன்றலவே
யோதுமுன்நீவந்திலையே லூனமுறுவாயங்கதனு
லானையினமாருந்தணிகை யாடவருவாயம்புலியே
ஆறுமுகனோடிங்கொருநீ யாடவருவாயம்புலியே. (௯)

வீடுபெறலாமன்பர்பெறு மேன்மைபெறலாஞ்செங்கதிர்முன்
வீறுபெறலாமெங்குமுழல் வேலைதவிர்வாழ்வும்பெறலா
மாடுபெறலாநொந்தழியா வாய்மைபெறலாமின்பசுக
வாரிபெறலாம்வெம்பணியின் வாதையறலாமுந்தைமுயற்
கூடுமறலாம்பெண்களவிற் கூடுபழிபாவந்தெறலாம்
கூனுமறலாம்வந்திடெனக் கூறுமுனநீவந்தனையே
லாடுமயில்சூழ்தென்றணிகை யாடவருவாயம்புலியே
ஆறுமுகனோடிங்கொருநீ யாடவருவாயம்புலியே. (௧௦)

அம்புலிப்பருவம்-முற்றிற்று.

ஆக பருவம் எ-க்கு திருவிருத்தம்-எ௰.

# சிற்றிற்பருவம்.

அல்லிக்கமலத் தயனுவி லமருங்காயத் திரிமானு
மவனிமுழுது முடிசுமக்கு மனந்தனிரண்டா யிரநாவுஞ்
சொல்லற்கரிய புகழ்நிலவுந் தொலையாச்சூரன் றனைவென்ற
தோற்றம்படைத்தீ ரேழிலகுந் துயர்கூர்பாவ விருளகற்றுங்
கல்விக்கடலே நின்பெருமை கற்றோர்க்குதவு நற்றுணையே
காவிலரச னருள்பிடியுங் கானக்குறவர் தருபிணையுஞ்
செல்வக்கரத்தால் வருடடியாற் சிறியேஞ்சிற்றில் சிதையேலே
சேணார்தணிகை மலைக்கிறைவா சிறியேஞ்சிற்றில் சிதையேலே. (௧)

கங்கையலைமிக் குறப்புடைத்துங் கயத்தினலர்தா மரைமிதித்துங்
கானக்குறமான் புனத்துழன்றுங் கவினார்செச்சை விலாவுதைத்தும்
மங்கையுமையாண் மடித்தலத்து மணிமேகலைக்கல் லுறத்தளர்ந்தும்
மையார்களத்தன் றிருமார்பில் வணைந்தகேழன் மருப்பலைத்துந்
திங்கடவழுங் கொடுமுடிகள் செறியுமலைக ளொறுநடத்துந்
தேவர்புனைமா மணிமகுடந் தேய்க்கச்சிவந்து மரம்பையர்கள்
செங்கைவருடுஞ் சீறடியாற் சிறியேஞ்சிற்றில் சிதையேலே
சேணார்தணிகை மலைக்கிறைவா சிறியேஞ்சிற்றில் சிதையேலே. (௨)

வேறு.

கானத்திறைவா மலைக்கிறைவா கயிலைக்கிறைவா கலைக்கிறைவா
கமலத்திறைவன் செருக்கொழித்த கருணைக்கிறைவா மகத்திறைவா
வானத்திறைவா மறைக்கிறைவா மயிலுக்கிறைவா வருடைமிசை
மன்னுமிறைவா செங்கடப்ப மாலைக்கிறைவா மதிக்கிறைவா
மோனத்திறைவா மயிற்கிறைவா மொய்ம்பார்கோழிக் கொடிக்கிறைவா
முனிவர்க்கிறைவா வேதாந்த முத்திக்கிறைவா முடிவிலின்பத்
தேனக்கலர்பொற் சேவடியாற் சிறியேஞ்சிற்றில் சிதையேலே
சேணார்தணிகை மலைக்கிறைவா சிறியேஞ்சிற்றில் சிதையேலே. (௩)

வந்தித்திடுவோ முப்பொழுதும் வழுத்தியிருப்போந் திருப்புகழை
வலம்வந்திடுவோ நின்கோவில் மலருந்தருவோம் பூசனைக்குப்
பந்தித்திடுவோ மைம்பொறியும் பரமென்றுனையே நினைந்திடுவோம்
பாலும்பழமு முவந்தளிப்போம் பணிக்குமுனதே வலும்புரிவோஞ்
சந்திற்புழுகுங் கப்புரமுந் தனிக்குங்குமமுங் கலந்தணிவோஞ்
சலசத்திறையு மலையிறையுந் தண்ணந்திருப்பாற் கடலிறையுஞ்
சிந்தித்திருக்குஞ் சீறடியாற் சிறியேஞ்சிற்றில் சிதையேலே
சேணார்தணிகை மலைக்கிறைவா சிறியேஞ்சிற்றில் சிதையேலே. (௪)

வம்பைப்பொடித்து மான்மதத்தால் வளருமெமது மூலக்கரியை
வயங்கியொளிர்பன் னிருபுயமா மணிக்கந்திறுகப் பிணித்திடுவோம்
பம்பித்தாள முறுவனிலாப் பயிலுநினது செங்கனிவாய்ப்
பவளக்கடிகைத்துவரிதழிற் பழுக்குஞ் சுவைத்தேன் பருகிடுவோம்
நம்பித்துணையென் றொருவரையு நாடோமுனையே நாம்புணர்வோம்
நவிற்றுநினது தேவியர்பா னண்ணுந்துணைச்சே டியராவோஞ்
செம்பொற்கமலச் சேவடியாற் சிறியேஞ்சிற்றில் சிதையேலே
சேனூர்தணிகை மலைக்கிறைவா சிறியேஞ்சிற்றில் சிதையேலே. (ரு)

வேறு.

துயினீங்கிக்கொடு வினைநீங்கிச்சிறை துனிநீங்கிச்சுரர் களிகூரத்
துணைநீங்கிக்கொலு வணைநீங்கித்திரி துயர்நீங்கிக்கரி யிறைவாழ
மயனீங்கிச்சுழன் மனைநீங்கிப்பழ மலநீங்கித்தவர் தவமேவ
மறநீங்கித்தினி பொறைநீங்கப்பல மதநீங்கிப்புவி மகள்வீற
வுயிர்நீங்கிப்புனை யுடைநீங்கிக்கரு குடனீங்கித்தகு வர்கண்மாய
வுரைநீங்கிப்புய வலிநீங்கிப்பிழை யுறநீங்கித்துணை வருமேவ
அயிலேந்திக்கரு மலைபோழ்ந்திட்டவ னடியேஞ்சிற்றிலை யழியேலே
அருடாங்கித்தணி கையிலோங்குத்தம னடியேஞ்சிற்றிலை யழியேலே. (சு)

தழைபாம்புக்குழை புனைபூம்பொற்கொடி சதிராஞ்சொற்கிளி மகமாயி
சடைதாங்குத்தமி நடைதூங்கற்பிடி தனியாந்தற்பரை சதுர்வேதி
கழையாம்பொற்சிலை மலராங்குற்றிடு கரம்வாய்ந்துற்றவ ளபிராமி
கலைதேர்ந்திட்டவள் மலையான்பெற்றவள் கடுவார்ந்திட்டவள் கலியாணி
யெழிலாம்பற்பல வுலகீன்றிட்டவ ளினிதாஞ்சிற்சுக முறுவாமி
யெனையாண்டற்புத வருளீந்திட்டவ ளிடமாம்வித்தகன் விடையூரும்
அழலேந்திக்கொரு மகனும்புத்திர வடியேஞ்சிற்றிலை யழியேலே
அருடாங்கித்தணி கையிலோங்குத்தம னடியேஞ்சிற்றிலை யழியேலே. (எ)

கொலையேங்கப்பழி வினையேங்கக்குடை கொடியேங்கத்தகு வர்கணீடுங்
குடியேங்கக்கழ லடியேங்கத்தழை குலமேங்கப்பெரு வரமேவும்
நிலையேங்கச்சின மொழியேங்கக்கொடு நினைவேங்கப்புய வலிதானும்
நெடிதேங்கப்புனை முடியேங்கப்படை நிறைவேங்கப்பொறை யறுமாயை
மலையேங்கக்குகை யிருளேங்கப்பொலி வளமேங்கத்தகு வியர்தாமும்
மனமேங்கப்பரி யினமேங்கக்கரி மதமேங்கப்புனல் செறிவாரி
யலையேங்கப்பொரு சிலைவாங்கற்புத னடியேஞ்சிற்றிலை யழியேலே
யருடாங்கித்தணி கையிலோங்குத்தம னடியேஞ்சிற்றிலை யழியேலே. (அ)

வேறு.

முற்றிலின்மணல்வாரி முத்தொடுமுழுநீல
மொய்த்திடுமெகிலார முற்படுபணிநீர்கள்
வற்புறுசிழலாடி வச்சிரமுதலான
மட்டவிழ்மலர்மாலை வைத்துறையுதுகோலி

நூல் வரிசை எண்: 2682
நன்கொடை எண்: 2682

நற்றவமுனிவோரு நச்செழிவிளமாதர்
நட்பொடுமெதிர்கூடி நற்றணிகையில்வீதித்
தெற்றியில்விளையாடுஞ் சிற்றிலையழியேலே
சித்திரமயில்வீரா சிற்றிலையழியேலே. (௯)

பற்பலமணியாலும் பச்சிலைமலராலும்
பத்திகொளறைவீடு பக்கமதுறுமேடை
பொற்புறுமணிமாடம் புக்கினிதுறகூடம்
புத்தமிர்தடுதாதை பொற்கலநிறைசானீர்
வெற்புறுகுறமாதர் மெய்த்தணிகையில்வீதி
விற்கறிசிறுசோறு மிக்குறவிளையாடுஞ்
சிற்பனுமுளநாணுஞ் சிற்றிலையழியேலே
சித்திரமயில்வீரா சிற்றிலையழியேலே. (௧௦)

சிற்றிற்பருவம்-முற்றிற்று.

ஆக பருவம் அ-க்கு திருவிருத்தம்-அ௦.

# சிறுபறைப் பருவம்.

கலைகடலுடுத்தபுவி முழுவதுநொடிப்பளவில் கடிதுவலமுற்றசரணு
கமலமலரிற்குடிகொள் பிரமனையடித்துலகு சருணையினளித்தசதுரா
நனையவிழ்கடப்பமலர் குவளையொடுசெச்சைபுனை நலமலிகர்த்தபுயனே
நதியரவுகொக்கிறகு பிறைமதிமுடித்தசடை நயனநுதலத்தன்மகனே
வனைகழலரக்கரொடு மயல்புரிபொருப்பினையு மடியவயில்விட்டகரனே
மழையினொடுநற்றவள மதகரிமிசைக்குலவு மகபதிமகட்கினியனே
தினைவளர்புனத்தருவி யிழிதணிகைவெற்பரச சிறுபறைமுழக்கியருளே
திமிரமலமற்றவர்க டெளியவருசிற்சொருப சிறுபறைமுழக்கியருளே. (௧)

கொலைபுரிதைத்தியர்க ளுடறலைகளற்றொழுகு குருதிகள்குடித்துநரிநாய்
குறைபடுமுடற்குநிகர் கரணமொடுசுற்றிவரு குறளிகடமைக்கறுவனீண்
மலைநிகர்பிணக்குவையி னுறுகுடர்புயத்தணியும் உயிரவர்களித்துமகிழா
யருவுகழிமுட்படையை முறைமுறைதிரித்துவய மகவெதிர்நடிக்கவழலார்
உலையுறுகுடத்தினிடை வறைபடுநசைப்பொரிய லுருகுநிணமுற்றுமயிலா
வுறுகழுகுமைக்கொடிகள் வறுமையறவெற்றியயி லொருநொடியில் விட்டமுரு
சிலைமறவர்மொய்த்துவளர் தணிகைநகருக்கரச சிறுபறைமுழக்கியருளே [கா
திமிரமலமற்றவர்க டெளியவருசிற்சொருப சிறுபறைமுழக்கியருளே. (௨)

குறைவறுதவத்தையுறு கொடியிடையெயிற்றியர்கள் குலவுநடைகற்பவெகினங்
குளிர்முகநிகர்ப்பவெழுசுனையிடைமுளைத்தவொரு கொடியபதம்வைத்துநிறைநீ
ருறுதவமியற்றனிகர்தருகமலமெத்தைமிசை யுறையுமவர்பொற்பினிழல்போ
லுயர்தவமியற்றிமகிழ் வொடுதழல்வளர்ப்பதென வொளிர்கனல்புடைக்கணெரி
மறுவறுகழைத்தலையின் மயிலினடிக்கவவர் மருவு தலைக்குநிகராம் [யா
மறைதருகுயிற்றொகுதி முகிலினம்வரக்கடிது மவுனமுறுபெற்றிமைகுலாய்ச்
சிறுமிளகுவெற்றிலையி னொளிர்தணிகைவெற்பிறைவ சிறுபறைமுழக்கியருளே
திமிரமலமற்றவர்க டெளியவருசிற்சொருப சிறுபறைமுழக்கியருளே. (௩)

கழையினுகுமுத்தினில வொழுகுமொளியிற்குவளை கடியிதழவிழ்க்கவளையின்
சதிர்மணியினிற்குமுத முகைபுரிமுறுக்குவிரி கழனியலைதத்துபுனலி
னுழைசிறுகயற்புகுதுமளவிலெதிர்குத்தியிடைநொசிகமுகின்மொத்தகுலைமே
லுகருமுதுகொக்கின்வளை மிடறொடிதரச்சினவி நொடிவரைகுதித்தெழுவரான்
மழையகடுமுட்டிமிசை வருகதிரையெட்டியுயர் மதியமுதுகுத்துவெடிபோய்
மடநடையுடைக்கனக வனவளமுடைப்புவன மடுநெடுவிலுற்றகமலச்
செழுமலர்மிசைத்துயிலு முயர்தணிகைவெற்பிறைவ சிறுபறைமுழக்கியருளே
திமிரமலமற்றவர்க டெளியவருசிற்சொருப சிறுபறைமுழக்கியருளே. (௪)

நடமிடுமயிற்றொகுதி யிசைவளர்குயிற்றொகுதி நடைபயிலனத்தொகுதிபோன்
நவிலியறழைத்தினி மழலைமொழிகற்றிளைஞர் நகுநடைபடைத்தமடவார்
தடவரைமுடிக்கணிவர் தாலுறுசுவர்க்கமுறு சசியினெழிலைக்கவரவான்
றலைமிசைநடிக்கவெழு தகைமையைநிகர்க்குமழை தனைதருமலைச்சரிவிலே
படவரமுடிக்கணொளிர் மணிவெயிலெறிப்பவிருள் படுகுகைவிளக்கமெனவே
பயனுறுகரிக்கணமு மயலுறுமரிக்கணமும் பகைமையறவொத்துறைதருந்
திடமுளபொருப்பர்குடி யுறுதணிகைவெற்பிறைவ சிறுபறைமுழக்கியருளே
திமிரமலமற்றவர்க டெளியவருசிற்சொருப சிறுபறைமுழக்கியருளே. (௫)

வடவரைமுகட்டிலுறு துருவனுமகத்திறையும் வனசமலருற்றவயனும்
மதியமுமுடுக்குலமு மலர்கதிருமைக்கடலு மகிதலமுமற்றையவரும்
படவரவமெட்டினொடு கடகரிகளெட்டுமவை பயிறிசைகளெட்டுமிறினும்
பயனுறுதவத்திநிலை யழிவரியசித்தரொடு பலமுனிவர்மொய்த்தகுகைசூழ்
மடநடையெயிற்றியர்க ளியலுறுமணிக்கலவ மயின்முகில்வரக்கணிகண்மேன்
மனமகிழ்தரக்குலவி நடமிடுசெதிக்கிசைய வனசரர்கள்கொட்டுதுடியார்
திடமுறுதுகிற்கொடிக ளுயர்தணிகைவெற்பிறைவ சிறுபறைமுழக்கியருளே
திமிரமலமற்றவர்க டெளியவருசிற்சொருப சிறுபறைமுழக்கியருளே. (௬)

வேறு.

தழைத்திடுதமனிய மிழைத்திடுமணிவெயி றதைத்திடு மெழுநிலைமேற்
சரித்திடுவணிதையர் முகத்தெழில்கவர்மதி தளைப்படுநுழைவழிபோய்
மழைக்குலமவர்குழல் வனப்பினைநணிகவர் மகிழ்ச்சியின்மழைபொழியும்
வருத்திடுமவரிடை யெழிற்கவர்தருமினு மதத்தொடுகொடியழியுஞ்

செழித்திடுபுரிசைசண் மி சப்படுகொடிவளி செறித்திடவசைதாலாற்
சிறப்புறவருகதி ரிளைப்புறு துயர்தவிர் செருத்தணிமலையிறைவா
முழைச்செவிமலையுட லா கனாயடுருக முழக்குகசிறுபறையே
முழுத்தியமலவிரு ளொழித்திடுதினகா முழக்குகசிறுபறையே. (எ)

மலைச்சருவினில்வளர் தினைக்கதிரினை நுகர் வரிக்கிளிதனையிதண்மேல்
மறத்தியாணிவிரல் சுழற்றியகவணெறி மணிக்கல்வல்விசையொடுபோய்
புலத்துறுகடைசியர் களித்திடுகுரவையின் பொழிற்கமுகுறுகுலைமேற்
பொருக்கெனவிழமுதிர் பழத்திரள்பலவிரு புறத்துதிர் தருகனியுஞ்
செலை தொடுகதலியின் கு க்கனிகளுஞ்பெழி றிளைத்திடுமுழவரெலாஞ்
செறித்தனுதினமுழு வயற்றலையெருவிடு செருத்தணிமலையிறைவா
முலைக்குவடசைதா மறத்தியர்நகைசெய முழக்குகசிறுபறையே
முழுத்தியமலவிரு ளொழித்திடுதினகா முழக்குகசிறுபறையே. (அ)

கடைப்படுபிறவியினகப்படுமிருவினை கலக்குறநிலைகுலையாக்
கறைப்படுகரகொடு துறக்கமுமுழறரு கசட்டனையருள்விழியாற்
றடைப்படுமயலினை யறுத்திகலறவொளிர் தனிக்கழனிழலிருவா
சலிப்பறுபரசுக வளக்கரிலெனதுயிர் தழைத்திடவிடுமுருகா
குடத்தினைநிகர்தன மறத்தியரியன்மயில் குறித்தனுதினமருவாக்
குறிச்சியிலுறுகணி மாத்தினிலமர்தரு குகைத்தணிமலையிறைவா
முடக்கியமணிவிரல் பிடித்திடுகுணில்கொடு முழக்குகசிறுபறையே
முழுத்தியமலவிரு ளொழித்திடுதினகா முழக்குகசிறுபறையே. (௯)

தகைத்திடுபொறிவழி யுகைத்திடுபுலனொடு தடைப்படுமனநிறுவாத்
தவத்தினையனுதின முஞற்றியமுனிவார் தமக்கெதிர்பிணிமுகமேன்
மிகுத்திடுநறைபொழி கடப்பலரணிதரு விறற்புயமசைதரவே
விணிற்செறிபிடியொடு குறக்கொடியிருபுறம் விருப்புறவருபவனே
திகைத்திடுநிருதர்கள் பகைத்தெதிர்விடுகணை சிதைத்தவர்தலையறவே
செகுத்திடுமிலையயில் பிடித்திடுமறுமுக செருத்தணிமலையிறைவா
முகிழ்த்திடுமணிவிரல் பிடித்திடுகுணில்கொடு முழக்குகசிறுபறையே
முழுத்தியமலவிரு ளொழித்திடுதினகா முழக்குகசிறுபறையே. (௧௦)

சிறுபறைப்பருவம்-முற்றிற்று.

ஆக பருவம் ௯-க்கு திருவிருத்தம்-௯௦.

---

# சிறுதேர்ப் பருவம்.

அறுபதமிதிப்பமுகை விண்டுதேண்டேன் றுளி யசும்புசலசப்பொகுட்டின்
அரசிளவனஞ்சங்கு வயிறுளைந்தீன்றமணி யவிர்பெடையுயிர்த்தகருவென்
றுறுசிறையகத்துவைத் தடைகிடந்திடுவய லுடுத்தகன்னற்காடுவா
னோங்குகமுகைத்தீண்ட வளர்கமுகுதெங்கின்முப் புடையகனியைத்தாவிடச்
செறியிலைமுடத்தாழை யிரவியிரதந்தொடச் செழித்ததண்டைகள்புடைசூழ்
திருநந்தியாறுபுனல் பெருகுகாலூர்தொறுந் திகழ்திருத்தணிகைநாடா
சிறைதவிரவமாருறு குறைதவிர்த்தருள்குமர சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திதர வருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (க)

கவான்மலையில்விளையாடு வனசரர்சிறூர்விளாங் கனியுதிரவேயெறிந்த
கரிவருப்பயல்சூழ மருதமுறுதண்பலாக் கனியினைச்சாடியுழவர்
குவாலுறப்புரியுநெற் போர்மீதுவரையினூர் குழவிமதியொப்பவீழுங்
கொண்டலுருவக்களமர் தருமகார்வானோங்கு கொக்கின்முதிர்கனியுதிரவே
தவாதெடுத்தெறிசங்கு வெள்ளிலங்கனிகளைச் சாடிவனசரர்குடிசைமேற்
றவழுமுழுநிலவெனத் திகழுமதிசயமருவு தணிகையங்கிரிமுருகனே
திவாகரனிவர்ந்துவரு தேர்நாணவொளிர்மணிச் சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திதர வருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (உ)

தொந்தூர்மலர்த்தடத் தரவிந்தமெத்தையிற் குடிகொண்டவாழ்க்கையொருவிக்
குடவயிறுளைந்தலறி வாய்விட்டாற்றநீர்க் கோடேறிவயலினூர்ந்து
முந்தூர்புனற்காலி னோடித்தவழ்ந்துழவர் முன்றிலிற்சென்றுமேதி
முதுகிற்றவழ்ந்தேறி யசலநிகர்நெற்போரின் முடிமிசைச்சென்றிறங்கிச்
சந்தூருமலையருவி நீரிலெதிரேறித் தடஞ்சுனையெலாமுழக்கித்
தவருறுமுழைக்குட் டவழ்ந்துமுத்தீன்றவளை தங்குதென்றணிகையிறைவா
செந்தூரிருந்தவுணர் நந்தூரழித்தகுக சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திதர வருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (ங)

சகத்திரத்தோடுவிரி கஞ்சப்பொகுட்டிலுறை சதுமுகவிரிஞ்சனெழுதுந்
தலைப்பொறியனைத்தையு முணர்ந்தசித்திரகுத்தர் சாற்றியகணக்கைவினவி
மிகப்பருத்தோங்கிவளையுங்கருங் கோட்டுமுழை மேவுபிலவாயசெங்கண்
மேதிக்கடாவைக் கடாவிமுச்சிகைமருவு வெள்வேறிரித்துமுகிலின்
வகைப்படுமிருட்டுருவ மசனியுரைவாய்ந்துபிறை வாளெயிறிலங்குசண்டன்
வாராமுனென்றனைக் காத்தருடிருத்தணிகை மாமலையில்வாழுமுருகா
செகத்திலுயிர்யாவையு மளித்தவம்பிகைமதலை சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திதர வருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (ச)

தாருகன்றேரினை யுருட்டியரிமாமுகன் றனதுபேய்த்தேருருட்டித்
தாவிலாச்சூரனிந் திரஞாலவிரதந் தகர்ந்திடவுதைத்துருட்டி
வீரரொன்பதின்மர்தே ரொடுபடைத்தலைவர்தேர் வெவ்வேறுபுடைசூழ்தர
மேதினியெனும்பரம னேறுதேரொன்றும் விரிந்திடுமிரண்டாயிரம்

பேரெனுந்தொகைமருவு பூதவெள்ளத்தினொடு பிறழ்மணித்தேரிலேறிப்
பெயர்த்தலையெறிந்திடு கடற்றலைநிசாசரர் பிணக்குவைபடத்தொலைத்துத்
தீரவரிதாஞ்சினந் தவிர்செருத்தணிகையிறை சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திதர வருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (ரு)

மங்குலைத்தீண்டுகொடி மணிமாடமுடிதவழு மதியிளம்பிள்ளைமடவார்
மடிமீதுசிறுகுழவி யெனவுவந்தேறலு மகிழ்ந்துமணிமுறுவல்பூத்துப்
பங்கயமலர்க்கரத் தேந்திவாய்முத்தாடி பஞ்சணையின்மீதுசேர்த்திப்
பாலொடுபழங்கனிந் துதவிமுகமன்சொலி பரிந்துவிளையாடிவாவென்
றங்கணலும்படி விதித்திடுவிருப்பினு லநுதினங்கலைகள்வளரு
மழகியசெருத்தணிகை வரைநினைந்தவர்வினை யறுத்தருளுமாறுமுகவா
செங்கதிர்த்தேர்நாண வம்புலித்தேர்மீது சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திதர வருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (சு)

பேய்த்தேரைநீரெனக் கொண்டுழலுமிரலையிற் பிணித்திடுகயிற்றிலரவப்
பிராந்தியுறுமொருவனிற் சுத்திகழிரசிதப் பித்தடைந்திடுபேதையிற்
பூத்தேரினுறுவாழ்வு மெய்யென்றுகருதியான் பொறிவழிச்சென்றுபஞ்சப்
புலனையுமருந்தியா னெனதெனுமகந்தையாற் புன்பிறவியணுகுமலநோய்
நீத்தேர்பெறுந்திரு வடித்தாமரைப்போதி னீழறந்தானந்தமாம்
நித்தபரிபூரண சிதாகாசவெளியிலே நிலைபெறவிடுத்தமுருகா
தேய்த்தேமுடிக்கண்மதி தவழ்தணிகைவெற்பின்மேற் சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திதர வருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (எ)

காமக்குரோதமிகு லோபமொடுமோகமுங் கருதிமதமாச்சரியமுங்
கட்டிப்பிணித்துநிரை யத்திலிடுமைம்புலக் காதலுமறத்துறந்து
தாமுற்றிடுந்துற வறத்தினிலைதவறுது தழைகானகத்தடைந்து
சாகருந்திப்பஞ்ச தழலிடையிருந்துநற் றவமியற்றிடுமாதவர்
தோமற்றசிந்தனைக் கெட்டாதநின்றிருத் துணைமலர்ப்பதநீழலிற்
றுயரறவிருத்தியெனை யாண்டருள்செருத்தணி சுடர்க்கிரியமர்ந்தமுருகா
சேமித்தமறைநெறிக ளெங்கணும்விளங்கிடச் சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திதர வருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (அ)

வேறு.

மனத்தொடுமொழியுட லொருப்படுமடியவர் வணக்கொடுமடிபேண
மலத்தொடுமிருவினை யகப்படுமுயிரருள் வசப்படுதிறநாடிச்
சினத்தொடுமயல்விழை வளித்திடுபொறிபுலன் சிதைத்தறிவினிலோவாச்
சிவத்தினையடைதர வவத்தைகள்கழிவுறு செயற்கையையெளிதீயத்
தனித்தொருமயின்மிசை யிருத்தியகழலொடு தவத்தினர்புடைசூழச்
சலிப்பறவெதிர்வரு மருத்திகொளறுமுக தலத்துயர்குருநாதா
உனக்குறுவல்லவனு மனத்ததிசயமுற வுருட்டுகசிறுதேரே
உலப்பறுவளமலி செருத்தணிமலையவ னுருட்டுகசிறுதேரே. (க)

தரைத்தலைமுனிவர்க ளுரைத்திடுசெருதிக டழைத்தபணிருகாதிற்
றமிழ்க்கடலுறுவிதி தினைத்துணையறிவிலி சலிப்பறும்விழைவாலே
விரித்திடுபுகழ்பெறு பிளைத்தமிழொருசத விருத்தமுநணியேறும்
வெளிற்றுருவுறுகரி யிசைக்குலவியகழல் வெறிக்கணுமுறலாலே
குருப்பொலியிமையவ ரளித்திடுமெழுதொடு குறத்தியர்தினைமாவுங்
குளிர்ப்புறநுகர்தரு களிப்பொடுமகிழ்பெறு குலப்புதுமலர்வாயா
வொருத்தருவிகாறு செருத்தொழில்வலகுக னுருட்டுகசிறுதேரே
யுலப்பறுவளமலி செருத்தணிமலையவ னுருட்டுகசிறுதேரே. (கo)

சிறுதேர்ப்பருவம்-முற்றிற்று.

ஆக பருவம் கo-று திருவிருத்தம் கoo.

---

சாலி வாகன சகாத்தமா யிரத்தெழு நூற்றெ
டேலு மாண்டிரு பத்துநா ளுன தன் மதியிற்
கோலுங் குண்டைஞா யிற்றினிற் பிளைத்தமிழ் கொடுத்தான்
மூல வெற்பனுக் கடியனுங் கந்தப்ப முனியே.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவஸ்தலமாலை.

கண்டிப்பாக்கம்
சுப்பராயமுதலியாரவர்கள் குமாரர்
**சண்முகமுதலியாரவர்களால்**
இயற்றப்பட்டது.

இஃது,
சிறுமணவூர்,
**முனிசாமி முதலியாரவர்களால்**
பரிசோதிக்கப்பட்டு,

தமது
சென்னை சூளை,
சிவகாமிவிலாசஅச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1904.

இதன் விலை அணா 1.

# விளம்பரம்.

கனவான்களே! சென்னை சூளை, சட்டண்ண நாய்க்கன் வீதி, 12-வது நெம்பர் வீட்டில் ஸ்தாபித்திருக்கும் சிறுமணவூர்-முனிசாமி முதலியார் அவர்களது சிவகாமி விலாச அச்சுக்கூடத்தில் ஸ்தாபித்திருக்கும் வி. பி. கம்பெனியில் தமிழ், தெலுங்கு, கிரந்தம் துலுக்கு முதலிய புஸ்தகதினுசுகளும், ஸ்மார்த்தவைணவர்களுக்கு வேண்டும் புஸ்தகங்களும், பாலியர்களுக்கு வேண்டும காலேஜி புஸ்தகங்களும், உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டும் ஆக்டுபுஸ்தகங்களும், இசுலாமானவர்களுக்கு வேண்டும் தமிழ்யெழுத்தில் துலுக்குபுஸ்தகங்களும், காவலர், பாவலர், நாவலர் யாவருக்கும் வேண்டும் இலக்கணம், இலக்கியம், புராணம், கதை, அம்மானை, நாடகம், விலாசம், கீர்த்தனை, அந்தாதி, கலம்பகம், கோவை, தூது, வெண்பா, சதகம், கும்மியென்னும் அனேகதினுசுகளும், அத்வைதசாஸ்திரங்களும், ஆறுமுகநாவலர், புஷ்பரதச்செட்டியார், சை-இரத்தினசெட்டியார் முதலியவர்களுடைய அச்சுக்கூடங்களிற் பதிப்பித்த உயர்ந்த புஸ்தகதினுசுகளும், வியாதிகள் சொஸ்தப்படும்படி தக்க அவிழ்தங்களும், அவரவர் பேர்களுக்குத்தக்கதாய் ரொம்பவும் அழகான வேலைகள்செய்த ரப்பர்சீல்களும், ஜெர்மன்சில்வரால் செய்த நகைதினுசுகளும், சாமான்தினுசுகளும், நல்ல வாசனைபொருந்தியதாயும், நாள்படவிருந்தால் கெடாமலிருக்கும்படியாயுமுள்ள அத்தர்தினுசுகளும், பூசுபில்லைகளும், வாசனைவத்திகள்முதலிய இன்னும் அனேகவிதசாமான்களும்தயாராயிருப்பதால் வேணடியவர்கள் அடியிற்கண்ட எனது மேல் விலாசத்திற்கு எழுதினால் உடனே வி. பி. தபாலில் அனுப்பப்படும். என்னுடைய கேட்லாக்கு வேண்டுபவர்கள் அரையணா ஸ்டாம்பு அனுப்பிவித்தால் அனுப்பப்படும்.

ஒவ்வொருவரும் எங்களுக்கு விஷயந்தெரியும்படி தெளிவாய் ஒவ்வொருமுறையிலுந் தங்கள் பெயர், ஊர், இருப்பிடம், போஸ்டாபீசு, தாலூக்கா, ஜில்லா முதலியவைகளோடே விலாசத்தைக் கட்டாயம் எழுதவேண்டும்.

இப்படிக்கி,

சிறுமணவூர்-முனிசாமி முதலியார்,

நெ. 12. சட்டண்ண நாய்க்கன் தெருவு,

சூளை போஸ்டாபீசு மதராஸ்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவஸ்தலமாலை.

### விநாயகர் துதி.

எம்பிரான் முக்கணுடையீசனுறையும்பதிமேல்
பைம்பொருள்சேர்பாமாலைபாடவே-யும்பர்தினம்
போற்றுக்கரிமுகத்துப்புண்ணியனேநாயேனைத்
தேற்றுந்திருவருணீசெய்.

### இதுவுமது.

அத்தன்கயிலைமலை ஆதித்திருப்பதிமேற்
பத்தியுடன்பாமாலைபாடவே-நித்தமுமேல்
வானவருமாலயனும்வந்துகரங்கூப்புமெழில்
ஆனைமுகத்தோனேயருள்.

### நால்வர் துதி.

தேவாரமுஞ்சீர்த்திருவாசகமுஞ்சொல்
பாவாணார்பொற்றாள்பணிந்துநீ-நாவாரத்
தோத்திரஞ்செய்தால்மனமேதொல்வினையெலாமகன்று
வீற்றிருப்பாய்வீட்டில்விரைந்து.

## நூல்.

## சோழவளநாட்டில் வடகரையிலுள்ள சிவஸ்தலங்கள்.

### சிதம்பரம்.

**சபாநாயகர் - சிவகாமியம்மை.**

சித்தங்களிக்கச்சிவகாமிகாணமன்றுள்
நித்தநடனஞ்செய்யுநின்மலா-பத்தர்
புலிநாகம்போற்றும்புனிதனேகொன்றை
மலிவேணியனேயாள்வந்து.

## திருவேட்களம்.

*பாசுபதஈசுரர் - நல்லநாயகியம்மை.*

வாசமிகுவேட்களம்வாழ்மாதேவாபாசுபத
ஈசநல்லநாயகிதோயெம்மானே-பாசவினை
யண்டாதுநாயேற்கருள்புரிந்துநின்னடிக்குத்
தொண்டாக்குநாளெந்நாள்சொல். (உ)

## திருநெல்வாயில் என்-து சிவபுரி.

*உச்சிநாதஈசுரர் - கனகாம்பிகையம்மை.*

உச்சிநாதீசாவுயர்கனகவம்பிகைப்பெண்
மெச்சுஞ்சிவபுரிவாழ்வித்தகா-நச்சியினங்
காமத்தில்வீழாமற்கண்பார்த்தெனைப்புரிந்து
நேமத்திருக்கநினை. (௩)

## திருப்பெருமணம் என்-து ஆச்சாபுரம்.

*சிவலோகதியாகேசர் - நங்கையுமையம்மை.*

திங்கட்சடையாய்சிவலோகதியாகேசா
நங்கையுமையம்மையார்நாயகா-துங்கப்
பெருமணத்தில்வாழும்பிரானேயெளியேன்
கருவூர்ப்புகாதினிநீகா. (௪)

## திருக்கோலக்கா.

*சப்தபுரிஈசுவரர் - ஓசைகொடுத்தஅம்மை.*

ஓசைகொடுத்தஅம்மையுண்மகிழுஞ்சத்தபுரி
ஈசதிருக்கோலக்கவெந்தையே-ஆசையெனும்
பாசத்தழுந்தாதுன் பாதாரவிந்தத்தை
நேசித்திருக்கவருணீ. (௫)

## திருச்சீர்காழி என்-து பிரமபுரி.

*பிரமாபுரிஈசுரர் - திருநிலைநாயகியம்மை.*

பிரமபுரத்தெம்பெருமானேகாழிப்
பரமாவென்றேத்திப்பணிந்து-வரமீயத்
தேடிநீநெஞ்சேதிருநிலைநாயகியென்
ரூடிப்பணிவாயுவந்து. (௬)

## திருக்குருகாவூர்.

*திருமேனிவெள்ளடை - காவியங்கண்ணியம்மை.*

காவியங்கண்ணிகணவாகுருகாவூர்
மேவுந்திருமேனிவெள்ளடையாய்-மாவிடைமேல்
வந்தென்மலமகற்றிமாறாதுன்சேவடியைச்
சிந்தைசெயநீயருளிச்செய். (௭)

## திருமுல்லைவாயில் என்னும் தென்திருமுல்லைவாயில்.

முல்லைவனநாதர் - கோதையம்மை.

நாதாதென்முல்லையுறைநாயகாகோதையம்மை
நீதாவிடையேறுநின்மலா-மாதா
கருக்குழியில்வீழாதுன்கஞ்சமலர்த்தாட்கீ
ழிருக்கவெனையாளினி. (அ)

## திருக்கலிக்காமூர் என்னும் அன்னப்பன்பேட்டை.

சுந்தரேசர் - அழகுவனமுலையம்மை.

அன்னப்பன்பேட்டையலர்சுந்தரேசாநின்
பொன்னடியைநாடோறும்பூசிக்கத்-துன்னும்
அழகுவனமுலையெம்மன்னையொடுநீங்கா
மழவிடைமேலேறியருள்வந்து. (கூ)

## திருச்சாய்க்காடு என்னும் சாயாவனம்.

சாயாவனஈசுரர் - குயிலினும்நன்மொழியம்மை.

சாயாவனத்திசாசங்கராஎவ்வுயிர்க்குந்
தாயாகிநின்றதயாளுவே-நேயக்
குயிலினும்நன்மொழியாள்கூறுடையாயென்றன்
மயலைத்துடைத்தாள்நீவந்து. (ய)

## திருக்காட்டுப்பள்ளி.

ஆரணியசுந்தரர் - அகிலாண்டநாயகி.

ஆரணியசுந்தரனையன்பாரகிலாண்ட
பூரணியோர்பாகங்கொள்புண்ணியனைத்-தாரணியுங்
கொன்றைகமழும்புயனைக்கோனைக்காட்டுப்பள்ளி
நின்றவனைநெஞ்சேநினை. (யக)

## திருக்கடைமுடி என்னும் கீழூர்.

கடைமுடிஈசுரர் - அபிராமியம்மை.

கடைமுடியீசாகடவுளேகீழூ
ருடையாய்நல்லன்பர்க்குரியாய்-விடையேறி
வந்தேயபிராமிமாதுடனேநின்சேவை
தந்தேயாட்கொள்வாய்தடுத்து. (யஉ)

## திருப்புள்ளிருக்கும்வேளூர்.

வைத்தியநாதஈசுரர் - தையல்நாயகியம்மை.

புள்ளிருக்கும்வேளூர்ப்பொருந்துர்வயித்திசாவென்
னுள்ளிருக்கும்பாசமெலாமோட்டியே-வெள்ளிருக்கும்
ஞானமதியூட்டுதையல்நாயகியோர்பாகமொடு
மோனநெறிகாட்டாய்முயன்று. (யங)

## திருநின்றியூர்.

மாலட்சுமிஈசுரர் - உலகநாயகியம்மை.

சாலத்திருவடியர் தங்குமெழில்நின்றியூர்
மாலட்சுமீசாமகாதேவா-சூலத்தாய்
தாயுலகியார் தம்மோடுவந்தருள்செய்
வாயுலகவாஞ்சைமறுத்து. (௰௪)

## திருப்புன்கூர்.

சிவலோகஈசுரர் - சொக்கநாயகியம்மை.

திருப்புன்கூர்வாழுஞ்சிவலோகஈசா
கருப்புன்மைவாராமற்காக்க-விருப்பமுடன்
வந்தருள்வாய்நின்பாகம்வாழ்சொக்கநாயகியோ
டந்தமுதலில்லாயமர்ந்து. (௰௫)

## திருநீடூர்.

அருட்சோமநாதஈசுரர் - வேயுறுதோளியம்மை.

வேயுறுதோளிமகிழ்வித்தகாநீரோ
பாய்விடைமேல்மேவும்பரமனே-தூய
அருட்சோமநாதீசா அப்பனேயுய்யும்
பொருட்டுநீவந்தளிப்பாய்போந்து. (௰௬)

## திரு அன்னியூர்.

ஆப்தசகாஈசுரர் - பெரியநாயகியம்மை.

சோதியேதூண்டாச்சுடரேசீர் அன்னியூர்
ஆதியேயாப்தசகாயப்பரனே-காதலாய்
வாழ்பெரியநாயகிபால்மன்னுமணியேயருள்செய்
ஊழ்வலியைநீக்கியுவந்து. (௰௭)

## திருக்கோறுக்கை.

வீரட்டஈசுரர் - ஞானம்பிகையம்மை.

வானுடர்சூழ்கொறுக்கைவாழும்வீரட்டஈசா
ஞானம்பிகையுமையாள்நாயகா-தேனருள்
பொற்றாளைநேசித்துப்பூசிக்கநாயேனை
மற்றுண்டருள்வாய்மகிழ்ந்து. (௰௮)

## திருக்குரக்குக்கா.

கொந்தளஈசுரர் - கொந்தளநாயகியம்மை.

கொந்தளநாயகியார்கோனேகுரக்குக்காக்
கொந்தளஈசாகுருபரா-சந்ததமு
நின்பாததாமரையைநெஞ்சாரத்தோத்திரித்தாற்
புன்பாவநாடாதுபோம். (௰௯)

## திருவாழ்கொளிபுத்தூர்.

*மாணிக்கவண்ணஈசுரர் - வண்டார்பூங்குழலம்மை.*

வாழ்கொளிபுத்தூரில்மாணிக்கவண்ணனே
தாழ்விலாநின்பதத்தைச்சார்ந்துய்ய-வூழ்வினையைப்
போக்கிவண்டார்பூங்குழலாள்பூவையொடுவந்தெம்மை
யாக்கியடிமையருள். (உ௰)

## திருஓமாம்புலியூர்.

*துயரந்தீர்த்தஈசுரர் - பூங்கொடியாம்பிகையம்மை.*

பூங்கொடியாம்பிகைப்பொற்பூவையோடெந்நாளும்
நீங்காதோமாம்புலியூர்நின்றவா-தாங்காச்
சுமையொழிந்துநிற்கத்துயரந்தீர்த்தீசா
யெமையாள்வதென்றோவியம்பு. (உக)

## திருக்கடம்பூர் எ-து மேலைக்கடம்பூர்.

*அமிர்தகடநாயகஈசுரர் - சோதிமின்னம்பாளம்மை.*

நாதாவமிர்தகடநாயகாமுக்கணுடை
நீதாகடம்பூர்வாழ்நின்மலா-மாதாவென்
சோதிமின்னம்பாளோடென்றொல்வினையெலாமகல
ஆதியேவந்திங்கருள். (உஉ)

## திருப்பந்தணநல்லூர்.

*பசுபதிஈசுரர் - காம்பன்னதோளியம்மை.*

பந்தணநல்லூர்ப்பசுபதியீசாவென்
சிந்தைகுடிகொண்டருளுந்தேசிகா-சந்ததமுங்
கண்காணவேண்டினேன்காம்பன்னதோளியெனும்
பெண்பாகாயானுய்யப்பேசு. (உ௩)

## திருக்கஞ்சனூர்.

*அக்கினிஈசுரர் - கற்பகநாயகியம்மை.*

கற்பகநாயகியாள்கூட்டமுகாகஞ்சனூர்ச்
சிற்பராதற்பராதேசிகா-விற்பனர்பாற்
புக்கநின்சீரடியைப்போற்றினேன்முக்கணுடை
அக்கினியீசாஅருள். (உ௪)

## திருப்பனந்தாள்.

*சடையப்பஈசுரர் - பெரியநாயகியம்மை.*

வையம்புகழ்பனந்தாள்வாழ்சடையப்பேசாவென்
ஐயனேமெய்யனேயாரமுதே-வெய்ய
பிறவிநோய்நீங்கப்பெரியநாயகிக்கோ
ரிறைவனேவந்தாளினி. (உ௫)

## திருச்சேய்ஞலூர்.

கிரீசுரர் - ஜெகதேவியம்பாளம்மை.

ஜெகதேவியம்பாள்சேர்தேவாகிரீச
மகதேவாசேய்ஞலூர்வள்ளால்-சகமீது
வந்தற்பவாழ்வால்மயங்காதுநின்னடியைச்
சிந்திக்கநீயருளிச்செய். (உசா)

## திருக்கோட்டையூர்.

கோடீசுரர் - பந்தாடும்நாயகியம்மை.

பந்தாடும்நாயகியாள்பங்கனேகொட்டையூ
ரெந்தாய்கோடீசயிறைவனே-வந்தேயிப்
போதாவதுன்றனிருபூங்கமலத்தாளின்கீழ்
நாதாவிருக்கநவில். (உஎ)

## திருவைகாவூர் எ-து வில்வவனம்.

வில்வவனஈசுரர் - பூவைவல்லியம்மை.

வில்வவனத்தீசாவிமலனேபூவைவல்லி
மெல்லியொடுவைகாவூர்மேவுவோய்-தொல்வினையை
நீக்கிநின்பாதமலர்நேசிக்கவென்னாளு
மாக்கியடிமையருள். (உஅ)

## திருவையாறு

செம்பொற்சோதிஈசுரர் - அறம்வளர்த்தநாயகியம்மை.

அறம்வளர்த்தநாயகியார்க்கன்பனையையாற்
றிறைவாசெம்பொற்சோதியெந்தாய்-மறவாதுன்
பாதத்தைநம்பிப்பணிந்தேனையானந்த
போதத்திருத்தாய்புரந்து. (உகூ)

## திருநெய்த்தானம்

நெய்யாடியப்பஈசுரர் - வாலாம்பிகையம்மை.

நெய்யாடியப்பேசாநேயவாலாம்பிகைசேர்
ஐயாநெய்த்தானத்தமர்வோனே-மையார்
விழிமாதர்வேட்கையினிவேண்டாதுன்பாத
மொழியாதுபோற்றவுரை. (௩0)

## திருமழபாடி.

வச்சிரதம்பேசுரர் - அழகாம்பிகையம்மை.

வச்சிரதம்பேசாமகேசவழகாம்பிகையார்
மெச்சுமழபாடியுறைவித்தகா-நச்சியினம்
வையமூவாசையினுல்வாடாதுநாயேனை
ஐயனேநின்னடிக்கேடாள். (௩க)

திருக்கானூர்.

செம்மேனியப்பஈசுரர் - சிவலோகநாயகியம்மை.

செம்மேனியப்பாசிவலோகநாயகியென்
னம்மைபாகம்பிரியாவண்ணலே-யெம்மைநின்சீர்ப்
பொற்ருட்குத்தொண்டுபுரியவருள்கானூர்
வற்ருவருட்கடலேவந்து. (௩௨)

திருமாலயன் துறை.

சத்தியவாக்கீசுரர் - சவுந்தரியம்பாளம்மை.

சத்தியவாக்கீசசவுந்தரியம்பாளென்னு
முத்தமிதன்பாகத்துறைவோனே-நித்தந்
திருமாலயன்துறைவாழ்தேசிகாநாயே
னுருவாகும்வண்ணநீயோது. (௩௩)

திருப்பாற்றுறை.

திருமூலநாதஈசுரர் - மோகாம்பிகையம்மை.

திருப்பாற்றுறைவாழ்திருமூலநாதா
விருப்பாமோகாம்பாள்சேர்மெய்யா-விருப்பாமென்
னுள்ளத்தழுக்ககற்றியோங்கும்பேரானந்த
வெள்ளத்திலாடவிரும்பு. (௩௪)

திருவானைக்கா எ-து சம்புகேசுரம்.

சம்புகேசுரர் - அகிலாண்டஈஸ்வரியம்மை.

திருவானைக்காவுறையுந்தேவசம்புகேசா
அருவாயுருவாயமர்ந்தாய்-ஒருவா
அழகியகிலாண்டவல்லியம்மைமணாளா
கழல்பெறுவதெந்நாள்கழறு. (௩௫)

திருவாசி.

நீலகண்டஈசுரர் - விசாலாட்சியம்மை.

நீலகண்டவீசாநிமலவிசாலாட்சிமகிழ்
கோலதிருவாசியில்வாழ்கோமானே-ஞாலமிசை
வந்தற்பவாழ்வான்மயங்குவேற்கந்திநிறத்
தெந்தையேகண்பாரினி. (௩௬)

---

சோழவள்நாட்டில் தென்கரையிலுள்ள சிவஸ்தலங்கள்.

திருமுற்கீச்சுரம் எ-து உறையூர்.

பஞ்சவர்னஈசுரர் - காந்திமதியம்மை.

பஞ்சவர்னஈசாபரமனேகாந்திமதி
வஞ்சிபாகம்பிரியாமாமணியே-தஞ்சமென்றுன்
பொற்றுள்பணிந்துபுகழ்ந்தேனுறையூர்வாழ்
கத்தாவடியேனைக்கா. (௩௭)

## திருச்சிராப்பள்ளி.

*தாயுமானஈசுரர் - மட்டுவார்குழலியம்மை.*

தாயுமானேசாசதானந்தனேகரத்திற்
பாயுமானேந்தும்பரமனே-நீயுமெம
தன்னைமட்டுவார்குழலியம்மையோடுள்ளமகிழ்ந்
தென்னைநீவந்தாளினி. (௩௮)

## திருவாலம்பொழில்.

*ஆத்மநாதஈசுரர் - ஞானம்பிகையம்மை.*

ஆலம்பொழில்வாழும்ஆத்மநாதீசாவீண்
காலங்கழிக்காக்கருதவுனைக்-கோலவிடை
யேறிஞானம்பிகையோடென்கண்களித்துய்யு
மாறிங்கருள்வாயமர்ந்து. (௩௯)

## திருவேதிகுடியில்.

*வேதபுரிஈசுரர் - மங்கையர்க்கரசியம்மை.*

வேதபுரிநீசாவிமலனேவேதிகுடி
நீதமங்கையர்க்கரசிநேயனே-சீதமதி
சூடுஞ்சடையோனேதூயோனேயெந்நாளும்
பாடுவேனின்னைப்பணிந்து. (௪௰)

## திருநல்லூர்.

*பெரியாண்டஈசுரர் - திரிபுரசுந்தரியம்மை.*

பெரியாண்டஈசாதிரிபுரைபிராட்டிக்
குரியானேநல்லூருகந்தோய்-பிரியாதுன்
ன்பரொடுசேரவருட்கண்பார்நாயேனை
வன்பவநோய்சேராவகை. (௪௧)

## திருஆவூர் எ-து பசுபதீச்சரம்.

*பசுபதிஈசுரர் - மங்களநாயகியம்மை.*

மங்களநாயகிப்பேர்மாதுடனேஆவூரில்
தங்கும்பசுபதியேதந்தையே-அங்கமிக
வாடித்தளராமுன்மாறாதுன்சேவடியை
நாடித்தொழுங்கருணைநல்கு. (௪௨)

## திருப்பட்டீச்சரம்.

*பட்டீசுரர் - பால்வளைநாயகியம்மை.*

பால்வளைநாயகியார்பங்காபட்டீசாநின்
கால்பணிந்துநாயேன்கதிபெறவே-வேல்விழியார்
மையல்கொண்டிவ்வையகத்தில்வாடியலையாதென்
னையனேமுன்வந்தருள். (௪௩)

## திருநாகீச்சரம்.

சண்பகாரண்யஈசரர் - குன்றமுலைநாயகியம்மை.

குன்றமுலைநாயகிதன்கோனேநாகீச்சரத்தில்
நின்றசண்பகாரண்யநின்மலா-என்று
சிரமேற்கரங்கூப்பிச்சிந்தித்தால்நெஞ்சே
வரமேயளிக்குநீவா. (௪௪)

## திருவாவடுதுறை.

மாசிலாமணித்தியாகர் - ஒப்பிலாமுலையம்மை.

திருவாவடுதுறைவாழ்தேசிகாநாயே
னுருவாகும்வண்ணநீயோதி-மருவார்
குழலொப்பிலாமுலையாள்கூடவேவந்துன்
கழல்தந்தேயாளக்கடன். (௪௫)

## திருக்குற்றாலம்.

வேதீசுரர் - முகிழாம்பிகையம்மை.

குற்றாலமார்ந்தகுருபராவேதீசா
நித்தாமுகிழாம்பாநேயனே-அத்தாவுன்
பத்தரைபோல்நாயேன்பணிபுரிந்துநின்னடியை
நத்தியிருப்பதெந்தநாள். (௪௬)

## திருவழுந்தூர்.

வேதபுரிஈசுரர் - சவுந்தராம்பிகையம்மை.

வேதபுரியீசாவிமலா திருவழுந்தூர்
நீதசச்சிதாநந்தநின்மலா-மாது
சவுந்தரவம்பிகையார்தம்மோடுநாயேன்
பவந்திரவந்துகண்பார். (௪௭)

## திருத்தலைச்செங்காடு.

செங்குருநாதஈசுரர் - சௌந்தரியம்மை.

திருத்தலைச்செங்காட்டிலுறைசெங்குருநாதீச
வொருத்தனேநாயேனிங்குய்யப்-பருத்தவிடை
மீதுசவுந்தரியாம்மெல்லியொடுவந்தேயெப்
போதுமெனதுள்ளம்பொருந்து. (௪௮)

## திருக்கடவூர்.

அமிர்தகடஈசுரர் - அபிராமியம்மை.

அப்பாகடவூரமிர்தகடஈசாநின்
ஒப்பிலாப்பாதம்பெற்றுய்யவே-யெப்போது
வந்தருள்வாய்நின்பாகமாதாபிராமியொடு
டந்தமறவேதான்பரிந்து. (௪௯)

## திருஅம்பர்மாகாளம்.

காளகண்டஈசுரர் - பக்ஷநாயகியம்மை.

காளகண்டஈசாகடவுளே அம்பர்மா
காளத்தமர்ந்தாய்கடையேனை-ஆளவெண்ணித்
தாய்பட்சநாயகியாள் தன்னோடுவந்தருள்செய்
வாய்பட்சநாயேன்மேல்வைத்து. (ருய)

## திருமீயச்சூரிளங்கோயில்.

சகலபுவனேசுரர் - சவுந்தரநாயகியம்மை.

சகலபுவனேசாசவுந்தரியென்னம்மை
யகலாதுபாகத்தமர்ந்தோய் புகலுமீ
யச்சூரிளங்கோயிலத்தாநின்பொற்றாளை
யிச்சிக்கவந்தாளினி. (ருக)

## திருவன்னியூர்.

அக்கினிஈசுரர் - பார்வதியம்மை.

அக்கினியீசாவமலனேவன்னியூர்
முக்கணுபார்வதியார்மோகனே-மைக்காவிக்
கண்ணியர்க்காளாகாதுன்கஞ்சமலர்த்தாளின்கீழ்
நண்ணும்படிக்காள்நயந்து! (ருஉ)

## திருச்சேங்காட்டங்குடி எ-து கணபதீச்சரம்.

கணபதிஈசுரர் - திருக்குழன்மாதம்மை.

ஊனெடுத்தஇந்நாளுணராதுன்பொற்றாளை
மாநிலப்பொய்வாழ்வால்மயங்கினேன்- தானமிகு
செங்காடுறையுந்திருக்குழன்மாதுபங்கா
மங்காவரதாமகிழ்ந்து (ருந)

## திருச்சாத்தமங்கை.

மாநதிஈசுரர் - தயிலாம்பிகையம்மை.

மாநதியீசாமகேசனேசாத்தமங்கைத்
தானமுறையுஞ்சதாசிவா-ஞானமதி
தந்துநாயேன்முன்தயிலாம்பிகையோடு
வந்தேயருள்வாய்வரம். (ருச)

## திருவாரூர்.

வன்மீகத்தியாகேசர் - அல்லியங்கோதையம்மை.

வந்தமரர்போற்றிசெயும்வன்மீகத்தியாகேசா
சந்ததமும்ஆரூர்வாழ்தற்பரா-பந்தமற
அன்னையல்லியங்கோதையம்மையொடுநீங்காதுன்
பொன்னடியைதந்தருள்செய்போந்து. (ருரு)

## திருத்தலையாலங்காடு.

ஆடவல்லஈசுரர் - திருமடந்தையம்மை.

ஆடவல்லஈசாமமலா திருமடந்தை
யோடுதலையாலங்காடுற்றவா-தேடரிய
வேதப்பொருளேவிளங்கவடியேனும்
பாதப்புணைதாபரிந்து. (௫௬)

## திருச்சேறை.

சன்னிதியப்பஈசுரர் - ஞானவல்லியம்மை.

சன்னிதியப்பேசாசதானந்தாஞானவல்லி
கன்னியொடுசேறையில்வாழ்கத்தனே-நின்னிருதாள்
ஆசையொடுநேசித்தகங்களித்துநாயடியேன்
பூசைபுரிவேனோபுகழ்ந்து. (௫௭)

## திருப்பூவனூர்.

புட்பவனஈசுரர் - கற்பகவல்லியம்மை.

கற்பகவல்லிகணவனேபூவனூர்
சிற்பரனேபுட்பவனத்தெய்வமே-சொற்பனத்தும்
வேண்டேன்மூவாசைவித்தகாநின்னடிக்கே
யாண்டேயடியேற்கருள். (௫௮)

## திருப்பாதாளீச்சரம்.

சற்பபுராஈசுரர் - அமிர்தநாயகியம்மை.

சிற்பரனாய்வந்துதிருப்பாதாளீச்சரம்வாழ்
சற்பபுரயீசாசதானந்தா-உற்பவநோய்
நண்ணாதுபெண்ணமிர்தநாயகியாரோடுவந்தென்
அண்ணாயெனையாண்டருள். (௫௯)

## திருக்கோட்டூர்.

கொழுந்தீசுரர் - மதுரவசனியம்மை.

மின்னுஞ்சடாமகுடவித்தகாகோட்டூரில்
மன்னுங்கொழுந்தீசாமாதேவா-துன்னுலக
மாதாவிமலைமதுரவசனியொடு
நாதாநீவந்தாள்நயந்து. (௬௰)

## திருப்பேரெயில்.

ஜெகதீசுரர் - பெண்ணமிர்தநாயகியம்மை.

பெண்ணமிர்தவல்லியொடும்பேரெயிலிலேயமர்ந்து
நண்ணுஞ்ஜெகதீசநாதனே-விண்ணுமண்ணுங்
காத்தளிக்குமுக்கட்கடவுளேநின்னடியைத்
தோத்திரிக்கவந்தாள்துணை. (௬௧)

### திருக்காருயல்.

கண்ணுயிரநாதஈசுரர் - கைலாசநாயகியம்மை.

கண்ணுயிரநாதாகைலாசநாயகியாம்
பெண்ணுரிடம்பிரியாப்பெம்மானே-யெண்ணுதுன்
பொன்னடியைவீண்காலம்போக்கினேன்காருயல்
முன்னவவென்செய்வேன்முயன்று. (௬௨)

### திருவலிவலம்.

மனத்துணைநாதஈசுரர் - வாளையங்கண்ணியம்மை.

மனத்துணைநாதீசாவலிவலமவாழ்தேவே
அனைத்துயிருங்காத்தளிக்குமப்பா-நினைத்துன்னை
வந்தித்திங்ஙாயேனும்வாளையங்கண்ணிபதஞ்
சிந்தித்திருக்கவருள்செய். (௬௩)

### திருக்குண்டையூர்.

கோளியப்பஈசுரர் - வண்டமர்பூங்குழலம்மை.

குண்டையூருற்றமர்ந்தகோளிலியெமபெருமான்
வண்டமர்பூங்குழல்சேர்வானவனே-பண்டைவினை
போக்குவான்கண்பார்புரந்தரற்குவன்பழியை
நீக்கியமாதேவனேநீ. (௬௪)

---

## பாண்டிநாட்டிலுள்ள சிவஸ்தலங்கள்.

### திருஆலவாய் எ-து மதுரை.

சொக்கநாதஈசுரர் - மீனாட்சியம்மை.

ஆதாரமில்லார்க்கருள்புரியுஞ்சொக்கலிங்க
நாதாமீனாக்ஷியார்நாயகா-மாதா
வயிற்றிற்புகாதவகையருளிப்பாசக்
கயிற்றிற்படாதவண்ணங்கா. (௬௫)

### திருஆப்பனூர்.

ஆப்பனூரப்பஈசுரர் - அம்பிகையம்மை.

அம்பிகையம்மைக்கதிபனே ஆப்பனூர்
எம்பிரானேமுக்கணெந்தையே-நம்பிநின்றுள்
போற்றிப்பணிந்தேன்புராந்தகாமூவாசை
மாற்றியளிப்பாய்வாம். (௬௬)

### இராமீச்சரம்.

இராமலிங்கஈசுரர் - பர்வதவர்த்தனியம்மை.

மாதவனுமுன்னாள்வணங்கிக்கரங்கூப்பும்
நீதவிராமலிங்கநின்மலா-மாதா
மலைவளர்காதலிசேர்வாமபாகத்தாய்
நிலைபெறவென்னெஞ்சிலுறைநீ. (௬௭)

### திருஆடானை.

ஆதிரத்னஈசுரர் - அம்பாயிரவல்லியம்மை.

ஆதிரத்னஈசா அம்பாயிரவல்லி
மாதுடனுடானையில்வாழ்மாதேவா-நீதியுட
னிந்தாள்வரையுன்னிருதாளேயல்லாது
மன்னுவேறேதாதென்வாய். (௬௫)

### திருப்பூவணம்.

பூவணநாதஈசுரர் - மின்னும்பிகையம்மை.

பூவணநாதீசாபுராந்தகாபூவணம்வாழ்
தேவனேநின்பாதஞ்சேவிக்க-மாவிடைமேல்
மின்னும்பிகையம்மைமெல்லியொடுவந்தேயிங்
கென்னாளளிப்பதென்னே. (௬௬)

### திருநெல்வேலி.

வேணுவனஈசுரர் - காந்திமதியம்மை.

வேணுவனத்தீசாவிமலாநெல்வேலியில்வாழ்
தாணுவேமுக்கட்டயாளுவே-வாணுதலாள்
காந்திமதியம்மையுடன்கண்குளிரவந்துவர
மீந்தருள்வதென்றோவியம்பு. (௬௭)

## சேரநாட்டிலுள்ள சிவஸ்தலம்.

### திருவஞ்சைக்களம்.

அஞ்சைக்களத்தீசுரர் - உமையம்மை.

அஞ்சைக்களத்திலுறை அஞ்சைக்களத்தீசா
வஞ்சியுமையம்மையொடுவாழ்வோனே-கஞ்சமலர்ப்
பாதமபெற்றுய்யும்படிக்கருள்வதெக்காலம்
போதங்கூரன்பர்பாற்புகலு. (௭௧)

## கொங்குநாட்டிலுள்ள சிவஸ்தலங்கள்.

### திருநணா என்பது பவானி.

சங்கமுகநாதஈசுரர் - வேதமங்கையம்மை.

சங்கமுகநாதா சதானந்தனேவேத
மங்கையம்மைபார்க்குமணாளனே-கங்கைதங்குஞ்
செஞ்சடையாயென்றும்திருநணாவில்வாழும்
பிஞ்ஞகனேநெஞ்சேநீபேண். (௭௨)

### திருச்செங்குன்றூர்.

*அர்த்தநாதஈசுரர் - அர்த்தநாதஈஸ்வரியம்மை.*

அர்த்தநாதீசாவமலனேசெங்குன்றூர்க்
கர்த்தனேயிந்தக்கடையேனை-வர்த்திக்க
யெண்ணிநின்னன்பருடனென்னாளுமாறுது
நண்ணவொருசூழ்ச்சிநவில். (எந)

### திருப்பாண்டிக்கொடுமுடி.

*கொடுமுடிநாதஈசுரர் - பன்மொழியம்மை.*

கொடுமுடிநாதீசாகுருபராபாண்டிக்
கொடுமுடியில்நின்றவெங்கோனே-கடுகவிடை
யேறியேபன்மொழியளென்தாயோடேயுய்யு
மாறிங்கருள்வாயமர்ந்து. (எச)

### திருக்கருவூர்.

*பசுபதிஈசுரர் - கிருபாநாயகியம்மை.*

ஈசாபசுபதியேயெங்கள்க்ருபாநாயகியார்
நேசாகருவூர்வாழ்நின்மலா-பேசாத
மோனநிலைதந்துன்முழுமலர்த்தாட்கன்புபுரி
ஞானநிலையைநவில். (எரு)

---

## நடுநாட்டிலுள்ள சிவஸ்தலங்கள்.

### திருஎருக்கத்தம்புலியூர் எ-து நாகேந்திரபட்டணம்.

*நீலகண்டஈசுரர் - நீலமலர்க்கண்ணியம்மை.*

நீலமலர்க்கண்ணியுமைநேயநாகேந்த்ரபுரி
நீலகண்டஈசநிமலனே-ஆலமுண்ட
கண்டத்தாயிந்தக்கடையேனைநின்பாதத்
தொண்டுபுரியென்றுநீசொல். (எசு)

### திருமுதுகுன்றம்.

*பழமலைநாதஈசுரர் - பெரியநாயகியம்மை.*

எங்கும்பழமலைநாதீசாவென்றேபுகழத்
தங்கும்முதுகிரியிற்றற்பரா-மங்கையுமை
யார்பெரியநாயகியெம்மன்னையொடிங்கும்பிட்டுன்
சீர்பாதங்காணவருள்செய். (எஎ)

### திருநெல்வெண்ணெய்.

*வெண்ணெயப்பஈசுரர் - நீலமலர்க்கண்ணியம்மை.*

விலக்கருநெல்வெண்ணெயில்வாழ்வெண்ணெயப்பாநீல
மலர்க்கண்ணியம்மைமணாளா-கலக்கஞ்செய்
வஞ்சியர்க்காளாகிமயங்கித்திரிவேனை
அஞ்சலெனவந்துதடுத்தாள். (எஅ)

### திருமுண்டீச்சுரம்.

முண்டீசுரர் - கானார்குழலியம்மை.

கானார்குழலிகணவனேமுண்டீசா
ஞானாகராஎமையாள்நாதனே-வானாதி
பூதலமெலாம்புகழும்பூந்திருமுண்டீச்சரத்தாய்
காதலுடன்வந்தேனைக்கா. (எசு)

### திருஅண்ணாமலை.

அருணாசலஈசுரர் - உண்ணாமுலையம்மை.

அண்ணாமலையாயயன்மாலறிவரியோய்
உண்ணாமுலைபாகவுத்தமா-மண்ணாதி
யாசையற்றுநின்பதத்தையர்ச்சிக்கவென்னுளத்தில்
வாசமுற்றுநிற்பாய்மகிழ்ந்து. (அ0)

## தொண்டைநாட்டிலுள்ள சிவஸ்தலங்கள்.

### திருக்கச்சியேகம்பம்.

ஏகாம்பரநாதஈசுரர் - காமாக்ஷியம்மை.

கச்சிவாழ் ஏகம்பா கண்ணுதலேகாமாக்ஷி
யிச்சையுடனர்ச்சித்தஈசனே-மச்சவிழி
மாதரால்வாடிமயங்காதுநாயேற்குன்
சீதமலர்த்தாளருளிச்செய். (அக)

### திருவோத்தூர்.

வேதநாதஈசுரர் - இளமுலையம்மை.

வேதநாதீசாவிமலா திருவோத்தூர்
நீத இளமுலையாள்நேயாநின்-பாதமலால்
நாடேனினியொன்றைநாதனேமேலான
வீடேயருள்வாய்வியந்து. (அஉ)

### திருமாற்பேறு.

மால்வணங்கீசுரர் - கருணைநாயகியம்மை.

மால்வணக்குமீசாமகாதேவாமேலாமுன்
கால்பணிந்தேன்சென்னிமிசைக்கைகூப்பிச்-சேல்விழியென்
தாய்கருணைநாயகியாள்தன்னோடுவந்தருள்செய்
வாயென்றேயென்னைமகிழ்ந்து. (அங)

### திருவூரல் எ-து தக்கோலம்.

உமாபதிஈசுரர் - உமையம்பாளம்மை.

சீரோங்குந்தக்கோலத்தீசாஉமாபதியே
பாரோங்கவீடளிக்கும்பண்ணவா-ஏரோங்க
வாழுமையம்பாளென்னும்மாதுடனேமேலான
வாழ்வளிப்பதெந்நாளோவாய்ந்து (அச)

## திருஆலங்காடு.

அமிர்தத்தாண்டவஈசுரர் - வண்டார்குழலியம்மை.

ஞாலமூவாசைதனைநாடியேமேலான
சீலநெறியெண்ணித்தெளியேனை—ஆலங்காட்
டீசாவண்டார்குழலியென்றும்பிரியாத
நேசாவருளநினை. (அரு)

## திருப்பாசூர்.

பாசூர்நாதஈசுரர் - பசுபதிநாயகியம்மை.

பாசூர்நாதீசாபரமனேமுக்கணுடை
ஈசுரனேயன்பர்க்கெளியோனே—பாசமுடன்
தாயார்பசுபதியார்தம்மோடுனையென்றும்
ஓயாதுகாண்பேனுவந்து. (அசு)

## திருவெண்பாக்கம் எ-து திருவிளம்பூர்.

வெண்பாக்கீசுரர் - கனிவாய்மொழியம்மை.

விதிமாலமரர்தொழும்வித்தகவெண்பாக்கப்
பதியாய்கனிமொழியாள்பங்கா—மதியிலகு
செஞ்சடையாயிந்தச்சிறியேனைவாவெனநீ
அஞ்சலென்பதெந்நாளமர்ந்து. (அஎ)

## திருக்காளத்தி.

காளத்திநாதஈசுரர் - ஞானப்பூங்கோதையம்மை.

ஞானப்பூங்கோதையொடுநண்ணுங்காளத்தீசா
மோனப்பொருளேமுதல்வனே—வானத்தோர்
வந்துபணியுங்குருவேவாழ்த்தவரந்தருவாய்
சந்ததமுநின்பதத்தைச்சார்ந்து. (அஅ)

## திருஒற்றியூர்.

மாணிக்கத்தியாகர் - வடிவுடையம்மை.

ஒற்றியூரிசாவுமையாள்வடிவுடையாள்
நித்தமகிழுந்தியாகாநின்மலா—சித்தம்வைத்தென்
மீதிரங்கியெந்நாள்விழைந்துவைப்பாய்மேலாமுன்
சீதமலர்த்தாளென்சிரம். (அகூ)

## திருவலிதாயம் எ-து பாடி.

வலிதாயநாதஈசுரர் - தாயம்மை.

நாடியேமாதரையின்ஞாலத்திலேபொருளைத்
தேடிநீநெஞ்சேதியங்காதே — பாடியுறை
நாதாவலிதாயநாயகாதாயம்மை
நீதாவென்றேத்திநினை. (கூ0)

## திருவடமுல்லைவாயல்.

பாசுபதாசுரர் - கொடியிடையம்மை.

பாசுபதாமுக்கட்பரமாகொடியிடையாள்
நேசனேமுல்லைவாழ்நின்மலனே-தேசிகனாய்
வந்துநால்வர்க்களித்தவண்மைபோல்நாயேன்றன்
பந்தநோய்வீழ்த்திடக்கண்பார். (சுக)

## திருவேற்காடு.

வேற்காட்டீசுரர் - வேற்கண்ணியம்மை.

மறைமுனிக்குமுன்னாள்மணக்கோலந்தந்த
இறைவாவேற்காட்டீசாஎந்தாய்-குறைவில்லா
மால்காட்டிவேற்கண்ணிவாமபாகத்தோடுன்
கால்காட்டிநாயேனைக்கா. (சுஉ)

## திருமயிலாப்பூர்.

கபாலீசுரர் - கற்பகவல்லியம்மை.

எங்குநிறைந்தருளும்ஈசா திருமயிலை
தங்குங்கபாலீசதற்பரா-மங்கையுமை
கற்பகவல்லிக்குவந்தகட்டழகாநாயேற்குச்
சிற்பரஞானங்கருணைசெய். (சுங)

## திருவான்மியூர்.

மருந்தீசர் - சொக்கநாயகியம்மை.

மிக்கதவத்தோர்புகழும்வித்தகனேவான்மியூர்
தக்கமருந்தீசதயாநிதியே-இக்குமொழி
மாதுசொக்கநாயகிதன்வாமபாகத்தோனே
தீதகற்றிவந்தஞ்சல்செய். (சுச)

## திருக்கச்சூராலக்கோயில்.

விருந்திட்டஈசுரர் - அஞ்சனாட்சிகன்னியுமையார்.

நஞ்சமுதாக்கொண்டகச்சூர்நாதனேகன்னியுமை
அஞ்சனாட்சிக்கிறைவாவண்ணலே-தஞ்சமென்றுன்
பாதாரவிந்தத்தைப்பற்றினேன்கண்பார்ப்பாய்
மாதாவயிற்றடையாமல். (சுரு)

## திருஇடைச்சுரம்.

இடைச்சுரநாதஈசுரர் - இமயமடக்கொடியம்மை.

இடைச்சுரநாதீசா இறைவா இமய
மடக்கொடியாளோடென்முன்வந்து-திடப்படவே
முத்திதருமெய்ஞ்ஞானமோனநிலையருள்வாய்
பத்திநெறியைப்பணித்து. (சுசா)

## திருக்கழுக்குன்றம்.

வேதகிரீசுரர் - பெண்ணினல்லாளம்மை.

ஆதியந்தமில்லாவகண்டமேவேதகிரி
நீதனேபெண்ணினல்லாள்நேயனே-போதன்மால்
தேடியினங்காணுதேசிகனேவையகத்தில்
வாடினேன்வாவென்பாய்வந்து. (கூஎ)

## திருஅச்சிறுபாக்கம்.

ஆட்சீசுரர் - சுந்தரமின்னம்மை.

எச்சமயத்தோரும்இறைஞ்சிக்கரங்கூப்பும்
அச்சிறுபாக்கத்துறையும்ஆட்சீசா-இச்சைமிகும்
சுந்தரமின்னம்மையொடுதோன்றியழியாப்பதவி
தந்துய்யவந்தருள்நீசார்ந்து. (கூஅ)

# நடுநாட்டிலுள்ள சிவஸ்தலங்கள்.

## திருப்பருப்பதம்.

பருப்பதாசுரர் - பருப்பதமங்கையம்மை.

பருப்பதமங்கையுமைபங்காபருப்பதத்தில்
பருப்பதாசாபரனே-விருப்பமுடன்
வந்தடுத்தாண்டுன்மலர்ப்பாதமேயெனது
சிந்தைதனில்நிலைக்கச்செய். (கூகூ)

## கயிலைமலை.

பரமசிவம் - பார்வதி.

உலகமெலாம்போற்றும்உயர்கயிலையென்னும்
தலமீதுறைசற்குருவே-மலைமகளோ
டெந்நாளும்வசுதருளுமெந்தாய்நின்பாதமெப
கெந்நாள்கிடைக்குமினி. (ரா)

## வாழி.

தண்ணார்கயிலைமலைத்தற்பரனும்வாழியுமை
பெண்ணாளும்வாழிமிகப்பேர்கொண்ட-விண்ணோர்கள்
நந்தீசர்வாழ்முக்கணுதனுறையுமபதிகள்
சந்ததமும்வாழிசகத்து. (ராக)

சிவஸ்தலமாலை முற்றிற்று.

உ

தெய்வமேதுணை.

1906ளு அக்டோபர்மீ 20௳ சனிக்கிழமை

மூடப்பட்ட

# அர்பத்நெட்டவுசின்

# அனியாயச்சிந்து.

இஃது,

சிறுமணவூர்

முனிசாமி முதலியாரால்

இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

உ

கடவுள் துணை.

# அர்பத்னெட்டவுசின்

# அனியாயச் சிந்து.

### வெண்பா.

பேர்பெற்ற சென்னை பீச்சாங் கடக்கரையில்
ஆர்பத்தி னெட்டா ரதிசயத்தை—சீர்பெற்ற
செந்தமிழாற் சொல்லசிவ காமியரு ளோங்கரனார்
கந்தமலர்த் தாணிதமுங் காப்பு.

### பின்முடுகு வெண்பா.

ஆறுதலை யானளித்த ஆறுதலை யானடியைப்
பேருதலை யின்றிப் பிடித்தக்காற்—றேறுதலை
உண்டுயிக முண்டுபர முண்டுசுக முண்டுகன
முண்டுபல சித்தியெலா முண்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

### பல்லவி.

ஆசைபொல்லாது அர்பத்னெட்டவுசுமேல்
தோஷஞ்சொல்லாது

### சரணங்கள்.

தேசதேசெமங்குங் கப்பல்நடக்குதென்றும்
தினகரன்போல்பல கொடிகள்பறக்குதென்றும்
மோசமற்றதர்ம வட்டிகிடைக்குதென்றும்
மூவிருதலைமுறை யாகசெழிக்குதென்றும்
நம்பவைத்தாயே பாழும்பணமேயிப்போ
வம்புசெய்தாயே

மழைக்குமுன்னிடிமின்னல் மாறிவருவதுண்டு
மாதர்பிரசவமுன்னே யிடைதுடைநோயுண்டு
கொழுத்தஜுரத்தின்முன்னே குளிரும்நடுக்கலுண்டு
குஞ்சரத்தணிமுன்னே கெர்ச்சனைத்தொனியுண்டு
கெடுதிக்குமுன்னே சமரசகுணமெல்லாந்
தடுமாறுஞ்சொன்னேன்—அதுபோல்

ஸ்டீமர்கப்பலென்ன ஜலத்தில்முழுகிப்போச்சா
சேர்ந்தபணத்தைக்கள்ளர் புகுந்துதிருடுபோச்சா
தீர்ந்ததுகைபலர்க்கு திரும்பக்கொடுக்கலாச்சா
திடமானவர்த்தக முழுதுமொடுங்கிப்போச்சா

எப்படிபோச்சு யிரவும்பகலுஞ்சிப்பாய்
பாராக்களாச்சு

அல்லும்பகலும்காவல் அகலாதிருந்துகார்த்தும்
அணியணியாய்ரைட்டர் லெட்ஜர்குறிப்புலீஸ்டும்
பில்லுஞ்செக்குஞ்சாட்சி பேர்நாட்டுங்கைநாட்டும்
பணத்தைவெளியில்வாங்க கொடுத்தவன்படும்பாடு

பஞ்சியின்பாடே லஞ்சமில்லாட்டாலுங்
கொஞ்சமல்லவே

இத்தனைதொடர்வழக் கிட்டுக்கொடுக்கும்பணம்
எத்தனையோகாவல் சுற்றியிருக்கும்பணம்
மெத்தநீண்டநாளாய் மிதந்துவளர்ந்தபணம்
மேல்வெள்ளம்வந்தாற்போல் யாருக்குந்தெரியாமல்

பறந்துதான்போச்சோ கடலின்சுரங்கவழி
யிறந்துதான்போச்சோ

கேள்விமுறையுமில்லை கேட்டாலும்பதிலில்லை
கிட்டிப்போட்டபூட்டு தொட்டுத்திறப்பாரில்லை
பாழுக்கிறைத்தாற்போல பலபேர்கள்படுந்தொல்லை
பணமேபணமேயென்று பிணம்போலிளித்தார்பல்லை

இனிப்பெருந்தொல்லை யேழைகள்பாடெல்லாம்
வயற்றுக்கேசள்ளை

பந்தியில்வஞ்சனை கூடாதென்பதுபோலே
பணக்காரரேழைக ளெல்லார்க்குமொருக்காலே
மிந்திபிந்தியென்ற கெடுவுமில்லாமலே
மின்னற்கொடியைப்போலே யிங்லாண்டுவழியாலே

தந்தியிலே லாஸ்டாயிப்போச்சென்று
வந்ததென்றாரோ—அந்த

தந்திவந்தசெய்தி தகவலையார்கண்டார்
தரணியேழைகட்கு எந்ததுணைகள்விண்டார்
முந்தியிப்படிவரு மென்றுதான்யார்கண்டார்
மூடிப்பூட்டு போட்ட பிறகல்லோ பலர்கண்டார்

போலீசார்வந்தார் காவலும்பாராவும்
சீர்சாய்நின்றார்—அப்போ

கண்டாரும்விண்டோரும் கைதொழில்செய்வோரும்
கால்நடையாய்பிச்சு வழிநடைஜெனங்களும்
அண்டையயலிலுள்ள ஆபீசர் ஹவுசாரும்
அணிபோல்திரண்டுகண்ணை மணிபோலசிமிட்டாமல்

சூழ்ந்துக்கொண்டாரே வெகுபேர்மனதுநொந்து
தாழ்ந்துக்கொண்டாரே—அப்போ

பணத்தைக்கொணர்ந்துகட்டிவைத்தோர்வாயிலும்பூட்டு
பார்த்தோர்கள்கேட்போர்கள் பலபேர்வாயிலும்பூட்டு
சினத்தமொழிசொல்பல ஜெனத்துவாயிலும்பூட்டு
சிறியோர்கள்பெரியோர்மெத்த முதியோர்வாயிலும்பூட்டு

பூட்டென்றபேச்சே சென்னைமுழுதுமன்று
பெருங்கூச்சலாச்சே

வட்டிக்காசைபட்டோர் வயறுமெரிந்துப்போச்சு
வட்டியை யசலோடு சேர்த்ததொகையும்போச்சு
கட்டினபின்கண்ணில் காணுதொழிந்துப்போச்சு
கனவிலும்நினைவிலும் பணமென்றபெருமூச்சு

கடைகெட்டுப்போச்சு இனி-பிறரைநம்பும்பேச்சு
படைசெத்துப்போச்சு

அரிசிகுறைமரக்கா லளந்தபணமும்போச்சு
அதிகவட்டிக்காசை பட்டதுகையும்போச்சு
நிறைகுறையாய்சேர்த்து நேர்ந்தபணமும்போச்சு
நேற்றின்றுந்திண்ணுமல் சேர்த்தபணமுமபோச்சு

வெறும்பேச்சியாச்சு செக்குப்புத்தகமெல்லாம்
வெளுத்தல்லோபோச்சு

குடும்பகாப்புக்காக கொடுத்தபணமும்போச்சு
கோயில்தருமமெல்லாங் கூண்டோடழிந்துப்போச்சு
கடும்பசிக்கெதிர்பார்த்தோர் கண்ணீர்சொரியலாச்சு
கஞ்சிக்கேசிலபேர்கள் பஞ்சாய்பறக்கலாச்சு

முழுமோசமாச்சு வட்டியென்கிறபேச்சு
அசலோடேபோச்சு

கணவனற்றபெண்கள் காலஜீவனம்போச்சு
காசிஜவுளிஷாப்பு வர்த்தகர்பணம்போச்சு
பணக்காரரேழைகள் பாரத்துகையும்போச்சு
பலயேழைகுடும்பங்கள் நிலையேகலங்கிப்போச்சு

பெருவெள்ளமாச்சு அதை-நம்பியிருந்தோர்பேச்சு
படுபள்ளமாச்சு

தூரதேசத்தவர் துகையுந்துலைந்துபோச்சு
துலுக்கர்தமிழ்செட்டி ஐயமார்துகைபோச்சு
பாரிஉத்தியோகஸ்தர் பலத்தமணியும்போச்சு
பல்நாளாய்ஜீவித்த சிலபேர்கலங்கலாச்சு

எக்கமுண்டாச்சு லட்சத்துகைகளுக்கு
தூக்கமேபோச்சு

ஸ்கூல்தருமபண்டு என்னமாய்முடியுமோ
ஏழைகுடிகள்பொழு தெப்படிவிடியுமோ
புஸ்தகசொசைட்டி பொருட்கென்னபுரியுமோ
போகப்போகப்பதில என்னென்றுதிரியுமோ

விசனப்படாதீர் வட்டிவரவல்லாமல்
அசலெப்போகண்டீர்—அதுபோல்

இன்னஞ்சிலதுகால மெண்ணிப்பொருத்துக்கொள்வீர்
எல்லாக்கணக்குங்கவர்ண் மெண்டார்கள்சோதிப்பார்
நன்மைதுன்மைநடு நிலைமைதெரிந்துக்கொள்வார்
நாட்டின்அபிப்பிராயங் கேட்டும்பதிலுசொல்வார்

பொருமையேபெரிது அவசரப்படுவது
பொருளுக்குஅரிது—ஆனால்

தன்கைபொருளுந்தொழில் தன்னுயுதமுமற்ற
தரணியில்பிறர்கையில் தரும்பேதைபதரென்று
சொன்னதருமநீதி சும்மாயிருந்திட்டாலும்
சென்னைமுழுதும்இப்போ சிலாமணியாச்சுது

இதுதெரியாதா முன்னோர்கள்பழமொழி
பழுதாமென்பீரா

ஆனைவாயில்கரும் பன்றேஜீரணமாச்சு
அலைகடல்வீழ்பொரு ளார்கையில்வசமாச்சு
பூனைகண்ணில்பட்ட பாலெங்கேதயிராச்சு
புலியைத்துணைபிடித்த ஆடெங்கேநிலையாச்சு

ஆசைபொல்லாது அர்பத்னெட்டவுசின்மேல்
தோஷஞ்சொல்லாது.

---

# கும்மி.

கட்டிச்சுகித்த மனைவிகளைச்-சொந்த
கால்வழிப்பிள்ளை பௌத்திரனை
துட்டுக்குக்கூட மதியாமலர்பத்தி
னெட்டில்கொடுத்த பணம்போச்சே. க

காலாகால மிருக்குமென்று-வெகு
காலத்துக்காதர வாகுமென்று
மாலாய்சர்வ பொருளும்விற்று ரொக்க
மாக்கிக்கொடுத்த பணம்போச்சே. உ

சின்னஞ்சிறிய குழந்தைகட்கு வய
  தேறுமளவும் விசனமற்று
தின்றுவருமென் றர்பத்தினெட்டுக்கு
  தேடிக்கொடுத்தப் பணம்போச்சே. ௩

மைனர்வயது கடந்துசரியான
  மார்க்கத்தில்பிள்ளை வருமளவும்
உயிலுமெழுதியே அர்பத்தினெட்டுக்கு
  ஓடிக்கொடுத்தப் பணம்போச்சே. ௪

பிரபலமாகப் பிழைத்தபெரியோர்கள்
  பேரழியாம லிருக்குமென்று
உரியபொருளெல்லாம் சேகரித்துப்பெரும்
  உண்டிபோல்வைத்த பணம்போச்சே. ௫

காலமழைக ளில்லாமையிலுள்ள
  காணிவிளைவு குறுகினதால்
மூலதிரவியம் யாவுமொருமிக்க
  மூட்டையாய்த்தந்த பணம்போச்சே ௬

கைத்தொழிலொன்றும் பழகாமல் பல
  கனத்தவர்த்தகஞ் செய்யாமல்
மெத்தெனக்காலங் கழிப்போமென்று மைனர்
  மேலேகொடுத்த பணப்போச்சே. ௭

ஆயிரத்துக்கைந்து ஆறுலொருலட்ச
  மைன்னூறுவுற்பத்தி யாக்குமென்று
சேயர்க்கறியாமல் தாயார்தந்தையர்
  சேர்த்துக்கொடுத்த பணம்போச்சே. ௮

மாமியகத்துடை சீதனமும் மைனர்
  காலத்துபாகஞ் சுயர்ர்ச்சிதமும்
க்ஷேமம்பெறவெகு காலத்திற்காய்-துகை
  செய்துக்கொடுத்த பணம்போச்சே. ௯

கைம்பெண்கள்ஜீவித காலமட்டு மலர்
  கணவர்கள்தக்க முயற்சியுடன்
நம்பிக்கையாகவே அர்பத்தினெட்டாரை
  நம்பிக்கொடுத்த பணம்போச்சே. ௧௦

எத்தனையோதேவ ஸ்தானபண்டு வெகு
  யேழைகட்காக ஸ்கூலுபண்டு
அத்தனைச்சொத்தையும் அர்பத்தினெட்டு
  அபக்கென்றுபோட்டு விழுங்கினதே. ௧௧

சென்னையிருபத்தோர் ஜில்லாமுதலந்த
 சீர்மைவரையில் பணக்குறிப்பை
கண்ணிவைத்தாற்போல அர்பத்தினெட்டு
 கடக்கென்றுபோட்டு விழுங்கினதே. கஉ

ஆனாலுஞ்சொந்த மனிதருக்கு அந்த
 ஜாதியார்வெள்ளை துரைகளுக்கும்
தானாய்கொடுத்திட்ட அற்பத்தினெட்டு
 தமிழர்பணத்தை விழுங்கினதே. கங

யாசகத்திற்கிடாய் வீடுவீடுதோறும்
 யாசகஞ்செய்த சுதேசிபணம்
மோசமென்றெண்ணம லெண்ணுயிரம்ரூபாய்
 மொத்தமாய்ப்போட்டு விழுங்கினதே. கச

ஏழைப்பணத்தை மிழுங்கியேப்பமிட
 யெத்தனைநாளாய்க் கார்த்ததுவோ
பாழுமர்பத்தினெட் டவுசின்யெண்ணத்தை
 பகவானுஞ்சொல்லித் துலைக்கலையே. கரு

ஜோசியனும்வந்து சொல்லலையே ஒரு
 சொர்ப்பனங்கூடவுங் காணலையே
பேசிக்கொண்டிருந்த அர்பத்தினெட்டுமேல்
 பூட்டையும்போர்ட்டையுங் காட்டினனே. கசு

சீமைக்குப்பிரான்ச்சி யவுசாச்சே வெகு
 சீராய்பிழைத்த பிழைப்பாச்சே
நாமத்தைப்போடுமென் றெண்ணமலேழைகள்
 நம்பிக்கொடுத்த பணம்போச்சே. கஎ

துறைமுகவர்த்தகஞ் செய்யுதென்று தூர
 தேசமெல்லாங்கப்ப லோடுதென்று
சரியாய்நீதி நடக்குமென்று மன
 சாட்சியாய்த்தந்த பணம்போச்சே. கஅ

பண்டுகள்கட்டி வயறெரிந்து அந்த
 பாவிகள்செய்வது மோசமென்று
கொண்டுவந்துபெருங் கட்டடமென்றதில்
 கும்பலாய்வைத்த பணம்போச்சே. ககூ

இனியொருகாற்றுகை வந்திடுமோ ஜெக
 தீஸ்வரன்கண்ணுந் திறந்திடுமோ
அனியாயமாக வொழிந்திடுமோ இதை
 யாரறிவார்பர மேஸ்வரனே. உ0

பாதிக்குப்பாதியும் வந்திடுமோ பல
  நாளைக்கருத்து வொழிந்திடுமோ
ஆதிக்குச்சம்மத மாயிடுமோ அதை
  யாரறிவார்பர மேஸ்வரனே. உக

பெட்டியில் வைக்கவுங் கள்ளர்பயங் கொட்டி
  பூமியில்வைக்கவும் பூதபயம்
எட்டிபலபல வர்த்தகஞ்செய்யவும்
  யெத்தனையோபணத் தால்பயமே. உஉ

வைக்கவுங்காக்கவு மாகாமல் ஒரு
  வர்த்தகஞ்செய்யவும் போகாமல்
கைக்குலேசாகவே வட்டிக்காசைப்பட்டு
  கடலில்போட்ட கதியாச்சே உங

வயற்றுக்குண்டு களிக்கலேயே நல்ல
  வஸ்திரங்கட்டித் துலேக்கலேயே
நயத்தசொல்லேயும் பில்லேயுஞ்செக்கையும்
  நம்பித்துலேத்த கதியாச்சே. உச

நெய்யாய்ப்பாலாய் தின்னலேயேதெய்வ
  நேர்த்திக்கடனுங் கொடுக்கலேயே
ஐயோமெத்தையும் மேடைகளும்நம்பி
  ஆற்றிக்கரைத்த புளியாச்சே. உரு

ஆயிரங்காலந்த ஞ்ஞுலும் பணம்
  ஆள்கொள்ளியென்றிதைச் சொன்னதுபோல்
காயிதச்செக்குகள் தூதனுப்பிக்கடற்
  கரையைக்காட்டித் துலேந்ததுவே. உசா

எண்ணுயிரமயிற் கப்புறமாமிங்கி
  லாண்டுதுரைமக்கள் தன்னைநம்பி
பெண்ணுமாணும்பண மெண்ணிக்கொடுத்திப்போ
  பாதைப்படுவ ததிசயமே. உஎ

போனதைப்பற்றிப் புலம்பாதீர் வரும்
  பொருளைப்பற்றி மகிழாதீர்
யானைக்குந்தன்னடி சரக்குமென்பதை
  யாருமறிவீர் ஜெகத்தீரே. உஅ

அருணனுலவு முலகுக்குள்ளே தினம்
  ஆவதழிவதைப் பாடுகிற
சிறுமணவூர்முனி சாமிதமிழ்க்கவி
  சென்னைபத்ராதிபர் சொன்னதுவே. உகூ

முற்றிற்று.

உ

சிவமயம்.

கம்பரருளிச்செய்த

# சரஸ்வதியந்தாதி.

குமரகுருசுவாமிகள் அருளிச்செய்த

## சரஸ்வதிபதிகம்.

இஃது,

சிறுமணவூர்,

முனிசாமிமுதலியாரவர்களது,

சென்னை சூளை,

சிவகாமி விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1904.

# விளம்பரம்.

கனவான்களே! சென்னை சூளை, சட்டண்ண நாய்க்கன் வீதி, 12-வது நெம்பர் வீட்டில் ஸ்தாபித்திருக்கும் சிறுமணவூர்-முனிசாமி முதலியார் அவர்களது சிவகாமி விலாச அச்சுக்கூடத்தில் ஸ்தாபித்திருக்கும் வி. பி. கம்பெனியில் தமிழ், தெலுங்கு, கிரந்தம் துலுக்கு முதலிய புஸ்தகதினுசுகளும், ஸ்மார்த்தவைணவர்களுக்கு வேண்டும் புஸ்தகங்களும், பால்யர்களுக்கு வேண்டும் காலேஜி புஸ்தகங்களும், உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டும் ஆக்டுபுஸ்தகங்களும், இசுலாமானவர்களுக்கு வேண்டும் தமிழ்யெழுத்தில் துலுக்குபுஸ்தகங்களும், காவலர், பாவலர், நாவலர் யாவருக்கும் வேண்டும் இலக்கணம், இலக்கியம், புராணம், கதை, அம்மானை, நாடகம், விலாசம், கீர்த்தனை, அந்தாதி, கலம்பகம், கோவை, தூது, வெண்பா, சதகம், கும்மியென்னும் அனேகதினுசுகளும், அத்வைதசாஸ்திரங்களும், ஆறுமுகநாவலர், புஷ்பரதச்செட்டியார், சை-இரத்தினசெட்டியார் முதலியவர்களுடைய அச்சுக்கூடங்களிற் பதிப்பித்த உயர்ந்த புஸ்தகதினுசுகளும், வியாதிகள் சொஸ்தப்படும்படி தக்க அவிழ்தங்களும், அவரவர் பேர்களுக்குத்தக்கதாய் ரொம்பவும் அழகான வேலைகள்செய்த ரப்பர்சீல்களும், ஜெர்மன்சில்வரால் செய்த நகைதினுசுகளும், சாமான்தினுசுகளும், நல்ல வாசனைபொருந்தியதாயும், நாள்படவிருந்தால் கெடாமலிருக்கும்படியாயுமுள்ள அத்தர்தினுசுகளும், பூகுபில்லைகளும், வாசனைவத்திகள்முதலிய இன்னும் அனேகவிதசாமான்களும்தயாராயிருப்பதால் வேண்டியவர்கள் அடியிற்கண்ட எனது மேல் விலாசத்திற்கு எழுதினால் உடனே வி. பி. தபாலில் அனுப்பப்படும். என்னுடைய கேட்லாக்கு வேண்டுபவர்கள் அரையணா ஸ்டாம்பு அனுப்பிவித்தால் அனுப்பப்படும்.

ஒவ்வொருவரும் எங்களுக்கு விஷயந்தெரியும்படி தெளிவாய் ஒவ்வொருமுறையிலும் தங்கள் பெயர், ஊர், இருப்பிடம், போஸ்டாபீசு, தாலூக்கா, ஜில்லா முதலியவைகளோடே விலாசத்தைக் கட்டாயம் எழுதவேண்டும்.

இப்படிக்கி,

சிறுமணவூர்-முனிசாமி முதலியார்,

நெ. 12. சட்டண்ண நாய்க்கன் தெருவு,

சூளை போஸ்டாபீசு மதராஸ்.

உ

கணபதி துணை.

# சரஸ்வதியந்தாதி.

## காப்பு.

வெண்பா.

ஆயகலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையுந்—துடியிடையும்
அல்லும் பகலு மனவரதமுந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

கட்டளைக்கலித்துறை.

சீர்தந்தவெள்ளிதழ்ப் பூங்கமலாசனத் தேவிசெஞ்சொற்
றார்தந்தவென்மனத் தாமரையாட்டி சரோருகமேற்
பார்தந்தநாத னிசைதந்தவாரணப் பங்கயத்தாள்
வார்தந்தசோதியம் போருகத்தாளை வணங்குதுமே. (க)

வணங்குஞ்சிலைநுத லுங்கழைத்தோளும் வனமுலைமேற்
சுணங்கும்புதிய நிலவெழுமேனியுந் தோட்டுடனே
பிணங்குங்கருந்தடங் கண்களுநோக்கிப் பிரமன்பா
லுணங்குந்திருமுன்றி லாய்மறைநான்கு முரைப்பவளே. (உ)

உரைப்பாருரைக்குங் கலைகளெல்லாமெண்ணி லுன்னையன்றித்
தரைப்பாலொருவர் தரவலரோதண் டரளமுலை
வரைப்பாலமுதுதந் திங்கெனைவாழ்வித்த மாமயிலே
விரைப்பாசடைமலர் வெண்டாமரைப்பதி மெல்லியலே. (ங)

இயலானதுகொண்டு நின்றிருநாமங்க ளேத்துதற்கு
முயலாமையாற்றடு மாறுகின்றேனிந்த மூவுலகுஞ்
செயலாலமைத்த கலைமகளேநின் றிருவருளுக்
கயலாவிடாம லடியேனையுமுவந் தாண்டருளே. (ச)

அருக்கோதயத்தினுஞ் சந்திரோதயமொத் தழகெறிக்குந்
திருக்கோலநாயகி செந்தமிழ்ப்பாவை திசைமுகத்தா
விருக்கோதுநாதனுந் தானுமெப்போது மினிதிருக்கு
மருக்கோலநாண்மல ராளென்னையாளு மடமயிலே. (௫)

மயிலேமடப்பிடி யேகொடியேயிள மான்பிணையே
குயிலேபசுங்கிளி யேயன்னமேமனக் கூரிருட்கோர்
வெயிலேநிலவெழு மேனிமின்னேயினி வேறுதவம்
பயிலேன்மகிழ்ந்து பணிவேனுனதுபொற் பாதங்களே. (௬)

பாதாம்புயத்திற் பணிவார்தமக்குப் பலகலையும்
வேதாந்தமுத்தியுந் தந்தருள்பாரதி வெள்ளிதழ்ப்பூஞ்
சீதாம்புயத்தி லிருப்பாளிருப்பவென் சிந்தையுள்ளே
யேதாம்புவியிற் பெறலரிதாவ தெனக்கினியே. (௭)

இனிதானுணர்வ தெண்ணெண்கலையாளை யிலகுதொண்டைக்
கனிநாணுஞ்செவ்விதழ் வெண்ணிறத்தாளைக் கமலவயன்
றனிநாயகியை யகிலாண்டமும்பெற்ற தாயைமணப்
பனிநாண்மலருறை பூவையையாரணப் பாவையையே. (௮)

பாவுந்தொடையும் பதங்களுஞ்சீரும் பல்விதமா
மேவுங்கலைகள் விதிப்பாளிடம்விதி யின்முதிய
நாவும்பகர்ந்தசொல் வேதங்களுஞ்சு கறுங்கமலப்
பூவுந்திருப்பதம் பூவாலணிபவர் புந்தியுமே. (௯)

புந்தியிற்கூரிரு ணீக்கும்புதிய மதியமென்கோ
வந்தியிற்றோன்றிய தீபமென்கோநல் லருமறையோர்
சந்தியிற்றோன்றுந் தபனனென்கோமணித் தாமமென்கோ
வுந்தியிற்றோன்றும் பிரான்புயந்தோயு மொருத்தியையே. (௧௦)

ஒருத்தியையொன்று மிலாவென்மனத்தி லுவந்துதன்னை
யிருத்தியைவெண்கம லத்திருப்பாளையெண் ணெண்கலைதோய்
கருத்தியையைம்புல னுங்கலங்காமற் கருத்தையெல்லாந்
திருத்தியையான்மற வேன்றிசைநான்முகன் றேவியையே. (௧௧)

தேவருந்தெய்வப் பெருமானுநான்மறை செப்புகின்ற
மூவருந்தானவ ராகியுள்ளோரு முனிவர்களும்
யாவருமேனைய வெல்லாவுயிரு மிதழ்வெளுத்த
பூவருமாதி னருள்கொண்டுஞானம் புரிகின்றதே. (௧௨)

புரிகின்றசிந்தையி னூடேபுகுந்து புகுந்திருளை
யரிகின்றதாயின்ற வெல்லாவறிவி னரும்பொருளைத்
தெரிகின்றவின்பங் கனிந்தூறிநெஞ்சந் தெளிந்துமுற்ற
விரிகின்றதெண்ணெண் கலைமாறுணர்த்திய வேதமுமே. (௧௩)

வேதமும்வேதத்தி னந்தமுமந்தத்தின் மெய்ப்பொருளாம்
பேதமும்பேதத்தின் மார்க்கமுமார்க்கப் பிணக்கறுக்கும்
போதமும்போத வுருவாகியெங்கும் பொதிந்தவிந்து
நாதமுநாதவண் டார்க்கும்வெண்டாமரை நாயகியே. (௧௪)

நாயகமான மலரகமாவது ஞானவின்பச்
சேயகமான மலரகமாவதுந் தீவினையா
லேயகமாறி விடுமகமாவது மெவ்வுயிர்க்குந்
தாயகமாவதுந் தாதார்சுவேத சரோருகமே. (௧௫)

சரோருகமேதிருக் கோயிலுங்கைகளுந் தாளிணையு
முரோருகமுந்திரு வல்குலுநாபியு மோங்கிருள்போற்
சிரோருகஞ்சூழ்ந்த வதனமுநாட்டமுஞ் சேயிதழு
மொரோருகமீரா மாத்திரையான வுரைமகட்கே. (௧௬)

கருந்தாமரைமலர் கட்டாமரைமலர் காமருதா
ளருந்தாமரைமலர் செந்தாமரைமல ராலயமாந்
தருந்தாமரைவலர் வெண்டாமரைமலர் தாவிலெழிற்
பெருந்தாமரைமணக் குங்கலைக்கூட்டப் பிணைதனக்கே. (௧௭)

தனக்கேதுணிபொரு ளென்னுந்தொல்வேதஞ் சதுர்முகத்தோ
னெனக்கேசமைந்த வபிடேகமென்னு மிமையவர்தா
மனக்கேதமாற்று மருந்தென்பசூடு மலரென்பன்யான்
கனக்கேசபந்திக் கலைமங்கைபாத கமலங்களே. (௧௮)

கமலந்தனிலிருப் பாள்விருப்போடங் கரங்குவித்துக்
கமலங்கடவுளர் போற்றுமென்பூவை கண்ணிற்கருணைக்
கமலந்தனைக்கொண்டு கண்டொருகாற்றங் கருத்துள்வைப்பார்
கமலங்கழிக்குங் கலைமங்கையாரணி காரணியே. (௧௯)

காரணன்பாகமுஞ் சென்னியுஞ்சேர்தரு கன்னியரு
நாரணனாக மகலாத்திருவுமோர் நான்மருப்பு
வாரணன்றேவியு மற்றுள்ளதெய்வ மடந்தையரும்
ஆரணப்பாவை பணித்தகுற்றேவ லடியவரே. (௨௦)

அடிவேதநாறுஞ் சிறப்பார்ந்தவேத மனைத்தினுக்கு
முடிவேதவள முளரிமின்னேமுடி யாவிரத்தின
வடிவேமகிழ்ந்து பணிவார்தமது மயலிரவின்
விடிவேயறிந்தென்னை யாள்வார்தலந்தனில் வேறிலையே. (௨௧)

வேறிலையென்று னடியாரிற்கூடி விளங்குநின்பேர்
கூறிலையானுங் குறித்துநின்றேனெம் புலக்குறும்பர்
மாறிலைகள்வர் மயக்காமனின்மலர்த் தாணெறியிற்
சேறிலையீந்தருள் வெண்டாமரைமலர்ச் சேயிழையே. (௨௨)

சேதிக்கலாந்தர்க்க மார்க்கங்களெவ்வெவர் சிந்தனையுஞ்
சோதிக்கலாமுறப் போதிக்கலாஞ்சொன்ன தேதுணிந்து
சாதிக்கலாமிகப் பேதிக்கலாமுத்தி தானெய்தலா
மாதிக்கலாமயில் வல்லிபொற்றாளை யடைந்தவரே. (உ௩)

அடையாளநாண்மல ரங்கையிலேடு மணிவடமு
முடையாளை நுண்ணிடை யொன்றுமிலாளை யுபநிடதப்
படையாளையெவ்வுயிரும் படைப்பாளைப் பதுமநறுந்
தொடையாளையல்லது மற்றினியாரைத் தொழுவதுவே. (உ௪)

தொழுவார்வலம்வரு வார்துதிப்பார்தந் தொழின்மறந்து
விழுவாருமறை மெய்தெரிவாரின்ப மெய்புளகித்
தழுவாரினுங்கண்ணி னீர்மல்குவாரென்க ணுவதென்னை
வழுவாதசெஞ்சொற் கலைமங்கைபாலன்பு வைத்தவரே. (உ௫)

வைக்கும்பொருளுமில் வாழ்க்கைப்பொருளுமற் றெப்பொருளும்
பொய்க்கும்பொருளன்றி நீடும்பொருளல்ல பூதலத்தின்
மெய்க்கும்பொருளு மழியாப்பொருளும் விழுப்பொருளு
முய்க்கும்பொருளுங் கலைமானுணர்த்து முணர்ப்பொருளே. (உ௬)

பொருளாலிரண்டும் பெறலாகுமென்ற பொருள்பொருளோ
மருளாதசொற்கலை வான்பொருளோபொருள் வந்துவந்தித்
தருளாய்விளங்கு மவர்க்கொளியாயறி யாதவருக்
கிருளாய்விளங்கு நலங்கிளர்மேனி யிலங்கிழையே. (உ௭)

இலங்குந்திருமுக மெய்யிற்புளக மெழுங்கண்கணீர்
மலங்கும்பழுதற்ற வாக்கும்வலிக்கு மனமிகவே
துலங்குமுறுவல் செயக்களிகூருஞ் சுழல்புனல்போற்
கலங்கும்பொழுது தெளியுஞ்சொன்மானைக் கருதினர்க்கே. (உ௮)

கரியாரளகமுங் கண்ணுங்கதிர்முலைக் கண்ணுஞ்செய்ய
சரியார்கரமும் பதமுமிதழுந் தவளநறும்
புரியார்ந்ததாமரை யுந்திருமேனியும் பூண்பனவும்
பிரியாதென்னெஞ்சினு நாவினுநிற்கும் பெருந்திருவே. (உ௯)

பெருந்திருவுஞ்சய மங்கையுமாகியென் பேதைநெஞ்சி
லிருந்தருளுஞ்செஞ்சொல் வஞ்சியைப்போற்றிலெல் லாவுயிர்க்கும்
பொருந்தியஞானந் தருமின்பவேதப் பொருளுந்தருந்
திருந்தியசெல்வந் தருமழியாப்பெருஞ் சீர்தருமே. (௩0)

சரஸ்வதியந்தாதி முற்றிற்று.

உ

கணபதி துணை.



# சரஸ்வதி பதிகம்.

வெண்டாமரைக்கன்றி நின்பாதந்தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத்த காதுகொல்லோசக மேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான்பித்தாகவுண் டாகும்வண்ணங்
கண்டான்சுவைகொள் கரும்பேசகல கலாவல்லியே. (௧)

நாடும்பொருட்சுவை சொற்சுவைதோய்தர நாற்கவியும்
பாடும்படிக்குப் பணித்தருள்வாய்பங்க யாசனத்திற்
கூடும்பசும்பொற் கொடியேகனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ்சுமக்குங் கரும்பேசகல கலாவல்லியே. (௨)

அளிக்குஞ்செழுந்தமிழ் தெள்ளமுதார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும்படிக்கன்று கூடுங்கொலோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும்பனுவற் புலவோர்கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங்கலாப மயிலேசகல கலாவல்லியே. (௩)

தூக்கும்பனுவற் றுறைதோய்ந்தகல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும்பெருகப் பணித்தருள்வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ்செழுந்தமிழ்ச் செல்வமுந்தொண்டர்செந் நாவினின்று
காக்குங்கருணைக் கடலேசகல கலாவல்லியே. (௪

பஞ்சப்புதந்தரு செய்யபொற்பாதபங் கேருகமென்
னெஞ்சத்தடத்தல ராததென்னேனெடுந் தாட்கமலத்
தஞ்சத்துவச முயர்த்தோன்செந்நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத்தவிசொத் திருந்தாய்சகல கலாவல்லியே. (௫)

பண்ணும்பரதமுங் கல்வியுந்தீஞ்சொற் பனுவலும்யா
னெண்ணும்பொழுதெளி தெய்தநல்காயெழு தாமறையும்
விண்ணும்புவியும் புனலுங்கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங்கருத்து நிறைந்தாய்சகல கலாவல்லியே. (௬)

பாட்டும்பொருளும பொருளாற்பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும்படிநின் கடைக்கணல்காயருள் கொண்டுதொண்டர்
தீட்டுங்கலைத்தமிழ்த் தீம்பாலமுதந் தெளிக்கும்வண்ணங்
காட்டும்வெள்ளோதிமப் பேடேசகல கலாவல்லியே. (௭)

சொல்விற்பனமு மவதானமுங்கவி சொல்லவல்ல
நல்வித்தையுந்தந் தடிமைகொள்வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக்கரிதென் றொருகாலமுஞ்சிதை யாமைநல்குங்
கல்விப்பெருஞ்செல்வப் பேறேசகல கலாவல்லியே. (௮)

சொற்கும்பொருட்கு முயிராய்மெய்ஞ்ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்றநின்னை நினைப்பவரியார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்திற் பிடியோடரசன்ன நாணநடை
கற்கும்பதாம்புயத் தாளேசகல கலாவல்லியே. (௯)

மண்கொண்டவிண்குடைக் கீழாகமேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய்வாய்படைப் போன்முதலாய்
விண்கண்டதெய்வம்பல் கோடியுண்டென்ன விளம்பிலுன்போற்
கண்கண்டதெய்வ முளதோசகல கலாவல்லியே. (௧௦)

சரஸ்வதிபதிகம் முற்றிற்று.

உ

தெய்வமேதுணை.

சிறுமணவூரென்று மருவும்

செழுமணவை

# ஆரூரம்மன்

## தோத்திரம்.

ஆசிரியவிருத்தம், போற்றிப்பத்து, சரணப்பத்து, இவைகள் அடங்கியது.

இஃது,

ஷை சிறுமணவூர்

முனிசாமி முதலியாரால்

இயற்றப்பட்டு,

தமது

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

41

உ

தெய்வமே துணை.

சி று ம ண வூ ர்

# ஆரூரம்மன் தோத்திரம்.

## கணபதிதுதி.

அஷ்டசத்திக் கதிபதியாகிய
இஷ்டசித்திக் கிறைவனைப்போற்றுவாம்.

## நேரிசைவெண்பா.

சென்னல் செழிக்குஞ் செழுமணவை யம்பதியில்
மின்னல் கொழிக்க மேவுவா—ளன்னையுமை
ஆரூரழகிப் பொன் னடிபோற்றும் பாவாண
ராரும் பிணியகலு வார்.

## ஆசிரியவிருத்தம்.

பூரணச்சந்த்ரோதயம்போலிலங்கியவருட்பொழிகின்றகருணைமுகமும், பூத்தமலர் மாலைதிகழ் மணமும் பளிச்சென்றுபொட்டிட்ட நெற்றியழகும், வாரணிக்குங்கும புயாசலத் தழகுமேல் வச்சிரமாங் கல்யவழகும், வைரமா ணிக்கச் சரப்பளிபதக்கமும் வர்ணபட் டாடையழகும், நாரணர்க்கிளையபே ரழகும் சிவத்தோடு நண்ணுமிட பாகவழகும், நான்முகன் அறுமுகன் யானைமுகனைப்பெற்று நாளுங்குளிர்ந்தவயறும், சீரணிதுலங்கவரு நாரணி காரணிஜெகமெலாம்பரிபூரணி, செழுமணவைமிகுசெம்மை செயநின்ற யெனதம்மை செல்வியாரூரம்மையே.

உத்தம குணத்திசிவ சத்திபர முத்தியெழி லும்பர்கள் தொழும்பதத்தி, யுசிதசீ தக்கமல மலர்முக வலங்காரி யொப்பிலாப் பரமேஸ்வரி, நித்தியகல் யாணகுண மங்கள சுமங்கலி நிர்மலி நிதானிகௌரி, நீதமறையோதும் படிக்குதவு முபகாரி நீங்காத கருணாகரி, சத்திய வசனத்திசிவ போகசாம் ராச்சிய சதாநிஷ்க் களங்கயோகி சாதனை சதுஷ்டிய மிலாதபுன் மொழியுஞ் சகித்துகாத் தருள்குமாரி, சித்தாதி முத்தர்தொழு வித்தாரகா

ரணி ஜெகமெலாம் பரிபூரணி, செழுமணவை மிகுசெம்மை செயநின்ற யெனதம்மை செல்வியா ரூரம்மையே. (உ)

அற்புத சுகந்தமண மலர்பரி மளத்தழகி யழியாத கீர்த்தியழகி, அண்டமுக டதிர்மேள வாத்தியச் சிங்காரி அதிவீரி கௌரிமாரி, கற்பூரசாம்ராணி யழகிபற் பலதேவர் கவிவாணர் போற்றுமழகி, கடக கங்கணவழகி யகிலபுவ னங்களுங் காத்துரட் சிக்குமழகி, தற்பர நிடப்புரத் தழகிபுவ னேஸ்பரி தயாநிதி விசாலநேத்திரி, தன்னிகரி லாதமென் மேலலங் காரிவெகு தாட்சண்ய முள்ளவழகி, சிற்பரி பராபரி புராதனி காரணி ஜெகமெலாம்பரிபூரணி, செழுமணவை மிகுசெம்மை செயநின்ற யெனதம்பை செல்வியா ரூரம்மையே. (௩)

என்னென்று சொல்லுவேன் யானுமொரு பிறவியென் றேனெடுத் தேனறிகிலேன், பெள்ளளவு நல்லகுண மில்லையேதொல்லையே யென்றுஞ் சுமந்தமிடியேன், பொன்னையே மதித்துவாணாளெலாம் வீணை போக்கிலே போகவிட்டேன், பொய்யினேன் மெய்யிலே ஐயையோ யென்செய்வேன் புழுத்தமர மானகொடியேன், உன்னையே நம்பினேன் பின்னெனக் காருமிங்குற்றதுணை யில்லைகண்டாய், உள்ளபடி யிம்மொழியில் கள்ளமேயில்லையா லுன்கடமை காருமம்மா, சென்னியொரு நான்குடையவன்பரவு காரணி ஜெகமெலாம் பரிபூரணி, செழுமணவை மிகுசெம்மை செயநின்ற யெனதம்மை செல்வியா ரூரம்மையே.

உள்ளபடியிவ்வுட லெடுத்தபின் மன்னுயிர்க் கொருதுயரிழைத்துமறியேன், உருப்பெரா முன்னிழைத் திட்டமா வினையென் றுரைக்கப்பே ருரவுமில்லேன், கள்ளமன மோடும் படிக்கோடி யுலகைக் கலந்துத்திரிந்ததரிவேன், கல்லேருமரமென்ன வினையேரி யுடல்நொந்த காலத்தி லுனையடுத்தேன், தெள்ளுமறை மேலே தெளிந்தாடு தீபமே தெய்வகைலச்சிகரமே, தேனூறு குமுதவாய் ஞானோப தேசமே தெகிட்டாத யோகவாழ்வே, செல்வச் செருக்கருளும் வல்லியுமை காரணி ஜெகமெலாம்பரிபூரணி, செழுமணவை மிகுசெம்மை செயநின்ற யெனதம்மை செல்வியா ரூரம்மையே. (௫)

மெய்யென்று மருவுபே ருடையபொய் யுடலிதனை மெய்யாய் நினைந்துமேலும், மேதினியின் மூவாசை யாலறிவுதடுமாறி வேடிக்கை யாய்த்திரிந்து, தையலர்க் கேவலா ளாகிக் கிடந்துமோர் சார்பும் பெறுமல்கெட்டுத், தாங்கொணு வூழ்வினைக் காளாய் மெலிந்தவென் றுழ்மையிங் கார்க்குரைப்பேன், தெய்வங்களுக்கெலா மேலான தெய்வமே தேவசாம்ராச்சியமுதலே, திக்கற்ற பாவியென் றேலமிடு மடிமையென் றீவினையகற்றுமம்மா, செய்யமா மறையாதி முடிவான காரணிஜெகமெலாம்பரிபூரணி செழுமணவை மிகுசெம்மை செயநின்ற யெனதம்மை செல்வியா ரூரம்மையே. (சு)

உத்தம ருரைத்ததல மெத்தனைக ளத்தனையு மோடித்திரிந்துவந்தேன், ஊழ்வினை யகற்றுமா தீர்த்தமென் றேதுபலஉதகமெல்லா மூழ்கினேன், எத்தனை விதத்துலக தெய்வத்தை வேண்டுவே னெள்ளள விரக்கமறியேன், யினிவேறு தலமேற மனமீறு தில்லையஃ தென்னென்று வினவுமளவில், அத்தனுலகுங் கமல வண்ணனுல குந்தேவ ரரியதிரு மாலினுலகும், அன்னையென் றுன்னையே பன்மறை விதித்தலும் ஆதிநீ யானதாலும், சித்தங் களித்தெனைக் கார்த்தருள் காரணி ஜெகமெலாம் பரிபூரணி செழுமணவை மிகுசெம்மை செயநின்ற யெனதம்மை செல்வியா ரூரம்மையே. (எ)

பூதயை யுற்றென்ன பாதகமிழைத்தனோ பூர்வஜென்மத்துவினையோ, பொல்லாத காலமோ கிரகநடை கோலமோ பகைஞராற் செய்தவிதமோ, தீதான வுடலைத் தொடர்ந்தவினை யோயெந்த தெய்வகோபத்தின்செயலோ, தீராதவினையென்ப துலகத்தி லுள்ளதோ தேவிநீ தீர்ப்பதரிதோ, மாதாபிதாவேறு திக்கில்லையென்றென் மனச்சாட்சி யாய்நம்பினேன், மற்றெங்கு செல்லுவேன் சற்றே கடைக்கணுல் மைந்தனைப்பாருமம்மா, சீதா சமேதஸ்ரீ மாதவன் தங்கைநீ ஜெகமெலாம் பரிபூரணி செழுமணவை மிகுசெம்மை செயநின்ற யெனதம்மை செல்வியா ரூரம்மையே. (அ)

பாராள வேணுமென் றிச்சிக்க வில்லையே பாக்கியங்கேழ்க்கவில்லையே, பலவேறு வரமென்று பன்றுட வில்லையே பாவியென்

கேழ்வியெல்லாம், தீராமலென்னுடலில் போராடு கின்றவினை தீர்த்துகார்த் தருளம்மணி, தீனரட்சகியென்று பேர்பெற்றசெல்வி நீ திவ்ய கோமளரூபினி, ஆராலுமரியாத ராஜராஜேஸ்வரி அகிலம் படைத்தகௌரி, அணுவளவு நீகிருபை செய்தளவிலெந்தனுட லழியாத பொன்னாகுமே, சேராடு குங்குமச் சிங்காரகாரணி ஜெகமெலாம் பரிபூரணி, செழுமணவை மிகுசெம்மை செயநின்ற யெனதம்மை செல்வியா ரூரம்மையே. (௯)

இப்படியி னுன்னடைக் கலமென்ற பேருக்கு யிருள்ளான மாய்கையேது, எதிரொருவர் தானேது விதியேது வினையேது யின்னமொரு கிரகமேது, தப்பான நோயேது பிணியேது சனியேது தலைநா ளிழைத்ததேது, தயவற்ற பகையாளர்செய்வினைகளே துலகில் தாரித்ர மென்பதேது, அப்பநீ யம்மைநீ அன்பானவுரவுநீ யாவுநீ யென்றடுத்தேன், அடியேனுடற்பிணி துடைத்தென்னையாளாக்கி யடிமைகொள வேணுமம்மா, செப்பரிய முப்பத் திரண்டறக் காரணி ஜெகமெலாம்பரிபூரணி, செழுமணவை மிகுசெம்மை செயநின்ற யெனதம்மை செல்வியா ரூரம்மையே. (௧0)

மங்களமிலங்குமுன் றிருநாமம் வாழிமா மகிமையுலகெங்கும்வாழி, மறையாதி யாகமக் கலையெலாம் புகழ்கின்ற மலர்பாத கமலம்வாழி, சிங்கவா கனம்வாழி முத்தியாலு ராவுத்தர் ஜெயவீரர் தானும்வாழி, சென்னலொடு பன்னெலுந் தேங்குமா பூகமுஞ் செறிமணவை வயலும்வாழி, அங்கந் தளர்ந்துனைப் போற்றுமடி யாரெலா மணுக்குறைவு மற்றுவாழி அவ்வடியர் கூட்டத்து ளடிமை முனிசாமிக்கு மருள்தீர் நினைப்பையன்றோ, செங்கமல பீடத்தி லங்குசிவ காரணி ஜெகமெலாம் பரிபூரணி, செழுமணவை மிகுசெம்மை செயநின்ற யென்தம்மை செல்வியா ரூரம்மையே. (௧௧)

## ஆரூரம்மன் ஆசிரியவிருத்தம் முற்றிற்று.

# ஆரூரம்மன்பேரில்

## போற்றிப்பத்து.

மதிமுகத் தழகிலோக மண்டலேஸ் பரியேபோற்றி
நிதிபெருந் திருமணாளன் நேரிளங் குமரிபோற்றி
கதியுனையன் றியில்லேன் கைலைநா யகியேபோற்றி
பதியினிற் சிறுமணூர்வாழ் பார்வதி போற்றிபோற்றி. (௧)

வேதியன் முதலாய்மற்ற விண்ணவர்க் கரசிபோற்றி
பாதிமா மதியோன்றேகப் பங்குடை யவளேபோற்றி
நீதியங் கருணைவாழ்வே நித்தியகல் யாணிபோற்றி
ஆதியே ஆரூர்காக்கு மம்மணி போற்றிபோற்றி. (௨)

ஓதரு முலகுக்கெல்லா மொருத்தியே யுமையேபோற்றி
மாதவ முனிவர்தாழு மலர்பதத் தழகிபோற்றி
பாதக மிழைத்தவெந்தன் பழவினை தீர்ப்பாய்போற்றி
ஸ்ரீதரன் தங்கையாரூர் செல்வியே போற்றிபோற்றி. (௩)

கருணையெப் போதுநீங்காக் கண்ணுடை யவளேபோற்றி
அருணனுமிளையோன்றொழு மம்புயக் கமலம்போற்றி
ஒருதுணை யில்லேனெந்த னூழ்வினை தீர்ப்பாய்போற்றி
நறுமணங் கமழுமாரூர் நாயகி போற்றிபோற்றி. (௪)

சேடனை யாழியென்னச் சிறுவிர லணிந்தாய்போற்றி
தேடரு சிம்மமூர்ந்த திரிபுரை புவனைபோற்றி
நாடரு முயிர்கட்கெல்லாம் நாயகி நடனிபோற்றி
பீடரு மாரூர்காக்கும் பகவதி போற்றிபோற்றி. (௫)

சென்னியா றுடையதேவைச் செனித்துகண்களித்தாய்போற்றி
பன்னரு முலகுக்கெல்லாம் பற்பல ரூபிபோற்றி
தன்னிக ரில்லாத்தேவி தற்பரை காளிபோற்றி
இன்னிலத் தாரூர்காக்கும் ஈஸ்வரி போற்றியோற்றி. (௬)

வானுலகத் தோர்க்கெல்லாம் வாழ்வளிப் பவளேபோற்றி
மீனமாந் துவசனுக்கு மாமினீ ஷாமிபோற்றி
நானுமோ ரடிமையெந்தன் நலிதுயர் தீர்ப்பாய்போற்றி
தேன்மொழி யாரூர்காக்குந் திரிபுரை போற்றிபோற்றி. (௭)

புட்பக விமானமேறும் பூம்பதத் தழகிபோற்றி
துட்டனு மகிடனுக்கை துலைத்தமுக் கண்ணிபோற்றி
இட்டார மடியார்பங்கி லிடைவிடா திருப்பாய்போற்றி
மட்டிலா வாரூர்காக்கும் மகேஸ்வரி போற்றிபோற்றி. (அ)

மூவரு முனிவர்மற்றமூர்த்திகண் முதல்விபோற்றி
சேவலங் கொடியோனன்னை ஜெகமெலாம் பெற்றாய்போற்றி
காவியங் கண்ணிபுண்ய கமலநா யகியேபோற்றி
பாவமில் லாரூர்காக்கும் பராபரி போற்றிபோற்றி. (கூ)

அத்தியை யீன்றானந்தத் தகங்களித் தவளேபோற்றி
சித்தியுஞ்செல்வமீய ஜெகமெலாம் நிறைந்தாய்போற்றி
சத்திய மாகநின்றாள் சரணமென் றடைந்தேன்போற்றி
நத்திய வாரூர்காக்கும் காரணி போற்றிபோற்றி. (க0)

## ஆரூரம்மன் போற்றிப்பதிகம்
முற்றும்பெற்றது.

# ஆரூரம்மன் சரணப்பத்து.

வாடா மலரே மணமே சரணம் வானோர்பணியும் மணியேசரணம்
கோடா வதனக் குமரி சரணம் குமாரக் கடவுட் கரமேசரணம்
தேடாமுதலே திருவே சரணம் தேனே மானே தேவி சரணம்
ஓடா வுதகத் தரவார் மணலூர் உமையே சரணஞ் சரணம் சரணம். (க)

கண்ணார் மணியே கண்ணே சரணம் கருதக்கிடையா கனியே சரணம்
பண்ணார் வேதப் பயனே சரணம் பதியே நிதியே பலமே சரணம்
விண்ணார் பரவும் விளைவே சரணம் வேதப்பொருளின் வித்தே சரணம்
தண்ணார் பொழில்சூழ் மணலூர் மேவுந்தாயே சரணஞ் சரணஞ் சரணம். ()

மதியேர் சடையோன் மாதே சரணம் மலைமே ருருவத் தலைவி சரணம்
துதிசேர் பாதத் துணைசெய் சரணம் துரியாதீதத் திரைவி சரணம்
பதியோர் மாரி வீரி சரணம் பாராள் பரமேஸ் பரிநீ சரணம்
நிதிசேர் மணலூர் நிலைபெற் றொளிரும் நிமலி சரணஞ் சரணஞ் சரணம். ()

செல்வக் கிரியே செல்வி சரணம் சிவனுக் கொருவன் மணியே சரணம்
அல்லற் களையும் அருளே சரணம் ஆதி ஜோதி அரசி சரணம்
எல்லைக் கிடையா யிறைவி சரணம் ஈசர்க் கிடபா லொளிர்வாய் சரணம்
முல்லைக் கமழும் சிறுநன் மணலூர் முதல்வி சரணஞ் சரணஞ் சரணம். (௪)

தவமார் முனிவோர் தயவே சரணம் தவளக் கமலத் தாயே சரணம்
சிவமோ டுரையுஞ் சத்தி சரணம் சிவபோ கத்தின் சுகமே சரணம்
பவமே போக்கும் பதியே சரணம் பலதே வதையின் பலமே சரணம்
திவலைக் கொழியார் தழுவும் மணவூர் தேவி சரணஞ் சரணஞ் சரணம். ()

மருவே மலரே மணமே சரணம் மதியே ரதியே பொதுவே சரணம்
உருவே வுடலே உயிரே சரணம் உள்ளே புறமே வெளியே சரணம்
திரையே யலையே தெளிவே சரணம் தேனே பாகே சுவையே சரணம்
கரையற் றவர்சூழ் மணவூர் மேவும் கண்ணே சரணஞ் சரணஞ் சரணம். ()

ஞானக் கருணை நயமே சரணம் நரைவெண் மலரோர் பதமே சரணம்
மோனச் சுகமார் முதலே சரணம் முத்திக் குருநன் வித்தேசரணம்
வானம்புவியும் வாழ்வே சரணம் வசனத் தாரோர் வல்லி சரணம்
தீனக் குரவோர் திகழும் மணவூர் திருவே சரணஞ் சரணஞ் சரணம். (எ)

துளபத் தோளான் துணைவி சரணம் தொல்லைக் களையுஞ் செல்வி சரணம்
களபக் கலவைக் கமலி சரணம் கதியென் றவரைக் காப்பாய் சரணம்
திலர்தத் தொளிசேர் வதனி சரணம் ததியென் றிடுமென் றிடர்தீர்சரணம்
வளமுற் றிடுநன் மணவூர் மேவும் வாழ்வே சரணஞ் சரணஞ் சரணம். (அ)

உலகே ரேழுக் கொருதாய் சரணம் உம்பர்த் தொழுசங் கரியே சரணம்
தலமெவ் வுயிருந் தந்தாய் சரணம் தமியேன் வினைதீர்த் தாள்வாய் சரணம்
நிலமெங் கணுமே நிறைவாய் சரணம் நிதியே கதியே நிலையுன் சரணம்
நலமே கொழியும் மணவூர் மேவும் நடுவே சரணஞ் சரணஞ் சரணம். (௯)

இனியா ரையுமே வேண்டேன் சரணம் யானுன் னுடமை யடிமைசரணம்
பனிபோல்வினையைத் தீர்ப்பாய்சரணம் பதமேநிதமேதொழுவேன்சரணம்
கனியே கனவின் காட்சி சரணம் கண்டேனினியுன் கடமைசரணம்
தனியேன் சிறுநன் மணவூர் மதலைத் தானே சரணஞ் சரணஞ் சரணம்.

## ஆரூரம்மன் சரணப்பத்து.

முற்றுப்பெற்றது

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமகாவிஷ்ணுபேரில்,

# நட்சத்திரமாலை.

வடக்காண்மணாநாடு

## வெங்கடநாராயணஐயங்கார்

அவர்களால் இயற்றப்பட்டது.

இஃது,

சிறுமணவூர்,

## முனிசாமி முதலியாரவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1904.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

# சாற்றுக் கவிகள்.

மாரியது வேபொழிய வேகநதி யேபெருகி வாழ்வுயர் குளம்பெருகியே
சீரிலகு நஞ்சையிரு போகமுற வேவிளைவு செல்வமிக வுந்தருகுமால்
காரிலகு சோலையினி லேகுயில்க ளும்பசிய காமர்பயி லுஞ்செரியுமால்
ஊரினுயர் வாகுமறை யோர்மருவு மான்மறைநன் னுடெனவு மொண்மை
[நகரே.

திருத்துளப மணியொளிசெய் கவுத்துவமு மணிமார்பன் செய்யவாச
மருத்துலவு சேடகிரி மாமாயன் றிருவடிக்கோர் மகிமைசேரும்
அருத்தியொடு திகழ்நட்சத் திரமாலை யணிந்தனனுண் மனானு டென்னும்
உருத்திகழும் பதிமறையோன் வேங்கடநா ராயணனு முறுதியோனே.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநமः.

ஸ்ரீமகாவிஷ்ணுபேரில்,

# நக்ஷத்திரமாலை.

## காப்பு.

எண்சீர்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திருமருவிவாழ்கின்ற மணினுகவரையிலே செய்யதாமரையலர்ந்து, திக
ழுமொருமாணிக்க மலைபோலவேநின்று திரைகொண்டவாரிபுடைசூழ், தர
ணிமிசையினிதான மெய்யன்பர்பிறவிநோய் சாராதுகருணைபுரியுந், தற்ப
ராநந்தமய வைகுந்தநாதனிரு சரணமலரணியாகவே, புரிவிநோதகவிமா
லை வல்லவரனேகம் புனைந்திருக்கதுமுணர்ந்து, பூவிரவுநாறுமண மேவு
மெனயாவரும் புகலுமொழியுறுதிகொண்டு, வரமிலகுசெந்தமிழினுமா
லையொன்றணிய வந்தெனதுசிந்தைமலரில், மகிழ்வாகநற்கிருபை செய்த
ருளவேணுநீ வகுளமலரணிமார்பனே. (க)

உன்பரமகல்யாண சாதுக்குணங்கள்சொலி யொருகணப்பொழுதாயி
னும், உருகிமகிழ்வோமென்று யோசிக்குமளவிலே யுடனேயெழுந்திரு
ந்து, வன்பொறிகளானபல வாசல்வழிவிரைவாக மருவினில்லாமலோடி,
வம்புதருநெறியான காரியஞ்செய்கின்ற வஞ்சமனதைத்திருத்தி, என்கை
வசம்நீதந்து உனதுதிருநாமங்க ளெப்பொழுதுமறவாமலே, யின்பமிகுமன்
பினொடு பாடிப்புகழ்ந்திடவு மிடர்வருமைவேர்களைந்து, அம்பொனிதிர
வேணு முரகவரைமாயனே யானந்தமானபொருளே, யலையாழிமேல்வந்த
திருமாதுவளர்சந்த மணிமேவுமணிமார்பனே. (உ)

நல்மானபுத்திபல போதித்தபோதிலிது ஞாயமென்றெண்ணினொடி
யில், நாயினுக்குண்டான குணமுமில்லாமலே நழுவிவிரைவாகவோடி, உல
கமயலானவிருள் பொங்கிவிரிகின்றகட லூடேபுகுந்துதிரியும், உள்ளத்
தைநல்வழி திருத்தியுன்திருநாம மோராயிரங்கள்முழுதும், மலியுமாநந்த
மய மானவமிர்தம்பரவி வழியப்புகழ்ந்துபாடி, வாழுந்திறத்தைபருள் மா
ராபிராமனே மணிதங்குமணிமார்பனே, வலியமரமேழுந் துளைத்தரகுவீர
னே மருவுகோதண்டபதியே, மருதொடியவந்துதவழ் மணிமேகவண்ண
னே மணினுகவரையின்முதலே. (ங)

மத்தகசமுன்சென்ற மரகதசொரூபனே மணிதங்குமணிமார்பனே, மா
தவர்கள்முதலான யோகியருமொருநாலு மறைகளுந்தேடியுணரா, மெய்த்
தனிச்சுடர்பொங்கி யவியாதுவளர்கின்ற மெய்ஞ்ஞானதீபவொளியை, வீறு
தருசெம்பொன்மய மானதொருவண்பரவை மீதினிலெழுந்தடியவர், பத்
தியொடுகண்டுதொழ முத்திதரவந்தருள்செய் பரிமளாநந்தவமுதை, பணி
வரையினதிபதியை யெனதிதயமினிமையொடு பரிவுரனுகர்ந்ததினிமேல்,
மொய்த்தெழுமனேகவன முளதுபலகாலைது முரண்வலைகள்யெங்குமுள
தால், முடிகியதிலேகுங்கள் யெனைமருவிவாழ்கின்ற மோகவயல்வன்பிணி
களே. (ச)

உலகமதிலேயதிக செல்வத்தையடையினு மொழியாதவருமையுரினும், உல்லாசமங்கையர்கள் சல்லாபமோகவிருளூடேபுகுந்துழலினும், சலமேபுரிந்துபிணி யுடலத்தைவளையினுந் தந்திகள்விரட்டிவரினும், தணல்மண்டியெரிகின்ற விடமீறுதிசையில்வாழ் சற்பங்களெதிர்சீறினும், சிலபேர்கள்நண்பினொடு புகழினும்பலபேர்கள் சீயென்றுதானிகழினும், திரமாகவுனையன்றி வேறொன்றுகனவிலுஞ் சிந்திப்பதில்லையதனால், ஒளிகொண்டுகேபமென்ற பாவிவருநாளிலே யுனதுதிருநாமங்களை, உள்ளத்திலன்பாய் நினைக்கவந்தருளுவா யுரகவரைநின்றமுகிலே. (௫)

ஓராயிரங்கிரண ரத்நவொளிதிசைதொறு முதயரவிபோல்விளங்க, ஒருநாகவணையினிற் பாலாழிநடுவிலே யுறயோகநித்திரைசெயும், பேராயிரம்பெறுசரோருகவிலோசனு பிறைதங்குவேணியானும், பிரமனொடுவானிலுறை யிந்திராதிதேவரும் பிரியமுடனேவணங்கு, நேராயிரங்கியெமை யாளென்றநாளிலே நீவந்துகாத்தருளினாய், நெடிதானமணியுரக வடிவானமலையிலே நீணிலத்தவதரித்தாய், யோராயிலங்குனது பாதமலர்நினையாமல் இடர்வறுமைகொண்டுமெலியும், இதயத்தைநல்வழி திருத்தியருள்புரிகுவா யினிதானபரமகுருவே. (௬)

பொங்குதிரைவீசிவரு கங்கைநதிமுதலான புண்ணியதீர்த்தங்களாலும், புனிதமயமானசில வோமங்கணெய்யவிசு பொழிகின்றவேள்வியாலும், அங்கியிடைநின்றுபொறி யைந்தையுமடக்கிமன மசைவறநிருத்தலாலும், அலையாழிசூழ்கின்ற பூலோகமுழுதும்வல மாகவேவந்ததாலும், இங்கிதமிகுந்தபல தானதருமங்களை யியற்றுகிறதன்மையாலும், இமையவர்கள்வடிவாக வுடல்மாறுமேயலது யிடர்ப்பிறவிதீர்வதிலையால், பங்கயங்கமழ்கின்றசேஷகிரிமீதில்வாழ் பச்சைமுகிலைப்புகழ்ந்து, பணியுங்களினிதானமுத்தர்வடிவாகநீர் பரமபதவாழ்வுபெறவே. (௭)

திருமங்கைவாழ்கின்ற மார்பமுங்காதிலணி தெய்வபொற்குழையினழகும், திவ்யபரிமளமான மாலையணியொருகோடி செய்யசூரியப்ரகாசம், பெருகிவளரத்னமணி மவுலியுமரையிலணி பீதாம்பரத்தினழகும், பிழையிலாதடியவர்கள் பரமபதவாழ்வினிது பேணியருள்கருணைவிழியும், பரிதிவளைமுதலான பஞ்சாயுதங்களும் பங்கயக்கையிலங்கட், பசியமரகதமேனியெங்குந்துலங்கிடப் பரவையின்பிடரோரியென், இருவிழிகுளிர்ந்திதய மானந்தமாகவே யென்றுவந்தருள்புரிவையோ, இமையவர்களறியாத வுரகவரமாயனே யெதிராசர்புகழ்சிங்கமே. (௮)

பங்கயமலர்த்தெரிவை சிங்காரனேயனக பச்சைமாணிக்கமலையே, பஞ்சமாபாதகர்க ளாயினுஞ்சரமதிசை பண்பாகவுனதுநாமம், அங்கவர்கள் நாவில்வரு மாகிலஞ்சேலென்று ஆனந்தவெள்ளமயமாய், அருள்சுரந்தேவிழிகள் பொழியவேயெதிரில்வந் தழகானசேவையருளி, அங்கைமலர்கொண்டவரை யன்போடழைத்தினிய அமுர்தவசனங்கள்கூறி, அணிபரமவீடுதரு முனதருமைதினையளவு மறியாமலேமறந்து, மங்கையர்கள்மோகவலையூடேபுகுந்துபிணி வருமையதனால்மெலிந்து, வாடுமென்சிந்தையுன தடியிணைவழுத்தவருள் மணிநாகவரையின்முதலே. (௯)

நிலையிலாவுடலத்தை நிலையென்றுநம்பியே நீடூழிவாழ்கவென்று, நேசமொருமனைவாழ்வை நிசமென்றுவெண்ணியே நீணிலமெலாந்திரிந்து, உலைவிலாமிக்கபொருள் தேடிவருமாசையால் உழல்கின்றபவநெஞ்சமே, உனைகள்தடுமாறியுயிர் விடுகின்றநாளிலே யுற்றதமர்துணையாவரோ, கலகமிடு படைவீரர் புடைசூழவினையோடு காலனெதிராகிவந்து, கதிர்மேவுதிரிசூலம் வளர்பாசமுதலான கைப்படைகள்விடுமுன்னமே, மலிகின்றமலர்வாசமதுவுண்டுகிளைவண்டு மதுராகீதங்கள்பாடும், வளமானவுரகவரைமேனின்றமாதவனை வாழ்த்திடுவை துணையாகவே. (௧௦)

பாவையர்கள்விடுமோக சண்டிப்பிசாசினைப் பரிசுத்தமாய்விளங்கும், பாதானபேரறிவு மந்திரத்தாம்பினிற் பலமாகவேபிணித்துத், தாவியோடாத்வைத நோயிறுக்கியொளிர் சாந்தமெய்ஞ்ஞானவனலிற், றுணிட்டெறித்துனது பாதமலர்மறவாத சற்குணமெனக்கருளுவாய், பூவளரும்பஞ்சதருவாழ்கின்றபொன்னுலகற் பொங்குகடலாடைபுடைசூழ், பூமண்டலத்தலைவர் யாவருமவரவர்கள் புந்தியினினைத்தபடியே, ஆவலொடுகண்டுதொழவுரகவரைமேனின்ற அச்சுதானந்தமயமே, அடியவர்கள்மனதிலுறைமெய்ஞ்ஞானதீபமே ஆனந்தசுகுணமுகிலே. (௧௧)

திரைகொண்டகடலாடை யுலகத்திலேயதிக செல்வத்திலேமகிழ்ந்து, தெரிவையர்களதிமோக வலையினிற்சிக்கியவர் சிறியோனியளறின்மூழ்கி, நரைகொண்டுவுடல்கூனி சிரசுகிடுகிடெனவே நாட்டவொளியதுமயங்கி, நாவுதடுமாறியுயிர் விடுகின்றநாள்வரையும் நாடிமனைவாழ்வின்முயல்வீர், நிரைகொண்டபடைவீரர் புடைசூழவினையோடு நீவிகள்வளைத்திழுத்து, நிட்டூரமானகொடு நரகத்திலேதள்ளும் நேரத்திலென்செய்குவீர், விரைகொண்டசெங்கமல மலர்கின்றசேஷகிரி மேனின்றகரியமுகிலின், மிளிர்கங்கைவழிகின்ற கழலிணையைநாடோறும் விரும்பாததமிழ்வாணரோ. ()

சிந்தையினிலன்பாக நின்னடியர்பாததூள் சிரசிலணியாதபாவி, செயல்தங்குபாகவதர் சேவைகொண்டவர்பாத தீர்த்தமுண்ணாதபாவி, திந்திரணிவளர்மாரன் வந்தருளுமூர்வலஞ் செய்யாதகொடியபாவி, திவ்யப்ரபந்தகாலக்ஷேபமகிமையைச் செவியிலேர்க்காதபாவி, மைந்தரொடுமனைவாழ்வை யுறுதியென்றெண்ணியே வாஞ்சையதுகொண்டபாவி, வானத்திலிடுமின்னல் போலழியுமுடலினை வலுவென்றுணர்ந்தபாவி, வெந்துயரகற்றியெனை யாண்டருள்வையோநரகில் வீழ்விப்பையோவறிகிலேன், மிளிருமணியுரகவெற் புனைகின்றசோதியே மெய்ஞ்ஞானதீபமயமே. (௧௩)

மகமேருகிரிபோலு முயர்தேறின்மிசையேறி வடிவாளிமழைசொரிந்து, வலிமேவுபகையாள ருடல்வீழவமர்தூறி மணிவாகையேபுனைந்து, புகழேறுமணிநக வரையேறிநின்றதொரு புயலைப்புகழ்ந்துபாடிப், பொங்குநிதிமுதலான செல்வஞ்செழித்தெழில் பொருந்தினன்விளங்கியதனால், நகனேருபுயவீர மலிசூரமதரூப ஞாலத்திலிந்திரயோக, நரபாலனேயென்று புல்லரைத்துதிசெய்து நாடோறுமேயிரந்து, துகளானவிருள்மூடு பலகோடிநரகேரு சுசியேயிலாதபுலவீர், சுகஞானவடிவாகு மவனைப்புகழ்ந்துகவி சொல்லுங்கயோதீரவே. (௧௪)

அடல்கொண்டகோபனென் றுரைபெற்றவொருசூரர்ஞாவுரித்தெழுந்து, அண்டகோளத்தின்மிசை பொங்கியனல்முட்டுற வதட்டிக்கிளம்பியெதிரே, நடைகொண்டசாந்தனை யெடுத்துவிண்வீசியே ஞாயனைப்பற்கள்சிதற, ஞாலத்தின்மேல்விழ வுதைத்தேவிவேகனை நடுக்குறமுடிக்கிவிளைவிற், கெடிகொண்டெருகுடங் கவனையிங்கணுகாது கீழுறவொடிக்கியென்றுங், சேதமற்றனைதுதிருநமத்தையேசொலக் கிருபைபுரியுரகவரைமேல், குடிகொண்டுவாழ்கின்ற மணிமேகவண்ணனே கொற்றமணிமாலையணியுங், கோதண்டமுதலான பஞ்சாயுதங்களுங் கொண்டபகிரண்டமுதலே. (கரு)

முத்தலமிகுத்தெரியு வர்க்கடலெறிதணிய முறட்சிலைவளைத்துமுடுகி, முக்குணமுமுத்தொழிலு முப்பொழுதுமுப்பொருளு முற்சுடருமுத்தலமுமாய், உத்தமறதத்தமுத மொத்தமொழியத்தனிட ருற்றசமயத்திலருளி, உச்சிதமணித்திரள் குயிற்றியரதத்தினை யுறத்துடனடத்தியரவின், பைத்தலைநடித்திருமறத்தினையொடித்துயர் பருப்பதநிகர்த்தகரியைப், பற்றியவிடக்கரை யருத்திரிமறைத்தமர் படைக்கலமெடுத்தமுகிலே, சத்திமுதலெத்தவரு முத்திபெறநற்றுதிசெய் தத்தையுலாமொய்த்தபொழில்சூழ், சர்ப்பகிரிநிற்கும்வன சத்திருமகட்கினிய தற்பரவிரத்னவொளியே. (கசு)

மாஞகமூடுருவ மாஞகமீதிறத மதவேழவைம்பகழியை, மதவேழமாறுவரை மணிவேழம்வண்பறவை வளரலகையலகைமுலையை, வாஞகவங்கிகழும் வடிவாளியேவியணி மருவுநடனம்புரிந்து, மகிழ்வுறவழங்கிவிழமோதியொருகைமிசை வயங்குகுடையாகநிறுவிக், காஞகணங்குவிய வெதிருதிவகிர்செய்து காதலுடனேயருந்திக், கந்தமலியுங்குமுத முண்டகம் வலம்புரி கருங்கயனிறைந்தகுளமும், தேஞகவன்பொழிலு மணியாய்விளங்குமணி சேஷாசலத்திலுறையுஞ், சீதாபிராமனின் பாதாரவிந்தமலர் சிந்தித்துவாழ்வாமரோ. (கஎ)

இரவிநீமதியுநீ மண்ணுநீவிண்ணுநீ யெரியுநீகாலுநீயே, இன்பநீதுன்பநீ நஞ்சநீயமுதநீ யிந்திராதிவானவருநீ, கருணைநீவெகுளிநீ வஞ்சநீதஞ்சநீ காமநீஞானநீயே, கமலநீயிறைவநீ நரகநீவீடுநீ கண்ணுநீமனமுநீயே, தருமநீவரமுநீ பாவநீபுண்யநீ சகலகலைவல்லமையுநீ, சத்யநீபலகோடி அண்டபகிரண்டநீ தானிலாயிடமில்லையால், உரமாகநின்மகிமை யறியவென்றாலுநீயுள்ளிருந்துணர்வதல்லால், உகநூறுசொல்லினு நானென்பருணர்வரோ வுரகவரைநின்றமுகிலே. (கஅ)

உற்றவுடல்நிலையென்று மக்கள்மனை துணையென்று வோசைவல்லாசமாகி, ஓசைப்பெருங்கடலி னுசைப்பிசாசபல வோடிவந்தேயலைக்க, கற்றதிறமெதிர்பேசி நானென்றவாண்மையொடு காசினியெலாந்திரிந்து, சனமானநிதிதேடி வீணிலேகாலங் கழிக்கின்றமூடமனமே, வெற்றிதருபிறைவேணி நற்றெரிவையொருபாகம் வெந்துயர்தவிர்த்தமுதல்வன், விரைதங்குசெங்கமல மலர்கின்றசேஷகிரி மேனின்றகரியமுகிலைக், குற்றமறவேயுந்திகாலையினிலாயினுங் குணமாகவேவிரும்பிக், கோதிலாதவநாம மென்றாகிலுஞ்சொலாய் குறைவின்றிவாழ்வுபெறவே. (ககூ)

உரககிரிமெய்ஞ்ஞான தீபவொளியேசுருதி யுணராதமிக்கபொருளே, ஓகைதருவிசுவாச பாகவதருள்ளம்விட் டொருகணப்பொழுதுமகலாய், பரமகல்யாணகுண சுசீகரவசீகர பயோதராங்கிசர்த்தவடிவே, பரிமளசரோருகவிலோசனகிருபாநிதி பணைமிசைநடனமிடுமுன், இருசரணமலரின்மன மனல்மெழுகுபோலுருகி இனிமையொடுபுகழாமலே, இருவுசம்புலவுமினல்நிலைலதுவுடலைநிலை யென்றுபொறிதுன்றுமயலால், மருவிமனைவாழ்வென்ற விரிகடலிலேமுழுகி வாடியிரைதேடியுழலும், வஞ்சகனையஞ்சலெனவந்துநின்றுள்வையோ மறுசனனம்வாராமலே. (௨௦)

கார்கொண்டகடலாடை சூழ்கின்றவுலகிலே கடுவைநிகரானமூடர், கபடத்தையுட்கொண்டு நல்லவர்கள்போலவே கனிவாகவந்தடுப்பார், நேர்கொண்டசகலகலை வல்லவர்கள்போலவே நீதிவசனங்கள்சொல்வார், நேசமொடுநண்பாகி வாழ்கின்றபேர்களை நிமிஷத்திலேபிரிப்பார், பேர்கொண்டநிதிபெருகி வளர்கின்றகுடிகளைப் பேணுமலைக்கலைத்துப், பேதகம்பலசெய்து கலகத்தைமூட்டியே பின்னப்படுத்திவிடுவார், பார்கொண்டசுமையாருமங்கவரையணுகாது பரிவாகுமுனதுதொண்டர், பாதமலர்புகழ்கின்ற நல்லறிவுதருகுவாய் பணிநாகமேவுமுகிலே. (௨௧)

தொண்டர்கள்மனத்திருளை வேரறுத்தெறிக்கின்ற சுகஞானதீபவொளியைத், துளபனறுமாலையொடு மணியணியுமார்பனைச் சொர்ணமுடிவர்ணமணிகள், மண்டுகிரணம்பரவு செங்கதிரொனும்படி வயங்கவுமரங்கநகரில், மஞ்சறவமென்றதொரு பஞ்சணையிலேதுயிலும் மாகதநெடுங்கிரியினை, தெண்டிரைமிகுங்கடல் கடைந்தமுதுவண்டருஞ் செழித்துவளர்கின்றவுலகில், தேவர்கள்மகிழ்ந்துண வளித்தணிப்புரிந்தனி செழுங்கமலவண்ணமலரும், கண்டமலருங்கமிழு மூரகமணிவரையில்வாழ் கருணையங்கடலையினிதா, கண்டுபணியாதவர்கள் சன்மப்பெருங்கடல் கடந்துகரைகாணார்களே. (௨௨)

தாரணியில்வாழ்கின்ற மானிடர்கள்யாவருஞ் சந்தோஷமருவினும், தன்மையொடுகொண்டாட நற்றமிழெனக்குநீ தந்திருந்ததுமுணர்ந்து, தாரணியுனின்பாத மலர்களைப்புகழாது சகவாசதோஷமதினால், சற்குணமிலாதபல மூடரைப்பாடித் தரித்திரம்விளைந்ததல்லால், ஏரணியுநன்னிதியம் வந்ததிலையாதலால் இதுபெரியகுற்றமாகும், இதையத்திலெண்ணமலன்புவைத்தருளியென் யிடர்வருமைதீர்க்கவேண்டும், வாரணியுமுலைதந்து காக்கின்றதாயலால் மைந்தர்பிழையெவர்பொறுப்பார், மணிநாகவரையிலுறை யச்சுதாநந்தனே வனமாலையணிமார்பனே. (௨௩)

மன்றலணிகொன்றைமலர் மானவிசெழுந்திரை வளர்ந்தசடைமேலணிந்து, மங்கையொருபாகத்தில் வைத்தகயிலாசபதி வன்றுயரகற்றவிலையோ, துன்றிமணியொளிர்கின்ற தூணுவிலேவந்து சுதனைமுன்காக்கவிலையோ, துங்கமதமால்களிரு மூலமெனவோருரை சொலும்பொழுதுவந்திலையோ, வென்றிவடிவேலரசர் கூடியசபைக்கணில் மீதினிலுதித்தவெழில்சேர், மின்னினிடையன்னநடை மாதினுக்கருள்செய்து மெய்த்துயில்வழங்கவிலையோ, என்றன்வறுமைப்பிணி யகற்றிநிதிதருகுவாய் இதுவுனக்கரியதோசொல், இந்திராமகிழ்ந்துறையு மார்பனேயுரகவரை யெழில்மேவுவிமலமுதலே. (௨௪)

சங்கமணிவார்கொண்ட பேரிதுந்துமிமுரசு தவில்பம்பைமேளமுழ
வம், தானமொடுவளைகொம்பு பிட்டில்தம்பறுவர்ன சாரங்கிசின்னமுத
லாய், மங்கலவுலாசமணி நாகசுரம்வீணைசர மண்டலங்கஞ்சிராளம், மருவி
யெழுகின்றபல நாதகீதத்தொனிகள் மாதிரமெலாம்விளங்க, நங்கையர்கள்
பாதமுறை தவிராதுநடனமிட நறுமலர்சொரிந்துபிரமன், நற்றெரிவை
யொருபாகன் வானவர்தபோதனர்கள் நாடொறும்வணங்குமலையே, கங்
கைநதிமுதலான புண்ணியதீர்த்தம்பரவு கமலநிறைகோனேரிசூழ், கந்தமலி
பைந்துளவ மாலையணிபார்பனுறை ஞானக்கண்மேவுமுரகவணையே. (௨௫)

வானகந்தனின்மேவு தாராகணம்பருதி வாழியஞ்சுடராகுமோ, வன
மூடுதிரிகின்ற புன்சிறியமிருகங்கள் வாளரிக்கிணையாகுமோ, மானிலமு
ழைத்தபல கல்லெலாங்கூடியொரு மாணிக்கநிகராகுமோ, வன்பறவையெ
ன்றுசொலும் வர்க்கங்களதிவேக வண்கருடனேராகுமோ, தானவர்குலங்
களை யறுத்துமணிவாகபுனை சர்ப்பகிரிநின்றமுதல்வன், தாளிணையைமற
வாத தொண்டருக்கடியவர்கள் தாசருக்கொப்பாவரோ, கானலர்செழுங்
கமல மீதிலுறைவேதனொடு கங்கையணிவேணியனகன், கடமாமுகத்தனை
யில் வீரனதிதவையோக கானில்வளர்முனிவோர்களே. (௨௬)

வெந்திறல்மிகுந்துசின மீறிவருமல்லரை மிதித்தமர்விழைச்சாடியே,
வெண்ணியவலம்புரி யெடுத்தலையெரிந்துவரும் வேலைநனிவேகவேக, முந்
துபகழிக்குல முடிக்கிமருகாந்தரை முருக்கியொருவேனவடிவாய், மொய்த்
தலமருப்பினிடை வைத்தபுகழ்பெற்றசெய மூர்த்தியிடமாம், இந்துபுனை
யுஞ்சடில னும்பிரமனுங்குகனும் யிந்திரனும்விண்ணவர்களும், இன்பமுய
ரன்பினொடு கந்தமலிபைந்தரு விசைந்தமலர்கொண்டுபணியும், மந்திகனி
சிந்தரசமுந்திவழியும்பரவி மஞ்சிதவழ்கின்றபொழிலும், வண்கமலமுங்கு
வளை யிங்கமழ்தடங்களும் வளைந்தணிகொளுகமலையே. (௨௭)

மருமண்டுமதுவுண்டு கிளைவண்டுமகிழ்கொண்டு மதுரராகங்கள்பாட,
வர்ணப்பசுஞ்சிறை விரித்துமயிலாடவே வண்குயிலினிசைகூடவே, திரமு
ந்திமந்திகள் வருக்கைப்பழங்கொண்டு செயமத்தளங்கள்போடும், சீதமு
கில்தவழ்கின்ற சேடகிரிமீதில்வாழ் சீதரனையாதரமுடன், இருதயந்தனி
லுளு மறவாதபாகவதர் யிணையடிக்காளானவர், இருசரணமலர்களைச் சிரசி
லணிவோர்கள்தான் இந்திரனும்வானவர்களும், பிரமனுங்கயிலாச மலையி
லுளாளுநனும் பேர்பெற்றமுனிவோர்களும், பிரியமொடுகொண்டாட மே
லானவுலகிலே பெருமையுரவாழ்வார்களே. (௨௮)

ஸ்ரீநிவாசன் திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமகாவிஷ்ணுபேரில்,

நக்ஷத்திரமாலை,

முற்றிற்று.

சிவமயம்.



# கும்பகோணம்

# மாமாங்க புராண

## வசனகாவியம்.

(சமஸ்கிருத சுலோகம்.)

சுக்கிலாம்பரதரம்விஷ்ணுஞ்சசிவர்ணஞ்சதுர்புஜம்
பிரசன்னவதனந்தியாயேசர்வவிக்னோபசாந்தயே
கும்பேசகும்பகோணசகுங்குமாருணவிக்கிரக
கரோதும்மகல்யாணங்கௌரிதேகாங்கசோபனம்.

முதலாவது

## சத்திரயாகவத்தியயம்.

நீர்வளமும் நிலவளமும் குடிவளமு மிகுந்த கும்பகோண க்ஷேத்திரமென்னுந் தலத்தில் பூர்வகாலத்தில் அனேகரிஷிகள் புண்ணியகரமாயிழிக்கிற ஆரணியங்களிலே பிரகாசிக்காநின்ற நைமிசாரண்ணிய க்ஷேத்திரத்திலே கௌதமி என்கிற நதிக்கரையில் பனிரண்டு வருஷத்திற்கொரு முறைசெய்யத்தக்க சத்திரயாகத்தைச் செய்ய

இச்சையாயுள்ளவர்களாய் சாஸ்திரப்படிக்கு ஆரம்பித்தார்கள். அவர்களுடைய நாமகரணமாவது கபிலர்-புலகர் - கற்கர்-தேவலர் - பயிரவர் - மூர்க்கவர் - காளவர் - மார்க்கண்டேயர்- நிபண்டகர்-போதாயனர்- வசு-பப்புரு-சவுனகர்-சுகர்-ஜெமதக்கினி-சதானந்தர்-வச்சர்-குச்சர்-அரிதகர்-பராசர்-பிருகு-சகத்தி-பர்வதர்-ரயிப்பியர்- கார்த்தியாயனர்-கௌசிகர்-கௌண்டிமியர்-கௌதமர்-ஆபத்தம்பர்- பாரத்துவாசர்-கண்ணுவர்-காணர்-அத்திரி-அங்கிரசர்-சதாத்பர் - கண்டு- சாண்டில்லியர்-முனி-பாற்கவர்-அசிதர்-நாரதர்-சரபங்கர்-சரசர் - திருணபிந்து-சுமந்து-சுதீட்சனர்-அகஸ்தியர்-தேத்தாத்திரையர் - ரோமசர்மர்-தௌமியர்-அஷ்டாவக்கிரர்-தர்மாரமர்-தூம்பர்-காசிபர் இந்த ரிஷிகளும் இன்னமன்னியமாய் அசுரமார்க்காளாயும் அக்கினி கோத்திரனுக்குச் சமானமான பிரகாசமுள்ள ஆகாரங்களுடையவர்களாயும் பிராதகாலத்தில் ஓமஞ்செய்யப்பட்டிருக்கிர அக்கினி கோத்திரங்களுள்ளவர்களாயும் தபசினுல் சமுசயமில்லாதிருக்கிற விரதமுள்ளவர்களாயும் செபஹோம்பர்களாயும் சமஸ்தமான ரிஷிகளும் வேதாத்தியயன விரதத்தில் மிகுந்த அன்புள்ளவர்களாயும் நித்தியாக்கியான கோத்திரிகளாயும் அகங்கார மில்லாதவர்களாயும் காமக்குரோதாதி குணங்களினுலும் சமஸ்த குணங்களினுலும் துறந்து பாவமில்லாதவர்களாயும், ஆசையில்லாதவர்களாயும் மதமில்லாதவர்களாயும் நிர்மலமான அபிப்பிராயமுள்ளவர்களாயும் ஆச்சரியமில்லாதவர்களாயும் சுபமான ஆசாரமுள்ளவர்களாயும் ஆத்தியாத்மிகஆதிதெய்வ ஆதிபூதிகமென்கிற தாபந்திரயமில்லாதவர்களாயும் யோகாப்பியாசர்களாயும் எப்பொழுதும் விரததற்பரர்களாயும் உருத்திராட்ச மாலிகாபர்ணர்களாயும் திரிபுண்டராங்கிதமான சிரசுகளுள்ளவர்களாயும் பஞ்சாட்சரஜேபர்களாயும் மனுஎக்கிய பூதெக்கிய தெய்வெக்கிய பிதிர்எக்கிய பிர்ம்மெக்கிய மென்கிற பஞ்ச எக்கியங்களுக்கு மிகவும் ஆதாரபூதர்களாயும் தளதளப்போடுங்கூடினபடிக செபமாலையை எப்பொழுதும் அங்குட்டதற்சனியினுல் திருப்பிக்கொண்டேயிருக்கிறவர்களாயும் விநாயகமூர்த்தியோடு கூடிக்கொண்டும் அம்மனேடே கூடிக்கொண்டிருக்கிற சப்பு சம்பந்தமான பஞ்சவிம்சத்திமூர்த்தி பேதங்களிலே வாசஞ்செய்துக்கொண்டிருக்கிற பரமசிவனிடத்தில் பரபரப்போடுங்கூடின பத்தித்தியான முள்ளவர்களான அனேகரிஷி கூட்டங்களும் அஷ்டாட்க்ஷர செபங்களினுலேவருவிக்கப்பட்டிருக்கிற சமஸ்தமான சுக்கியான சம்மந்தங்க ளுள்ளவர்களாயும் பரமோற்கிஷ்டமாயும் சின்மாத்திர சொரூபமான பரப்பிரமத்தினி

டத்தில் வைக்கப்பட்டிருக்கிற சித்தவிர்த்தியுள்ளவர்களாயும் துளசி மணிமாலையை சிரசிலும் தாமரைக்காய் மணிமாலைபுயங்களிலும்மார் பிலும்தரித்துக்கொண்டிருப்பவர்களாயும் பரமசிவனுடைய லீலாபேதங்களாயும் மங்களகரங்களாயு மிருக்கிற கதையை சுருதி மிருதி புராணங்களிலே சம்மதங்களாயும் சம்சாரத்திலுண்டாகிய பாதைகளுக்கு அவிழ்தங்களாயிருக்கிற சிவசரித்திரங்களை கேட்க கோரிக்கையுள்ளவர்களுமான அனேகரிஷிகூட்டங்களும் கௌதமி நதிக்கரையில் நடக்கும் சத்திரயாகத்தைக்குறித்து வந்திருக்கிறார்கள்.

அப்போது சூரியமண்டலத்துக்குச் சமானமான பிரகாசமுள்ள சூதமா முனிவரைப்பார்த்து அவருக்குப் பிர்ம்மாசனங் கொடுத்துப் புண்ணியவான்களான முனீஸ்பரர்களஞ்சலி செய்து ஓய் சூதமா முனிவரே பிரசன்னமாய்விடும் நல்லக் கியானமுள்ளவராயும் நற்குலத்திற் பிறந்தவராயும் கங்காநதியி லுண்டான கமலத்தினுடைய பரிமளங்களோடும் கூடப்பிறந்ததாயும் சதுர்முகப் பிரம்மாவினுடைய பத்தினியாகிய சரஸ்வதி தேவியினுடைய கருணாரசப்பிரவாகங்களாற் பூரணங்களான வாக்குவிஷயங்களினாலே நீங்கள் எங்களுடைய பாபதாபங்களைப்போக்கடிக்கவேணுமாகையால் ஓய்மகாமுனியே சமஸ்தமான புராணரகசியங்களையும்நீரறிவீர் சங்குசக்கர கெதானந்த பீதாம்பரதாரியான மகாவிஷ்ணுவினுடையநாபிக்கமலத்திலுண்டான பிரம்மதேவலோக உல்லாசங்களை நீரறிவீர் வியாசமகாமுனிவருடைய அனுக்கிரகத்திற்கு பாத்திரமாயிருக்கிர சீவாத்மாவையுடையவ ராகையினாலே இப்பிரபஞ்சத்தில் நீரறியாத வஸ்துக்களொன்றுமில்லை ஐயா மகாத்மாவே பூர்வகாலத்திலேமுராசூரனுக்கு வயிரியான சக்கரபாணியினுடைய முக்கியமான புராண கதாமிர்தங்களை முன்னெங்களுடைய சுரோத்திரங்களினாலே கேட்கப்பட்டதுகள் பிரபஞ்சத்தி லுத்தமமான க்ஷேத்திர தீர்த்தங்களினுடைய சரித்திரங்களையும் மூன்றுலோகங்களிலும் ஆச்சரியகரமான கதாமிர்தமானது உங்களுடைய முகாரவிந்தத்தினின்றும் மிரதமயமாகப் பெருகிற்று அதை நாங்கள் சுரோத்திரமாகின்ற முகங்களினாலே மிகவும் பானஞ்செய்தபோதிலும் எங்களுக்குப் பூரணமானமனத்திர்ப்தியில்லாமலிருக்கின்றதையா முனீஸ்பரரே ஜெகத்பிரகாசமான சூரிய சந்திராக்கினி கோத்திரங்களே நேத்திரங்களாகவுடைய பரமேஸ்பாருடைய கதாமிர்தங்களினாலே திர்ப்தி பண்ணிவையுமையா பூர்வகாலத்திலே புராண சிரேஷ்டமான பிரமாண்ட புராணத்தில் பிறகடனஞ்செய்யப்பட்டிருக்கிற கும்பகோண க்ஷேத்திர வைபவங்களை

சூட்சமாக எங்களுக்குச் சொன்னீர் அந்த வைபவத்தைக் கொஞ்சம் விரிவாகச் சொல்லுமையாவென்று நைமிசாரண்ணியத்தில் சத்திரயாகத்திற்கு வந்து வாசஞ்செய்துகொண்டிருக்கிற அனேகம் பிர்மரிஷிகள் முதலானபேர்கள் ஸ்தோத்திரஞ்செய்தார்கள். அவர்களை சூதமகாமுனிவர் பார்த்து ஓ ரிஷிசிரேஷ்டர்களே உங்களுடையசித்தவிர்த்திகளைத் திறஞ்செய்துகொண்டு சமஸ்தபாபவினாசகரமான கும்பகோணஸ்தலமகாத்மியத்தை சாவதானமாய்க்கேளுங்கள் முனீஸ்பரர்களே அந்த கும்பகோண க்ஷேத்திரத்தில் புண்ணியகரமான தீர்த்தங்களையும் சிவமகாத்மியங்களையும் மகாவிஷ்ணுவும் பிரமனும் மற்றவானவருடைய வரவையு முங்களுக்கு விசேஷமாகச் சொல்லுகிறேன்.

அனேகவிதமான மகாபுண்ணிய ஸ்தலங்களுக்குள்ளே இந்தக் கும்பகோண க்ஷேத்திரமானது உத்தமோத்தமாயிருக்கின்றது. உலகத்தில் மனிதருக்கு போகமோட்சங்களைக் கொடுக்கத்தக்கது சர்வ பாவங்களையும் போக்கடிக்கத்தக்கது, சர்வசித்திகரமாயிருக்கிறது, ஈரேழு பதினலு லோகங்களிலும் பிரசித்தமாயிருக்கிறது, சித்தசாரணகெந்தர்வ வித்தியாதரர்களினலே சேவிக்கப்பட்டிருக்கிறது, சமஸ்தமான தேவர்களுக்கும் ஸ்தானமாயிருக்கிறது சகலமுனிவர்களினலே எப்பொழுதும் நமஸ்கரிக்கத்தக்கதாயும் சிவபத்தர்களினலும், தியானயோகிகளான தபசிகளாலுஞ் சூழப்பட்டு சிவகணங்களினலெங்கும் நிறைந்திருக்கின்றது, இயமநியமப் பிராணயாமப் பிரத்தியாகார தியானதாரண நித்தியாசன சமாதியென்கிற அஷ்டாங்கயோக நித்தர்களான சனகசனந்தன் சனற்குமாரர் சனற்சுகாதர முனிவர்களினலே சேவிக்கத்தக்கதாயிருக்கின்றதுஅணிமாதி அஷ்டசித்திகளுக்குந் தானமாகயிருக்கிறது லோகங்களைப் பரிசுத்தஞ் செய்யாநின்றது மனிதர்களுக்கு சங்கரமான பாவங்களைப் போக்கடித்து சாந்தியைக் கொடுக்கப்பட்டது தரிசனத்தினலுங் கீர்த்தனத்தினலும் புண்ணியப் பிரதமாயிருக்கிறது தாபத்திரைய சமனமாயிருக்கிறதுமனதிற்கு ஆனந்தகாரணமாயிருக்கிறதுமனிதருக்கு சித்தபரிசுத்திசெய்யாநின்றிருக்கிறது தேவர்களினலே எப்பொழுதும் சூழ்ந்திருக்கிறது மதமாச்சரிய லோபங்களில்லாதிருக்கிற இருபிறப்பாளர்களினல் நிறைந்திருக்கிறது பரமசிவனுடைய பதவிக்கு ஸ்தானமா யிருக்கிறது தெரிசனம் பண்ணினவுடனே பக்தசனங்களுக்கு கைலாசத்தைவிடப் புண்ணியகரமாயிருக்கிறது காசி - காள

த்தி - காஞ்சிபுரம் - சிதம்பரம் - திருவாரூர் - இராமேச்சுர முத லான புண்ணிய க்ஷேத்திரங்களுக்குள்ளே உத்தமோத்தமமான கெங்கை - யமுனை - கோதாவிரி - சரஸ்வதி - நிர்மதை - தாம்பிர பாணி முதலான புண்ணிய நதிகளுக்குள்ளே சிரேஷ்டமாயிருக்கிற காவேரி நதியானது எந்தயிடத்தில் பிரகாசித்துக்கொண்டிருப்பா ளோ அந்த யிடத்தில் நரர்களை புனிதராகச்செய்கிறாள். கும்பகோ ண க்ஷேத்திரத்தில் வாசஞ்செய்கிற மனிதர்களுக்கு கும்பேசுவரரு டைய அநுக்கிரகத்தினாலே சம்சார வாசனையானது உற்பத்தி சூ னியமாயிருக்கிறது. பாபநாசம் புட்கரமுதலான தீர்த்தங்களுடைய சேவையால் அநேகசென்மங்களில் தொடர்ந்து வருகிற பாதகங்கள், உற்பாதகங்கள், சாதிபேதங்களினால் வந்தபாதகங்கள் சங்கரீகரண பாவங்கள் போகிறது. கும்பகோண க்ஷேத்திரத்திலேயோவென்றால் காவேரியிலேயும் காசிதீர்த்தத்திலேயும் ஸ்நானஞ் செய்கிறதினாலே மனம்வாக்குக் காயங்களினாலும் சம்பாதிக்கப்பட்டிருக்கிற பாவங்க ளைம் போக்கடிக்கிறது. அஸ்திமச்சைகளில் பற்றின சாக்கிர சொ ற்பன சுழுத்தியிலுண்டான பாவங்களை சூரியோதயப்பிரகாசமான து இருளை எவ்விதமாய்ப்போக்கடிக்குமோ அவ்விதமாய் போக்கடி யாநின்றிருக்கிறது கும்பகோண க்ஷேத்திரஸ்மரணையினுடைய பதி னறிலொருபங்கு ஆகமாட்டாது அன்னியக்ஷேத்திரஸ்மரணை. தர்மார் த்தகாமமோட்ச சதுர்வித பலங்களைக்கோறின மனிதர்கள் அநேக விதமான பிரயத்தனத்தினால் கும்பகோண தெரிசனம் வசியம்பண் ணத்தக்கது. பாபநாசனமாகையினாலே அந்த கும்பகோண க்ஷேத்தி ரத்தில் ஒரு தர்மஞ்செய்தால் எந்நாளும் விர்த்தியடையும் அன்னிய க்ஷேத்திரத்தில் அநேககோடி பாவங்களைச் செய்தாலும் அந்தப் பா வங்கள் நசிந்துப்போய்விடுகிறது, பாவிகளுக்கும் எக்கியத்தினாலும் தபசினாலும் தானங்களினாலு மாகாரமில்லாமல் சாந்திராயண விர தங்களினாலேயும் அநேக அஸ்வமேதமகா எக்கியங்களினாலேயு மா யிரம்வாசிபேதங்களினாலேயும் எந்தபலத்தை அன்னிய க்ஷேத்திரத் திலடைவார்களோ அந்த பலத்தை சனங்கள் கும்பகோணக்ஷேத்தி ரத்தைச்சேவித்தபோதேயடைவார்கள். உபபாதகியோடேங்கூடினவன் மகாபாதகி இவர்கள் கும்பகோண தெரிசனத்தால் பரிசுத்தத்தை யடைந்தவர்களாயாகிறார்கள். பீஜசங்கர்- கோத்திரசங்கர் - சாதிசங் கர்- ஆகாரசங்கர்- கர்மசங்கர் முதலிய பாவங்களுக்கு பிராச்சித்தஞ் செய்துகொள்ளவேணுமென்கிற இச்சையுள்ள மனிதர்கள் கும்பே சுரருடைய கிருபையினால் செபஹோமதானயாகசத்தியதமனியம சாந்திராயணவிரத முதலானதுகளால் பரிசுத்தர்களாவார்கள். கும்

பகோண க்ஷேத்திரத்தில் வாசஞ்செய்கிற பலத்துக்குசமான மாண பலன் அன்னியக்ஷேத்திரத்தில் வாசஞ்செய்தால் கும்பகோணக்ஷேத்திரத்தின் பலன் கோடியி லொருபங்கு வருவது அதிக பிரயாசம் உலகத்தில் யாதாமொருவன் மகாபெரும்பூதம்போல அதிகஅசனம் உண்ணப்பட்டவன் பாவமும் பரிமிதமான சலபான முதலான பானங்களிலுண்டான பாவமும் காலமிருத்துக்குச்சமமான உக்கிரமான தானப்பிரிதிக்கினபாவங்களும்மிருத்து நிவாரகமான அசதான,கெஜதான,மகிழ்தான,கிருஷ்ட்ணகம்பளதான,கூழமாண்டதான திலததான, கிருத்தான, கார்பாசதானத்தில் புருஷதானமுதலியஉக்கிரதானபிறிதிக்கிரகபாவங்கள் குப்பகோணக்ஷேத்திர தெரிசனஞ் செய்த மாத்திரத்தில் பாவவிமோசனமாய்விடுகிறது, தான் சாப்பிடத்தகாத வஸ்துக்களைப் பொசித்த பாவமும் தான்போகத்தகாத இடங்களில் போய் வாசஞ்செய்தபாவமும் இன்னம் அனேகமான பாவமும் கும்பகோண க்ஷேத்திரத்தில் மாத்திரம் போய்விடுகிறது கும்பகோண க்ஷேத்திரத்திலும் காவேரியிலும் காசிதீர்த்தத்திலும் ஸ்நானஞ்செய்த மாத்திரத்தில் பாவங்களெல்லம் கருமானுலைக் கூடத்தில் தேதீப்பியமானமாய்ச் சிவந்திருக்கிற மழுவில் தெளித்த நீர்த்திவலைபோ லயத்தையடைந்துபோய்விட்டது சாயுச்சியபதவியுமுண்டாகிறது, அத்திபக்த புண்ணியகரமா யிருக்கிற காசிதீர்த்தத்திலுங் காவேரியிலும் ஸ்நானஞ்செய்து விதிப்படிக்குத் தீர்த்தசிரார்த்தஞ் செய்தால் பிதிர்தேவதைகளுக்கு அட்செயமாய்ப் புண்ணியலோகங்களுண்டாகும்.

அந்த காசி தீர்த்தத்தினுடைய கரையில் காசிபமகாமுனிவரானவர் அநேகமாயிரம் வருஷங்கள் தபசுசெய்துக்கொண்டு நிர்மலமான ஞானத்தோடுங் கூடியவராய் சமஸ்த பிரபஞ்சங்களுக்கும் சுகத்தைச் செய்யாநின்ற பரமசிவனை பிரார்த்தித்துக்கொண்டிருந்தார் இந்தப்பிரகாரம் வெகுகாலம் பரமசிவத்தியானத்துடன் தபசுசெய்துகொண்டிருந்தபின்பு பிரபஞ்சங்களை யுண்டுபண்ணவும் சம்மாரம் பண்ணவும் பிரசைகளுக்கு வரும்படியான ஆகதியும் நிற்கதியும் ஞானுக்கியானங்களையும் அறிந்தவராயிருக்கிற பரமசிவன் பிரீதியோடுங்கூடி காசிபமகாமுனிக்குப் பிரத்தியட்சமானார் தபோநிதியாயும் ஆன்மிசமில்லாதவரான காசிபமகாமுனியானவர் பிரத்தியட்சமாய்ப் பரமசிவனைக்கண்டு ஆசனத்தைவிட்டு எழுந்திருந்து நமஸ்காரஞ்செய்து ஸ்தோத்திரஞ்செய்து பிர்மா - விஷ்ணு - இந்திரன் - -யமன் வருணன் - குபேரன் - வாய்யு - அக்கினி - நிருதி முதலான முப்

பத்துமுக்கோடி தேவர்களுக்கும் பிரபுவான பரமேஸ்வரரைப் பிரார்த்தித்தார் ஓய்சுவாமி இந்தத் தீர்த்தமென்பேருடைய தீர்த்தமென்று பேர்பெற உம்முடைய பிரதிட்டையும் இந்தப்பூலோகத்தில் கீர்த்தியடைய வேணுமையாவென்று பிரார்த்தித்தார் ஜெகதீசான பரமசிவன் அப்படியே மனமகிழ்ந்து ரிஷிஸ்வரரேயென்று அனுக்கிரகஞ்செய்து அந்தர்த்தியானத்தை யடைந்தார்.

அனேகம்பிரமகத்தி பிராணகத்திபண்ணின செந்துக்களே கும்பேசுவரருடைய சேவையினால் பாவங்களில் நின்று விடுபடுகின்றது. கோஹத்திசெய்தவன் செய்தவுபகாரத்தை மிறந்த கிருதக்கினன் ஆசாரியன் பத்தினி சம்பந்தம்பண்ணினவன் இந்தபாவிகள் கும்பகோணத்திலே கும்பேஸ்வரரைதரிசனஞ்செய்து பாவங்களிலே நின்றும் விடுபடுகிறார்கள் சிரவணத்தினாலும் அன்னத்தினாலும் அப்படியே தியானயோகங்களினாலும் யாதொரு கியானமுண்டாகின்றதோ அந்தக்கியானம் மனிதர்களுக்குக் கும்பகோணக்ஷேத்திர சேர்வையினாலே உண்டாகின்றது பிர்ம்மசரிய விரதத்தினின்றும் நழுகினவனும் மாரகாதிகளில்லாதவனும் அனுஷ்டான மில்லாதவர்களாயும் புத்திரர்களில்லாதவர்களான பாவிகள் கும்பகோணத்தில் பாவங்களில்நின்றும் விடுபடுகிறார்கள் அனேகபாவமுடர்களா யிருந்தாலும் உத்தமமான கும்பகோணத்தை யடைந்தால் மகாபாண்டித்தியமாகிறார்கள். வெகு தூரதேசத்திலிருந்தபோதிலும்கும்பகோணக்ஷேத்திரத்தினுடைய சேவையினால் சமஸ்தபாவங்களும் நசித்துப்போகிறதுக்கு சமுசயமில்லை காவேரிஸ்தானம் கும்பகோணதெரிசனங் கும்பேசுவரருடைய சேர்வைகிடைத்துதானால் சமஸ்தமுங்கிடைக்கும் பயங்கரமான தாயார் கெர்ப்பநரகத்தில் மனிதர்கள் காவேரி கும்பகோண கும்பேசுவர தெரிசனத்தினாலே ஜெனனமில்லாதவர்களாகிறார்கள் மனுஷர்கள் சிரத்தையுடனே கும்பகோண க்ஷேத்திரசேர்வை செய்தால் சம்சாரக்கடலைநீந்தித் தாண்டுவார்கள். நடுவழியில் ஆபத்தையடைந்த போதிலும் மிகவும் மோட்சபதவியையடைவார்கள் கும்பகோணக்ஷேத்திரத்தில் தெய்வகெதியாகத்திரேகபதனம்வந்துதானால் கடத்தேறினவனாய் மோட்சபதவிக்குப் பாத்திரனாய்க் கற்பிக்கப்படுகிறான். எந்தப்புருஷன் கும்பகோண க்ஷேத்திரத்தையடைந்து மகாதேவரை தெரிசனஞ்செய்கிறானோ அந்தமகாபுண்ணியபுருஷனுக்கு வேறே தர்மார்த்தகாமமோட்சசதுரவிதமான பலன் வேண்டுவதில்லை. பஞ்சகுரோதத்துக்குப் பஞ்சகோசம் இந்த

கும்பகோணக்ஷேத்திர மகாபுண்ணியகரமாயும் சருவசித்திகரமாயும் இருக்கிறது. மூன்றுலோகங்களிலும் இந்த கும்பகோண க்ஷேத்திரத்துக்கு சமானமான க்ஷேத்திரங்கிடையாது. கெங்கை முதலான நதிகள் கும்பகோணக்ஷேத்திரத்தை யடைந்து தீர்த்தஸ்தான சிவதெரிசனங்கள் செய்து பாவங்களைப் போக்கடித்துக் கொள்ளுகிறதுகள். அந்த கெங்காநதிகள் எப்படிக்கொற்றதென்றால் மூன்றுலோகங்களிலுள்ள தேவகெந்த்ருவ பன்னகபதக்கின்னர் சித்தசாரண உரகராட்சத அசுரதேவ மனுஷரின்னம்தாவர சங்கமங்களான லோகாலோகங்களை பாவங்களிலே நின்றும் விடுவித்து புண்ணியகரமாய்ச் செய்கிறதுகள் அன்னியக்ஷேத்திரத்தில் செய்தபாவம் புண்ணியக்ஷேத்திரத்தில் நசிக்கிறது. புண்ணியக்ஷேத்திரத்தில்செய்தபாவங் காசியிற் போய்விடுகிறது. காசியில் செய்தபாவம் கும்பகோணக்ஷேத்திரத்தில் போகிறது கும்பகோணத்தில் செய்தபாவம் கும்பகோணத்திற்போகிறது. இந்தப்பிரகாரமாக மிகவும்கெம்பீரமாயிருக்கிற கும்பகோணஸ்தலபிரபாவமானது சூதமகாமுனியினால் சொல்லப்பட்டது. இந்த க்ஷேத்திரத்திற்குச் சமானமான க்ஷேத்திரமில்லையென்று இன்னம் அனேக - சுருதி - மிருதிபுராண மிதிகாசமுதலான வசனங்களினால் வெகுவாய் க்ஷேத்திரமகிமையைச் சொல்லி பாவங்களை வேரோடே கெல்லத்தக்கதாக மகிமையுள்ள அந்தபுண்ணியகரமானகும்பகோண க்ஷேத்திரத்தில் வாசஞ்செய்ய மதியையுண்டு பண்ணினார்.

முதலாவது முற்றியது.

---

இரண்டாவது

# கும்பகோண ஆதி அத்தியாயம்.

சூதபுராணிகர் அனேகரிஷி கூட்டங்களுடனும்பிர்மதேவரானவர் தன்னுடைய ஊர் ஒருதினத்தினுடைய நாலாஞ்சாமத்தில் பிரளயகாலத்தை இந்த மூன்றுலோகங்களுக்கும் எமனைகப்பார்த்து மிகவுந் தயவோடுங்கூடிய வியாகுலமுள்ளவராய்ச் சிருட்டிசெய்கிறதற்குக் காரணங்களாயிருக்கிறசமஸ்தமானதாவரசங்கமங்களுடைய

சம்மந்தங்களினாலே புட்பித்து பலித்துநெத்தாய் நெத்துக்குள்ளிருந்த விரைகளெல்லாஞ் சுத்தமாயாசத்தி சொரூபமான கிரியாசத்தி கும்பத்தில் பூரணமாகப் பருவதங்கள்பேரில்போட்டு மேருபருபதத்தின் சிகரத்தில் அந்தகும்பத்தை ஸ்தாபனஞ்செய்தார். நுரைதிவலை அலைநுரைகளுடனே ஒன்றோடொன்றுதடதடவெனமகாசத்தத்துடனேமோதிக்கொண்டு திரிலோகங்களும்முழுகிப்போம்படியாய் குபீலென்று பொங்கிக்கொண்டு நாலுசமுத்திரங்களிலுள்ள நிலப்பிரவாகங்களெல்லாம் ஒருமித்து ஏகப்பிரவாகமான ஜெலப்பிரவாகங்களினாலே பூலோகபுவர்லோக சுவர்லோக மகாலே கஜனோலோக தபோலோக சத்தியலோக பரியந்தம் சப்தசமுத்திரங் களிலுள்ள ஜலங்களோடுங்கூட ஒன்றாய் அபரிமிதமாகப் பொங்கிப் பூலோக முதலான ஏழுலோகங்களிலுள்ள சராசரங்களையும் வாயுவுமண்டலம் மேகமண்டலம் கிரகமண்டலம் நட்சத்திரமண்டலம் துருவ-நக்ஷத்திர மண்டலங்களிலுள்ள யட்ச-கின்னரர்-கெந்தர்வர்-சித்தர் சாரணர் இந்திரன்முதலான அநேகந்தேவர்களும் பாதாளவாசிகளான-அசுரர் முதலானவர்களும் - ஆதிசேஷ ஆதிகூர்ம மகாமண்டூகமுதலான ஜெகத்ஆதாரசத்தியும் சதுர்முகப்பிர்ம தேவருடைய சாயுங்காலத்தில் சலப்பிரளயத்தில் அகப்பட்டுக்கொண்டு சருவமும் சூனியமாய் நசித்தும்போய் விட்டது இந்தப்பிரகாரம் ஜெகமெலாம் ஏகஜலப்பிரளயமாய்ப் போனபிற்பாடு லோகங்களெல்லாம் நஷ்டத்தையடைந்து போய்விட்டது. தாபரசங்கமங்களும் நஷ்டமாய்போய் விட்டபடியினாலே அந்தமேரு பருவதத்தில்வைத்த மாயாத்மகமான கும்பமானது மகாவேகத்தோடுங்கூடின சண்டமாருதவாயுவினாலே அசைந்து மகாப்பிரளய சமுத்திரத்தில் வந்துவிழுந்து ஏமபுட்கரணி தீர்த்தத்தினுடைய மேலண்டைச்கரையில்வந்து நின்றுவிட்டுது. பூரணமாய் செகத்காரணமான விரைகளோடுங் கூடினதாகையால் இந்த செகப்பிரளயமானது போனபின்பு பாதாளலோகமுதல் சத்தியலோகம்வரைக்கும் அங்கங்குள்ள சில வஸ்துக்களெல்லாம் இல்லாமல் வெட்டவெளியா யிருந்தது அப்போது சிருட்டிகளுண்டாகுமுன் அம்பிகாதிபதியான பரமசிவன் மகாபிரகாசமுள்ள கைலாயபருவதத்திலிருந்து வேடவேஷங் கொள்ளவேணுமென்கிற இச்சையடைந்து வேடனைப்போல் சரீரமும் அதற்கேற்ற மயிலிறகு கொக்கிறகு வக்காமணி கொக்காமணி சங்குமணி முதலாகிய ஆபரணங்களணிந்து கொண்டு தட்டி சல்லடம் தரித்து கையில் வில்லும் தோளில் அம்புறாத்தோணியும் மற்றொருகையில் டாலும் இடுப்பில் கட்

டாரி லாங்கு பிச்சுவாய் முதலாகிய ஆயுதங்களையுங்கட்டிக்கொண்டு தன்னுடையபிரமதேவகணங்களையும் வேடரூபத்தோடு ஆயுதபாணிகளாய் தன்னுடன் கூடவரும்படி ஆஞ்ஞாபித்து அவர்களுடன்பிரயாணப்பட்டு கும்பகோணக்ஷேத்திரத்தில் ஏமபுட்கரணி தீர்த்தக்கரையில்வந்து வாசஞ்செய்துபின்புமத்தியார்ச்சுனக்ஷேத்திரத்திலும் வந்திருந்து ஏகபாணனென்னு நாமதேயமுடைய ஐயனாரானவர் வேடவேஷந்தரித்த பரமேசுரருடைய ஆக்கினையினால் பாணங்களை எடுத்தெடுத்து மகாப்பிரபுவான பரமசிவன்கையில் அடிக்கடி கொடுக்க பரமசிவன் தேதீப்பியமானமாய் அநேககோடிசூரிய சந்திர மண்டலங்கள்போல தகத்தகாயமானமாய் பிரகாசித்துக்கொண்டிருக்கிற பினாகமென்கிற தனுசை நாணேரிட்டு வளைத்து நிறுத்தி கைகொண்டவரைக்கும் பாணவருங்களை விலாசமாக திசைதிக்கெட்டிலும் சரசரவென்று பாணப்பிரயோகஞ் செய்துகொண்டிருந்த பரமசிவன் அந்த ஐயனார் கையினிடமாக ஓர்பாணம் வாங்கிக்கொண்டு தனுசில் சந்தானஞ்செய்து ஏமபுட்கரணி தீர்த்தத்தின்மேற்கரையில் மாயசத்தி சொரூபமாயும் திடகாத்திரங்களோடும் செகத்பீஜங்களை கெற்பத்தில் தரித்துக்கொண்டு மகாபிரகாசத்தோடுங்கூடிய கும்பத்தைக்கண்டு இந்தக்கலசத்தைப் பின்னப்படுத்தவேணுமென்கிற இச்சையோடுங்கூடினவராய் முன் தனுசில் சந்தானஞ்செய்த ஒருபாணத்தினாலே கழுத்துவேறும் உடல்வேறுமாய்ப் பிளந்துவிட்டார்.

அந்த கும்பவரசனுபலத்தினாலே வாசஞ்செய்துகொண்டிருந்த இந்திரோற்பத்தி காரணமான பீசத்தில் காயம்பட்டது. ரிஷிகளே அந்த சந்திரனிடத்தில் காயம்பட்ட மாத்திரத்தில் அந்த கெடத்தினுடைய கழுத்துவழியாய் அமுர்தப் பிரவாகங்கள் பெருகி ஐந்துகுரோசத்துக் கைந்துகுரோசம் பரவி பூமியெல்லாம் நனைந்து அங்கேதானே சந்திரபீசத்திலிருந்த அமுர்தமெல்லாஞ்சேர்ந்து அவ்வித்திலிருகித்தோய்ந்திருந்தது. அந்தவமிர்தம் எவ்வளவுதூரம் பூமியை நனைத்ததோ அந்த திவ்வியாமிர்தப் பிரவாகத்தினாலே அவ்வளவு தூரம் உலகத்தில் கும்பத்தின் கழுத்தில்பாணத்தினாலுண்டான துளையின்வழியாய்ப் பெருகின அமிர்தத்தினால் ஐந்துகுரோசதூரம் நனைந்ததாகையால் இந்த க்ஷேத்திரத்திற்கு உலகத்திலுள்ள செனங்கள் மிகவும் பிரசித்தமாய் கும்பகோணமென்று சொல்லும்படியாய் பிரசித்தமான நாமதேயத்தையடைந்தது.

இந்த க்ஷேத்திரம் பின்பு மத்தியார்ச்சுனத்திலிருந்து வேடரூபங்கொண்ட பரமசிவன் மாயாத்மிகமான குடத்துக்கழுத்தை பாணத்தினால் துளைபண்ணின வேடரூபமாய்வந்த பரமசிவன் குடத்தை வந்து பார்த்துங் குடத்தைக்காணாமல் குடத்தடியிலிருந்தஅமுர்தத்தை மணலோடுங் கூடத்திரட்டி லிங்காகாரமாயமைத்து சம்புரோக்ஷணை முதலாகியதுஞ் செய்து தானே பூசைசெய்தார் பிரபஞ்சங்களுக்கு ஆதிகாரணமான மாயாகும்பாமிர்தத்தினால் வந்தனஞ்செய்த லிங்கமாதி கும்பேசுரரென்கிற நாமகரணமுண்டாச்சுது அந்த லிங்கத்தில் சந்திரசேகரரான பரமசிவன் அதிக சந்தோஷத்தையடைந்து தயாளகுணத்தோடும் பக்தஜெனங்களுடைய பாவங்களைப் போக்கடித்துக்கொண்டு தன்னை மிகுந்த பக்திவணக்கத்துடன் பூசை செய்யமனமுள்ளமனிதர்களுடையசம்சாரபந்தங்களை நீக்குகிறவராய் விளங்கிக்கொண்டிருக்கிறார் அந்த கும்பேசுரருடைய பூர்வதிக்கு பாகத்தில் தீர்த்தம் மாயாத்மிகமான கும்பாமிர்தத்தினா லுண்டானது சந்திரபுட்கரணி எந்ததீர்த்தத்திலிருந்து தங்கதாமரைப் புட்பங்களாயுண்டானது எந்த யிடத்தில் அந்த தீர்த்தத்திற்கு சுவர்ணபத்மினியென்று நாமதேயமானது விளங்கிக்கொண்டிருக்கின்றது அந்த எம புட்கரணியென்னுந் தீர்த்தத்தில் சமஸ்தமான தேவதைகளும் முனீஸ்பரர்களும் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள் யாதாமொரு மனிதர்கள் பொஸ்தாமரையில் சோமவாரங்களில் ஸ்நானஞ்செய்து பிதிர்தேவதைகளுக்கு தீர்த்த சிரார்த்தமுதலாகியதும் பத்திவிசுவாசத்துடன் பூசை செய்கிறார்களோ அவர்கள் கோதான பூதான சுவர்னதானங்களுஞ்செய்து அவர்கள் சக்திக்குத்தகுந்ததாய் ஆதி கும்பேசுரரை பாத்தியாற்கியாசமன தூபதீபகெந்த நைவேத்திய முதலிய நானுவிதமான உபசாரங்களினாலே பூசைசெய்தால் பக்திமுதிதிகளையடைவார்கள் அதற்கு எள்ளளவும் சந்தேகமில்லை பரிசுத்தமுள்ளவர்கள் பொற்றாமரையில் ஸ்நானஞ்செய்து கும்பேசுரனைப் பூசைசெய்தால் இந்த லோகத்தில் சகலவிதமான போகபாக்கியங்களை அனுபவித்து அனித்தியத்தில் பரமசிவசாயுச்சிய பதவியை யடைவார்கள் கும்பேசுர சுவாமியை கேட்டை நட்சத்திரத்தில் யாதாமொருவர் ஏழையாயிருந்தபோதிலும் பக்திசிரத்தையோடும் ஏதாவிதியுடன் பூசைசெய்வார்களாகில் அவர்களுக்கு சுவர்க்கத்தில் அமராவதி பட்டணத்தில் மகாராஜாவாயிருக்கிற தேவேந்திரனுடைய அர்த்தசிம்மாசனத்திலிருந்து இந்திரபதவியை அனுபவிப்பார்கள் கும்பேசுரனுக்குநதி தீர்த்தம் தடாகதீர்த்தம் இரண்டும் மிகவும் பிரியமுள்ளது இந்த

தீர்த்தமிரண்டும் பக்தஜனங்களுக்கு சர்வாபீஷ்டங்களைக் கொடுக்கிறதில் சமரசமாயிருக்கின்றது பொற்றாமரையில் ஆதிவாரதினம் யாதாமொருவர் ஸ்தானஞ்செய்து மூலாதார ஆதிபிரமாந்திர பரியந்தம் அனேக கோடாகோடி மின்னற்பிரகாசம்போல ஆதாரவீதியில்குண்டலிநந்தியை தேசோரூபமாகத் தியானஞ்செய்து துவாதசாந்தத்தில் உமையோடுங்கூடப் பரமசிவனைத் தியானஞ்செய்துகொண்டிருக்கிற சிவயோகிகளுடைய அஸ்தத்தில் ஒரு நகப்பிரமாண ஒருவிராகனெடை சுவர்னதானஞ்செய்தாலும் ஒருவராகன் பணம் தானஞ்செய்து கும்பேசுரரை பக்தியாய்ப் பூசை செய்தார்களாகில் அந்த சனங்கள் இந்திரன் முதலான திக்குப்பாலர்களுடைய பதவியையடைவார்கள் வருணனானவன் தன்பதவி தப்பி கும்பகோணம் வந்து கும்பேசுரரைப் பூசைசெய்து தன்பதவியை யடைந்தான் எமதர்மராசனானவன் பரணி நட்சத்திரத்தில் கும்பேசுரரைப்பூசைசெய்து காலதெண்டத்தைதரித்து சமஸ்தமான ஜனங்களையும் நீதிமார்க்கத்துடன் தண்டனைசெய்து தெண்டதாரியென்னு நாமதேயத்தையடைந்தான் அக்கினியானவன் கும்பேசுரரைப்பூசைசெய்து அவருடைய அனுக்கிரகத்தினால் ஏழுவிதமான சுவாலைகளோடுங்கூடி சப்தாட்சியென்கிற நாமதேயத்தினால் முற்காலத்தில் பிரசித்தியை அடைந்தான்.

பூர்வகாலத்தில் மெய் - வாய் - கண் - மூக்கு - செவி என்னும் இந்திரியங்களினா லுண்டான விஷயப்பிரவர்த்திளைக் கடந்த மாந்தாதாவான மகாராஜாவானவர் அரசாளவேணுமென்கிற விருப்போடுங்கூடி கும்பகோண க்ஷேத்திரத்திற்குவந்து வாசஞ்செய்துகொண்டு ஸ்தான பிராச்சித்தஞ்செய்த திரிபுண்டதாரியாய் கும்பேசருடைய சந்நிதியில்வந்து சித்திரைமாதத்தில் சித்திராபர்வத்தில் பக்திசிரத்தையொடு பஞ்சாக்ஷரஜெபஞ்செய்து சதுரசமான பிரிதிவுமண்டலத்தை அர்த்தசந்திராகாரமான சலமண்டலத்திலயமாகவும் திரிகோணாகரமான அக்கினிமண்டலத்தில் ஜலமண்டலத்தைலயமாகவும் ஷட்கோணாகரமான வாய்வுமண்டலத்தில் அக்கினிமண்டலம் லயமாகவும் விர்த்தாகாரமான ஆகாயமண்டலத்தில் வாய்வுமண்டலம் லயமாகவும் தன் ஆத்மாவை சொர்ன்னதாகன பிலாவணஞ்செய்து பரமபுருஷனை மைக்குழம்புபோல நாசிமார்க்கத்தினால் வெளிப்படுத்தி வந்ததாகப் பாவித்து வலதுபக்கத்தில் அக்கினிசுவாலையோடுங்கூடின சூரியகாந்தச் சிலையில்விட்டு பரமபுருஷனைத் தகனஞ்செ

ய்து தன்சரீரத்தை வேரோடுங்கூடின ஆலமரம் கிளை முதலாகி யது கீழாகவும் தொங்குகின்ற ஆலமரமாகத் தன்சரீரத்தைப் பாவித்து மரத்தை உலர்த்தி ஆத்மாக்கினியினாலே கொளுத்தி தன்சுத்தசத்தியில் நின்றுபெருகிய அமுர்தப்பிரவாகத்தினால் நனைத்து முன்போலவிருட்சம் முளைத்து துளிர்வெடித்து அனேககிளைகளுடன் கூடிய புட்பபழமுதலிய பட்சிசாதிகளோடுங்கூடினதாகத் தன்சரீரத்தைப் பாவித்து பரிசுத்தமான ஆத்மாசொரூப பாவனையோடுங்கூடபஞ்சாக்ஷர செபஞ்செய்து கும்பேசுரருக்கு புழுகு தைலங்களினால் அபிஷேகஞ்செய்து பக்குவங்களாயிருக்கிற கதலி பழவர்க்கங்களினாலும் கர்ப்பூரங்களோடுங்கூடின எண்ணெயினாலுண்டானசிக்குகளைப்போக்கடிக்கத்தக்க கோதுமைமாவினாலே மூலலிங்கத்துக்கு சாஸ்திரவிதிப்படி மகா அபிஷேகஞ்செய்ய ஆரம்பித்தார் தங்கக்குடங்களிலே திவ்வியாமிர்தமான சலங்களினாலே ருத்திரசூக்தமந்திரங்களினாலும் புருஷசூக்தமந்திரங்களினாலும் மூலமந்திரங்களினாலும அபிஷேகஞ்செய்து வெண்பட்டினால் திருவுத்தாடை சார்த்தி வஸ்திரமணிந்து யோபவீதம் சந்தனம் புட்பமுதலிய ஆபரணங்களெல்லாஞ் சார்த்தி கஸ்தூரி குங்குமம் பச்சைகற்பூரம் அகிலச்சந்தனம் கோரோசன முதலான பரிமள வஸ்துக்களெல்லாம் பந்நீர்விட்டு அரைத்துப் பரமசிவனுக்குப் பூசைசெய்து புன்னை - பாதரி - வில்லம் - துளசி - மகிழம் - தாமரை - சதபத்திரம் - கற்பூரை நீலோற்பலம் - செங்கழுநீர் - ஆம்பல் - திராமச்சகம் - ஸ்ரீபேர்மல்லி - அலரி - எருக்கை - ஊமத்தை - சாதி முதலான புட்பங்களினாலே கும்பேசுரரைப்பூசை நைவேத்தியஞ்செய்துசாஸ்திரவிதிப்படி சுத்தான்னம்-பாயசான்னம் பொங்கல்-எள்ளோரை-புளியோரை-சர்க்கரைப்பொங்கல்-தத்தியோதனம்-வாழைப்பழம்-பலாப்பழம்-மாம்பழம் முதலாகிய ருசிகரமான பழவர்க்கங்களையெல்லாம் நைவேத்தியங்கொடுத்து அன்னசூக்த முதலான மந்திரங்களைச்செபித்து அஸ்தோகமுகட்சாடண பாதோதக பாத்தியமற்கியம் ஆஸமன முதலான உபசாரங்களை யெல்லாஞ் செய்து தாம்பூலதீபதூப முதலானதும் சோடச முதலான உபசாரங்களும் சாஷ்டாங்கதெண்ட நமஸ்காரஞ்செய்து சுவாமி சந்நிதானத்தில் வந்து நமஸ்கரித்து ஓய் கும்பகோணத்தில் ஈசுரனாயிருக்கப்பட்டவரே உமக்கு நமஸ்காரம் இந்த ஈரேழுபதினாலுலோகங்களுக்கும் கர்த்தாவே உமக்கு அனேகநமஸ்காரம் ஈசாக்கியான கிரியாக்கியான சொரூபமான உமக்கு அதிக வணக்கம் குணாதீதனாயிருக்கிற உமக்கு மிகவும் ஸ்தோத்திரம் ஸ்தூலரூபமாயும் சூட்சுமரூபமாயும்

பிரகாசத்தையுடையவரே உமக்கு மிகவும் விண்ணப்பம் சாஷ்டாங் யோகங்களுள்ளவர்களாலே அடையத்தக்கனவரே உமக்கு இருகையினாலும் வந்தனம் சிருட்டிசங்காரப் திரோபாவ வனுக்கிரகம் உண்டுபண்ணுகிற பஞ்சகிர்த்தியங்களை செய்துக்கொண்டிருக்கிற பரமேசுரரே உமக்கு நமஸ்காரம் லோகாதீதராயிருக்கிற கும்பேசுரரே உமக்கு அதிக சாஷ்டாங்கவிண்ணப்பம் திரிநேத்திரராயுமதிரிபுராதிகளை நெற்றிக்கண்ணினா லுண்டாகிய மூன்று நெருப்புப்பொறியினால்தகித்துப்போட்ட கர்த்தனே உமக்கு ஆனந்தத்துடன் சிரமேற்கரங்குவித்து அஞ்சலிசெய்யும் நமஸ்காரம் திரிலோகங்களிலுமுள்ள தேவர் அசுரர்யட்சர் இராட்சதர் கின்னரர் கிம்புருடர் சித்தர் வித்தியாதரர் முதலான தேவர்களையும் பிர்ம்மா விஷ்ணு இந்திரன்முதலான தேவர்களையும் பிர்ம்மரிஷி தேவரிஷி முதலான அனேகரிஷீஸ்பரர்களையும் காமக்குரோத லோபமோக மதமாச்சரிய டம்ப முதலான குணங்களோடு கூடிய மகாமோகனென்கிற அக்கியானஇராசனாலே புத்தி மயங்க சித்தஞ்சலிக்கசாந்தி உபாதிவிவேகசத்தாபக்தி சிரத்தாபக்தி தர்மமுதலிய சத்துருக்கூட்டங்களை சம்ஹாரஞ்செய்து மீனக்கொடியும் கிளிவாகனமும் கருப்புவில்லும் புட்பபாணமும் தென்றல் தேரும் பூரணச்சந்திரக்குடையும் வண்டினைநாணைகவும் வசந்தருதுவாகிற சாமந்த சக்கிரவர்த்தியோடுங் கூடிக்கொண்டு சமஸ்தமான போகங்களையும் மோகிக்கும்படியாய்ச் செய்து தனக்குச் சமானமானவர் ஒருவருமில்லையென்று சவுந்தரிய கெருவத்தோடுங்கூட கெருவித்திருந்த செகன்மோகன காரணனை மன்மதனை நெற்றிக்கண்ணக்கினியினாலே மன்மதனுடைய சரீரத்தை பற்ப சாம்பலாகச்செய்து மன்மதவிகாரமில்லாத பரமசிவனே உமக்கு நமஸ்காரம் பார்வதிபதியே உமக்கு ஆனந்த விண்ணப்பம் உபநிஷத்துக்களினா லறியத்தக்கவராயும் பசுபாச விமோசகராகியும் போகமோட்ச தாதாவாகியும் பக்தாளுக்கு சர்வா அபீஷ்ட பலங்களைக் கொடுக்கத்தக்கவரராயிருக்கிற கும்பேசுரரே நமஸ்காரமென்று ஸ்தோத்திரஞ்செய்து மகாதேவருக்கு முன்பாகச் சந்தோஷத்தோடுங்கூட நிர்த்தனஞ்செய்து அங்கம்புளகிதமாய் மயிர்க்கூச்செறிந்து ஆனந்தபாட்பத்துடன் நாவானது தழுதழுத்து பஞ்சேந்திரியங்களும் ஒடுங்கி ஏகாக்கிரசித்தனாய் ஸ்தம்பாகாரமாய் எதிராக நிற்கிற மாந்தாதாவைப் பார்த்து கும்பேசுரரானவர் பூசாஸ்தோத்திரப் பிரதட்சண நமஸ்காராதிகளினால் சந்தோஷத்தையடைந்து சர்வா வயவசுந்தரியான மங்களாம்பாசமேதராய் மாந்தாதாவுக்குப்

பிரத்தியட்சமாய் ஓய் உவனசுமகாராசனே நீர் செய்த பூசையினால் சந்தோஷத்தையடைந்தேன் உனக்கு மங்களங்கள் உண்டாகவேண்டியது உன் மனோயிஷ்டமென்ன இருக்குது அதைக்கேளுமென்று பரமசிவன் சொன்னார். இந்தப்படி சிவபெருமான் சொன்ன வார்த்தையைக்கேட்டு இருகைகூப்பி அஞ்சலிசெய்து வணங்கி உம்முடைய தெரிசனத்தைத்தவிர வேறேயென்ன புருஷார்த்தமிருக்கின்றது உமக்கு என்ன இஷ்டமோ அந்தப்படி செய்யுமென்று மாந்தாதாவானவன் சொன்னான் இந்த வார்த்தையைக் கேட்டுப் பார்வதியானவள் கும்பேசுரரைப்பார்த்து இந்த வுலகத்தில் சந்திர சூரியப்பிரகாசமுள்ளவரையில்அகண்டசாம்பிராச்சியாதி பத்தியத்தைக் கொடுமையாவென்று பார்வதிசொன்ன வார்த்தையைக்கேட்டு கருணாநிதியான கும்பேசுரர் மாந்தாதாவைப் பார்த்து நீ அகண்ட சாம்பிராச்சியத்தை அனுபவிக்கக் கடவாயென்றும் அனுக்கிரகஞ்செய்து பின்பு சிலநாள் கழித்து நம்முடைய சாயுச்சியத்தையும் அடையக் கடவாயென்றும் அனுக்கிரகஞ்செய்து கும்பேசுரர் லிங்கத்தில் அந்தர்த்தானமாயினார்.

பின்பு மாந்தாதாவானவர் சந்தோஷத்துடன் தன்னுடைய அயோத்தியாபுரி பட்டணத்துக்குப்போய் அகண்ட சாம்பிராச்சியாதிகளுடனே இராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டிருந்தார். எவ்வளவுதூரம் சூரியபகவானானவர் பூமண்டலத்தில் பிரகாசித்துக் கொண்டிருப்பரோ அவ்வளவுதூர மிருக்கப்பட்ட பூமண்டலத்தை மாந்தாதாவானவர் தன் சுவாதீனமாக ஆண்டுகொண்டிருந்தார். நானாவிதமான போகபாக்கியங்களை யனுபவித்துக்கொண்டிருந்து அனேகவருஷம் அயோத்தியாபுரி பட்டணத்தில் வாசஞ்செய்து கும்பகோண க்ஷேத்திரத்திற்கு அதிபதியான கும்பேசுரருடைய அனுக்கிரகத்தினாலே மகாபுண்ணியாத்மாவான மாந்தாதாச்சக்கிரவர்த்தியானவர்பரமசிவ சாயுச்சிய பதவியைப் பெற்றார்.

உலகத்தில் யாதாமொரு புருஷரானபேர்கள் சித்திரைமாசத்தில் சித்திரை நட்சத்திரத்தோடுங்கூடின பர்வத்தில் மிகுந்த பக்தியோடுங்கூடி கும்பேசுரரை சாங்கசாவர்ணமாகப் பூசைசெய்தால் அவர்களுக்கு கும்பேசருடைய அனுக்கிரகத்தினால் போகமோட்ச பதவியை யடைவார்கள்.

ஓய் முனீஸ்பரர்களே உங்களுக்கு ஆசாபாசம் காமக்குரோத லோப மதமாச்சரிய முதலானதுக்குக் காரணமான சம்சார சமுத்திரத்தில் நின்று கரையேற்றத்தக்கதாயிருக்கிற கும்பகோண மகோத்மமானது என்னுலே உங்களுக்கு சொல்லப்பட்டது. எந்த ரிஷிகள்தான் இந்த கும்பகோணக்ஷேத்திரக் கதையை சிரவணத்தினுலுண்டான சந்தோஷஜயத்தால்கட்டப்பட்டசித்தத்தையுடையவர்கள் ஆர்தான் கேட்க இச்சிக்கமாட்டார்கள்.

இரண்டாவது - முற்றிற்று.

---

மூன்ருவது,

# எமபுட்கரணி தீர்த்த வத்தியாயம்.

முனீஸ்பரர்கள் கும்பேசுரருடைய லோகபாவனமா யிருக்கிற மகாத்மியத்தை ஓய் சூதமகாமுனியே உம்மாலே நாங்கள் கேட்டோம். எமபுட்கரணி சக்கர தீர்த்தங்களுடைய நாம உற்பத்தி வரலாற்றை நாங்கள்கேட்க அதிக விருப்பமுள்ளவர்களா யிருக்கிருேம். நீர் அஷ்டாக்ஷர ஜெபபுராணங்களுடைய ரகசியங்களேயும் அறிந்தவர் என்று ரிஷிகள் சொல்ல சூதகர் சொல்லுகிருர் ஓய் சமஸ்தமான ரிஷிகளே எமபத்மாகரத்தினுடைய நாம உற்பத்தி வைபவங்களேக் கேளுங்கள்.

எமபத்மா கரத்திலுள்ள தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பக்திவிசுவாசத்தோடு கும்பேசுரரைத் தெரிசனஞ்செய்தால் சமஸ்தகாமியார்த்தங்களேயும் அடைவார்கள், பொற்ருமரையில் ஸ்நானஞ்செய்து பக்திவினயத்தோடு பிராமணர்களுக்கும் சிவயோகிகளுக்கும் இரணியஸ்நானஞ்செய்து கும்பேசுரரை தெரிசனஞ்செய்தால் கைலாசத்தில் பரமசிவத்தோடும் சந்தோஷமாயிருப்பார்கள், சோமவாரத்தில் பொஸ்தாமரையில் சத்தோஷத்துடன் நரமனிதர்கள் ஸ்நானஞ்செய்து திதிசிரார்த்தஞ்செய்தால் நிச்சயமாய் தீர்க்காயுளே யடைவார்கள், எமபத்மாகரத்தில் சந்திரசூரிய கிரகண புண்ணியகாலத்

தில் கோதான பூதான சுவர்னதானஞ் சத்தியுள்ளவரையில் செய்தால் பக்திமுத்திகளையடைவார்கள், ஆருத்ரா நட்சத்திரத்தில் பொற்றாமரையில் ஸ்நானஞ்செய்து கும்பேசுரரை ஸ்தோத்திரஞ்செய்தால் சர்வகாமியங்களையுமடைவார்கள், இந்த கும்பகோண க்ஷேத்திரத்தில் புராதனமாயும், சர்வ உபத்திர நாசமாயும், புத்திரகாமிக்கு புத்திரவிரதமாயும், தனகாமிக்குத் தனப்பிரதமாயுமிருக்கிற இதிகாசக்கதையைச் சொல்லுகிறேன்கேளுங்கள் முனீஸ்பரர்களே.

பூர்வகாலத்தில் மேருசிகரத்தில் எமமகாமுனி புருஷோத்மரான ஸ்ரீமந்நாராயணரை யுத்தேசித்து துக்காவுக்கிரமான தபசுசெய்தார். அந்தமேருசிகரத்தில் விஷ்ணுபிரத்தியட்சமாய்வந்தார். எமமகாமுனி பிரத்தியட்சமான விஷ்ணுவை மோட்சபதவிவேணுமென்று பிரார்த்தித்தார். விஷ்ணு அந்த எமமுனியைப்பார்த்து ஓய் மகாமுனியே நீர்கும்பகோண க்ஷேத்திரம்போய் கொஞ்சகாலம் தவசுசெய்யுமென்று சொல்லி அந்தரத்தானத்தையடைந்தார். பின்பு உத்தமமான கும்பகோண க்ஷேத்திரத்தைபடைந்து அம்மகாமுனி கும்பேசுரருடைய அமுதோற்பவமான பொற்றாமரை ஆதிகும்பேசுரருடைய பூர்வபாகத்தையடைந்திருக்கின்றது அந்தப் பொஸ்தாமரை தீர்த்தத்தை அந்த எமமகாமுனி மனோக்கியமாகப்பார்த்து அக்கரையில் மகாதபசுசெய்தார். பீஷ்மருதுவில் பஞ்சாக்கினிமத்தியில் தவசும் வருஷாதிகாலத்தில் நிற்பாசிரயமாயும் ஏமந்தசிசிரருதுவில் சலமத்தியத்திலுந் தவசுசெய்துகொண்டு பொற்றாமரைக்கு ஈசானதிக்கில் வாசஞ்செய்துகொண்டிருந்தார்க

எமமகாமுனிவர் இவ்வித தபத்லிருக்கும்போது ஸ்ரீலட்சுமிமிகுந்ததயவோடுங்கூடி க்ஷீரசமுத்திரத்தில் சயனித்துக்கொண்டிருக்கிற தன்பதியான மகாவிஷ்ணுவைநோக்கிஓய் சுவாமி ஒருகாலத்தில் தாங்கள் எமமகாமுனிக்கு மோட்சங்கொடுக்கிறேன் நீர் கும்பகோண க்ஷேத்திரம்போய் கும்பேசுரரைக் குறித்து தவசுசெய்யென்று சொன்னீரே அது நினைவில்லையாவென்று லட்சுமியானவள் கேட்க விஷ்ணுவானவர் மகாதயவோடுகூடச் சொல்லுகிறார். ஓய் பெண்ணே நீமுன்னதாகக் கும்பகோணக்ஷேத்திரத்திற்குப்போ நான் பின்னாலே வருகிறேன் பெண்ணே நீ அந்த க்ஷேத்திரத்தில் கோமளவல்லியென்கிற நாமதேயத்தினால் பிரசித்தமுள்ளவளாவாய் சீக்கிரமாகத் தபசு செய்துகொண்டிருக்கிற எமமகாமுனியையடுத்து தபசினால்

இளைத்திருந்து தபசுசெய்து என் வரவை கோறிக்கொண்டு இரு நாயகியேயென்றார் அப்படியே இலட்சுமி சம்மதித்து கும்பகோண க்ஷேத்திரம்போய் பொற்றாமரையில் ஈசான்னிய பாகத்தில் எமமகா முனியைப்பார்த்து சமாதானமானபிரிய வசனங்களைச்சொல்லிமகா லட்சுமியானவள் தபசுசெய்துகொண்டிருந்தாள் மனதில் தன் நாயகனைத் தியானஞ்செய்துகொண்டு இருபது சதுர்யுகம்தன்பதியை யுத்தேசித்து தபசுசெய்துகொண் டிருந்தவளவில் ஜென்மவயிரிகளான தேவர் அசுரர்களுக்கு மகாயுத்தம் நடந்தபோது ஒருவருக்கொருவர் தேவர்களை அசுரர் செயிக்கவேணுமென்றும் அசுரரை தேவர்கள் செயிக்கவேணுமென்றும் உயுத்தஞ்செய்தகாலத்தில் பல கெருவிகளான அசுரர்கள் தேவர்களைச் செயித்தார்கள் பின்பு தேவர்கள் திருப்பாற்கடலுக்குப்போய் ஆதிசேஷசயனராகிய விஷ்ணுவை ஸ்துதியினு லெழுப்பினார்கள் அசுரர்களால்வந்த அவமானத்தைச் சொன்னார்கள் அப்போது தயாநிதியான சாரங்கபாணியாய் விளங்குகின்ற விஷ்ணுவானவர் விசனாக்கிராந்தர்களானதேவர்களைப் பார்த்து கெம்பீரமான வசனத்தைச் சொல்லுகிறார்.

ஓய் தேவர்களே அசுரஜெயமுபாய மெனக்கொன்றுந் தோன்றவில்லை ஆனால் ஜெகத்கர்த்தனான பரமசிவனோடும் யோசித்து இந்தப் பெரிதாகிய அசுரஜெயரூபமான காரியத்தைச்செய்வோம் கும்பகோணக்ஷேத்திரத்தில் எமமகாமுனிஎன்பவர்வெகுகாலமாய் என் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்முன்பு இலட்சுமியானவள் என் உத்தரவினால் அந்த தலத்தில் விரகதுக்கத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறாள் எமமுனிக்கு மோட்சங்கொடுப்பதற்கும் உங்கள் காரியார்த்தமாகவும் கும்பகோணத்துக்கு போகப்போகிறேனென்று சில வசனங்களைச்சொல்லி விஷ்ணுவானவர்அந்தரத்தானமானார்.

பின்பு இந்திரன் முதலான தேவர்கள் எப்படிவந்தார்களோ அவ்விதமாய் சந்தோஷமனதோடும் போனார்கள். பின் மான்கொம்பினாலே செய்யப்பட்ட கார்முகத்தைத் தரித்துக்கொண்டிருக்கிற சாரங்கபாணியானவர் ஜனாகதிபரிசனங்களோடும்கெருடாரூடராய் கும்பகோணம்போனார். பிற்பாடு தபசுசெய்துகொண்டிருந்த எமமகாமுனிக்கு மோட்சத்தைக் கொடுத்து தன் நாயகியாகிய லட்சுமியோடுங் கூடினார். வெகுகாலம் இந்தக் குளக்கரையில்எமமகாமுனி தபசு செய்தபடியால் இந்த தீர்த்தத்திற்கு எமபுட்க

ரணியென்கிற நாமதேயமானது உலகில் பிரசித்தமாயிருக்கின்றது பிறகு பாதாளபீசனும் ஆதிசேஷனுக்கு அனுக்கிரகஞ் செய்யாநின்ற பரமசிவனை சாஷ்டாங்க நமஸ்காரமும் அஞ்சலி வந்தனமுஞ் செய்துகொண்டு ஸ்ரீமந்நாராயணரானவர் அதிக பயபக்தியோடு ஒரு வசனஞ்சொன்னார் அதென்னவென்றால் தேவர்களுக்கு இராச்சியமில்லாமல் மிகுந்த துக்கங்களையனுபவிக்கிறார்கள் அசுரர்கள் ஆளுகிறார்கள் அசுரரை அதஞ்செய்கிறதற்கு உபாயஞ்செய்யுமையாவென்றுவினவகருணாகரமூர்த்தியான ஸ்ரீமந்நாராயணனைப்பார்த்துப்பரமசிவன் வார்த்தைசொல்லுகிறார் ஓய் விஷ்ணுவே காரியத்தினுடைய அளவு விர்த்தாந்தம் ஜெயிக்கிற விஷயத்தைக்கேளும்.

பூர்வகாலத்தில் பலசெருவசலந்தாரசூரனனவன் பிர்மதேவன் வரத்தினால் உலகங்களைப் பரிபாலனஞ் செய்துகொண்டிருந்தான் அவன் சகல லோகங்களிலுள்ள இராட்சதர்க்குள் அழியாமலிருந்தான் அவனைக்கொல்வதற்காக சிவசொரூபமாயும் அழிவில்லாமலும் ஆயிரம் கிரணங்களோடும் தீச்சுவாலைகளால் ஆகாயமண்டலத்தை யளாவினதாயிருக்கிற சக்கரமானது என்னாலே சிருஷ்டிக்கப்பட்டது. ஒரு நாள் சலந்தரனென்பவன் என்னோடெதிர்த்து போருக்கு வந்தான் ஓ சலந்தரா இந்தச்சக்கரத்தை எடுவென்று சொன்னேன் அவன் சீக்கிரமாய் பாதம் - முழந்தாள் - துடை - யிடுப்பு - தொப்புள் - மார்பு - கழுத்து வரையில் கிரமமாக எடுத்தான் அப்போது அந்தச் சக்கரத்தினால் கழுத்தறுத்து கீழே விழுந்தான் அந்தச் சக்கரம் காவேரி இருதயத்தில் வைத்திருக்கின்றது அதை யெடுத்துக்கொண்டு அசுரரைச் சம்ஹாரஞ்செய்யென்று பரமசிவன்சொன்னார் விஷ்ணு அந்தப்படியே சக்கரத்தை எடுத்துவந்து துஷ்ட அசுரர்களைச் சங்கரித்து மறுபடியும் கும்பகோண க்ஷேத்திரத்திற்குப் போனார். லோகரட்சகரான பரமசிவன் அந்தசக்கரத்தை எந்தயிடத்தில் புதைத்தாரோ அந்த இடந்தான் சக்கிரதீர்த்தமாயிருந்தது அந்த தீர்த்தத்தில் மாசிமாசத்தில் பிதிர்தேவதைகளுக்கு திலோதகம் தீர்த்தசிராத்தம் இரண்ணியசிரார்த்தம் யாதொருவர் செய்கிறார்களோ அவர்கள் பிதா பாட்டன் முற்பாட்டன்முதலானபிதிர்தேவதைகள் அட்சயமான புண்ணியலோகத்தை யடைவார்கள் இதுநிச்சயம் இந்தத்தீர்த்தத்தில் புண்ணியகாலத்தில் ஸ்நானஞ்செய்து பஞ்சகௌயாதி பிராச்சித்தஞ் செய்துகொண்டு நீலவன்னமான கோதானஞ் சிரத்தையோடுசெய்தாலும் இன்னம்அனேகதானங்கள்செய்தாலும்ஒன்

று அனேககோடிபலனாகும் அதைவிடவேறொன்றுமில்லை பாதாளீசநாதரானவர்சூரசம்மாரத்தால்சந்தோஷத்தையடைந்து சோமேசுரநாதருடைய வடபுறத்தில் விஷ்ணுவானவர்ஸ்தாபனமாயிருக்கஇடங்கொடுத்தார் வைகுந்தத்திலிருந்து ஒருவிமானம்அழைப்பித்துவிஷ்ணுசம்பந்த மாயும் சமஸ்தமான தேவர்களால் சேவிக்கத்தக்கதாயும் இரண்டுதுவாரங்களோடு கூடிக்கொண்டு வைகுந்தத்திலிருந்து வராநின்றவிமானத்தில் ஆதிசேஷன்சயனத்தில் இலட்சுமிபூமிதேவிகளால் சேவிக்கப்பட்டும் விஷ்ணுவினால் சாரூப்பியபதவியையடைந்த புண்ணியபுருஷர்களால் சேவிக்கப்பட்டும் தேவர்அசுரர்களால் நமஸ்கரிக்கப்பட்டும் பகவானானவர் விஷ்ணுவின்சமஸ்தமான பரிசனங்களோடும் சீதேவிபூதேவியோடும் நித்தியசூரிய சந்திராளோடும் வாசஞ்செய்து கொண்டிருக்கிறார் எந்தவிமானமானது ரதம்போலேயிருக்குதோ அந்த விமானம் விஷ்ணுவுக்கு சிரேஷ்டமான ஸ்தானம் அந்தவிமானத்துக்கு தெற்குவாசல் தெட்சணாயனம் வடக்குவாசல் உத்தராயனம் இந்தப்புண்ணியகாலத்தில் சாரங்கபாணிகதவுதிறக்கிற சத்தங்களை எந்தசனங்கள் கேட்கிறார்களோ அந்தபிரஜைகள் சம்சாரபந்தத்தில் நின்று விடுபடுகிறார்கள் கும்பகோணக்ஷேத்திரத்தில் தெட்சணாயனத்தில் விஷ்ணுபக்தரான எந்தசனங்கள் துதிசெய்கிறார்களோ அவர்கள் தெட்சணாயனமார்க்கமாய் சந்திரலோகஞ் சேர்வார்கள் எந்தசனங்கள் உத்தராயணத்தில் மரணத்தை யடைகிறார்களோ அவர்கள் சத்தியலோகம்போவார்கள் இந்தப்படி பீதாம்பரதாரியான விஷ்ணுவானவர் பரமசிவனாலே செய்யப்பட்டிருக்கிற சக்கரத்தினால் அறுத்து அனேக அசுரர்களைச் சம்ஹாரஞ்செய்து ஆதிசேஷசயனராயிருந்து விழித்துக்கொண்டு யோகநித்திரைசெய்துகொண்டிருக்கிறார்.

மூன்றாவது - முற்றிற்று.

நாலாவது.

# சோமேசுரர் அத்தியாயம்.

முனீஸ்பரர்கள் சூதமகாமுனியைப்பார்த்து ஓய் முனீஸ்பரரே சோமேசுரமென்று சொன்னீரே அவர் சரித்திரத்தை எங்களுக்குக்கேட்க இக்சையாயிருக்கின்றது சொல்லும் முனீஸ்பரரேஎன்று கேட்க சூதமகாமுனிவர் சொல்லுகிறார்.

கேளும் முனீஸ்பரர்களே சோமேசுரருடைய மகாத்மியமாவது என்னவென்றால் அவருடைய கதாசிரவணத்தினாலே மனிதர்கள் சகலபாவங்களில் நின்றும் விடுபடுகிறார்கள் கும்பத்திலிருந்து பெருகின அமிர்தமான க்ஷேத்திரமெங்கும் நனைந்து ஓரிடத்தில் தோய்ந்து இருகி லிங்காகாரமாயும் சுயம்புவாயும் நின்றது பிரகாசம் பொருந்தி விளங்காநின்ற சந்திரனாலும் அமுர்தத்தினாலும் உண்டானலிங்கமாகையால் சோமேசுரனென்கிற நாமதேயம் பிரசித்தமாய்விளங்குகின்றது சோமேசுரர் க்ஷேத்திரத்தில் யாராவது சோமயாகஞ் செய்கிறார்களோ அவர்கள் அனந்த புண்ணிய பலத்தை யடைவார்கள் பூர்வீகமான இதிகாசக்கதைகளைச்சொல்லுகிறேன் பூர்வகாலத்தில் மாளவதேசத்தில் ஆங்கிரசு என்கிற நாமதேயத்தையுடைய மகாமுனிவரானவர் எப்போதும் ஆசாரமுள்ளவராயும் வேதாத்திய அன்பராயும் செபஹோம்பராயும் எந்நாளும் பஞ்செக்கியராயும் பஞ்சாக்ஷர க்ஷேபராயும் பரமாத்மஞானியாயும் அன்னதாபராயும் சமஸ்த ஆகமங்களை யறிந்தவராயும் இந்தப்பிரகாரம் அக்கினிகோத்திர செப தப அதிதிபூசை முதலானதுஞ் செய்துகொண்டிருக்கிற ஆங்கிரச முனிக்கு தபோபலத்தினால்மூன்றுபிள்ளைகள் பிறந்தது இவர்களில் முதற்பிள்ளை உசத்தியனென்றும் இரண்டாவது பிள்ளை பிரகஸ்பதியென்றும் மூன்றாவது பிள்ளை சமவரதனென்றும் நாமகரணத்தையுடைய மூவர்களில் பிரகஸ்பதியானவர் தேவ புரோகிதனாகவேண்டுமென்கிற ஆசையால் சோமேசுரருடைய க்ஷேத்திரம் வந்து சோமேசுரரைக்குறித்து உக்கிரமான தவசுசெய்தார் சோமேசுரருக்குத்தெட்சண பாரிசத்தில் தாமரை உற்பலம் செங்கழுநீர் ஆம்பல் இவைகளால்பிரகாசமாயும் அம்சதாரக காரண்டசக்கிரவாக பட்சிகளுடைய களகளாசப்தங்களினாலே சத்தித்துக்கொண்டும் வில்வசண்பக

மகிழவிருட்சங்களால் சோபிதமாயும் மனோக்கியமாயுஞ் சோமநாதருடைய தீர்த்தமென்று அறியாமல் அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து இந்திரியநிக்கிரகங்களோடு பிரகஸ்பதி தபசுசெய்தார். செப உபவாச நிருதராயும் சிவத்தியானபரராயும் கந்தமூலபலாதிகளைப் பட்சித்துக்கொண்டு தபசுசெய்தார் சிலநாள் வாய்வுபந்தனஞ் செய்துகொண்டு அன்ன ஆகாரமில்லாமல் தபசுசெய்தார் சிலநாள் வருஷாதிகாலத்திலும் ஏமந்தகாலத்திலும் சிசிரருதுவில் சலத்தில் பனியில் தபசுசெய்துகொண்டுக் கிரீஷ்மருதுவில் பஞ்சாக்கினி மத்தியிலும் பரமசிவத்தியானத்துடன் தேவாசாரியாகவேணுமென்கிற ஆசையால் தவசுசெய்துகொண்டிருந்த பிரகஸ்பதிக்கு தயாநிதியான சோமேசுரநாதர் பிரத்தியட்சமானர் பின்பு பிரகஸ்பதி சோமேசுரரை அஞ்சலி வணக்கத்துடன் சாஷ்டாங்கமாக நமஸ்காரஸ்தோத்திரஞ் செய்யத் தொடங்கினர்.

ஓய் சுவாமி கருணாநிதியேகருணைக்கடலே கற்கண்டேசர்க்கரையே முக்கனிக்குமேலான புத்தமூர்தமே நீர் சந்திரசேகரராயும் பிரபுவாயும் தேவர்களுக்கெல்லாந் தேவனையும் கருணாநிதியாயும் விசுவநாதராயும் சித்துருபியாயும் யானைத்தோலைப் போர்த்துக்கொண்டும் நாகாபரணராயும் சடாமகுடங்களால் பிரகாசித்துக்கொண்டும் சர்வாந்திரியாமியாயும் செகர்த்தகர்த்தாவாயும் பிரபஞ்சமூலகாரணராயும் செகரட்சகராயும் செகசம்மாரகர்த்தராயும் பினாகபாணியாயும் இரத்தினமயமான கிரீடங்களோடுங்கூடி அஷ்டதிக்குப்பாலகருடைய கிரீட மாணிக்கக் கிரணங்களால் மனோக்கியமாகச்செய்யப்பட்டிருக்கிற பாதாரவிந்தங்களையுடையவராயும் மன்மதகனஞ்செய்தவராயும் மங்களகண்டராயும் பிர்ம்மாவினுடைய சிரசைக்கிள்ளினவராயும் தெட்சயாகத்தை நாசஞ்செய்தவரராயும் சந்திரசூரியாக்கினர்களை நேத்திரமாயுள்ளவராயும் முப்புரத்தை எரித்தவராயும் பக்தானுக்கிரகபராயும் எமதர்ம்மராஜனைச் சங்கரித்தவராயும் தாரத்திரியநாசகராயும் இருதயகமலத்தில் மகாவிஷ்ணுவினால் பூசைசெய்யப்பட்ட பாதபத்மங்களையுடையவரராயும் சூலபாணியாயும் காலாந்தராயும்திரிலோகராயும் கைலாசநாதராயும் சோமநாதரென்கிற நாமதேயத்தினால் பிரகாசித்துக்கொண்டிருக்கிற பரமசிவனேஉமக்கு நமஸ்காரம் நமஸ்காரமென்று பிரகஸ்பதி துதிசெய்தார். இந்தப்படி தோத்திரஞ்செய்த பிரகஸ்பதியைப்பார்த்து சோமநாதரேசுரரானவர் ஒருவார்த்தைசொல்லுகிறர்: ஓய்பிரகஸ்பதியே என்னைக்குறித்து நீர்செய்த

தபசினால் பிரசன்னமானேன் உமக்கு இஷ்டமான வரத்தைக்கேளு மென்று சோமேசுரர்சொன்னார் பிரகஷ்பதி அந்தவசனத்தைக்கேட்டு சோமேசுரரைப்பார்த்துச்சொல்லுகிறார். ஓய்சுவாமி நீர் பகவானும் பக்தசனங்கள்பேரில் பிரமையுள்ளவராயும் பக்தாகளுக்கு வரங்கொடுப்பவராயு மிருக்கிறபரமசிவனே என்பேரில் உமக்குத்தயவிருந்தால் எனக்கு உம்முடைய பாதபத்மங்களில் நிர்ச்சலமான பக்தியும் தேவர்களுக்கு புரோகிதமாயிருக்கின்ற வரமும் வித்தைகளுக்குப்பதியாயிருக்கிறவரமும் ஆகிய இந்தமூன்றுவரங்களும் உண்டாகச்செய்ய வேண்டுமென்றுகேட்டார் இந்தப்படிகேட்ட பிரகஸ்பதியைப்பார்த்து சோமேசுரர்சொல்லத் தொடங்கினார்.

ஓய் பிரகஸ்பதியே நீர் இந்த க்ஷேத்திரத்தில் யாகஞ்செய்வதற்கு வேதமார்க்கங்களான ஒருதவசர்களை யழைத்துவந்து முன் அக்கினிஷ்டோமஞ்செய்து பின்பு உன்பேரால் பிரகஸ்பதீசவமென்கிற எக்கியத்தைச்செய்தால்மூன்றுவரங்களையும்பெறுவாய்அதற்குச்சந்தேகமில்லை இந்தப்பிரகாரம் சோமேசுரர்பிரகஸ்பதியைப்பார்த்துச் சொன்னார். பிரகஸ்பதியானவர் ஓய் சோமநாதரே நான்நித்தியதரித்திரன் இந்தயாகத்தை எப்படி செய்வேனென்று விண்ணப்பஞ்செய்துக்கொள்ள சோமநாதரறிந்து குபேரனையழைத்தார்குபேரன் நவநிதிகளோடும் பிரயாணமாய் கும்பகோணக்ஷேத்திரம்வந்து சோமநாதர்பாதபத்மங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து கைகட்டிவாய்புதைத்து எதிரில்நின்று தேவாதிதேவா திரிலோகரட்சகா என்னாலே என்னகாரியஞ்செய்யத்தக்கதென்று விண்ணப்பஞ்செய்து கொண்டான். இப்படிசெய்துக்கொண்ட குபேரனைப்பார்த்து அடாகுபேரா பணக்காரா பிரகஸ்பதி தேவர்களைக்குறித்து யாகஞ்செய்யக்கோறி எனக்கெதிராக இருக்கிறார்பார் இவர்தான்பிரகஸ்பதி இவருக்கு அதிகபாக்கியத்தைக்கொடுவென்று உத்தரவுசெய்தார் சோமேசுரருடைய குபேரனானவன் ஐயா சுவாமி அப்படியே நடந்துகொள்ளுகிறேனென்று சொல்லிஎந்தஇடத்தில் பிரகஸ்பதிதவசுசெய்துகொண்டிருக்கிறாரோ அந்தஸ்தானத்தில் தனவருஷங்களைவருஷிக்கத்தக்கதான நவநிதிகளைதானியசமர்த்திக்காக ஸ்தாபனஞ்செய்தான் பிரகஸ்பதிபகவான் இரண்டுயாகங்களையும் எதாவிதியாகசாத்திரப்படிசெய்தார். சோமேசுரருடைய ஆக்கினையினால் சமஸ்தமான தேவர்களும்பிரகஸ்பதியைப் புரோகிதராகவைத்துக்கொண்டார்கள் அவருக்குப்பதியாகவும் மானுசிவபத்தி யுள்ளவராயும் மானுசிவானுக்கிரகத்

திறல் இந்திரன்முதலான தேவர்க்களோடு சொர்க்க லோகத்துக்குப்போனார்பின்பு குபேரனானவன் பத்திசிரத்தையோடும் சோமநாதனைப்பூசைசெய்து நவநிதிகளோடும் குபேரனானவர் அழகாபுரிக்குப் போனார்.

அப்போது ஓய்முனீஸ்பரர்களே இந்தஸ்தலத்தில் மழைகள்வருஷித்து நவநிதிகளும் நிறைந்ததாகையால் இந்தத்தடாகத்திற்கு எமபுட்கரணியென்கிற நாமதேயம் உலகத்தில்பிரகாசமாய் விளங்குகின்றது இந்தஎமபுட்கரணியில் யாதாமொருவர் ஸ்நானஞ்செய்து சோமேசுரரை பத்திசிரத்தையோடும் பூசைசெய்கிறார்களோ அவர்கள் சமஸ்தக்கியானங்களையும் சிவபக்தியையும் அஷ்ட ஐசுவரியங்களையும் அடைவார்கள் ஓய்முனீஸ்பரர்களே உங்களுக்கு என்னாலேபாபவிமோசனார்த்தமாகச்சோமேசுரர் மகாத்மியத்தைச் சொன்னேன் மறுபடியும்கேட்க இச்சையுள்ளவர்களா யிருக்கிறீர்களாவென்று சூதர் கேட்க முனீஸ்பரர்கள் அப்படியேகேட்க இச்சைகொண்டிருக்கிறோமென்றுசொன்னார்கள்.

நான்காவது - முற்றியது.

---

ஐந்தாவது.

# பாதாளீசுரர் அத்தியாயம்.

ஓய் சூதமாமுனியே லோகபாவனமாகிய சோமேசுரர் மகாத்மியத்தை உம்மாலே நாங்கள் கேட்டு அதிக ஆனந்தசந்தோஷத்தையடைந்தோம். இப்போதுஎங்களுக்கு பாதாளீசுரநாதருடைய மகாத்மியத்தை ஆதியோடந்தமாகச்சொல்லும் சூதமாமுனியேஎன்று ரிஷிகள்கேட்கச்சொல்லுகிறார்.

கேளுங்கள் சகலமான முனீஸ்பரர்களே சமஸ்தலோகப்பிரசித்தமாயுமிருக்கிற பாதாளீசுர நாதருடைய மகாத்மியத்தை நிர்மலியானசித்தத்தோடுங் கேட்பீர்களாக, அது புண்ணியகரமான மகாத்மியம் ஓய்ரிஷிகளே கல்பாதீது பிர்மதேவர் சிருஷ்டிக்குமுன்னே

தனியாயிருந்து மாயாசத்தியால் சித்திர வர்ணத்தோடுங்கூடின வனுய்கிரியாசத்தியோடுங்கூடிக்கொண்டு சங்கற்பஞ்செய்தார். பஞ்சதன்மாத்திரைகளையும் பஞ்சபூதங்களையும் வெவ்வேருகவும் பஞ்சீகரணமான பஞ்சபூதங்களையும் சராசரங்களையும் ஆகாயத்தையும் பிருதிவியையும் சொர்க்கத்தையும் சூரிய சந்திரர்களையும் எதாக்கிரமமாக முன் கல்பத்தைப்போலே உண்டுபண்ணினர். வேறே மூன்று லோகங்களை உண்டுபண்ணி பூமிக்கும் ஆதாரகாரணமாய் ஆமை ரூபமாய் தன்மகிமையால்தானே பூமியைத் தாங்கிக்கொண்டார். தான் சிருஷ்டித்த சராசரங்களில் எட்டு பர்வதங்களையும்பார்த்து நீங்கள் இந்தப் பூமியைப் பாதாளத்தில் சலத்தில் முழுகாமல் மிதந்துகொண்டிருக்கும்படியாய் பூமிக்கு நான்குபக்கங்களிலும் தாங்கிக்கொண்டிருக்கும்படி ஆஞ்ஞாபித்து, அஷ்டதிக் கெசங்களையும் எட்டுதிக்குகளில் சுமக்கும்படியாய் ஆஞ்ஞாபித்தார். ஓ பூமிதேவியே நீ பர்வதங்களுக்கும் சமுத்திரத்திற்கும் திக்கெசங்களுக்கும் மத்தியபாகத்திலிருந்துகொண்டு நான்குவகை யோனியிலுண்டானஸ்தாபரசங்கரூபமானஜீவகோடிகளைவகுக்கவேண்டியதென்றும் ஆதிசேஷனைப்பார்த்து நீ பூமியை சுமக்கவேண்டியதென்றும் ஆதிசேஷன் கேட்டுச்சொல்லுகிருர். ஓய் சுவாமி அவ்வளவுசக்தி எனக்கில்லை, பூமியை சுமக்கச் சக்தியுமில்லையென்று சொன்ன விஷ்ணு ரூபமான ஆதிசேஷனைப்பார்த்துபிர்மாவானவர் சொல்லுகிருர்.

ஓய் ஆதிசேஷனே, நீர் கும்பகோணக்ஷேத்திரம்போய்க் காவேரிக்குத் தென்கரையில் சர்வதீர்த்தத்தில் உக்கிரமான தபசுசெய்யும் உம்முடைய இருதயகமலத்தில் தயாநிதியான சிவபெருமானை எப்பொழுதும் தியானஞ்செய்யும் பின்பு சிலநாட்சென்று கைலாசபதியாகிய எம்பெருமான் பூமியைச் சுமக்கும்படியான சக்தியைக் கொடுப்பார். அதற்கு யாதொரு சந்தேகமில்லையென்று சொன்ன வசனத்தைக்கேட்டு விஷ்ணு அவதாரமான ஆதிசேஷன் சந்தோஷத்துடனே கும்பகோண க்ஷேத்திரம்போய் காவேரிக்கரையில் மணலினுலிங்கஞ்செய்து கும்பாமிர்தத்தினுல் நனைந்த மணலையுங் கூடச்சேர்த்து பிரதிஷ்ட்டை பூசைசெய்தார். சமஸ்தமான தேவர்களினுலே பூசிக்கத்தக்கதாய் லிங்கத்தை சோடச உபசாரங்களுடன் பூசைசெய்தார். பின்பு ஆதிசேஷன் இந்திரிய நிக்கிரகத்தோடும் ஆகாரமில்லாமல் அனேககெடுங்காலம் தவசுசெய்தார். அந்த அமுர்த கெடத்திலிருந்து உண்டானதாயும், முப்பத்து முக்கோடி தேவர்க்களினு

லேயும், பூசிக்கத்தக்கதாயும், ஆனந்தகரமான லிங்கத்திநின்றும் பகவானாகிய ஸ்ரீகைலாசபதி ஆதிசேஷனுடைய பக்திவிசுவாசங்களைப் பார்த்து அதிகசந்தோஷத்தையடைந்து, தலையில் மின்னற்கொடிபோல பிரகாசமான சடாமகுடமும், சடாமகுடத்தில் திசைதிககெட்டிலும் பிரகாசமான அர்த்தசந்திரனும் காதில் குண்டலமும், அரையில் அரைநாணும், அதிககாந்தியாய் சொலித்துக்கொண்டிருக்கிற அக்கினிச்சுவாலையான நேத்திரமும், கபோலங்களில் மாணிக்க வைடூரியத்தாலிழைத்த மண்டல கரமான இரண்டுசேர்ப்பங்களினால் மேனியுள்ள கன்னங்களும், புன்சிரிப்பு மனோக்கியமான தேககாந்தியும், காளகோட விஷத்தினுடைய காந்தியுஞ் சந்தியினால் மனோக்கியமான கண்ட முழந்தாள் வரைக்கும் நீண்ட சோபிதமான நான்கு புசங்களும், பவழநிறம்போல புஜபலபராக்கிரமங்களையுடைய மத்தியப்பிரதேசங்களும் நாகரத்தினத்தோடுங்கூடின சர்ப்பசிரேஷ்டமாகிய அருணோதயப் பிரகாசமுள்ளதாய்ச் சொலித்துக்கொண்டிருக்கிற இடுப்பும் பிறதேசமும் ஆனைத்தோல் வஸ்திரமும், செந்தாமரைப்புட்பம்போல பிரகாசமான இரண்டு பாதங்களால் திக்குகளெல்லாம் பிரகாசிக்கச்செய்துகொண்டும், திவ்வியாபரண மாணிக்கக் காந்திகளோடும் ரிஷபவாகனரூடராய்ச் சிவபெருமான் ஆதிசேஷனுக்கு பிரத்தியட்சமானார்.

ஆதிசேஷன் ஜெகதீசனையும் அழிவில்லாமலும் பிறப்பில்லாமலுமிருக்கிற பரமசிவனைக்கண்டு சிரமேற்கரங்குவித்து அஞ்சலிநமஸ்காரமும் வேதமந்திரங்களினால் அனேகஸ்தோத்திரமுஞ்செய்து ஓய் பரமசிவனே எது சைதன்னிய ரூபமோ அதுதான் உமக்கு நிசமான சரீரசின்மயம் உம்மிடத்தில் எல்லா உபநிஷத்துகளும் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது ஓய் எனது தயாநிதியாகிய சிவபெருமானே சர்வபூதாந்திரியாமியாய் பிரகாசித்துக்கொண்டிருக்கிறவர் நீரே நிஷ்க்காமிகளான சிவயோகிகள் மோட்சதர்மத்தினாலே பாவமில்லாதவர்களாய் அனேக சென்மங்களில் சித்தமான புண்ணியபரம்பரையினா லும்மையடைகிறார்கள் அஷ்டவிகாரசூனியமாயும் தாபத்திரயாதீதமான யாதொருசிவனை பிர்ம்மபாவனையோடுங்கூட இருதயகமலத்தில் யோகஞானதிருஷ்டியினால் பாக்கிறார்களோ அவர்கள்தான் இந்தப்படி அனேகவிதமாய்ச் சிவபெருமானை ஸ்தோத்திரஞ்செய்தார்கள் நாகேசுரர் சந்தோஷத்தையடைந்து ஆதிசேஷனுக்கு பூமியைச் சுமக்கும்படியான பலத்தைக்கொடுத்தார் ஆதிசேஷ

ன் பிரீதியோடும் நாகேசுரரைப்பார்த்து உம்முடைய அநுக்கிரகத்தினுல் எனக்கு பூமியைச்சுமக்கும்படியான பலம் வந்தது ஆனுலெனக்கு வேறே ஒரு வரங்கொடுக்கவேணுமேன்று ஆதிசேஷன் சொல்லுகிறுர் ஓய் சுவாமி பாதாளலோகமுழுதும் இருளடைந்திருக்கின்றது அதிலிருக்கப்பட்ட லிங்கமானது அந்தப்பாதாள லோகத்திலிருந்தால் சுயம்பிரகாசத்தினுல் பிரகாசமாய் செய்விக்கவேணுமையா அந்த லோகம் சூரியசந்திராக்கினி தேசசுகளினுல் பிரகாசமில்லாமலிருக்கிறதென்று ஆதிசேஷன் விண்ணப்பஞ்செய்துகொண்டார் பாதாளீசுரநாதரானவர் சம்மதித்து வரத்தைக்கொடுத்தார் ஆதிசேஷன் வரத்தைப் பெற்றுக்கொண்டு அதிக மனச்சந்தோஷமாய்ப் பூமியைத்தாங்கிக்கொண்டிருந்தார் அதுமுதல் கும்பகோணக்ஷேத்திரத்தில் பாதாளீசருடைய தீர்க்கமான கிரணங்களினுல் பாதாள லோகமுழுதும் பிரகாசமாய் விளங்கிக்கொண்டிருக்கின்றது அதுமுதல் ஆதிசேஷனுல் பூசைசெய்யப்பட்டும் அமுதோற்பவமான மணலிங்கம் பூமியில் பாதாளீசுரனென்கிற நாமதேயத்தால் பிரசித்தமாயிருக்கின்றது அசுவதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால் சர்ப்பபாதையில்லை பாதாளீசுரநாதருடைய சந்நிதானத்தில் ரிஷபரூபமான தர்மசிலையை சுதேந்திரனுய் யாதாமொருவன் சுக்கிரவாரத்திலதொட்டு தயிலாபிஷேகஞ்செய்கிறவனும் ஸ்ரீருத்திரமனசாலஞ்செபிக்கிறவனுமாகிய அப்படியாப்பட்டவன் சமஸ்தபாவங்களில் நின்றும் கர்மாதி வியாதிகளில் நின்றும் விடுபடுகிறுன். சமஸ்த சம்பத்தையும் அடைகிறுன் அசுவதீர்த்தத்தில் ஆருத்திரா நட்சத்திரத்தில் பரிசுத்தமான இந்திரியங்களோடும் ஸ்நானஞ்செய்து சங்கற்பத்துடனே பாதாளீசுரநாதருக்கு மகாஅபிஷேகமுதலான பூசையும் க்ஷேத்ரோபவாசமும் இராத்திரி சாகரணமுஞ்செய்து கண்விழித்துக்கொண்டிருந்து மறுநான் நித்தியகருமமுடித்துக்கொண்டு அனேக மகாதானங்களைச்செய்து பரமசிவனுக்கு மகாநைவேத்தியமும் பிராமண போசனமுஞ் செய்வித்து பின்பு தானபாரணை யாதொருவன் செய்கிறுனே அந்தப்புருஷன் பரமசிவசாரூப்பியத்தை யடைவானென்று சூதபுராணிகர் முனீஸ்பரர்களுக்கு இந்தக் கதையைச் சவிஸ்தாரமாக்சொல்ல முனீஸ்பரர்கள் கேட்டு ஆனந்தசந்தோஷத்தை யடைந்தார்கள்.

ஐந்தாவது - முற்றிற்று.

ஆறுவது

# உமாபரமேசுரர் அத்தியாயம்.

சூதமகா முனிவர் ரிஷிகளைப் பார்த்துச் சொல்லுகிறார் ஓ முனீஸ்பரர்களே நான் உங்களுக்கு பாதாளீசுரநாதருடைய சரித்திரத்தை தெளிவாகச்சொன்னேன் இப்போது உமாமகேசருடைய மகாத்மியத்தை ஆதியோடந்தமாகச் சொல்லுகிறேன் நீங்கள் அதைக் கேட்டவுடனே சமஸ்தபாவங்களும் போய்விடும் போகமோட்சங்களையடைந்து சுகசீவியாய் வாழ்வீர்கள் என்று சொல்லத்தொடங்கினார்.

கேளுங்கள் முனீஸ்பரர்களே பூர்வகாலத்தில் பிர்மதேவனுடைய கட்டைவிரலில் நின்றும் தெட்சப்பிரசுரபதியுண்டானான் அவனுக்குப் பதினாறுபெண்கள் பிறந்தது அந்தம்பெண்களின் நாமதேயமாவது சிரத்தா, மயித்திரை, தயாமை, இத்திரி, துஷ்டிகி, பூஷ்டிகி, கிரியா, உன்னதிகி, புத்திகி, மேதா, திரிதிகி, சாந்தாமூர்த்தி இந்தப் பன்னிரண்டுபேர்களும் மிகவும் சீலவதியாயிருந்தார்கள் அந்தப்பெண்களைத் தர்மதேவதையானது கல்யாணஞ்செய்துகொண்டது சுவதா என்கிற பெண்ணை பிதிர்தேவதை விவாகஞ் செய்துகொண்டது சுயகா என்கிற பெண்ணை அஷ்டதிக்குப்பாலகரில் ஒரு திக்குக்கு அதிபதியான அக்கினிதேவனுக்கு கன்னிகாதானஞ்செய்தான் தெட்சப்பிரகாசபதி ஷதியென்கிற பெண்ணை பசுபதியான பரமசிவனுக்குக் கன்னிகாதானஞ்செய்தான் இப்படி சிலநாள் சென்றபின்பு தெட்சப்பிரசாபதியாகஞ் செய்யஆரம்பித்தான் அப்போது அனேக முனிவர்களுடன்கூட மருமகனை தர்மதேவதையோடுத் தன் பெண்களையும் யாகத்துக்கு அழைப்பித்தான் சுவாகாதேவியோடு மாப்பிள்ளையான பிதிர்தேவதையையழைத்தான் பசுபதிமசானவாசியென்று அழைக்கவில்லை யாககருமங்கள் இந்தப்படியாய் அனேக ரிஷிகூட்டங்களோடும் யாகமானது வளர்ந்துகொண்டிருக்கின்றது.

இந்திரன் முதலான திக்குப்பாலகர்கள் வந்தார்கள் சித்தசாகரண கெந்தர்வர்களும், தேவமுனிவர்களும், அரம்பை, மேனகை, ஊர்

வசி முதலான சகலரும் வந்தார்கள். இன்னம் தேவயோனி சம்பந்தமான கின்னரர் கிம்புருடாதிகளும் வந்தார்கள். இந்தப்பிரகாரம் கைலாசபர்வதத்திலிருந்து வருகிற தேவர்கூட்டங்களைக்கண்டு, சதியென்கிற பெண்ணானவள் ஓய் தேவர்களே நீங்கள் எங்கே போகிறீர்களென்று கேட்டாள், அப்போ தேவர்கள் சொல்லுகிறார்கள், ஓஅம்மா உம்முடைய தகப்பன் யாகஞ் செய்கிறார் அதற்காக நாங்கள் போகிறோமென்று சொன்னார்கள். அந்த வார்த்தையைக்கேட்டு பார்வதி தேவியானவள் பரமசிவனருகிற்போய், எங்கள் தகப்பனார் யாகஞ்செய்கிறாராம் நாம் சீக்கிரமாய்ப் போவோமென்று சொன்னாள் அவள் சொன்ன வார்த்தையைக்கேட்டு பரமசிவன் சொல்லுகிறார் பெண்ணே உன் தகப்பனாகிய தக்கன் எப்போதும் துவேசி நான்வரமாட்டேன், உனக்கிஷ்டமிருந்தால் போவென்று சொன்னார் அந்த வார்த்தையைப் பார்வதிகேட்டு தகப்பனுடைய ஆசையினால் யாகம் பார்க்கவேணுமென்கிற விருப்பத்தோடு சயை விசையை என்கிற இரண்டு கெந்தருவர்களை யழைத்துக்கொண்டு பிரயாணமாய்ப் புறப்பட்டாள். அப்போது அதிவிரைவாக ஒரு கெந்தருவஸ்திரீ வெள்ளைக்குடை பிடித்துவரவும், இரண்டுபேர் சாமரம்போடவும் ஒருத்தி விசறிபிடிக்கவும் ஒரு கன்னிகை தம்பலப்படிக்க மேந்திக்கொண்டுவரவும் ஒரு கன்னிவீணைவாசிக்கவும் ஒருகன்னி மணிபாதுகை எடுத்துக்கொண்டு வரவும் ஒரு கன்னி கிரீடார்த்தமாகக் கிளிப்பிள்ளையை எடுத்துக்கொண்டு வரவும், ஒரு கன்னிகை இரத்தினங்களாலமைத்திருக்கபட்ட மாணிக்கப்பங்தெடுத்துக்கொண்டு வரவும், ஒரு கன்னிகை கிளிக்கூண்டெடுத்துக்கொண்டு வரவும், ஒரு கன்னிகை பெட்டி எடுத்துக்கொண்டு வரவும், ஒரு கன்னிகை சித்த வித்தியாதர கெந்தர்வ ஸ்திரீகள் மத்தளமடிக்கவும், சில கெந்தர்வ ஸ்திரீகள் மங்களகரமாய்ப் பாடிப்படிக்கவும், அபசாரஸ்திரீகள் கூத்தாடவும், சித்தஸ்திரீகள் காளவாத்தியத்தொணி முழக்கமாய்ப்போடவும், சிலபேர்கள் மதிக்கவும், சிலபேர்கள் பொன்பிரம்பும் வெள்ளிப்பிரம்பும் எடுத்துக்கொண்டு முன்பரிசனங்களை விலக்கிக்கொண்டுவரவும், இந்தப்படியாய் மகா ஆடம்பரத்துடனே தாட்சாயணிதக்கன் யாகத்துக்குப் பிரயாணமாய்ப் புறப்பட்டவுடனே பெண்மயமான பரிசனங்களை கூடப்புறப்பட்டார்கள். அவர்களுடனே உமையானவள் சந்தோஷத்துடன் தக்கனுடைய யாகசாலையில் போயிருந்து தனதுதகப்பனானவர் பெண்ணைப்பார்த்து ஒரு வார்த்தை சொல்லாமலும் சுடுகாட்டில் வாசஞ்செய்கிறவ னுன்புருஷன் எனக்குப் பகையாளி புலி

த்தோல் யானைத்தோலாடைகள் பூதம்பிரேத பசாசங்கள் பரிசனங்களென்றும் அனேகவிதமாக நிந்தை செய்தான். அதை உமையவள் கேட்டு மனந்தாளாமல் சமஸ்தமான தேவர்களுக்கு முன்பாகக்கோபத்தினால் மூர்ச்சையடைந்து யோகமார்க்கத்தினால் பிராணனையெழுப்பிக்கொண்டு குணவதியான தக்கன் பெண்ணாகிய சதியென்பவள் உடலை விட்டுவிட்டாள். இந்தச் சமாசாரத்தை கைலாசத்தில் பரமசிவன் நாரதரிஷிமூலமாய்க் கேள்விப்பட்டு கோபாவேஷங்கொண்டு சடையில் ஒரு ரோமத்தை இழுத்து பூமியில் பளீரென்று அடிக்க அதிதுரையில் பிரத்தியட்சமாய் சரீரத்தோடுங்கூடின கோபம்போலேயும், பிரளயகாலாக்கினியைப்போலும் வீரபத்திரன் அவதாரமானார். அவதாரமான வீரபத்திரனைப்பார்த்து பரமசிவன் பிரமதகணங்களோடும் ஓய் வீரபத்திரரே உமக்கு நான் என்ன ஆக்கினை செய்கிறேனென்றால் பரமதூஷிகனான தக்கனையும் அவன் செய்கிற யாகத்தையும் நாசஞ்செய்யவேண்டியதென்று மகா கோபத்தோடுஞ்சொன்ன பரமசிவனைப்பார்த்து மிகவும் பயபக்தியுடன் சொல்லுகிறான். ஐயா சுவாமி உன்னுடைய ஆக்கினைப்பிரகாரம் தக்கனையும் அவன் செய்கிற யாகத்தையும் அனேகவிதமாய் தும்சப்படுத்தி வருகிறேன் ஐயாவென்று சடாமகுட மார்த்தசந்திரனைத்தரித்த மழுவோடுங்கூடிய பரமசிவனைப்பார்த்து அனேகமான பிரமதகணங்களோடும் உத்தரவு பெற்றுக்கொண்டு தக்கன்யாகத்தை நாசஞ்செய்ய ப்புறப்பட்டார்.

அனேக பிரமதகணங்கள் சங்கபேரி பணகரடங்கா தாளபாங்காமிர்தங்கானக் சிம்மநாத முதலான சப்தங்களோடும் அனேக பிரமதகணங்கள் முன் புறப்பட்டார்கள் பின்பு சிலகணங்கள் - பிண்டி - தோமரம் - உசலம் - பரிசு - சக்கர முதலான ஆயுதங்களை அனேக பூதகணங்கள் எடுத்துக்கொண்டு வீரபத்திரனோடுங்கூடத் தக்கன்யாகத்துக்கு பிரயாணப்பட்டதுகள் அனேக ராட்சதர்கள்கோபாக்கினி சுவாலாமலையோடுங்கூடின முகமண்டலங்களோடும் கையை வீசிக் காலையுதறிக்கொண்டு நடுக்கட்டுடனே பிரயாணமாய்ப் புறப்பட்டார்கள் இந்தப் பிரகாரம் பிரமதகணங்களோடும் தக்கன் யாகசாலையில் பிரவேசித்து யாகசாலையிலிருந்த தேவர்களையும் அனேக ரிஷிகளையும் கெந்தர்வ - கின்னர - கிம்புருட - சித்தசாரண - வித்தியாதர பன்னககெருட - அஷ்டாஸ்திரீகள் முதலான அனேக தேவகூட்டங்களையும் கால்களாலுதைத்து கைகளாலடித்தும் நகங்களால் கிழித்

தும் முஷ்டிகளால் குத்தியும் தலைகளில் குட்டியும் அனேகமான உபத்திரவங்களை யாகசாலையிலிருந்த தேவர்களுக்கு சிட்சைசெய்தார்கள்.

பிரமகணங்கள் செய்கிற உபத்திரவத்தை பொறுக்கமாட்டாமல் குட்டு உதை அடிபட்டுக்கொண்டு அனேக தேவகணங்கள் பயந்தோடிப்போனார்கள் கை கால் தலை தோள் இடுப்பு முதலான இடங்களில் வெட்டுபட்டு காது மூக்கு மூளியாயும் கைமொண்டி கால் மொண்டியாயும் சில தேவகூட்டங்களோடினார்கள் சிலதேவர்கள் பூதகணங்களைக்கண்டவுடனே பயந்து நடுங்கி வீறிட்டுக்கொண்டு ஓடினார்கள் வீரபத்திரன் யாககர்த்தாராகிய தக்கன் எந்தயிடத்தில் அக்கினிகுண்டம் சொலித்துக்கொண் டிருக்கும்படியாய் ஓமங்கள் செய்கிறானோ அந்த யிடத்தில் போய்த் தக்கனெதிராக நின்றுகொண்டு பல்லைநறநறவென்று கடித்து கையில்வைத்திருந்த உரையைத் திறந்து கத்தியை எடுத்துக்கொண்டு சமஸ்தமான தேவரிஷிகளுக்கு முன்பாகத் தக்கன்தலையைஅறுத்தார் வீரபத்திரர். யாகதேவதையானது பயந்து நடுநடுங்கி திகிலடைந்து மானுடலாக உருவுகொண்டு பயந்தோடிப்போய் விட்டது. இந்தப்பிரகாரம் யாகசாலையிலிருந்த தேவர்கள் ஓடிப்போனதும் தக்கன்தலைபோனதும் யாகமமான் ஓடிப்போனதையும் கண்டு சமஸ்தமான தேவதைகளும் ஆச்சரியப்பட்டார்கள் விஷ்ணு சம்பந்தமாய் மிருகரூபமானபாகமானது பயத்தினாலே ஓடிக்கொண்டிருந்த மிருகத்தை வீரபத்திரானவர் கூர்விசையான ஒரு பாணத்தினால் சிரசையறுத்துவிட்டு கோபாவேஷங்கொண்டு சகலதேவர்களையும் சம்ஹாரஞ்செய்தார்.

பின்பு பிரமதகணங்கள் சோபத்தோடும் நகங்களால் சேனாதிபதிகளுடைய அங்கங்களை பின்னப்படுத்தினார்கள் பிறகு லோகப்பிரகாசனான சூரியபகவானைக் கன்னத்தில் பளீரென்றுகையினாலறைந்து பற்களை உதிர அடித்தார்கள் அடிபட்ட சூரியன்வாயில்நின்றும் இரத்தம் வழியத்தாடைவீங்கி முன்னிருந்த சந்தோஷம்போய் அவமானத்தோடும் துக்காக்கிரந்தனாய்ச் சிரிப்பில்லாமல் தலைகுனிந்து கொண்டுநின்றான் கோபத்தினால் வீரபத்திரனானவர் தேவேந்திரன் அக்கினி - எமன் - நிருதி - வருணன் - வாய்வு-குபேரன் இன்னும் அனேகந்தேவர்களை கன்னத்திலறைந்து கத்தியால் கைகளையறுத்து இந்தப்படியாய் கோபாவேஷத்தினால் தக்கன் யாகத்தையும் யாகத்

துக்கு வந்த தேவர்கள் முதலானவரையும் அனேககோலாகலமாகத் தும்சப்படுத்தி பிரமதகணங்களோடுங் கூடக் கைலாசபதியான சிவபெருமான் அருகிற்போய்ச்சேர்ந்தார் வீரபத்திரர். பின்புதாட்சணியானவள் யோகத்தினல் இமோர்ப்பர்வதராஜனுக்குப் பத்தினியான மேனகைக்குப் பெண்ணய்ப் பிறந்து பார்வதியென்கிற நாமதேயத்தால் உலகத்தில் பிரசித்தமாய் விளங்கிக்கொண்டிருந்தாள்.

இப்படியிருக்கும்போதே சிலநாளுக்குப்பின் கைலாசபதியான சிவபெருமான் சமஸ்தமான முனீஸ்பரர்களோடும், இமோர்ப்பர்வதராஜனுடைய கொடிமுடியில் தாணவாசிரமத்திற்குப்போய் திரிபுராந்தகரான பகவான் சமாதிசெய்துகொண்டிருந்தார் பின்பு பர்வதராஜன் சமாதிசெய்துகொண்டிருக்கிற திருவுருவத்தை சனகசனந்தன் சனற்குமரர சனற்சுதரர்களோடும் சின்முத்திரபுத்தகம் நாகமபாசம் சடை அர்த்தசந்திரன் புலித்தோல் அவைகளோடும் பிரகாசித்துக்கொண்டிருக்கிற பரமசிவனுக்குப் பணிவிடைசெய்துகொண்டு தன் தகப்பன் வீட்டில் வளர்ந்துகொண்டிருந்தாள்.

பின்பு சிலநாள்சென்று இந்திரன் முதலான லோகபாதர்கள் தாருகாசூரன் உபத்திரவந்தாளமாட்டாமல் செகசிருட்டிகர்த்தனை பிர்மதேவனைச் சரணடைந்து அவரோடு தாங்கள் தாருகாசூரனுலுண்டான அவமானங்களையெல்லாம் விக்ஞாபனஞ்செய்துகொண்டார்கள் சங்குசக்கர கெதானந்த பீதாம்பரதாரியான பகவான் மகாவிஷ்ணு நாபிக்கமலத்திலுண்டான பிர்மதேவன் சமஸ்ததேவர்களையும் பார்த்து உங்களுக்கு உபாயஞ்சொல்லுகிறேன் கேளுங்கள் அந்ததாருகாசூரனனவன் என்னுடைய வரப்பலத்தினல் ஒரு தேவர்களினலுமகிழிவில்லாமல் விர்த்தியடைந்துகொண்டிருக்கிறன் தாருகாசூரனுகையால் பலத்தினல் கெருவித்திருக்கிற இந்த அசுரனை வாக்கு மனம் காயங்களினல் நினைக்கவும் வசனிக்கவும் பரிட்சிக்கவும் கூடாமையாயிருக்கிற பரமசிவனுடைய அம்சரூபமான அவதாரத்தினலே கொல்லத்தக்கவன் இந்த தாருகாசூரன் இந்தபபடியாய் தேவர்களைப்பார்த்து சமாச்சாரஞ்சொல்லி ஓய் தேவர்களே இப்போது இமோர்ப்பர்வதத்தில் பரமசிவன் தெட்சணமூர்த்திரூபங்கொண்டு தபசுசெய்துகொண்டிருக்கிறர்.

பூர்வகாலத்தில் தக்கன்பெண்ணகிய சதியானவள் பர்வதராஜனுக்குப்பெண்ணய் குணங்களோடுங்கூடி பார்வதியானவள் பரமசி

வனுக்குப் பணிவிடைசெய்துகொண்டு தாணுவாசிரமத்தில் வாசஞ் செய்துகொண்டிருக்கிறாள் அவளைப் பரமசிவன் விவாகஞ்செய்து கொண்டால் அந்தப் பார்வதிவயிற்றில் கந்தரென்கிறபிள்ளையானது அவதரித்து இந்ததாருகாசூரனை அனேகவிதமாய்தும்சப்படுத்தும் ஆகையால் ஓய் இந்திரனே இந்தப்பார்வதியினிடத்தில் பரமசிவனு க்கு எந்த காரியஞ்செய்தால் ஆசை உண்டாகுமோ அந்தவுபாயஞ் செய்யும் சீக்கிரம் அமராவதி பட்டணம்போய் உபாயத்திற்குஆலோசனை செய்யுங்களென்று சொன்ன பிர்மா வார்த்தையைக்கேட்டு தேவேந்திரன் பட்டணம்போக சுதர்மை யென்கிற தேவசபையில் சிம்மாசனத்தில் சந்திரசமாதாளயேசன நிர்த்தகீத முதலானதுக ளோடும் தேவரிஷி பிர்மரிஷி முதலான அனேக தேவர்களோடுமிரு ந்து செகன்மோகனுகாரனை மன்மதனை ரதியோடுங்கூட வசந்தரு துவுடன் தியானஞ்செய்தான் தேவேந்திரன் எந்தப்பிரகாரம் தியா னஞ்செய்தானே அந்தப்படி புட்பவில்லோடும் ஆதிவசந்தருதுக்க ளோடும் பிரத்தியட்சமாய் இந்திரசபையில் அஞ்சலிவந்தனஞ்செய் துதேவேந்திரன் எதிரில்நின்றான் எதிரில்நின்ற மன்மதனைப்பார்த் து தேவேந்திரன் சொல்லுகிறார்.

ஓய் மன்மதனே நீர் இமோர்ப்பர்வதத்தில்தாணுவாசிரமத்தில் தெட்சணாமூர்த்திரூபங்கொண்டு பரமசிவன் தவசுசெய்துகொண்டி ருக்கிறார் திரிபுராந்தகனுனவர் தபசை சீக்கிரமாய் அழித்துவிடவே ணுமென்றுசொன்ன இந்திரன் வார்த்தையைக்கேட்டு மன்மதன் சுவாமி அப்படியே செய்கிறேனென்றுதேவராசன்உத்தரவை சிரகா வகித்துக்கொண்டு ஓய்தேவராசனே நீர் தேவர்களோடும் எனதுபல த்தைப்பாரும் பரமசிவனை செயிக்கிற விஷயத்தில் தாம்பூலமெனக் குக்கொடும் ஓ தேவேந்திரமகாராஜனே உம்முடையபிரதாபத்தினால் என் பலத்தைப் பாருமையாவென்று அட்டகாசஞ்செய்து இரண்டு புயங்களிலும் கைகளால் தட்டிக்கொண்டு எதிரில் சந்தோஷத்தோ டுஞ் சொன்ன ரதிபதியான மன்மதன் வார்த்தையைக்கேட்டு ஓய் மன்மதா தாம்பூலம் வாங்கிக்கொள்ளென்று தேவேந்திரன் தாம்பூல ங்கொடுத்தான் மன்மதனுக்குச் சிவசெயார்த்தமாய் கற்பகப்பூமாலை போட்டு சந்தனம்பூசிப் போய்வாருமன்மதனே யென்றுசொன்ன இந்திரன் வசனத்தைக்கேட்டு சந்தோஷத்தோடும் தேவகாரியார்த் தமாகச் சர்வாபரண பூஷிதனாய் ஆதிவசந்தருதுவோடும் பிரயாணப் பட்டு இம்மலையில் தாணுவாசிரமம்போனான் அப்போதுதாணுவாசி

மரம் வசந்தருதுவினால் மரங்களெல்லாம் துளிரோடு மந்தமாருதங்கள் வீசவும் கனியுந்துளிரோடுங்கூடின மாமரங்களில் குயில்கள் கூவவும், மயில்கள் ஆடவும், வண்டுகள் பாடவும், கிள்ளைகள் பேசவும், பிள்ளைகள்மனங்கூசவும், அன்னப்பெட்டைகள் நடிக்கவும், மின்னற்கொடிகள் துடிக்கவும், அசோகபுட்பங்கள் முருக்கபுட்பங்கள் இலையில்லாமல் செடியில் நிறைந்து புட்பித்ததுகள் தாழம்பூ வாசனையோடுமிகுந்த பரிமளமான இளங்காற்று வீசிக்கொண்டிருக்கின்றது கிம்புருடஸ்திரீகள் கிம்புருஷாளோடுங் கானஞ்செய்துகொண்டிருக்கிறார்கள் சிலவிடங்களில் சித்தவித்தியாதரர் கின்னரர் கிம்புருடர் அஷ்டாஸ்திரீகளோடு முனிகள் தேவர்கள் கெந்தர்வாதிகள் காமவிகாரத்தினால் தருணமில்லாமல் கட்டியணைத்துக்கொண்டு முகலலாட நேத்திரகபோல அதரகோஷ்டகுசுபுகபுசஸ்தனபாணி பாதஊருஸ்தனாதிகளில் காமவிகாரானந்தத்தினால் முத்தமிட்டு விளையாடிக்கொண்டிருக்கிற தேவகூட்டங்களையும்பார்த்து மன்மதன் ஆனந்தபாவசமானவிலாசத்தோடு புட்பதனுசை எடுத்து பஞ்சபாணங்களைத்தொடுத்துக் கியானபிரதராயும் சனகாதிகளுக்கு அழிவில்லாமலும் தெட்சணாமூர்த்திரூபமான பூதேசரைத்தெரிசனஞ்செய்துபார்வதியோடுங் கூடினவராகப்பாவித்து பஞ்சபாணங்களை எடுத்துப் பிரயோகஞ்செய்தான் பரமசிவன் சரீரத்தில் பஞ்சபாணங்கள் தைத்து சித்தங்கலைத்து சமாதியிலிருந்துவிடுபட்டு பஞ்சபாணங்களைப் பார்த்தார்.

பின்பு கோடிமன்மத சௌந்தரியவதி செயத்தோடும் சமஸ்த வித்தியா பரிபூரணியான பார்வதிதேவியினுடைய கடாக்ஷபாணங்களினா லடிக்கப்பட்டு பரமசிவன் காமாந்தகாரத்தினால் மகத்தான ஆனந்தசுகானுபவத்தோடும் பிரகாசித்துக்கொண்டிருந்தார் பரமசிவன் பார்வதியோடும் தாணுவாசிரமத்தில் வசித்துக்கொண்டிருந்தார் பின்பு தெட்சணாமூர்த்தி ரூபங்கொண்ட பரமசிவன் ஸ்திரபுத்தியோடும் நான்குபக்கங்களிலும் சுத்திப்பார்க்கும்போது மன்மதன் எதிர்ப்பட்டான் சமஸ்தமான தேவர்களும் பரமசிவனைப்பார்த்து ஐயா பிரபுவே எங்களுக்காகவந்தவன் இவனைச் சம்ஹாரஞ்செய்யவேண்டாமென்று எவ்வளவுதுறையாய்ச் சொல்லிக்கொண்டிருந்தாரோ அவ்வளவுசீக்கிரத்தில் நெற்றிக்கண்ணக்கினியினால்மன்மதனைப் பஸ்மீகரமாகச்செய்தார் சகலதேவர்களும் பயந்தார்கள் ரதிதேவிநாயகன் பஸ்மீகரமாய்ப்போய்விட்டானே நாம் அமங்கலியவதியானோ

மென்று அனேகவிதமாய்ச்சொல்லிப் பிரலாபித்தாள் பரமசிவன் அதிகதயவுடன் மனதுள்ளவராய் துக்கித்துக்கொண்டிருக்கிற ரதியைப்பார்த்து ஓரதியே நீ துக்கப்படாதே சிலநாள்கழித்து அனுக்கிரகஞ் செய்கிறேனென்றுசொல்லி அந்தர்த்தானமானார்.

பார்வதிபரமசிவனால் மன்மதன்தகனத்தை யடைந்தானே உலகத்தில்காமசேட்டையில்லாமற்போய்விட்டது நாம்கோறின கோறிக்கை வீணாகப்போய்விட்டது இப்போ பூதபதியானசிவனை பதியாயடையவேணுமென்று உக்கிரமான தபசுசெய்தாள் பார்வதி பந்தாட்டம் தோழிகளுடனே விளையாடுகிறதும் உட்காருகிறதும் புள்ளாங்குழலூதுகிறதும் வீணைவாசிக்கிறதும் இவைகளெல்லாம்விட்டு உக்கிரமான தபசுசெய்யவேணுமென்கிறஞாபகங்கொண்டு ஒண்டிக்காலால் பூமியில்நின்றுகொண்டு கண்களாகாசத்தில் சூரியமண்டலத்தைப்பார்த்துக்கொண்டு இருதயகமலத்தில் பரமசிவனைத்தியானஞ்செய்து தபோவிரதத்திலிருந்தாள் வருஷாகாலத்தில் சலத்திலும் கிரீஷ்மகாலத்தில் பஞ்சாக்கினிமத்தியிலும் முனிகளாலசாத்தியமான தபசுகர்மத்தைச்செய்தாள் பின்புசலாகாரங் காய் கிழங்கு பழம் இலை - சருகுகாற்று - இவைகளை ஆகாரமாய்ப்பொசித்துக்கொண்டு உக்கிரமான தபசுசெய்தாள் ஆகையால்உலகத்தில் அபரணையென்கிறநாமதேயம்பிரசித்தமாய்விளங்கிற்று முனிசிரேஷ்டர்கள் பார்வதி உக்கிரதபசைப்பார்த்து உமையென்றுசொன்னார்கள்.

சிலநாளைக்குப்பின்பு மகாதேவர்பிரமசாரிவேஷங்கொண்டு தபசுசெய்கிறபார்வதி சமீபத்தில்வந்து நீயேன் உக்கிரமானதபசுசெய்கிறாயென்று பிரமசாரி வேஷத்தோடுங்கூடின சிவபெருமான்கேட்டார் அதற்குப்பார்வதிநான் ஈசுரனாநாயகனாய் அடையவேணுமென்று தபசுசெய்கிறேன் பிரமசாரியே என்ன இந்தவார்த்தையைக்கேட்டு பிரமசாரியான சிவன் அகசியஞ்செய்து சிவன்மசானபஸ்மதாரி பரம்பரபாணன் மயானத்தில்வாசஞ்செய்கிறவன் மகாபாவியானைத்தோலைவஸ்திரமாகப் போர்த்துக்கொண்டிருக்கிறவன் தலைமாலைதரிக்கிறவன் பயங்கரன்இப்படிக்கொற்றபரமசிவனை நீஉன்னுடைபுருஷனாகநினைக்கிறாய் இதென்னபிர்ம்மையென்றுசொன்ன சிவப்பிரமசாரியினுடைய வார்த்தையைக்கேட்டு அம்மன்கோபங்கொண்டு கண்சிவந்து ஓய்பிராமணா நீர்பெரியோர்களை நிந்திக்கிறது யோக்கியமல்லவென்றுசாதுவாய்ச்சொல்லி பின்புப்பரமசிவசொரூபத்தைத்

தெரிசனஞ்செய்து அதிகவெட்கத்தோடுந் தலையைவளைந்து பூமியை
ப்பார்த்துக்கொண்டு பார்வதியிருக்கிறுளென்கிற சமாச்சாரத்தை
தோழிசனங்களால் பர்வதராஜன்கேட்டு மனமகிழ்ந்து சந்தோஷத்
தையடைந்தான் பர்வதராஜனுனவன் தன் மகளைவீட்டிற்கழைத்து
க்கொண்டுவந்து அம்மா குழந்தாய் நீ பரமசிவனைக் கலியாணஞ்செ
ய்துகொள்ளவேணுமென்று திறமான சங்கற்பத்தோடுங் கூடியிருக்
கிறுய் உன்னிஷ்டப்படி பரமசிவனுக்கு நான் சொல்லி உன்னை விவா
கஞ்செய்துவைக்கிறேனென்று சொன்னுன் பின்பு பரமசிவன் சத்த
ரிஷிகளைப் பர்வதராஜன் வீட்டிற்கு அனுப்பினுர் பர்வதராஜன் பய
பத்தியோடு மற்கியபாத்தியாசமனை முதலாகிய ஆசனமுங்கொடுத்
தான் சத்தரிஷிகள் உட்கார்ந்துகொண்டு ஓய் பர்வதராஜனே நீர் பர
மசிவனுக்கு உம்முடைய பெண்ணுகிய பார்வதியைக் கன்னிகாதா
னஞ்செய்யவேண்டுமென்று சொன்னுர்கள் பர்வதராஜன் அதற்கி
சைந்து அப்படியே ஆகட்டுமென்றுசொன்னுன் சத்தரிஷிகளும்அப்
படியே செய்விக்கவேணுமையாவென்று பர்வதராசனிடத்தில் உத்
தாரம்பெற்றுக்கொண்டு சிவசமீபத்திற்குபோய்ச் சிவனுேடுங் கலி
யாணசமாச்சாரத்தைச் சொன்னுர்கள். சிவன் பிர்மதேவனைப் புரோ
கிதராய்வைத்துக்கொண்டுசமஸ்தமான தேவரிஷிகளோடும்பிர்மரிஷி
களோடும் ரிஷிபத்தினி தேவபத்தினி பிரமதகணங்களோடும் சர்
வாபரணபூசிதராய் பர்வதராசனிடத்தில் அனேகவிதமான மங்கள
வாத்தியங்களோடும் பார்வதிதேவியைக் கல்யாணஞ்செய்துகொண்
டார் அப்போது மன்மதன் சிவானுக்கிரகத்தினுல் பிழைத்தான் ரதி
தேவி மன்மதனைக்கண்டு தனக்குவந்ததுயரம் நிவர்த்தியானதென்று
சந்தோஷத்தையடைந்தாள் பரமசிவன் ஒருக்கால் பார்வதிக்கு தன்
சரீரத்தில் பாதிசரீரங்கொடுத்தார் அதுமுதல் பரமசிவனுக்கு உமா
பரமேசரென்கிற நாமதேயம் உலகத்தில் பிரசித்தமாய் விளங்குகின்
றது பரமசிவன் பார்வதியினிடத்தில் மிகவுமனுராகத்தோடுங் கூடிக்
கொண்டிருந்தவளவில் தாருகாசூரனை இந்திரன்முதலானதேவர்கள்
அதமாக்கிவிட்டார்களென்று எண்ணினுர்கள் பின்பு மகாசந்தோஷத்
தோடுங்கூடின பரமசிவனைப் பிர்மதேவன் நமஸ்காரஞ்செய்து கைக
ட்டி வாய்புதைத்து அஞ்சலிவந்தனஞ்செய்துகொண்டு சுவாமி ஆன
ந்தத்தாண்டவம் பார்க்க இச்சித்திருக்கிறேனென்று விஞ்ஞாபனஞ்
செய்துகொண்டார் பரமசிவன் பிர்மாவைப்பார்த்து ஓய் பிர்ம்மாவே
நீர்திக்குப்பாலகரோடும் - கின்னரர் - கிம்புருடமுனீஸ்பரர்களோடும்
கும்பகோணக்ஷேத்திரம்போய் அங்கே நான் ஆனந்தத்தாண்டவ

ஞ்செய்கிறேனென்றுசொல்லி அந்தரத்தானமானார்.

பின்பு பிர்மா முதலான தேவர்கள் கும்பகோணக்ஷேத்திரம் போய் சுவாமி எப்போ வரப்போகிறாரென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள் அப்போது பரமசிவன் கும்பகோணக்ஷேத்திரம் வந்து பிர்மாமுதலான தேவர்களுக்கு நிசரூபமான ஆனந்தத்தாண்டவதெரிசனங்கொடுத்தார் பின்பு பிர்மாமுதலானதேவர்கள் ஆனந்தத்தாண்டவதெரிசனஞ்செய்து மனமகிழ்ந்து சந்தோஷத்துடன் ஸ்தோத்திரஞ்செய்யத் தொடங்கினார்கள்.

பார்வதிசமேதராகிய கருணாநிதியான பரமசிவன் விசுவாத்மாவரும் சந்திரசேகரராயும், அர்தநாரியாயும், கங்காதரராயும், சாந்தராயும், யானைத்தோலைத்தரித்தவராயும், நெற்றிக்கண்ணக்கினியினால் காமதகனஞ்செய்தவராயும், சர்வாபரணராயும், உக்கிரரூபியாயும், சம்சாரசமுத்திரத்தில் முழுகினவர்களைக் கரையேற்றிவைக்கிரவராயும், பிராணபுருஷராயும், அவ்லியகர்த்தராயும் சமஸ்தபிரபஞ்ச வரூபியான பரமசிவனே உமக்கு நமஸ்காரமென்று அனேகவிதமாய் ஸ்தோத்திரஞ்செய்து ஆனந்தத்தாண்டவத்தைத் தெரிசனஞ்செய்து நாங்கள் கடைத்தேறிக் கிருதார்த்தாளாயும் புண்ணியவான்களாயும் அனேககாலஞ் சிரவணமனனநிருத்தியாசன முதலானதுகளாலும், யோகப்பியாசங்களாலும், யோகிகளாலும், மிகவுங் காணவரிதான ஆனந்தத்தாண்டவத்தைக்கண்டோம்சுவாமியென்று ஸ்தோத்திரஞ்செய்து புளகாங்கிதத்தோடு ஆனந்தபரவசராய் பிர்மாமுதலானதேவர்களிருந்தார்கள் பின்பு சிவாக்கினியால் பிர்மாமுதலான தேவர்களும் ரிஷிகளும் அவாளவாள் ஸ்தானம்போனார்கள் பிறகு பரமசிவனாலுண்டான சுப்பிரமணியசுவாமியை தேவர்கள் சேனாபதியாய் பட்டாபிஷேகஞ்செய்துவைத்து அவரால் தாருகாசூரனைசம்ஹாரஞ் செய்யப்பட்டது.

மகா உல்லாசத்தோடும் ஆனந்தத்தாண்டவஞ் செய்கிற உமாமகேசுரரையாதாமொருவர் பார்த்துத் தெரிசனஞ் செய்கிறார்களோ அவர்கள் மோட்சபதவிக்கு அருளாகிறார்கள் உமாமகேசுரமகாத்மியம் அபாயங்களைப் போக்கடிக்கத் தக்கது எந்தபுருஷாளில் உமாபாகமகாத்மியத்தை ஆர் கேட்கிறார்களோ அவர்கள் சகலபாவங்களில் நின்றும் விடுபடுகிறார்கள் ஓய் ரிஷிகளே என்று சூதபுராணிகர் உமா

மகேசருடைய மகாத்மியத்தை ஆதியோடந்தமாகச் சொல்ல முனீ ஸ்பரர்கள் கேட்டு அதிக சந்தோஷத்தையடைந்தார்கள்.

நான்காவது - முற்றியது.

ஐந்தாவது

# நவதீர்த்தவத்தியாயம்.

ஓ மகாத்மாவாகிய சூதமகாமுனியே நாங்கள் உம்முடைய புராணப் பிரசங்கத்தினாலே உமாமகேசருடைய மகாத்மியத்தையும் கங்கை முதலான நதிகள் கும்பகோணக்ஷேத்திரம்வந்து பாவங்களில் நின்று விடுபட்டதை உம்மாலே சொல்லப்பட்டதை யறிந்துகொண்டோம், இதல்லாமல் புண்ணியகரமாயிருக்கிற கங்கை - யமுனை - கோதாவிரி - துங்கபத்திரி - தாம்பிரபரணி முதலான மகாநதிகளுக்கு என்ன காரணத்தினால் பாவமுண்டாயிற்று, அந்த நதிகள்கும்பகோண க்ஷேத்திரத்தையடைந்து எப்படி பாவத்தைப் போக்கடித்துக்கொண்டது, இவைகளெல்லாம் நீர் சொல்வதற்கு தகுதியுள்ளவர். உம்மால் நாங்கள் அனேக கதைகளைக்கேட்டும் மனது திருப்தியடையவில்லை, இப்போது தாங்கள் எங்கள் பேரில் கிருபைக்கண்ணைக்கி இக்கதையைக் சொல்லுமென்று ரிஷிகள் கேட்கசூதர்சொல்லத்தொடங்கினார்.

கேளுங்கள் முனீஸ்பரர்களே கங்கை - யமுனை - சிந்து - சரஸ்வதி - நிர்மதை - கோதாவிரி இந்தநதிகள் காவேரி நதியோடும் பாலாறு-சரயு இந்த ஒன்பது நதிகளும் கைலாசத்துக்குப்போய் மகேசுரரை ஸ்தோத்திரஞ்செய்து இருகைகூப்பி எல்லாநதிகளும் பரமசிவனைப்பார்த்து விஞ்ஞாபனஞ் செய்துகொண்டு ஓய் பகவானே எல்லாப்பிராணிகளும் தீர்த்தயாத்திரையாகப் புறப்பட்டு எங்களிடங்களில் ஸ்நானஞ்செய்து பாவங்களைப்போக்கடித்துக்கொள்ளுகிறார்கள். ஓ கருணாநிதியே நாங்கள் அந்தப் பாவங்களைசுமக்க வல்லமையில்லாதவர்களென்று விண்ணப்பஞ்செய்துகொண்ட நதிகளைப்பார்த்து சிவபெருமானாகிய மகேசுரர் பிரீதியோடுங் கிருபாகடாக்ஷத்தோடும்

ஒருவசனஞ்சொல்லுகிருர் ஓ நதிகளே பாவம்போகும்படியான வி வரத்தைச்சொல்கிறேன் கேளுங்கள் நீங்கள் அக்கினிதிக்கில் கும்ப கோணக்ஷேத்திரத்தில் சம்பந்தமாயிருக்கிற பாபநாசனமென்கிறதீ ர்த்த மனேக்கியமாயிருக்கின்றது. அந்தத்தீர்த்தத்திற்கு வடகரை யில் நான் காயாரோகணேசனென்கிற நாமதேயம்பூண்டு பிரசித்த மாய் வாசஞ்செய்கிறேன் சிரேஷ்டமான புதிகளே இந்தக்கைலாசத் தைப்பாக்கிலும் எனக்கு மிகவும் இஷ்டமானக்ஷேத்திரம் காசி அந் த க்ஷேத்திரத்தில் பிராணிகள் கோடி பாவங்களைப்போக்கடிக்கிற நி மித்தியம் நான் அந்த க்ஷேத்திரத்தில் வாசஞ்செய்கிறேன் கல்பாதி யில் பிர்ப்பாசதீர்த்தம் - புட்கரதீர்த்தம் - கெங்காதீர்த்தம் - பிற யாகை சமஸ்தமான நதிதீர்த்தங்களை ஒன்ருய்ச்சேர்த்து உண்டுபண் ணின தீர்த்தம் பாபநாசன தீர்த்தம் அந்தத்சிர்த்தத்தில் சகல தீர்த்த ங்களும் தருமாலமாய்க்கரைத்து தீர்த்தத்தை வியாபரித்துக்கொண் டு இருக்கின்றது பிரகஸ்பதி ராசிக்கிரமமாகச் சிம்மராசியில் எப்போ துபிரவேசிக்கிருரோ அப்போது சமஸ்ததேவர்களும் சானித்தியத் தையடைகிருர்கள் சகலதீர்த்தங்களும் சித்தவித்தியாதரர்களும் அ ட்சர கின்னர எட்ச ராட்சச பசாசமுதலான தேவயோனிபேதங்க ளும் சனகாதியோகிகளும் பிர்மா - விஷ்ணு - வசு - பிதிர் - சாத்தி ய - கின்னரர் - குய்யக - துவாதி - சாதித்திய - சித்த- கிம்புருடர் இவர்களெல்லாரும் மாசிமாசமகத்தில் சானித்தியமடைகிருர்கள், அந்தீர்த்தத்தில் பிரகஸ்பதி மகா நட்சத்திரத்தோடுங் கூடியிருந்த வளவில் பிராணிகோடிகள் மாமகஸ்தானஞ்செய்து என்னைச்சேவித் தால் சகலதேவர்களைச் சேவித்தபலன் இந்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து என்னைச்சேவித்தால் சகலதேவர்களைச் சேவித்தபலன் இங் தத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால் சமஸ்த தீர்த்தங்களிலும் ஸ்நா னஞ்செய்தபலன் அதற்கு யாதொரு சந்தேகமில்லை அந்தத்தினத் தில் தீர்த்தக்கரையில் என்சந்நிதியில் ஜனங்கள் தவசு செபம் உப வாசம் ஓமதானந்தியான மந்திரோபதேசம் தீர்த்தசிரார்த்தம் பிரா மணபோசனம் கன்னிகாதானம் பூதானம் கோதானம்இரணியதான முதலான புண்ணியகிர்த்தியங்கள் செய்கிறது ஒன்று கோடியாகும் நீங்கள் மாசிமகத்தில் கும்பகோணக்ஷேத்திரத்தில் நீங்கள் எல்லா நதிகளையும்அழைத்துக்கொண்டுமாசிமகஸ்தானம்செய்யுங்கள்நிச்சய மாய்ப் பாவங்கள் உங்களுக்கு நிவர்த்தியாகிவிடும் அதற்குச் சந்தேக மில்லை சிவகோடிகள் உங்கள் சேவையால் கடைத்தேறினவர்களா யாவார்கள், நான் சிம்மத்தில் மகாநட்சத்திரத்தோடும் பிரகஸ்பதி

பிரவேசிக்கும்போதெல்லாம் புண்ணியகாலமென்று அந்தத்தீர்த்தத்திற்கு மகாமகஸ்தீர்த்தமென்றும் நேமகஞ்செய்திருக்கிறேன் பூமி ஆகாசம் சூரிய சந்திராள் சமுத்திர மெவ்வளவுவரையில் இருக்குமோ அவ்வளவுவரையில் பிரகஸ்பதிக்கு சிம்மராசிப் பிரவேசமுண்டு அந்தகாலம் புண்ணியகாலமென்று பரமசிவன் கைலாயத்தில் கெங்கை-யமுனை-கோதாவிரி முதலான ஒன்பது நதிகளைப்பார்த்துவசனித்து அந்தர்த்தானமானர்.

கங்காநதிகளும் கைலாசபர்வதத்தில் பரமசிவன் திருவாய்மொழிகளைச் சிரவணனந்தமாய்க்கேட்டு கும்பகோணக்ஷேத்திரத்துக்கு அனேக க்ஷேத்திரதீர்த்தவன பர்வதங்களை மார்க்கத்தில் தாண்டிக்கொண்டு ஆனந்தபரவசர்களாய்க் கும்பகோணக்ஷேத்திரத்தில்வந்து மகாதீர்த்தத்தைப் பார்த்தார்கள் அந்தத்தீர்த்தமலைகளும் கமலங்களும் நீலோற்பலங்களும் செங்கழுநீராம்பல் பரிமளங்களும் அம்மிசராச மாவிந்தத்தில் வண்டுகள் தேன்களைப்பானஞ்செய்கின்றது வேலம்பாசிகள் சலத்தில் காற்றினாலும் அலையினாலும் அசைகின்றது அம்சாரசகாரண்ட சக்கிரவாகப்பட்சிகள் சத்தித்துக்கொண்டு மிகவு மனோக்கியமாய் விளையாடுகின்றது கரையில் மாமரங்கள் பூமரங்கள் கமுகு புன்னை சண்பகம் அசோகு பரீடலம் பாதிரி வில்வ முதலான விருட்சங்கள் துளிர்த்து புட்பபழங்களோடும் காய்த்து நான்கு பக்கத்திலும் சூழ்ந்துகொண்டிருக்கிறது மேலும் அக்கரையில் சித்தவித்தியாதரர் அஷ்டாஸ்திரிகள் தண்டை பாடக பாதசர கெச்சைகளோடு கலகலவென்று சத்தித்துக்கொண்டிருக்கிறார்கள் கெந்தருவஸ்திரீகளுடைய ஸ்தனமண்டலங்களுடையசமுகங்களினாலே அலைக்கப்பட்டிருக்கிற சலங்களினாலே தீர்த்தத்துக்கு நான்குகரைகளிலும் மலைமோதிக்கொண்டிருக்கின்றது அந்தத்தீர்த்வக்கரையில் அனேசதீர்த்தங்கள் சரீரமெடுத்துக்கொண்டு ரூபிகரித்துவந்திருக்கின்றது அனேக தேவதைகளும் வந்திருக்கிறார்கள் சமஸ்தமான சனங்களும் பாபாபனோதனமென்கிற நாமதேயத்தினால் பிரசித்தமான மகாமகஸ்தீர்த்தத்தைப்பார்த்து பிரிதிமனமுள்ளவாளாயும் சந்தோஷத்தையடைந்தார்கள்

அந்தத் தீர்த்தத்தில் சமஸ்தமான நதிகளுஞ் சானித்தியத்தையடைந்து தங்கள் பாவங்களைப் போக்கடித்துக்கொண்டு சமஸ்தமான பிராணி சனங்களைக் கிருதார்த்தாளாய்ச்செய்து காயாரோகணே

சுரரை சிரத்தாபத்தியோடும் நமஸ்காரஞ்செய்து காயாரோகணேச ருடைய முதற்பிராதாரத்தினுடைய மத்தியப்பிரதேசத்திலிருக்கிற பூப்பிரதேசத்தில் தென்முகமாய்ப் பத்மாசனத்தி லிருந்துகொண்டு சமஸ்தமான நதிகளும் இப்போது திரிசியாதிரிசியமாயிருந்து பாப நாசன தீர்த்தத்தைச்பார்த்து தபசுசெய்துகொண்டிருக்கிறார்கள்.ஓ ரிஷீசுரர்களே நதிகள்சம்பந்தத்தினாலும் நித்தியகன்னிகைசம்பந்தத் தினாலும் இந்தத் தீர்த்தமானது பாபாபனோதனமென்கிற நாமதேய மெப்படி யுண்டாச்சுதோ அப்படி கன்னியாசம்பந்தத்தினால் கன்னி யாதீர்த்தமென்கிற நாமதேயத்தினாலும் பிரசித்தமடைந்திருக்கின் றது ஓய் முனீஸ்பரர்களே கங்கை முதலான நதிகளுக்கு எப்படிபா வமுத்தியாகுதோ அப்படி சமஸ்த சரித்திரங்களுஞ் சொன்னேன். நீங்கள் அதிகவிருப்போடு இந்தக்கதையைக்கேட்டபடியால் சகலசம் பத்தையும் தீர்க்காயுளையும் பெற்று வாழ்வீர்களென்று சூதபுராணி கர்சொல்ல ரிஷிகள்கேட்டு மனத்திர்ப்தியடைந்தார்கள்.

ஏழாவது முற்றிற்று.

---

எட்டாவது,

## பாஸ்கரக்ஷேத்திரவத்தியாயம்.

ஓம்காரனுபாவராகிய சூதமாமுனியே நாங்கள் உம்மால் நவ தீர்த்த வத்தியாயக்கதையைக்கேட்டு ஆனந்தபாவசமானோம் இந் தக் கும்பகோணக்ஷேத்திரத்தில் வாக்குமனங்களுக்கு அவிழ்தமா யு மிகவுஞ்சிரேஷ்டராயும் பாஷ்கரக்ஷேத்திரம் எப்படியாச்சுது மோ ட்சகாரணமான கும்பகோணமகாத்மியத்தை உம்முடைய முகார விந்தத்தால்கேட்டு ஆனந்தபரவசத்தை யடைந்தோம் பாஷ்கரக்ஷே த்திரச்சரித்திரச் சவிஸ்தாரமாகக்கேட்க நாங்கள் அதிகவிருப்பமுள் ளவர்களா யிருக்கிறோம்மகாத்மாவாகிய சூதமாமுனியே எங்களுக்கு அடிக்கடிகதாமிர்தபானஞ்செய்வதில் ஆசையுண்டாகிறது தேவர்க ளுக்கு எவ்விதமாய்அடிக்கடியமுர்தபானஞ்செய்வதில் எப்படி ஆசை யுண்டாகிறதோ அப்படிப்போல எங்களுக்குக் கதைகேட்க இச்சை யாயிருக்கின்றது ஆகையால் நீர் எங்களுடைய பெரிதான சந்தேக

த்தைப்போக்கடிக்கவேணுமையாவென்று ரிஷிகள்கூறினார்கள் சூதமாமுனியானவர் சமஸ்தசாஸ்திரங்களையறிந்த ஓரிஷிகளே நீங்கள் நன்றாய்க்கேட்டீர்கள் கதாசிரவணஞ்செய்கிற சனங்களுக்குப் புண்ணியகரமாயும் பாவங்களைப் போக்கடியாநின்ற சூரியன்கதையைச் சொல்லுகிறேன் நீங்கள்சாவதானமாய் வேறே ஞாபகமில்லாமல் ஒரேமனதாய்க்கேளுங்கள் முனீஸ்பரர்களே.

பூர்வகாலத்தில் விசுவகர்மாவானவர் கமலாலோசனையென்கிற பெண்ணை சூரியனுக்கு பிர்ம்மாசந்நிதானத்தில் சாஸ்திரவிதிப்படி கன்னிகாதானப்பிரதானஞ்செய்தார் அப்போதுசூரியன்கலியாணஞ்செய்துகொண்டு கமலாலோசனையோடு சேர்ந்துகிரீடாவிலாசத்தினால் மிகவுஞ்சந்தோஷத்தையடைந்தார் சிலநாள்சென்று அவளிட வயிற்றில் யமதர்மராஜன்பிறந்தான் பின்புபுண்ணியவதியாயும் உலகத்தில் பிரசித்தமாயும் யமுனாநதியென்கிறபெண்ணானவள் பிறந்தாள் சூரியனுடையபிள்ளைகளில்எந்தப்பிள்ளைக்கு சிரார்த்தனென்ற பேரோ அவன் ஏழாவது மநுவானவை வசதனென்கிற நாமதேயத்தினால் பூமியில் விளங்கிக்கொண்டிருக்கிறான் அந்த கமலாலோசனையென்கிறவள் சூரியபகவானுடைய தேசசுகளினாலுண்டான தாபத்தைமிகவுந் தாளாதவளாய் ரூபலாவண்ணிய சௌந்தரியத்தோடும் தன்னைப்போலஒருபெண்ணை சருஷ்டித்து சாயாதேவியென்கிற நாமதேயமிட்டு அந்தபெண்ணைப்பார்த்து ஓபெண்ணே உன்னிடமாய் இந்தப்பிள்ளையும் பெண்ணுமிருக்கட்டும் இந்தரகசியம் என்புருஷனறியாம லிருக்கவேண்டியதென்றுசொல்லி சாயாதேவிக்குத் திட்டஞ்செய்து கமலாலோசனையானவளுடைய தகப்பன் விசுவகர்மா வீட்டுக்குப்போனாள் விசுவகர்மாவானவன் தன்வீட்டிற்குவந்தபெண்ணைப்பார்த்து அதிககோபாக்கினியாய்க் கூப்பிட்டார் அப்போது அந்தப்பெண்பயத்தினால் கைகால்கள் நடுங்கி உதரல்கண்டிருக்கிற பெண்ணைப்பார்த்து சொல்லுகிறார் அம்மா கமலாலோசனையே நீயேன் புருஷனைவிட்டுப் பிரிந்துவந்தாய் உலகத்தில் எந்தப்பெண்ணாவது புருஷனுக்கு உபகாரஞ் செய்யத் தக்கவளாயும் எல்லாராதிகளால் பத்தாவுக்கு சந்தோஷஞ் செய்யத்தக்கவளாயு மிருக்கிற கன்னிகையைத் தன்வீட்டில்வைத்துக்கொண்டுசந்தோஷமாயிருக்கிறானோ அவன் பஞ்சமாபாதகனாய்க் கும்பிபாகனரகத்தில் விழுவான். இந்தப்படி சாஸ்திரமிருப்பதால் இந்தக்ஷணமே உன்புருஷன் வீட்டுக்குப் போவென்று விசுவகர்மாவானவர் அதிக கோபத்துடன்சொன்

ஞர் கமலாலோசனையானவள் தன்தகப்பன் சொன்னவார்த்தையைக் கேட்டுப் பயந்து மந்தரபர்வத்தில் படவரவென்கிற பேரிட்டுச் சில நாள் வாசஞ் செய்துக்கொண்டிருந்தாள் இந்தப்படி சிலநாள்கழித் தபின்பு புருஷனுக்குத் தெரியாமல் கமலாலோசனையினால் நிர்மாண ஞ்செய்யப்பட்ட சாயாதேவியைச் சூரியன்பார்த்து இவள் சாயாதே வியென்று தெயாமலும் அரியாமலும் தன் பெண்சாதி கமலாலோச னையென்கிற அபிப்பிராயங்கொண்டு வெகுநாள் சிரித்து விளையாடி ஆலிங்கனஞ்செய்து கேளிவிலாசங்களை அனுபவித்துக்கொண்டிருந் தான் இப்படி யிருக்கும்போது சூரியனுக்கு சாயாதேவியிடத்தில் சநீஸ்வரபகவான் பிறந்தார் பின்பு சாயாதேவிக்கு எமதர்மராசனிட த்திலும் யமுனையி னிடத்திலும் விசுவாசமில்லாதவளானாள் இந்த ப்படி வீட்டில் ஒருபிள்ளையினிடத்தில் பிறிதியும் ஒருபிள்ளையினிட த்தில் அபிப்பிரிதியு முண்டாயிருக்கிறதையும் பிள்ளைகள் ஒருவருக் கொருவரிருக்கிற துவேசத்தையும் சூரியபகவா னரிந்து சமுசயப்ப ட்டு சாயாதேவியைப்பார்த்து நீ ஆர் எங்கேயிருக்கிற தென்றுங் கேட்க சாயாதேவி பயந்து தன் விருத்தாந்தமெல்லாஞ் சொன்னாள் அப்போது நடுங்கிக்கொண்டிருக்கிற சாயாதேவியை ப்பார்த்து சூரி யபகவான் நீபயப்படாதே யென்று சொன்னார் பின்புசூரியபகவான் அசுவரூபங்கொண்டு படவையென்கிற பேரோடே குதிரை ரூப மாய் அதிகதேஜ சோடும்வருகிற தன் புருஷனைக் கமலாலோசனை யானவள் கண்டு தன் குதிரைரூபத்தைவிட்டு முன்போல சரீரரூபத் தையெடுத்துக்கொண்டு தன் தகப்பனாகிய விசுவகர்மாசமீபமாய்ப் போனாள் சூரியனும் தன்மாமனார் வீட்டுக்குப் போனான் விசுவகர் மாவானவன் பெண்ணைப்பார்த்து என்னசமாச்சாரமென்றுகேட்க கமலாலோசனை சொல்லுகிறாள் ஐயா என்புருஷன் தேசசைசகிக்க மாட்டாமல் தவிக்கிறேனென்று சொன்னதன்பெண்வார்த்தையைக் கேட்ட விசுகர்மாவானவர் சூரியனைச்சாணியில் வைத்து தேசசுக ளைக் குறைத்தான் அப்போது சூரியன் உலகத்தில் பிரகாசமில்லா வெட்கத்தோடு வெகுநாள் சிந்தாக்கிராந்தனாயிருந்தார் தேசோவான் களுக்குள்ளே எப்போதுநாம் பிரகாசமுள்ளவனாயும் கிரகாதிபதியா வோமென்றும் சிந்தித்தான் அப்போது ஒருக்கால் ஆகாசவாணியா னவள் ஒருவார்த்தை சொல்லுகிறாள் ஓய் சூரியபகவானே திவாக ரனே திவாஞதனே தினநாயகனே நீசோகத்தைவிட்டு கும்பகோண க்ஷேத்திரம்போய் உமாமகேசருடைய தென்புறத்தில் தவசுசெய் யும் மகாபிரதாபசாலியே வஞ்சிதார்த்த பலத்தை படைவாயென்று

ஆகாசவாணிசொன்னவசனங்களைக்கேட்டுப் பூரணகாமனாய்சீ க்கிரத்திய் காரியசித்தியார்த்தமாய் சூரியபகவான் கும்பகோணக்ஷேத்திரம்போய் உமாபாகருடைய தெட்சணுபாரிச தீர்த்தக்கரையில் ஊர்த்தபாகுவாயும் ஒற்றைக்காலை பூமியில் ஊன்றிக்கொண்டு சிதேந்திரியனாய் அன்ன ஆகாரமில்லாமல் செபத்தியான விரதங்களால் விதிப்படிக்குப் பாதாளேசனைம் பிரதட்கண நமஸ்காரங்களினால் பூசித்துக்கொண்டும் பிராதகாலத்திலும் சாயங்காலத்திலும் ஸ்நானஞ்செய்து விசேஷமானபூசை தபசுகள் செய்துக்கொண்டிருந்தார்.

அப்போது உமாமயேசுரர் பிறிதியோடும் சூரியனுக்கு முன்பிரத்தியட்சமானார் பிரத்தியட்சியான உமாமகேசுரரை சூரியபகவான் பத்திசிரத்தையோடுங்கூடின மனமகிழ்ச்சியுள்ளவராய் சாஸ்டாங்க நமஸ்காரங்களினாலும் அனேகவிதமான ஸ்தோத்திரங்களினாலும் உமாமகேசுரரை சூரியபகவான் துதிசெய்ய மகேசுரர் அதிகசந்தோஷத்தோடு சூரியபகவானால் அர்ச்சிக்கப்பட்ட பரமசிவன் சூரியனுக்கு இரண்டு வரங்கொடுத்தார்.

சிவபெருமானிடத்தில் தானுக்கிரகாதி பத்தியமான வரத்தையும் உலகங்களைப் பிரகாசிக்குபடியான கிரணங்களையும் வேணுமென்று வரத்தையும் பெற்றுக்கொண்டு கிரகராசாவாயும் உலகத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்தான் ஆகையால் இந்தக்ஷேத்திரத்தில் சூரியதபசுசெய்து உலகத்தில் பிரகாசித்துக்கொண்டு கிரகராஜனானபடியினால் இந்தக்ஷேத்திரத்துக்கு பாஷ்கரக்ஷேத்திரமென்று நாமதேயம் பெரியோர்களினாலும் சொல்லப்பட்டிருக்கின்றது,

கெங்காநதியும் இந்த கும்பகோணக்ஷேத்திரத்தில் எம்போதும் வாசம் செய்துக்கெண்டிருக்கிரபடியால் அந்தக்ஷேத்திரத்தில் பிதிர்தேவதைகளுக்கு யாதாமொருவன் தீர்த்தரிரார்த்தம் தற்பணமுதலாகியதுஞ் செய்கிறானோ அந்தப்பிதிர்கள் அநேக கற்பகோடிகாலம் பசிதாகமில்லாமல் .புண்ணியலோகத்தில் வாசஞ் செய்வர்கள் இந்த க்ஷேத்திரத்தை தத்துவமாய் விசாரித்தால் மூன்றுலோகங்களிலும் இதர்க்குச்சமானமான க்ஷேத்திரமில்லையென்று அனேகந்தரம்சொல்லுகிறேன் ஓநைமிசாரண்ணிய வாசிகளான ரிஷிகளே பானுவாரத்தில் சத்தியபுட்கரணியில் ஸ்நாநம்செய்து உமாமகேசுரரைப் பூசை பத்திசிரத்தையோடும் துதிசெய்தால் சமஸ்தமான ரோகங்களால்

வாதிக்கப்படாமல்போகபாக்கியங்களைச்சுகமாயனுபவிப்பார்கள் இச்சையன்றியில் சுதேச்சையாய் கும்பகோணக்ஷேத்திரத்தை யடைந்து பாவம்நீங்கி முத்தனாய்ச் சிவலோகம் விஷ்ணுலோகம் இந்தமூன்று லோகத்தையுமடைவான்,

ஆகையால் பாஷ்கர க்ஷேத்திரமென்று பெரியோர்கள் சொல்லுவர் நைமிசாரண்ணிய வசிகளாகிய முனீஸ்பரர்களேயென்று சூதர் சொல்ல சந்தோஷத்தை யடைந்தார்கள்,

எட்டாவது முற்றிற்று.

ஒன்பதாவது,

# பாவணமுனீஸ்பரர் அத்தியாயம்.

ஓமகானுபாவராகிய சூதமகாமுனியே பல்லறிவுள்ளவர்களாகிய நாங்கள் உம்முடைய நல்லறிவினால் சொல்லிய பாஷ்கரக்ஷேத்திரக் கதையைக்கேட்டு அதிக மகிழ்ச்சியடைந்தோம் இனிமேல்ஏதாவது வேறே ஒரு கதாப்பிரசங்கமிருந்தால் சொல்லும் முனீஸ்பரரேயென்று ரிஷிகள்கேட்க சூதகர் அதிகமகிழ்வடைந்து கல்வியில் வல்லவர்களும் யாவர்க்கும் நல்லவர்களுமாகியமுனீஸ்பரர்களே முக்கட்டுப்பூச்சியானது உதிரத்தைக் கிரகிப்பதுபோல யான் சொல்லப்போகிறபாவனமுனியின் நற்கதையைக் கருத்துற்றுக்கேட்டு சொர்க்கத்தையடையக்கடவீர்களென்று சொல்லத்தொடங்கினார்.

கேளுங்கள் முனீஸ்பரர்களே பூர்வகாலத்தில் பாவனனென்கிற முனியானவர் பரமதத்துவக்கியானி சாந்தாதாந்தாபுத்திமான் புராணப்பிரசங்கத்திலும் கதாப்பிரசங்கத்திலும் தேர்ந்தவர் சன்மார்க்கத்திற்பூர்ந்தவர் துன்மார்க்கத்தைவிட்டுப்பேர்ந்தவர் நன்மார்க்கத்தை தொட்டு ஓர்ந்தவர் அவர் தென்சமுத்திரக்கரையில் புண்ணியகரமான வேதாரணியமென்னும் க்ஷேத்திரத்தில் தனக்குயுத்தமான கர்மங்களை எந்நாளும் இடைவிடாமல் செய்துகொண்டுவேதமார்க்கத்தில் சிறந்தவராயும் தர்மசாஸ்திரத்தில் துறந்தவராயும் அக்கினிகோத்திரராயும் தேவப்பிராமண பூசகராயும் ருத்திராட்சமாலிகாபரணராயும் கண்டத்தில் சிரசில் தோளில் ருத்திராட்சமாலாதரி மந்திரங்களால்

விபூதிதாரணஞ்செய்து பிரகாசித்துக்கொண்டிருக்கிற பஞ்செக்கிய பாரபஞ்சாக்ஷரஜெபராய்ப் படிகமாலே யெப்போதும்கையிலெடுத்து செபதபஞ்செய்கிறவர் பரமசிவனாகிய எம்பெருமானிடத்தில் அத்தியந்தபத்தியுள்ளவர் அஷ்டாக்ஷரசெபர் சமஸ்தக்கியானவான் சின்மாத்திரமான பிரமத்தினிடத்தில் ஆசாபாசமுள்ளவர் இந்தப்படி வெகுநாள் கிரகஸ்தாசிரமத்தி லிருந்துகொண்டு பாவனமுனியானவர் அக்கினிகோத்திரம் உபாசனம் அதிதிபூசை காலந்தப்பாமல்செய்து அநேகநாளிருந்து தபசுசெய்துகொண்டிருந்தார் இப்படி இருக்கச்சே அந்தமுனிவருடைய தாயாரானவள் காலமிருத்துவால் மரணபதவியடைந்தாள் பாவனமுனியானவர் தன்தாயாருக்கு சமஸ்தார முதலிய கர்மங்களையும் சவுண்டிகாண்கிரக எக்கியமுஞ்செய்து மாதுரு தீட்சையோடேகூட மவுனியாய் செபதபஞ்செய்து கிரகத்தில்வாசஞ்செய்துகொண்டிருந்து பின்பு மகாத்மாவான பாவனமுனிதன் தாயாருடைய அஸ்திபைக் குடத்திலேபோட்டு வைத்திருக்கிறோமே அதைக்கங்காநதியில் கொண்டுபோய் போட்டோமானால் நல்லதென்றெண்ணி யோசனைபண்ணி புண்ணியகரமான புத்தியுண்டாச்சுதென்றும் மகா தேவப்பிரசாதத்தினாலே பாவனமுனியானவர் அஸ்தி கும்பத்தைச் சிஷன் தலைமேல்வைத் தெடுப்பித்துக்கொண்டு கெங்கா யாத்திரை புறப்பட்டு வழிவசமாய் நடந்து கும்பகோணக்ஷேத்திரத்தையடைந்து சிமத்தியானகாலத்தில் மத்தியானஸ்நானத்துக்குக் காவேரிக்குப்போய் தீர்த்தக்கரையில் சிஷன்றலையிலிருந்த அஸ்திக்கும்பத்தை யிறக்கி கும்பத்துக்குச்சமீபத்தில் சிஷனைக்காவல்வைத்து மத்தியானஸ்நானத்துக்குப் பிரயத்தினமாய்த் தீர்த்தக்கரையில் உட்கார்ந்து ஆசமனஞ் செய்து சங்கற்ப பூர்வகமாய் ஸ்நானம்செய்து நித்தியகர்மானுஷ்டானமு முடித்துச்கொண்டிருந்தார் அஸ்திகும்பத்தினிடத்தில் காவலாகவைத்த சிஷன் வெகுதூரம் வழிநடந்தபடியால் பசியால்மெலிந்து நலிந்து இளைத்துக்களைத்து எதையாவது பசிக்குப் பொசிக்கவேணுமென்ற எண்ணம் மனதில்நிண்ணயமாய்க்கொண்டு இந்தக்குடத்தில் ஏதாவதிருந்தால் எடுத்துத்தின்னுவோமென்று நினைத்து குடத்துக்கு வாய்கட்டியிருந்த வஸ்திரத்தை அவிழ்த்து அதற்குள் என்னவோ வைத்திருக்குதென்று பார்த்தான் குடத்தில் தங்கதாமரைப்புஷ்பம் பூரணமாய்ப் பூத்துப் பரிமளங்களோடும் நிறைத்திரும்பதைப் பார்த்துப் பூரித்துக் கடவுள் செயலென்று விசாரித்து ஆனந் தக்கண்ணீர்பெருகவும் அகமுருகவும் இந்தப்படியாய் அதிகசந்தோஷத்துடன் இதைப்பட்சிக்கக் கூடாதென்று மறு

படியும் அந்தக்குடத்துக்கு வாய்கட்டி முன்போல குடத்தருகில்காவலாயிருந்தான்.

பின்பு பாவனமுனி நித்தியகர்மானுஷ்டான முடித்துக்கொண்டு வந்து அஸ்திகும்பத்தை மறுபடியும் சீஷன் தலைமேல்வைத்தெடுப்பித்துக்கொண்டு சிலநாள்நடந்து கங்காநதி தீர்த்தக்கரையிற்போய்ச்சேர்ந்து ஓ சீஷா இந்தக்கும்பத்தின் வாய்க்கட்டை அவிழ்த்திருக்கிற அஸ்தியை கங்கையிலே போடவேணுமென்று பாவனமுனி சொல்ல சீஷன் குடத்தையவிழ்த்துப்பார்த்து சுவர்ணகமலங்களைக் காணுமல் அஸ்தியிருக்கிறதைக்கண்டு அதிகஆச்சரியத்தையடைந்து மகத்தான தாபத்திரயங்களை யடைந்தான். பாவனமுனி சீஷனைப் பார்த்து நீஎன்ன ஆச்சரியத்தை அடைகிறாய் அப்பாவென்று கேட்டார் அப்போது சீஷன்பார்த்து சொல்லுகிறான் ஐயா நீங்கள் காவேரிதீர்த்தக்கரையில் கும்பத்தை இறக்கி என்னைக்காவலாய்வைத்து அனுஷ்டானத்துக்குப் போனீர்களே அப்போது நடந்துவந்த இளைப்பினால் பசியால் மெலிந்து பசிதாளாமல் குடத்தையவிழ்த்துப்பார்க்கும்போது சுவர்ணகமலங்களிருந்தது இப்போது அஸ்திகளிருக்கின்றதென்று சீஷன்சொன்ன வார்த்தையைக்கேட்டு அதிக ஆச்சரியமடைந்து அஸ்திகும்பத்தை முன்போல் வாய்கட்டி மறுபடியும் கும்பகோணக்ஷேத்திரக் காவேரிகரையில்வந்து மறுபடியும் கும்பத்தை இறக்கி அவிழ்த்துப்பார்க்குமளவில் கும்பத்தில் பூரணமாயிருந்த அஸ்தியெல்லாம் தங்கதாமாசபுட்பமாயிருக்கிறதைப் பார்த்து அந்த தாமாசபுட்பங்களைக் காவேரித்தீர்த்தத்தில் விட்டு இந்தக்ஷேத்திரம் காசியைப்பார்க்கிலும் அதிகவிசேஷமென்று நினைத்து தாயாருக்கு தீர்தசிறார்த்தமுதலான மாதருகர்மங்களைச் சம்பூரணமாய்ப்பாவனமுனிசெய்தார் கும்பகோண க்ஷேத்திரத்தில். காசியில் கங்கையைப் பார்க்கிலும் கும்பகோணக்ஷேத்திரம் காவேரியிரண்டும் உத்தமமென்றும் காசிவிஸ்வேசரைப் பார்க்கிலும் உமாமகேசுரர் சிரேஷ்டமென்றும் காசியில் மணிகரணிதீர்த்தத்தைபபார்க்கிலும் கும்பகோணக்ஷேத்திரத்தில் காவேரிதீர்த்தம் சிரேஷ்டம் அதிலும் பகவதீர்த்தமென்கிற கேட்டஞ் சிரேஷ்டமென்று நினைத்து பாவனமுனியானவர் பிரமத்தியானபராய் யோகாப்பியாசஞ் செய்துக்கொண் டிருக்கிறார் ஆகையால் உலகத்தில் பாவன்முனி நாமதேயத்தினால் தீர்த்தம் பிரசித்தமாயிருக்கின்றது.

கும்பகோணக்ஷேத்திரத்தில் கும்பேசருக்குமுன் தீர்த்தத்தில் பிதிர்தர்பணம் தீர்த்தசிரார்த்தம் யாதாமொருவர் பிதிர்களுக்கு செ

ய்கிறார்களோ அவர்கள் பிதிர்க்கள் அனேககோடிகாலம் புண்ணிய லோகத்தில் சந்தோஷமாய் வாசஞ்செய்கிறார்கள் கெங்கையில் கெயாசிராத்தஞ்செய்தால் எவ்வளவுபலனோ அவ்வளவுபலநதிகமாயுண்டாகும் பிதிர்தேவதைகளுக்கு திர்ப்தி கெயாக்ஷேத்திரத்தில் ஒருபங்கும் கும்பகோணக்ஷேத்திரத்தில் காவேரி தீர்த்தக்கரையில் பிதிர்க்கிரிகைமுதலானதுகள் செய்தால் பிதிர்களுக்கு அநேககோடிகாலம் பசிதாகமில்லாமல் நித்தியதிர்ப்தர்களா யிருப்பார்கள் இதுதான் பேதம். கும்பகோணக்ஷேத்திரத்திற்கும் யாதாமொருவன் பத்திசிரத்தையோடும் கிஞ்சித்காரம் தானஞ்செய்தால் மகத்தான புண்ணியபலனை யடைவார்கள் உமாமகேசுருடையசமீபத்தில் தீர்த்தக்கரையில் அக்கினிஹோமயாகஞ்செய்தால் அசுவமேதயாகஞ் செய்தபலனுண்டாகும் இந்தகும்பகோண க்ஷேத்திரத்தில் யாதாமொருவர் தன்னுடையதேகத்தைவிடுகிறார்களோஅவர்கள்உமாமகேசுரருடையசாயுச்சியபதவியைஅடைவார்கள்-அதற்குச்சந்தேகமில்லைஅந்தக்ஷேத்திரத்தில் ஒருநாள் இரண்டுநாள் அல்லது மூன்றுநாள் தெட்சணகாலம் யாதாமொருவர் வாசஞ் செய்கிறார்களோ அவர்கள் மோட்சபதவிக்குப் பாத்திரமாகிறார்கள். காவேரியில் ஸ்நானஞ்செய்தால் என்னபலனோ அந்தப்பலன் கெங்காஸ்நானஞ்செய்தால் வரமாட்டாது உமாமகேசுரருடைய தெரிசனஞ் செய்தால் எவ்வளவுபலனோ அவ்வளவு பலன் காசிவிசுவேசுரரைப் பிரதிதினமுந்தப்பாமல் தெரிசனைசெய்தாலும்வரமாட்டாது இதற்குயாதேனுஞ்சந்தேகமில்லை கைலாசம் காசிதேசத்தைப்பார்க்கிலும் கும்பகோணக்ஷேத்திரம் சிரேஷ்டம் சகலத்துக்கும் உத்தமமென்றும் சத்தியமாய்ச் சொல்லுகிறேன்.

ஓ நைமிசாரண்ணியவாசிகளாகிய முனீசுரர்களே ஒருக்கால் கும்பகோண க்ஷேத்திரஸ்மரணையால் பாவங்களிலே நின்றுவிடுபட்டு சம்சாரபந்தமில்லாமல் புண்ணியவானாகிறான் அதற்கு எவ்வளவேனுஞ் சந்தேகமில்லை கும்பகோண க்ஷேத்திரதரிசனத்தைத் தவிர வேறே க்ஷேத்திரமில்லை பாவிகளுக்குப் பாவம் நீங்குவதற்கு வேறேயாதொருஸ்தலமில்லை உலகத்தில் கோஹத்திசெய்தவன் கிருதக்கினன் சுராபாணி விபசாரஞ்செய்கிற ஸ்திரி அறிந்துதான் பெண்சாதியாக வைத்துக்கொண்டிருக்கிறவன் விருஷளீபதிகெற்பகத்தி செய்கிறவன் குருதாரகேமனஞ் செய்கிறவன் சுவர்ணபகாரஞ்செய்கிறவன் இப்படியாய்ப்பட்டசகலரும் கும்பகோணக்ஷேத்திர தரிசனத்தால் பாவமுத்தராகிறார்கள் அனேகவிசை சொன்னதையே சொல்லுகிறது

என்னபிரயோசனம் யான் உங்களுக்கு எதார்த்தமாகச் சொல்லுகிறேன் ஓமுனீசுரர்களே நீங்கள் கும்பகோணவாசஞ் செய்யப் பிரயத்தினஞ் செய்யுங்களென்று சூதமாமுனிசொல்ல ரிஷிகள்கேட்டு ஓய் சூதமாமுனியே எங்களுக்கு கும்பகோணக்ஷேத்திர கதாமிர்தத்தினாலே திர்ப்தியுண்டாகவில்லை ஐயா அமுர்தபானத்தினால் தேவர்களுக்கு எவ்விதமாய் அபா யிருக்கின்றதோ அவ்விதமாய் நாங்கள் கதாமிர்தபானஞ்செய்கிறதில் அதிக ஆவல்கொண்டிருக்கிறோமென்று ரிஷிகள் இந்த க்ஷேத்திரத்தில் பிர்மஹத்தி ஸ்திரிஹத்திபாவம் ஆருக்குவிமோசனம் எப்படி யிருக்கின்றது கோஹத்திபாபம் சுரர்பானபாவம் விருக்ஷளிப்திபாபம் ஆருக்கு எந்தப்புருஷாளுக்கு எவ்விதமாய்ப் போயிருக்கின்றது சொல்லுமையா சூதபுராணிகரே.

ஓ முனீஸ்பரர்களே சிவபத்தியானர்களே நீங்கள் கும்பகோணமாகத் மியத்தைக் கேளுங்கள் சொல்லுகிறேன் பூர்வகாலத்தில் தருமமானது நான்கு பாதங்களோடும் பூரணமாய்ப் பிரகாசித்துக்கொண்டு செகமெல்லாம் வர்ணாசிரமதருமங்களோடுங் கூடிக்கொண்டிருந்த கிரேதாயுகத்தில் மாளவதேசத்தில் கோபுராட்டால் துரக கோட்டராசவீதி முதலான அனேக அலங்காரத்தோடும் கூடின சந்திரபுரமென்கிற பட்டணத்தில் சந்திரவம்மிசத்திலுண்டான சத்தியகீர்த்தியென்கிற ரராஜனானவன் மகதிஸ்வரியவரனையும் நல்லநற்குண நற்செய்கையுள்ள லோகபூஷ்சணையு மதமக்கியனையும் தேவப்பிராமண பூசகனையும் அக்கினி கோத்திரராயும் வேதாத்தியயனஞ் செய்கிறவனையும் சத்தியகீர்த்தி யென்கிற நாமதேயத்துக்குத்தகுந்த அர்த்தமுள்ள சத்திய கீர்த்திராசனானவன் அக்கினி கோத்திரசாலையில் அக்கினிகுண்டத்துக்கெதிரில் மந்திரசெபங்கள் செய்து புரோகிதரோடுங் கூடப்பின்பு பரமசிவத்தியானமுஞ்செய்து பஞ்சாக்ஷரமுஞ் செபித்து பின்பு அக்கினிகோத்திரஞ்செய்கிறகிகத்திலிருந்து ஆசாரியரோடும் சத்தியகீர்த்தியென்கிற ராஜன் எழுந்திருந்தான் அப்போது ஆகாயமார்க்கத்தில் ஓவென்கிற சத்தமானது கேட்டது இதென்ன சத்தமென்று ஆகாயத்தை நோக்கிக் காதுற்றுக்கேட்டான் கேட்கும்போது ஒருபிராமணஸ்திரி இராட்சதனாலே பிடிக்கப்பட்டு உபத்திரவஞ் சகிக்கக்கூடாமல் உலகத்தில் பிராமணனாவது க்ஷத்திரியனாவது இவர்களில் எவனாவது பரோபகாரஞ்செய்கிற புண்ணியவானிருந்தால் நான்பிராமண இராட்சதனாலே அதிக உபத்திரவத்தை யடைந்து கொண்டிருக்கிறேன் நான் என்புருஷ

னுக்குசெய்த துரோகத்தினால் இராப்பகல் முழுதும் சவுக்கினலடி யும் கழுத்திற்சுருக்கும் பயங்கரமான குக்குடத்தினாலே குத்துபட்டு ஆகாயவீதியில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறேன்.

பூலோகத்தில் ஏடகாளொருவரையும் பாவியான நான் பாராம லிருக்கிறேனே இதென்ன துக்கம் இராட்சதன் என்னை அடிக்கிறா னே ஒருக்ஷணம் பொறுப்பது ஒருயுகமாயிருக்கின்றது உபத்திரவம் பொறுப்பது அதிக பிரயாசையாயிருக்கின்றது ஆம்படையானுக்கு நான் அனேகப்பிரகாரம் போசனத்திலும் சயனத்திலும் சலத்திலும் பண்ணின துரோகமெல்லாம் அனுபவிக்கிறேன் இப்போது காப்பா ற்றுவாரைக் காணேமேயென்று இந்தப்படி வருத்தஞ் சகிக்கக்கூடா மல் பிராண இம்சைபட்டுக் கொண்டிருக்கிற பிராணியைக் காப்பா ற்றும்படியான புசபலாக்கிரமங்களோடுங்கூடின புண்ணியவான்கள் பார்த்து என்சத்தங்களைக் கேட்டு அலட்சியமா யிருந்தால் பாவ நர கத்தை யடைவார்களென்று இரைச்சலிட்டு ஆகாயமார்க்கத்தில் கூச்சலிட்டாள் இந்தப்படி கூச்சலிட்ட சத்தத்தை சத்தியகீர்த்தி ராஜனானவன் கேட்டு அதிக தருமபுத்தியோடு நடுவழிமார்க்கமாய் நின்றுகொண்டு ஓய்புரோகிதரே மகாத்மாவே எங்கள் வம்மிசரட்ச கரே உம்முடைய பாதாரவிந்த சேவையினால் கடைத்தேறினவனா யிருக்கிறேன் பயங்கரமாயிருக்கிற இந்த சத்தத்தைக்கேட்கிற ஜெ னங்களுக்கெல்லாம் மனமிளகி மிகவுமன்போடுங்கருணையுள்ளவாளா யாவார்கள் ஒன்றுக்குமுதவாத துர்ப்பலனாய் சேதனனாயிருந்தா லும் இந்தப்படி பயங்கரமான சத்தத்தைக்கேட்டுசகிக்கமாட்டாமல் இதற்கென்ன செய்யலாமென்று வியாகூலத்தோடுந் திகைத்து அசையாமல் நின்றுவிடுவேனே இப்போது நானென்ன செய்யலாம் இந்தஸ்திரியானவள் அழுது உபத்திரவப்பட்டுக் கொண்டிருக்கிறா ளே இவளுக்கு விமோசனமார்க்கம் சொல்லுமையாவென்று புரோ கிதனைப்பார்த்து சத்தியகீர்த்தியென்கிற ராஜனானவன் கேட்டான். முனீஸ்பரர்களே புரோகிதரே உமக்குத் தெரியாத விஷயமொன் றுமில்லையே ஆகாயத்தில் கூச்சலிட்டுக்கொண்டிருக்கிற பிராமண ஸ்திரியை இரட்சிக்கிறது யாதொன்றுண்டோ அதுதான் என்னைக் காப்பாற்றுகிறது ஆசாரியனே மிகவுந் தீனதிசையடைந்து பெரிதா ன கஷ்டத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிற சனத்தைக் காப்பாற் றுகிறது பெரியோர்கள் மிகவும் மோட்சப்பிரதமென்று சொல்லுகி றார்கள் ஆகையால் பிராணனையாவது கொடுத்து இந்தப் பிராமண

ஸ்திரியை இராட்சதனிடத்தில் நின்று விடுவிக்கிற காரியமே காரியமென்று சத்தியகீர்த்தி ராசனானவன் புரோகிதனான தேவசன்மாவைப்பார்த்து வசனித்தான் தேவசன்மாவானவர் சர்வவேதயாபரனும் மகாத்மாவான ராஜாதிராஜனாகிய சத்தியகீர்த்தியே நீ இந்தப் பிராமணஸ்திரியை காப்பாற்றுகிறேனென்று தெய்வாதீனத்தினால் பிரதிக்கினை செய்துவிட்டாய் இந்தப் பிராமணஸ்திரி பயங்கரமான பாவங்களைப் பண்ணியிருக்கிறாள்.

கேளுமையா ராஜனே சொல்லுகிறவனுக்குப் பெரிதானபயம் கேட்கிறவனுக்கும் பெரிதானபயம் இவள் சரித்திரம் லோகதூஷணையாயிருக்கின்றது இவளுடைய புருஷனுக்கு மகாகொடிதான துரோகஞ்செய்தாள் அந்தப்பாவத்தினாலே பயங்கரமான கொடிதாகிய நரகத்தில்விழுந்து இராப்பகல் சமைந்து வெந்துகொண்டிருந்தாள் பின்பு பூலோகத்தையடைந்து இராட்சதன் கையிலகப்பட்டுக் கொண்டு ஆயிரம்வருஷம் அனுபவிக்க வேண்டியிருக்கின்றது அதற்கு முன்னூறு வருஷமாச்சுது இன்னம் எழுநூறு வருஷஞ்செல்லவேண்டியிருக்கின்றது. இந்தப் பிராமணஸ்திரிக்கு ஓரகத்தி ஒருத்தியிருந்தாள் அவள் திவ்வியரூபலாவண்ணியமுடையவள் சற்குலத்திலுண்டானவள் ஆசாரநேமநிஷ்டை பிரசித்தியுள்ளவள் அவள்பேர் சுசீலையென்கிற நாமதேயம் இந்தப் பிராமண்ஸ்திரியினுடைய கணவனிருவரையும் பார்த்து சுசீலையினிடத்தில் மோகங்கொண்டு தினந்தோறு மர்மித்துக்கொண்டிருந்தா ளிவள்புருஷனை தான், சுவாதீனப்படுத்திக் கொள்ளவேணுமென்று சிந்தித்து ஒருதாசியைச்சிநேகஞ்செய்து அவளுக்கு அநேகதிரவியங்கொடுத்து என்புருஷனெனக்கு வசமாகாம லிருக்கிறானென்று சங்கதியைச்சொல்ல தாசியானவள் சிநேகபந்தத்தினால் பணங்கொடுத்தாளென்று அதிக அன்போடு பிராமண ஸ்திரியைப்பார்த்து அம்மா என்னிடமாய்வசீகரமான திவ்விய அவிழ்தமிருக்கின்றது அதைப்பாலில் கலந்து உன்புருஷனுக்குக்கொடுத்தாயானால் அவனுனக்கு வசமாவானென்று சொல்லி மருந்தைக்கொடுத்தாள். இவள் அந்தமருந்தை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப்போய் பாலில்கலந்து தன்புருஷனைவஞ்சித்து பாலைக்குடிக்கக்கொடுத்தாள் அவள் கணவன் காய்ந்தமாடு கம்பில்விழுந்தது போல் தனக்குப் போதுமானவரையில் திர்ப்தியாகக் குடித்தான்.

பின்பு மூத்தாளிடத்தில் மோகங்கொண்டு அவளோடு கிரீடாவிலாசத்தோடும் வெகுநாள் கூடிக்குலாவி அதிக சந்தோஷத்தோடு

வாழ்ந்திருந்தும் பிற்பாடு க்ஷயரோகங்கண்டு மூன்றுமாசத்தில் மரணபதவியை அடைந்தான் இந்தப் பிராமணஸ்திரீயினுடைய பாவமாகிய சரித்திரம் லோகநிந்தனையா யிருக்கின்றதென்று அவள் ஓரகத்திபுருஷனோடும் ஆகமனஞ்செய்தாள். பின்பு கணவனோடும் புண்ணியக்ரமரன கைலாயத்தை யடைந்தாள். இவள் புருஷன்போனபின்பு விபசாரியாய் தன்மனதிஷ்டப்படிக்கு தேசசஞ்சாரஞ்செய்தாள். அப்போது விந்தை பர்வதமலைச்சாரலில் காலம்வந்து மரணத்தை யடைந்தாள் எமபடாள்கண்டு இவள் தன்பத்தாவைக் கொன்றவள் இதன்றி தன்ஓரகத்தியையுஞ் சாகமன்மாகும்படியாய்ச் செய்தவள் இவள்பொல்லாத பாவியென்று எமபடாள் மகாகொடிதாகிய நரகத்திற்கொண்டுபோய்ப் போட்டார்கள் அவள் அந்தநரகத்திலிருந்து துக்கத்தையனுபவித்து பிறகு பன்றியாய்ப்பிறந்து இராட்சதனால் ஆயிரவருஷம் உபத்திரவத்தை யடையவேண்டியதென்றும் இந்தப் பன்றிரூபத்தோடு ஒருசகத்திரவருஷம் அனுபவிக்கவேண்டியதென்றும் இந்தப்படி அனேகசீவன்களாய்ப் பிறக்கிறது இறக்கிறது துக்கத்தையனுபவிக்கிறது கடைசியில் நரகத்தில் அக்கினிச்சுவாலையிலிருந்து தவிக்கவேண்டியது சிலநாட்கழித்து நாயாய்ப்பிறக்கவேண்டியது நாய்களைக்கொன்ற பாவத்தையனுபவிக்கவேண்டியது சிலநாட்சென்று அனேக செனனங்களெடுத்து பட்சியாய்ப் பிறக்கவேண்டியது இப்போதுதான் இவள் இராட்சதன் கையிலகப்பட்டு முன்னூறுவருஷமாச்சுது இன்னம் எழுநூறு வருஷமும் பன்றிமுதல் பட்சிவரைக்கும் சென்மமெடுக்கவேண்டி யிருக்கின்றது இவளை நீ என்னமாய் விடுதலைசெய்கிறதென்று இராஜனைப்பார்த்து புரோகிதன்சொல்லி ஓய்ராசனே சத்தியகீர்த்தி நீர்தெரியாமல்பிரிதிக்கினை செய்து விட்டீர். இந்தப் பிர்ாமணஸ்திரியைவிடுவிக்கவேணுமென்கிறதயவிருக்குமானால் என்வார்த்தையைக்கேளும் நீர்சீக்கிரமாய் கும்பகோண க்ஷேத்திரம்போய் அந்தக்ஷேத்திரத்தில் பிர்ம்மஹத்தி குருஹத்தி சொர்ன்னோபகாரம் குருதாரகேமனம் அதிபாதகஞ்செய்த ஸ்திரிகளாவது புருஷாளாவது பாவத்தில் நின்றும் கும்பகோண க்ஷேத்திர தெரிசனஞ்செய்து முக்தாளாகிறார்கள் அந்தஸ்தானம் காவேரிக்குத் தென்கரையில் உலகப்பிரசித்தியா யிருக்கின்றது அந்த க்ஷேத்திரத்தில் பிராமணர்களெப்போதும் தீர்த்தஞ்சேவித்துக்கொண்டிருக்கிறார்கள் அந்தக்ஷேத்திரமாகிய கும்பகோணக்ஷேத்திரத்தில் பனிரண்டு தீர்த்தங்களிருக்கின்றது நீசீக்கிரமாய் அந்த க்ஷேத்திரம்போய் காவேரிஸ்நானஞ்செய்து மகரமாசத்தில் அருணோ

தயகாலத்தில் மகாஸ்நானஞ்செய்து மாசிமாசத்தில் உதயகாலத்தில் மகாஸ்நானஞ்செய்து தைமாசி அறுபதுநாளும் கும்பகோணக்ஷேத்திரவாசஞ் செய்து நீசெய்கிற ஸ்நானபலத்தில் மூன்று ஸ்நான பலன் இந்தராட்சதன் கையிலகப்பட்ட பிராமணஸ்திரிக்கு தத்தஞ்செய்தால் இவள்விடுபடுவாள். இப்பெண் பூமி வனம் மலை குகை தீவாந்திர முதலிய விடங்களிலிருந்தாலும் நீ தத்தஞ்செய்கிறமகாமகஸ்நான புண்ணியபலத்தினலே முக்தியடைவாள். இது தான் மிகவும் அரிதான உபாயம். உடனே விடுதலையு முண்டாகும் இதுதவிர வேறேஉபாயமில்லை. நன்றாய்விசாரியுமென்று தேவசன்மா முனிசொன்ன வசனத்தைக்கேட்டு சத்தியகீர்த்தி இராசனைவன் அரண்மனையைவிட்டு நாடுநகரம் வனம் வனாந்திரம் மலைமுதலானது களைக்கடந்து கும்பகோணக்ஷேத்திரமடைந்து காவேரி தீர்த்தத்தைத்தெரிசித்து ஸ்நானஞ்செய்து பின்பு விதிப்படி தேவரிஷிபிதிர்களுக்கு தர்பணஞ்செய்து எதாக்கிரமமாய் தானதிகள்செய்து தேவதேவனையும்மகாதேவனையும் கும்பாமிர்தத்தினலுண்டான கும்பேசுரரை சேவித்து நானவிதமாய்த்துதித்து தான் கும்பகோணக்ஷேத்திரத்தில் மூன்றுநாள்செய்தபுண்ணியத்தை இராட்சதன்கையிலகப்பட்ட அந்தப்பிராமணஸ்திரிக்குத் தத்தஞ்செய்தான் அப்போது அதிகதயவுடன் அந்தப்புண்ணியபலத்தினல் புருஷனைக்கொன்ற புண்ணியவதியாகிய சுசீலையானவள் அநேகசென்மங்களெடுத்து நானவிதமாயனுபவிக்கவேண்டிய பாவத்தை சத்தியகீர்த்திமகாராசன் தத்தஞ்செய்த மூன்றுதின புண்ணியபலத்தினல் முக்தியடைந்தாள்.

பின்பு திவ்விய விமானத்தின்மேலேறி சுவர்க்கலோகமடைந்து ஒருக்ஷணத்தில் தன் பத்தாவை அணைந்து ஆனந்தபரவசியாயிருந்தாள் ஆகையால் இந்தகும்பகோணக்ஷேத்திர மகாத்மியத்தை ஆர்தான் படிக்கமாட்டார்கள். உனக்குநான் ஸ்தான வைபவ சூட்சுமத்தைச் சொன்னேன் இப்படியாப்பட்ட மகிமையுள்ள கும்பேசருக்கு யாதாமொருவர் தீபஸ்தம்பனஞ் செய்துவைக்கிறவர்களும் அல்லது அபிஷேகஞ் செய்துவைக்கிறவர்களும் பூமாலைசமர்பித்தவர்களும் சுவாமிக்கு பூசார்த்தமாய் நந்தவனம் வைக்கிறவர்களும் கோபிரப்பிராகாரங் கட்டிவைக்கிரவர்களும் பட்டுவஸ்திரம் நெற்றிப்பட்டம் பொட்டு வில்விதழ்நாகாபரணம் இன்னம் அநேக ஆபரணங்கள் அலங்கார தீபங்கள் புனுகுசட்டமுதலான பரிமள திரவியங்கள் சமர்ப்பிப்பவர்களும் நைவேத்திய பிரம்மோச்சவமுதலாகியது நடப்பிப்ப

வர்களும் பவித்ரோச்சவஞ் செய்வித்து பிராகாரமெங்கும் பிராமணு ளைப் பந்திபந்தியாய் உட்காரவைத்து பிராமணபோசனம் பால்தயிர் நெய் பருப்போடும் திர்ப்தியாய்செய்வித்து அமுதளிப்பவர்களும் இப்படியாப்பட்ட புண்ணியபுருஷாளுக்கு ஆதிகும்பேசுரர் பக்தாளி டத்தில் அனுக்கிரகம்வைத்து தனக்குப் புண்ணியகரமான பணிவி டைகள் செய்கிறவாளென்று இந்தலோகத்தில் போகபாக்யெங்கள் கொடுத்து பின்பு மோட்ச சாம்பிராச்சிய பதவியையுங் கொடுக்கிறார்

ஓ நைமிசாரண்ணிய ரிஷிகளே இந்தக்கதையை நீங்கள் வரலா றாய்க் காதுற்றுக்கேட்டபடியால் உங்களுக்குக் கும்பேசுரர் அதிக பாக்கியத்தையும் அதற்கேற்ற யோக்கியத்தையும் தருவார் உங்களுக் குக்காட்சிகொடுக்க வருவார் யிப்படியாய்ச் சூதமாமுனிவர்சொல்ல ரிஷிகள்கேட்டு கும்பகேசுரரை சிரமேற் கரங்குவித்து அஞ்சலிவந்த னத்தோடு ஸ்தோத்திரஞ் செய்து அதிக சந்தோஷத்தை யடைந் தார்கள்.

ஒன்பதாவது-முற்றிற்று.

---

பத்தாவது,

## கோஹத்திபாவவிமோசனவத்தியாயம்.

கேளும் வீர சூர கெம்பீர உதார சிங்கார மார குபேர ஒய்யார வதிகார சூதமாமுனியே நீர் இல்லரத்தைவிட்டுப் பிரிந்த வநல்ல றத்தைத் தொட்டு அறிந்தவர் பரமனையே துதித்தவர் பஞ்சாக்ஷரத் தைமனதிலே பதித்தவர் பாபத்தைநீக்கினவர் கோபத்தைப்போக் கினவர் உம்முடைய குணநிசயத்தாலும் கதாப்பிரசங்கத்தாலும் பாவன முனீசுரர் சரித்திரத்தைக் கேட்டு அதிக ஆனந்த சந்தோஷத்தை யடைந்தோம் இப்போது எங்களுக்கு கோஹத்தி பாவசரித்திரத்தைக்கேட்க அதிகவிருப்பமிருக்கின்றது அது எந்த தேசத்திலுண்டாயிற்று அதற்குப் பேரென்ன என்னகாரணத்தி னுல் மூடாக்கியானத்தோடு பசுவையடித்தான் அதை ஆதியோடந் தமாகச் சொல்வதற்கு நீர்தான்தகுந்தவர் ஆகையால் தாங்கள்

ஏழைகளாகிய எங்கள்பேரில் கிருபைக் கண்வைத்து இக்கதையை சவிஸ்தாரமாகச் சொன்னால் நாங்கள் பயபக்தியுடன் கேட்டு நர காதிவிட்டு சொர்க்காதிபதியை யடைவோமென்றுரிஷிகள்சொல்ல சூதகர் கதைசொல்லத் தொடங்கினர்.

கேளுங்கள் புண்ணியவான்களாகிய முனீஸ்பரர்களே கோஹத்திசெய்தவன் சரித்திரத்தைச் சொல்லுகிறேன் அதுபெரிதானது சற்றேசாவதானமாய்ச் செவிகொடுத்துக் கேட்பீர்களாக பூர்வத்தில் கௌதமமகாமுனியென்பவர் ஒருவரிருந்தார் அவர் மூன்று லோகத்திற்கும் பிரசித்தமானவர் திரேதாயுகம் நடந்துகொண்டிருக்குநாளில் சுருதி மிருதி தர்மங்களையும் வர்ணாசிரமங்களுக்குயோக்கியமான தருமங்களை உலகத்துக்கு விரோதமில்லாமல் சர்வபூதங்களிலேயும் அதிக இஷ்டமான பிரீதியுள்ளவராயும் சத்துருமித்துருக்களிடங்களில் மானாபிமானத்தில் சமபுத்தியுள்ளவராயும் இந்தப்படி தர்மதயாளகுணத்தோடும் சிலநாளிருந்து பின்பு தீர்த்த யாத்திரைசெய்தார் அப்போது கோகரணம் சங்கா ராக்கியம் மல்லி கார்ச்சுனம் விருத்தாசலம் அருணாசலம் காஞ்சிபுரம் அஸ்தகிரி காளத்தி வேங்கடாசலமுதலான க்ஷேத்திரங்களில் யாத்திரைசெய்தார் அந்தஇடத்தில் நின்று மங்களகரமான பிரமாரண்ணிய க்ஷேத்திரம்போய்ப் பரமேசுரனை ஸ்துதிசெய்து ஸ்திரியோடுங்கூட மகா தபசியான கௌதமமுனி இந்தப்படி தீர்த்தக்ஷேத்திரங்களைக் குறித்து சஞ்சரித்துப்பின்னால் தீர்த்தயாத்திரா தபசுசெய்துகொண்டு வந்தார். அப்போது தேவேந்திரனைவனு போவிக்னஞ்செய்ய தேவர்களோடு யோசனைசெய்து நாம்தபோவிக்னஞ்செய்யவேணுமென்று மாயாமயமான காமதேனுவைச்சிருஷ்டிசெய்து அந்தமாய ரூபமான காமதேனுவைப்பார்த்து எனதுஞான பூரணஞ்செய்ய வேண்டியதென்று ஆஞ்ஞாபித்து நீயிங்கேயிருந்து கௌதமமுனி சமீபம்போய் அவர் ஆசிரமத்துக்கருகிற்போய் விளைந்திருக்கிறபயிர்களைத்தின்றுபோடு அப்போது கௌதமமுனிக்கு இன்னும் ஐசுவரியப் பிரதமான பத்திரிகாசிரமம் பற்பாமகாசி நைமிசாரண்ணியம் இன்னம் அனேகமான தீர்த்தங்கள் க்ஷேத்திரங்களி இவைகளெல்லாம் தீர்த்தயாத்திரையும் தீர்த்தங்களில் ஸ்நானமும் வேதவிதிப்படி தானதருமமுஞ்செய்து அகலியாள் நாயகனை கௌதமரானவர் கிரமமாய் தீர்த்தயாத்திரைசெய்தார் அவர் எந்த க்ஷேத்திரத்திலாவது ஒருநாள் இரண்டுநாள் மூன்றுநாள் வாசஞ்செய்கிறாரோ அந்த

இடத்தில் கௌதமமுனி பிராமணபோசனஞ் செய்கிறது இந்தப் படி ஆயிரவருஷம் தீர்த்தயாத்திரை செய்தார்.

பின்பு தெய்வபத்தியால் சிதம்பரத்துக்குப்போய் மகாபாவகர மான சிவகங்கையில் ஸ்நானமும் வேதவிதிப்படி தானதருமமும் பரோபகாரமுஞ்செய்து சபாநாயகரை வணங்கி துதிசெய்துகொண் டிருக்கிறார் ஆகையால் நீ யிப்போது அவ்விடத்தில்போய் பயிரைத் தின்றுகொண்டிரு அவர் உன்னைப்பார்த்து அதிக கோபாவேஷங் கொண்டு கோலினலடிப்பார் நீ உடலைவிட்டுவிட்டு மகாவேகத்தோடு என்னிடம்வா அப்படியே வருவாயானல் எனக்கு மிகவும் சந்தோ ஷம் நீ சந்தோஷத்தைச் செய்வாயானல் எனக்கு மிகவுந்திர்ப்தி யென்று இந்திரன் சொன்னவார்த்தையைக்கேட்டு அப்படியே சம் மதித்து அந்தப்பசுவானது கௌதமமுனி ஆசிரமத்துக்குச் சமீபத் தில் பயிரைத்தின்றுகொண்டிருந்தது அப்போது கௌதமமுனி பார்த்து அதிககோபங்கொண்டு கோலெடுத்து பசுவின்பேரில் அதிக விசையாய்ச் சுழற்றியெறிந்தார் தடியானது பசுவின்பேரில்பட்ட வுடனே அது உடலைவிட்டு உயிர்பிரிந்து ஆகாயமார்க்கத்திற்போய் பசுவானது சொல்லுகின்றது ஓய்மகாபாவியாகிய கௌதமமுனியே நீ கோஹத்தி செய்தாயே என்றுசொல்லி இந்திரனிடம் போய் விட்டது.

பின்பு கௌதமமுனி அதிகதுக்காக்கிரந்தராய்கோஹத்தியால் பீடிக்கப்பட்டு மாயூரக்ஷேத்திரத்துக்குப்போய் காவேரிஸ்நானஞ் செய்து மாயூரநாதர் தெரிசனமுஞ்செய்து பின்பு தபசுஞ் செய்து கொண்டு மகாபாகராயும் சங்காரமிசமாயும் முனீசுரராயும் சடாதா ரியாயும் அக்கினியைப்போல பிரகாசித்துக்கொண்டும் ருத்திராட் சாபரணங்களும் ருத்திராட்சமாலிகையும் பஞ்சாக்ஷரசெபஞ்செய்து கொண்டும் பிரகாசித்துக்கொண்டிருக்கிற தூருவாசமுனியைப்பார் த்து நமஸ்காரஞ்செய்து கைகட்டி வாய்புதைத்துப் பயபத்தியுடன் கோஹத்திசெய்த சமாச்சாரத்தை தெரியப்படுத்தினர். தூருவாச முனிகேட்டு ஓய்கௌதமமுனியே மாயூரத்துக்குமேற்கே கும்பகோ ணக்ஷேத்திரத்தில் கடேசருடைய வடபுறத்தில் காசிதீர்த்தமிருக் கின்றது அங்கேபோய் நீர் ஸ்நானபானமும் எதாசத்திதானமுஞ் செய்து கும்பேசுரரைச்சேவித்து கோஹத்திபிராயச்சித்தம் கடேச ருடைய சந்நிதியில் வேதவிதிப்படிசெய்து பிராமணருக்கு திரவி

யங்கொடுத்து கடேசருக்கு அக்கினிமூலையில் உம்முடைய நாமதே யத்தினால் லிங்கப்பிரதிஷ்டைசெய்து கௌதமதீர்த்தமென்கிறதடா கம்வெட்டி அந்தஇடத்தில் மூன்றுகாலங்களிலும் மேற்குமுகமான கௌதமேசுரரைப் பூசைசெய்யவேண்டியது இந்தப்படி மூன்று காலங்களிலும் ஸ்நானஞ்செய்து பூசாதிகள் செய்துவந்தால் பிர்ம்ம ஹத்திபாவம் நீங்குமென்றும் தூறுவாசமுனி சொன்னவார்த்தை யைக்கேட்டு கௌதமமுனி சந்தோஷத்தோடே கும்பகோணம் போய் காசிதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து கடேசரைத்தெரிசித்து அக்கினிமூலையில் லிங்கப்பிரதிஷ்டை முதலாகியதுஞ்செய்து அதில் மூன்றுகாலங்களிலும் ஸ்நானஞ்செய்து பிரத்தியட்சமான பரமசிவ னாகிய எம்பெருமானை ஸ்துதிசெய்து மகாலிங்கத்திலே நின்றும் பூசைபண்ணின பிரபாவத்தினால் சிவபெருமானாகிய எம்பெருமான் லிங்கத்திலே பிரத்தியட்சமானார் அப்போது கௌதமமுனி சிவபெ ருமானைப் பார்த்து அகலியோடு பிரத்தியட்சமான சிவனை நமஸ்கா ரத்துடன் அனேகவிதமாய் ஸ்தோத்திரஞ்செய்து ஆனந்தக்கண் ணீர்பெருகவும், அகமுருகவும், அன்புவருகவும், கடவுள்கிருபை தரு கவும் இப்படிதேகமெல்லாம் நனைந்தவராய் விபூதிபஞ்சாக்ஷரமும் புனைந்தவராய் வறுமையால் சினந்தவராய் நடுங்கிஒடுங்கி இளைத் துக் களைத்து சிவபெருமானெதிரில் அஞ்சலிபபத்தியுடன் நின்று கொண்டிருக்கிற தவயோகியாகிய கௌதமமுனியைப்பார்த்து சிவ பெருமானாகிய எம்பெருமான் ஒருவார்த்தை சொல்லுகிறார்.

ஓய் மகாத்மாவாகிய கௌதமமகாமுனியே நான் உம்முடைய தபாக்கினியால் அதிக சந்தோஷத்தை யடைகிறேன் நீர்என்னவரங் கேட்க வந்திருக்கிறீர் கேளும் உமக்குவேண்டிய வரத்தைக்கொடுக் கிறேனென்ன சிவபெருமான் சொன்ன வார்த்தையைக் கௌதம முனிகேட்டு அதிக மகிழ்வடைந்து ஓசுவாமி கருணாநிதியே கற்கண் டே சர்க்கரையே காமதேனே கருணைக்கடலே ர்த்தனே நித்தனே சுத்தனே காணவொண்ணாச்சித்தனே அனாதரட்சகனே ஆபத்பாந் தவனே எனக்கு எப்போதும் கோஹத்திபாவமானது அதிகவருத் தத்தையுண்டாக்குகின்றது அந்தப்பாவத்தைப் போக்கடிக்கவேணு மையா பரமரே உம்முடைய பாதத்தில் தீரமாகிய பத்தியானது உண்டாகவேண்டியது என்றுசொன்ன கௌதமமுனியைப்பார்த்து சிவபெருமான் அப்படியே மனமிளகி இரண்டு வரங்களையுங்கொடுத் தார். பின்பு அந்தமுனிவர் தான் பிரதிஷ்டைசெய்த லிங்கம் பிரசித்

தியடையவேணும் இந்தத்தீர்த்தத்தில் பத்திசிரத்தையோடு ஆரா வது ஸ்நானஞ்செய்தால் அவர்களுக்கு கோஹத்திதோஷம் நீங்க வேண்டியது சமஸ்தபாவங்களும் நிவர்த்தியாகவேண்டுமென்று முனி சொன்ன வார்த்தையைக்கேட்டு ஓய்சுவாமி அப்படியே செய்கிறே னென்று சொல்லி கும்பகோணக்ஷேத்திரத்தில் கௌதமேசுரரென் று நாமதேயத்தோடும் வாசஞ்செய்துகொண் டிருக்கிறேனென்று சொன்னார்.

கௌதமமுனி அவ்வார்த்தையைக் கேட்டு ஐசுவரியவானை தான்தபசுசெய்கிறதற்கு அகலியோடும் ஆசிரமத்துக்குப்போனார் ரிஷிகளே இந்தக்கௌதமதீர்த்தத்தில் யாரார் ஸ்நானஞ்செய்கி றார்களோ அவர்கள் பாவங்களில் நின்று விடுபட்டு சிவலோக மடை கிறார்கள். கதாசிரவணஞ்செய்து சந்தோஷத்தையடைகிறவர்களும் சமஸ்தமான பூதங்கள்பேரில் இஷ்டமுள்ளவர்களும் சம்சாரபந்தத் திலிருந்து மோகமில்லாதிருக்கிறவர்களும் இப்படிப்பட்டவர்கள் பர மசிவனது சுகபதவியையடைந்து சந்தோஷமாயிருப்பார்கள் சிவபெ ருமானது சம்பந்தமாயும் புண்ணியகரமாயும் மனோக்கியமான இந் தக்கதையை சிரத்தாபத்தியோடும் யார்கேட்கிறார்களோ அவர்கள் சிரேஷ்டமானபதவியை யடைவார்கள் இதன்றி யாதாமொருவர் ஒருக்கால் பத்தியுடன்கேட்டாலும் அல்லது படித்தாலும் முற்றிலு முடித்தாலும் அவர்கள் சிவபதவியை யடைவார்கள்.

ஓ நைமிசாரண்ணிய ரிஷிகளே நீங்கள் இந்தக்கதாப்பிரசங்கத் தை வழுவாமலும் கதைநழுவாமலும் செவியுற்றுக்கேட்டபடியால் இப்புவியில் நீங்கள் கும்பேசுரர் கிருபையால் இம்மைமறுமையென்னு மிருவினைப் பயனைநீக்கி சன்மார்க்கத்தைச் சீர்தூக்கி சிவபெருமா னுடைய அருளால் சந்தோஷபதவியாகிய கைலாயபதவியை யடை வீர்களென்று முனீஸ்பரர்சொல்ல ரிஷிகள்கேட்டு அதிகமனப் பூரிப் படைந்தார்கள்.

பத்தாவது-முற்றிற்று.

---

பதிநோராவது,

# சிவமகாத்மியவத்தியாயம்.

ஓ மகானுபாவராகிய சூதமாமுனியே உதவி அன்பு இறக்கம் தேவபத்தி கொடை புண்ணியம் சாந்தம் நீதி பொருமை பரிசுத்தம் விவேகம் துணிவு தெய்வத்துவம் இவைமுதலாகிய நன்மையுள்ளவர் நீர்சகலகலையும் வாசித்தவர் சன்மார்கத்தை மனதிலே உத்தேசித்தவர் சிவனையே பூசித்தவர் அவனையே நேசித்தவர் அப்படிப்பட்ட புண்ணியவானுகையால் உம்முடைய கதாப்பிரசங்கத்தாலும் கோஹத்தி பாவச் சரித்திரத்தைக்கேட்டு அதிக மனச் சந்தோஷத்தையடைந்தோம் இப்போது எங்களுக்கு சிவமகாத் மியத்தைக் கேட்க ஆசையிருப்பதால் நீர் அடியர்களாகிய எங்கள்பேரில் கிருபாநோக்கம்வைத்து நாங்கள் கடைத்தேரும்படியாய் இக்கதையை வரன்முரையாகச் சொல்லும் தவசிரேஷ்டராகிய சூதமாமுனியே என்று ரிஷிகள் கேட்க சூதமாமுனிவர் சொல்லத் தொடங்கினூர்.

கேளுங்கள் சன்மார்க்கமுள்ள முனீஸ்பரர்களே இக்கதை சொல்லுகிறவர்களும் காதுற்றுக் கேட்கிறவர்களும் அதை படிப்பவர்களுக்கும் கையிலெடுத்துப் பிடிப்பவர்களுக்கும் பாவவிமோசனம் சனன மிருத்துவானது போய்விடும் ஆதிரும்பேசுராருடைய கதை புண்ணியப் பிரதமானது ஆகையால் பெரிதான பாவ சமுத்திரத்தில் மூழ்கிசம்சாரசரீரமுள்ளவர்களுக்குக்காமதேனுவைப்போலசிவபூசையும் என்நாளும் சர்வாபீஷ்டங்களையும் கொடுக்கத்தக்கது யாதர்மொருவன் அசக்தனு யிருந்தாலும் பூசைசெய்கிறவர்களைப் பார்த்தால் மோட்சப்பிரதாளாவான். சிரத்தையோடு முத்திப்பிரதமான சிவபூசை செய்தாலும் அசிரத்தையாய்ச் செய்தாலும் கண்ணிறைப் பார்த்தாலும் அதைச்செய்தாலும் சிலநாள் பொருத்துக் காலம் வந்தவுடனே சிவபெருமானுடைய பதவியையடைவார்கள் இந்த அர்த்தத்தில் நடந்தக் கதை யிருக்கின்றது சொல்லுகிறேன் சாவதானமாய்க் கேளுங்கள் முனிசிரேஷ்டர்களே.

பூர்வத்தில் வேட தேசத்தில் சுபாகுவென்கிற வேடராஜன் காலையிலெழுந்து காலக்கடனை முடித்து சிவபெருமானைத்துதித்து

மதித்து தங்கத்தாலும் நவமணிகளாலுஞ் செய்வித்த ஆயிரங் காலை யுடைய சபாமண்டலத்தில் அலங்கரித்துக் கொண்டிருக்கையில் மகுடமன்னர்கள் சூழ்கவும் விருதுக் கொடிபிடிக்கவும் நவமணித் தானம் வழங்கவும் வெண்சாமரைகள் போடவும் வித்துவான்கள் பாடவும் இப்படியாக அதிக ஆடம்பரமுள்ளவனையும் மகாசூரனை யும் வெகுதீரனையும் அதிசாரனையும் வல்லவனையும் மிகநல்லவனையும் சத்துருக்களை வென்றவனையும் மித்துருக்களைக்கொன்றவனையும் எப் போதும் காட்டைப் ம்பாய் வேட்டை யாடுகிறவனையும் மத்தியபா னஞ்செய்கிறவனையும் சுரர்பானஞ் செய்கிரதில் கட்டப்பட்டிருக் கிற புத்தியுள்ளவனையும் துராத்மாவான வேடராஜன் எல்லாமாமி சங்களையும் சுட்டுப் பொசித்துக்கொண்டும் சகலசாதி ஸ்திரிகளை யும் அனுபவித்துக்கொண்டிருந்தாலும் எப்போதும் சோம்பலில்லா மல் சிவபூசை நித்தியமுஞ் செய்து பிரதோஷத்தில் விசேஷமாய்ப் பூசைசெய்து மகா சந்தோஷத்தை யடைந்து நிர்த்தனஞ் செய்து துதித்து கின்னரிமுதலாகியது வாசித்துக்கொண்டு சமஸ்தமான சீவகோடிகளைப் பட்சித்து வேடர்களுக்கெல்லாம் இராஜாதிபதி யாய் அநேக ராச்சியங்களிலிருக்கிற பிர்ம்ம க்ஷத்திரிய வைசிய சூத் திர நான்குவர்ன ஸ்திரீகளையும் அநேக ஸ்திரிகளையும் அனுபவித் துக்கொண்டு துராசாரமான வியாபாரங்களோடுங் கூடின சுபாகு வென்கிற வேடராஜன் அவன் பெண்சாதிபேர் மருத்துவதி அவள் ஒவ்வொருநாளும் எழுந்து அத்தர் பனினீர் முழுகிச் செபதபமுடி த்து அலங்கரித்துக்கொண்டு எளியவர்களுக் கிரங்கி உபகாரஞ் செய்து தேவபத்தி நீங்காதவளாய் கற்புநிலையில் வழுவாதவளாய் அல்லும்பகலும் வேதாகமசாஸ்திர புராணங்களை வாசித்தும் கடவு ளைவிசுவாசித்தும் பெரியோர்களை நேசித்தும் உலகெங்கும் பிரகா சித்தும் மாதாபிதாக் களைத் தெய்வமென்று யோசித்தும் அவர்களை யேபூசித்தும் வருகிறதல்லாமல் சொக்கட்டான் சோகி சதுரங்கமு தலிய விளையாட்டிலும் வல்லவள் யாவருக்கு நல்லவள் இப்படிப் பட்ட மருதுவதியினுடைய அழகைப்போலும் விலை யுயர்ந்த ஆபரணங்களைப்போலும் அவள் வல்லமைகளைப்போலும் நானெங் குங் கண்டதில்லை அந்த ஸ்திரியானவள் தன் நாயகனோடு சரசவுல் லாசமாய்க் கூடிக்குலாவி கொஞ்சி விளையாடி மன்மத கிரீடைநடத்தி தன் புருஷனைப்பார்த்து ஓ ஆசைக்கணவா என்னருமைத்துணைவா நீர் செய்கிறதெல்லாம் கெட்டநடத்தை எனக்கு உம்முடைய நடத் தைப்பார்த்தால் ஆச்சரியமா யிருக்கின்றது துராசாரத்தையுடைய

உமக்கு பரம்சிவனுகிய எம்பெருமானிடத்தில் ஏதையாஅதிகபக்தி எப்போதும் நீர் கண்டத்தைத் தின்பவர் கண்டஸ்திரியை அனுப்விப்பவர் சகல சீவவதைசெய்வதில் அதிகவிருப்ப முள்ளவர் மகா கொரூரமாகிய பாவி துன்மார்க்கமாகியஆவி உமக்கு சிவபத்தியேது தவபத்தியேது நீர் செய்வதே சூது எப்போதும் என்பேரில் வாது இந்தப்படி மருத்துவதிசொன்னவசனத்தைக்கேட்டுவேடராஜனானவன் வெகுநாழிபாவனை செய்து பார்த்துபார்த்துப் பூரித்து சிரித்து திரிகாலங்களையும் அறிந்துஅதிகசந்தோஷத்துடன்சொல்லுகிறுன்.

வாராய்பெண்ணே மருத்துவதியே நான்பூர்வ சென்மத்தில் நாயாய்ப்பிறந்து கும்பகோண க்ஷேத்திரத்துக்குப்போய் அவ்விடத்தில் சஞ்சரித்துக்கொண் டிருந்தேன் இப்படியாக கும்பகோண க்ஷேத்திரத்தில் அநேக நெடுநாள் ஆனபின்பு காசிபதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சகலமான முதலாகியதும் பொசித்து ஒருக்கால் தெய்வாதீனமாய் கும்பேசருடைய சந்நிதியில் திரயோதசியில் பிரதோஷ பூசைநடந்துக்கொண்டிருந்தது அப்போது நான் வெளிவாசற்படியிலிருந்து கும்பேசர் தெரிசனம் செய்தேன் அவ்விடத்திலிருந்த பத்த சனங்கள் அதிக கோபங் கொண்டு அடித்துத் துரத்திவிட்டார்கள் அப்போது நான் என் பிராணனைக் காப்பாற்றிக்கொண்டு கும்பேசருடைய ஆலயப் பிரதட்சணஞ் செய்து பலிபீடத்தின் சமீபத்தில் போடும்படியான பலியன்னத்தைப் பொசிக்கவேணுமென்கிற ஆசையினுல் நின்றுக்கொண்டிருந்தேன் அவ்விடத்தில் விற்கார் பணக்கார் இவர்களால் அடிபட்டு அதிகவருத்தத்துடன் கோவில் வாசர்படியிலே என் சீவனை விட்டேன் அப்போது சிவாக்கினையால் கைலாயத்திலிருந்து விமானம் வந்தது நான் அந்த விமானத்திலேரிக்கொண்டு சிவலோகம் போனேன்.

பின்பு சிவலோகத்தில் பூரணமாய் போகபாக்கியங்களை யனுபவித்து கிராதராஜன் ராஜகுலத்தில் பிறந்தேன் பூர்வ சென்மத்தில் நான் நாயா யிருந்து கும்பேசுரர் சந்நிதியில் சிவதரிசனஞ் செய்ததினுல் இராஜாவாய்ப் பிறந்தேன் தீபவரிசை தெரிசனத்தினுல் பூதபவிழவர்த்தமான காலங்களை யரிந்தேன் அடிபாமினி! மருத்துவதி எல்லாப் பெரியோர்களுக்கும் சென்மாந்திர வாசனையினு லுண்டான கர்மங்கள் கல்விமானு யிருந்தாலும் செல்வனு யிருந்தாலும் அவனவன் செய்தகர்மம் விடாது நான் பூர்வ சென்மத்தி லூல்சிவ

சாதெரிசனம் செய்தபடியால் சிவபூசை பண்ணுகிறேன் நாயாய்ப் பிறந்தபடியாலே கெண்டத்தைத் தின்னுகிறேன் சகல ஸ்திரிகளை யும் அநுபவிக்கிறேன் என்னதான்பெரியவாளா யிருந்தாலும் ஆத்மஸ்டமான பிரகிருதி குணம் போகமாட்டாது. பெண்ணே ஆதி கும்பேசருடைய அநுகிரகத்தினாலே சமஸ்த பாவங்களும் போய்வி டும் பிரதோஷ சிவபூசையினாலே நான் செய்கிற பாவங்களெல்லாம் போகுமாகையல்சிவபூசை செய்கிறேன்நீயும் சிவபூசை பண்ணென்று சுபாகுராசன் சொன்னான் ஓ மகாரிஷிகளே காசிபதீர்த்த க்ஷேத்திர மகிமை கும்பேசர் மகாத்மியம் இதை ஆர் வருணிப்பார்கள் இக்க தையை அன்பாய்க் கேட்டவர்களுக்கு ஆதி கும்பேசராகிய எம்பெ ருமான் சாயுச்சிய பதவியைக்கொடுப்பார் இதன்றி அம்மன் சந்நிதி யில் படித்தாலும் கேட்டாலும் மந்திரசித்தியுண்டாம் நித்தியமும் யெம்பெருமானைப் பூசித்து கும்பகோண மகாத்மியத்தைக் கேட்டு பத்திசிரத்தையோடு மங்கள நாயகி தெரிசனஞ் செய்தவர்கள் கும் பேசருடைய மகிமையினால் சர்வசித்தியு மடைவார்கள்.

ஓ முனீசுரர்களே இந்தக் கும்பகோண க்ஷேத்திரமானது காவேரிநதியினாலே பிரகாசத்தை யடைந்துசுயம்பிரகாசமாயும் சுயம் புவாயும் அநாதியாயும் அமூர்தமயமான லிங்கமானது எந்தஸ்தா னத்து ஆனந்தமாய்ப் பிரகாசிக்கின்றதோ அந்தக்ஷேத்திரம் கும்ப கோணமென்கிற க்ஷேத்திரம் அந்த க்ஷேத்திரத்தில் செனித்தமாத் திரத்தில் முக்தியுண்டாகிறது அந்தஸ்தலத்தில் மகாசைவாள் ஆதி சைவாள் அனேகம்பேர் வாசமா யிருக்கிறார்கள் அவர்கள் சதாசிவா ஈஸ்பரா-சர்வேசா-சர்வசங்காரா என்றுஸ்தோத்திரம் செய்துக்கொ ண்டிருக்கிறார்கள் பூர்வத்தில் வைகுண்டாதிபதியான மகாவிஷ்ணு வானவர் சிவலிங்க பூசைசெய்கிறவர் அவர் அக்கினி கோத்திரம் போல தேசசுள்ளவர் தான் தபசுசெய்யவேணுமென்கிற இச்சை யால் கொரோமாகிய தபசு செய்துகொண்டிருந்தார் இந்தப்பிரகாரம் கும்பகோணக்ஷேத்திரத்தில் தபசுசெய்துகொண்டிருக்கிற மகாவி ஷ்ணுவை சிருஷ்டிகர்த்தரான பிர்மதேவன் சாஷ்டாங்கமாக நமஸ் காரஞ் செய்து கைகட்டி வாய்மூடிக்கொண்டு ஓ செகத் ரட்சகாசெ கத்கார மோட்ச சோபாயஞ் சொல்லுமையாவென்று பிர்மதேவன் கேட்க விஷ்ணுவானவர் சொல்லுகிறார்.

சகலவேதங்களில் பிரசித்தமாயும் புண்ணியமாயும் வேதாந்தங் களிலும் உபநிஷத்திலும் சிவலிங்காரச்சனை மோட்சார்த்தமாய்

விபூதிதரிக்கிறவாளாலே அவசியம் சிவார்ச்சனை செய்யவேண்டியது ஓய்பிர்ம்மாவே வேதாந்தமார்க்க காமமோட்ச நான்குபலனையும் கொடுக்கத்தக்கது ஆகையால் தர்மார்த்த காமமோட்சபலனை சிவ பூசையால் சகலசனங்களும் அடைகிறார்கள் அதற்கு யாதனேனும் சந்தேகமில்லை சிவார்ச்சனை ஆர் அன்பாய்ச்செய்கிறார்களோ அவர் கள் மகாசமர்த்தராயும் துராசாரமாகிய புத்தி நீங்கி நல்லபுத்திமாறு கிறார்கள் துன்மார்க்காள் எத்தனைபேரிருக்கிறார்களோ அவர்கள சத் தியநிலைமையில்லாமலும் முத்தியாகிய நல்மை செல்லாமலும் பத்தி யாய்ச் சிவனைப் புல்லாமலும் சத்தியாய்ப்பலகலைகல்லாமலும் சிவ பூசைவாதம் செல்லாமலும் தவமே மனதிற்கொள்ளப் புத்திநில்லா மலும் இப்படி நானுவித துராசாரமான துக்கத்தை யடைவார்கள் சமஸ்தமான சுருதிகளிலும் சிவபூசை யில்லாமல் மோகத்தினால் அதிகபிர்ம்மை யோடும் துக்கத்தை சகிக்கக் கூடாமலிருக்கும் படியான துயரத்தை யடைவார்கள் எவர்களாவது சிவபெரு மானகிய எம்பெருமானைப் பூசித்திருப்பார்க ளானால் அவர் கள் அதிக கொடூரமாகிய நரகத்தை யடைவார்கள் யாராவது சிவார் சனை செய்கிறார்களோ அவர்கள் தபசி தர்மவானவார்கள் அதற்கு எவ்வளவேனுஞ் சந்தேகமில்லை. அப்படி பூசை செய்கிற வர்களுக்கு பார்வதி நாயகராகிய எம்பெருமானிடத்தில் பத்தியுண்டாகும் பிர புவாகிய சிவபெருமா னிடத்தில் பரிமிதமான அனேகசெனங்கள் புண்ணியபாக்கியத்தினால் பெரியவாள் சிவபாவனை செய்வார்கள் பரமேசுரரிடத்தில் பத்தியுள்ளவர்கள் முக்தியடைவார்கள் ஓ சதுர் முகப் பிர்மாவே என்று மகாவிஷ்ணு பின்னுஞ் சொல்லுகிறார்.

ஓய் பிர்ம்மதேவரே சைவாசாரமில்லாமல் கர்மானுஷ்டானங் கள்போய்விடும் பாவங்கள் அதிகமாகும் வைதீகாள் வேதோக்தகரு மங்கள் செய்தாலும் வியர்த்தமாகும் சிவபூசாவிஷயத்தில் சுமார்த் தாள் வேதகர்மம் ஒருக்காலும்செய்யக்கூடாது சைவாசாரமில்லாத வர்களுக்கு கர்மாதிகாரமில்லை அசைவன் எந்தகுலத்தினுலுண்டாகி றானே அந்தக்குலம் வியர்த்தம் சத்தியம் சத்தியமென்று புசங்களை யெடுத்துக்கொண்டு மகாவிஷ்ணுவானவர் சொன்னார் இதன்றி அசைவப்பிராமணாள் அசிரேட்டாள் கர்ம சூனியாளென்று கை யெடுத்துக்கொண்டு ஒருவசனம் வசனிக்கிறார் எவர்கள் அசைவகுல த்திலுண்டாகிறார்களோ அவர்கள் அதிக துக்கத்தை யடைகிறார்கள் இப்படி நானுவிதமாயிருப்பதால் இதைவாயினாற் சொல்லமுடியாது

பிராமண க்ஷத்திரிய வைசியசூத்திர இந்தநான்குவர்னங்களில் சண்டாளனுயிருந்தாலும்சைவகுலத்திலுண்டானாலும் புண்ணியவசத்திலுண்டானாலும் அவன் மகாபூச்சியன் அதிக பிரயாசைப்பட்டு தபோபலத்தினால் சிவபத்தி சம்பாதிக்கவேண்டியது அந்தபத்தியே முத்திமோட்சத்தைக் கொடுக்கும் சிவபெருமானாகிய எம்பெருமானிடத்தில் பத்தியில்லாமற்போனால் அவர்களுக்கு யாகாதிகளாலே என்னபலன் சர்வசித்தென்கிற யாகத்தினால் என்னபலன் எம்பெருமானிடத்தில் பத்தியிருந்தால் கோதானம் பூதானமுதலான அனேக தானங்களை சம்பூரணமாய் தெட்சணையுடன் கொடுத்தால் எவ்வளவு பலனோ அப்படிக்கொத்த தாராதானபலங்களினாலே பிரயோசனமில்லை, மகாதானங்களினாலும் அசுவதானங்களினாலும் கெசதானங்களினாலும் அபரிமிதமான தெட்சணைகளினாலும் என்னபிரயோசனம் சிவபெருமானிடத்தில் நிச்சலமான பத்தியிருந்தால் அதுதான் பிரயோசனம். அன்னதானம் தீர்த்தயாத்திரை தபசுகள் உத்தமமான தர்மங்கள் இவைகளினால் யாதொருபிரயோசனமில்லை மகாபயபத்திவிசுவாசத்துடன் யாராவது சிவபெருமானுக்கு பூசார்த்தமாய் விஸ்வபத்திரங் கொடுக்கிறார்களோ அவர்கள் அனேககோடி மகாதானங்களை வேதவிதிப்படி செய்தவர்கள் சிவபஞ்சாட்சரஞ்செபிப்பவர்கள் தெட்சணை முதலாகியதுங்கொடுத்து சகலயாகங்களுஞ் செய்தவர்கள் கால்தொடங்கி சிரசுவரையில் விபூதிதரிக்கிறவர்கள் சகலதர்மங்களுஞ் செய்தவர்கள் தனவான் கனவான் குணவான் பணவான் இவர்களில் சிவபெருமானாகிய எம்பெருமானிடத்தில் பத்தியிருந்தால் முத்தியடைவார்கள்.

ஓய் பிர்மதேவரே பூர்வத்தில் அகத்தியமுனி பஸ்மோத்தூளித அங்கங்களுடையவராயும் திரிபுண்டராங்கிதமான சிரசுள்ளவராயும் ருத்திராட்சமாலிகாபரணராயும் சடாதாரியாயும் அகத்தியமாமுனி சிவத்தியானபராய் மிகவுந் தவசுசெய்துகொண்டிருந்தார் இப்படியிருக்கையில் அந்தக் கோகரணக்ஷேத்திரத்தில் ஒருபிராமணன் சிவபூசாபராயும் ருத்திராட்ச மணிமாலை முதலாகியதும் அணிந்தவராயும் தெர்ப்பாசனத்தில் உட்கார்ந்து தியானஞ்செய்துகொண்டிருக்கிற பிராமணோத்தமரை அகத்தியமுனிவர் பார்த்து அஞ்சலிவணக்கத்துடன் நமஸ்கரித்தார் அதைப்பிராமணன்பார்த்து அதிகவிரைவாய் எழுந்திருந்து அகஸ்தியரை சாஷ்டாங்கவணக்கத்துடன் அடிக்கடிபிரதட்சண நமஸ்காரமும் அர்க்கியபாத்தியாதிகளால்பூசையும்

அஞ்சலிவந்தனமுஞ் செய்துகொண்டு ஒருவார்த்தை சொல்லுகிறார் ஐயா அகஸ்தியரே உம்முடைய பாதாரவிந்த தெரிசனத்தால் கடத்தேறினேன் சிவபத்தரான உம்முடைய தெரிசனமிகவும் அரிது இப்போது சூரியகிரணம் வருகுதையா சிரார்த்தகாலம் எப்போ சிவபத்தாளுடைய சங்கம்வருமோவென்று நான் ஆசிரமத்தில் சிந்தித்துக் கொண்டிருந்தேன் ஐயா அகத்திய முனியேஎன்று பிராமணன் சொன்னான்.

ஓய்பிரமதேவரே பின்பு அந்தப்பிராமணன் பிதிர்சிரார்த்தஞ் செய்து அகத்தியமுனிவரைப்பார்த்து தருமஞ்செய்கிற விவரத்தைச் சொல்லுமையாவென்று பிராமணன்கேட்க அகத்திய முனியானவர் சொல்லுகிறார் ஓய்பிராமணோத்தமரே நீர்சர்வக்கியானி கிருதார்த்தசிவவிரதர் சகலதருமங்களையு மறிந்தவர் உம்முடைய ஆக்கினையினாலே எனக்குத் தெரிந்தவரையில் பிராமண தருமங்களைச் சொல்லுகிறேன் கேளும் நாலாஞ்சாமத்தில் உதயகாலத்துக்கு முன் எழுந்திருந்து மலமூத்திரவிசர்ச்சனங்களுமுடித்துக்கொண்டு சிவலிங்க சந்நிதியில் அதிக பிரயத்தினத்தோடும் வந்து ஸ்நானஞ் செய்து வஸ்திரந்தரித்து விபூதியணிந்து திரிபுண்டராதரணஞ்செய்து உத்திராட்சந்தரித்து சந்தியாவந்தன முதலாகியதுஞ்செய்து பின்பு சிவபூசை செய்யவேண்டியது வில்வபத்திர முதலாகியவைகளினால் சிவார்ச்சனைசெய்து சடாக்ஷரத்தை செபஞ்செய்து சிவத்தியானஞ் செய்யவேண்டியது பிரதட்சண நமஸ்காரஞ்செய்து நைவேதன முதலாகியதுஞ் செய்யவேண்டுமென்று அகத்தியமுனி பிராமணனுக்குச் சொன்னாரென்று மகாவிஷ்ணுவானவர் பிரமதேவனைப்பார்த்துச் சொன்னார். மறுபடியும் விஷ்ணுவானவர் சொல்லுகிறார் ஓய்பிரமதேவரே இந்தப்படி அகத்தியர் வார்த்தையைக்கேட்டு ஐயா அகஸ்தியரே எனக்கு பிரதட்சண நமஸ்காரவிதியைச்சொல்லவேணுமென்று பிராமணன்கேட்க அகத்தியர் வேதமார்க்கப்படி சொல்லுகிறார்.

ஓய் பிராமணரே பிரதட்சண நமஸ்காரவிதி இரண்டுவிதம் பிரதட்சண ஸ்தானங்கள் வேதமார்க்கங்களறிந்த அந்தணர்களாலே தாண்டக்கூடாது முன்னே சிவதரிசனஞ் செய்கிறதற்கு கோகுல துவாரம்நந்தி பின் சிவாபிமுகம் சிவனுக்கு நைபிரிதிதிக்கு சண்டிகேசுரஸ்தானம் மேற்குமுகமானால் சிவலிங்கம் கிழக்குமுகமானால்

சண்டிகேசுரஸ்தானம் ஈசானதிக்கில் சிவனுக்கு வடக்கே சோமசூத்திரஸ்தானம் கிழக்குமுகமாயிருந்தால் மகாலிங்கம் என்னறிக மேற்குமுகமாயிருந்தால் சோமசூத்திரம் முன்போலவேமற்றவிடங்களில் மூன்றுஸ்தானங்கள் ஒன்பதுபாகமாயாகிறது இந்தமூன்று ஸ்தானங்களை பிரதட்சண நமஸ்காரஞ்செய்தால் ஒன்பது ஸ்தானமாகிறது இதுவே வைதீகப் பிரதட்சணம் இந்தஸ்தானங்களிலே மூன்றுதரம் அடிக்கடி திரும்பித் திரும்பிவந்தால் அந்தமூன்று ஸ்தானங்களும் ஒன்பது ஸ்தானமாகின்றது ஒப்பிராமணோத்தமரே! இது மூன்றுவர்த்திசெய்தால் ஒன்பதுஸ்தானங் கற்பிக்கப்படுகின்றது ரிஷபதானத்தில் உட்கார்ந்து வேதவிதிப்படி சங்கற்பஞ்செய்து கைகூப்பிக்கொண்டு மவுனமாய் சண்டிகேசுரஸ்தானம் போகிறது மறுபடியும் நந்திகேசுரஸ்தானம் வருகிறது பின்பு சோமசூஸ்திரஸ்தானம்போகிறது மறுபடியும் சண்டேசுரஸ்தானம் வருகிறது பின்பு நந்திகேசுரஸ்தானம் வருகிறது மறுபடியும் சண்டிகேசுர ஸ்தானம்போகிறது பின்பு ரிஷபஸ்தானம்போகாமல் சோமசூத்திர ஸ்தானம்போகிறது சோமசூத்திர ஸ்தானத்தை அதிக்கிரமித்து சண்டிகேசுரஸ்தானத்திலிருந்து ரிஷபஸ்தானம்போகிறது இந்தப்படி பிரதட்சண நமஸ்காரஞ்செய்து நந்திகேசுர ஸ்தானத்தில் ஆசாரத்துடன் ஒருபிரதட்சணஞ்செய்தால் அதுவைதீகப்பிரதட்சணம் இடம்புரிவலம்புரியாய்ச் செய்தால் வைதீகப்பிரதட்சணம் இந்தப்படி சரபாலமகாரிஷி பிரதட்சணவிதியைச் சொன்னார்.

இப்படி தினந்தோறும் சிவாலயப் பிரதட்சணஞ்செய்யவேண்டியது யாதொரு காரணத்தினாலும் மோகர்வேஷங்கொண்டு வித்தியாசமாய்ச் செய்தால் வீணாய்ப்போய்விடும் இந்தப்படி காலையில் மாலையில் பிரதட்சணஞ் செய்யவேண்டியது இப்படியாய்ப் பிராமணனுக்கு மூன்றுபிரதட்சணவிதி செய்யவேண்டியது அல்லது பதினைந்து பிரதட்சணம் செய்யவேண்டியது எட்டுப்பிரதட்சணம் பத்துபிரதட்சணம் பனிரண்டு பிரதட்சணம் சத்தியுள்ளவரையில் செய்யவேண்டியது வலம்புரியாய்ப் பிரதட்சணஞ்செய்தால் வலம்புரியாய்ச் செய்யவேண்டியது இந்தப்படி வேதத்தில் சொல்லியிருக்கின்றது பிராமணனுக்கு மாத்திரம் எப்பொழுதுஞ் செய்யவேண்டியது சத்தியவானுக்கு எப்போதும் வலம்புரி இடம்புரியாய்ச் செய்யவேண்டியது.

பிரதோஷகாலத்தில் சிவாலயத்தில் இடம்புரி வலம்புரியாய் மூன்று பிரதட்சணஞ் செய்யவேண்டியது நியமமாய் பிரமாணர் சிவாலயத்தில் இடம்புரி வலம்புரியாய்ப் பிரதக்ஷணஞ் செய்தால் அவன் வாசபெய்யாக பலத்தை யடைவான். அது எப்படி அடைவா னென்றால் பிரதட்சணத்தில் எத்தனை அடிவைத்து நடக்கிறானோ அத்தனை அடியும் அவ்வளவு வாசபெய்யாக பலன்களைகூட்டிப் சிவத்தி யானத்துடன் எப்பொழுதும் சிவாலய பிரதட்சணஞ் செய்யத்தக் கது அஷ்டாங்க சகிதமாய் சிவநமஸ்காரஞ் செய்யவேண்டியது எக் காலங்களிலும் சிவபெருமானைத் துதிக்குமளவில் முழங்கால் கை தலை மார்பு கன்னம் இதுகள் பூமியில் படும்படி சாஷ்டாங்க தெண் டநமஸ்காரஞ் செய்தால் அதுதான் அஷ்டாங்க நமஸ்காரம் இந்தப் படி பிராமணாள் அதிக எத்தினத்தோடும் சாவதானமாய்ப் பிரதிதி னமும் அஷ்டாங்க நமஸ்காரஞ் செய்யவேண்டியது இந்தப்படி இரு பது நமஸ்கரம் பதினொரு நமஸ்காரம் எட்டு நமஸ்காரம் யாதாமொ ருவர் சாவதானமாய் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்கிறார்களோ அவர்கள் சிவாக்கினையால் தனது தேகத்தை தத்தஞ் செய்தவர்கள் இதற்கு யாதேனுஞ் சந்தேகமில்லை சத்தியஞ் சத்தியமென்று அக த்தியமுனிவர்சொன்னார்.

இதன்றி பின்னுஞ் சொல்லுகிறார் காலையில் சிவபூசைசெய்து பத்து பிரதட்சணஞ் செய்யவேண்டியது மத்தியானத்தில் பூசை செய்து பனிரெண்டு பிரதட்சணஞ் செய்யவேண்டியது விபூதி தரிக் காமலும் சிவாலயப் பிரதட்சணஞ் செய்யக் கூடாது பிரதட்சணஞ் செய்யும்போது சுவாமிக்கும் நந்திக்கும் குறுக்கே போகக் கூடாது சிவபூசை தெற்குமுகமாயிருந்து செய்யலாகாது வில்வத்தினாலே அர்ச்சனை செய்தாலது பூரணமாகியபலன் ஆருத்ரா நட்சத்திரமுஞ் சோமவாரங் கூடியதினம் இரவில் சிவபூசை செய்தால் பிரமத்திமுத லாகிய பாவங்கள் தீரும் உலகத்திலுள்ளவர்கள் மத்தியகாலத்தில் வேதவிதிப்படி சிருபெருமானாகிய எம்பெருமானைப் பூசித்து அதிதி யரோடும் போசனஞ் செய்து சிவாகம சிவபுராணம் கதாசிரவணம் பண்ணி சாயுங்காலத்தில் சத்தியுள்ளவரையில் செப பூசைமுதலான துஞ் செய்து எம்பெருமானைப் பூசித்தால் பூலோகத்தில் அகண்டயி சுவரியத்தையும் தீர்க்காயுளையும் அடைந்து பின்பு பரமசிவசாரூப்பி யத்தை யடைகிறார்கள். கௌதம மகாரிஷி சொல்லியபடி சுதாப்க ரென்கிற பிராமணன் கிருதகம்பன் அபிஷேகம் மாசிமீ பவர்ணமி

தினம் சாயுங்காலத்தில் குசஸ்தம்ப க்ஷேத்திரத்தில் சிவபெருமா னுக்கு அபிஷேகஞ் செய்து இரவில் கதாசிரவணத்துடனிருந்து மருநாள்காலையில் எப்பெருமானைப் பூசித்து சிவபத்தர்களுக்கு பிரா மணசந்தர்ப்பனை முதலானது செய்து தன்னுடைய இஷ்டபந்துக் களுடன் போசனஞ் செய்தார் இந்தபலத்தினால் சகலஐசுவரியங்க ளும் நூருபுத்திரர்களும் பிறந்து குபேரனுடைய சம்பத்து இதற் குமுன் தோல்வியடையும்படியாய் சுதாபக ரென்கிற பிராமணன் சகல ஐசுவரியத்தையும் அடைந்தாரென்றும் வெள்ளைக் கடுகு வெ ள்ளை எள்ளு இவைகளினால் எம்பெருமானைப் பூசைசெய்தால் பாவ ங்கள் நீங்குமென்று அகத்திய மகாமுனியானவர் ஒருபிராமணனு க்கு அனுக்கிரகம் பண்ணியிருக்கிறார்.

பூர்வத்தில் நிடததேசத்து இராஜாவின் பெண்சாதியை ஒரு பிராமணன் காமவிகாரஞ் சகிக்கக் கூடாமையால் பலாத்காரமாய் இராஜபத்தினியை யிழுக்க அது இராஜாவுக்குத் தெரிந்து வில்லினா லடிக்கப் போகும்போது பிராமணன் இராஜனை நோக்கி ஒரே அடி யில் என்பிராணன் போகும்படி அடித்துவிடும்என்றுசொல்வதற்கு ப்பதிலாய் அறவென்று சமஸ்கிருதச்சொல்லால்சொல்லிய பிராம ணன் வார்த்தையை இராஜன்கேட்டு நாம் அடிக்கப்போகையில்பிரா மணன்அறவென்ற சிவசத்தத்தச் சொன்னபடியால் இந்தப்பிராம ணன் மகாதவ யோகியென்று அதிக ஆனந்த சந்தோஷத்துடன் அவனுக்குப் போதுமானவரையில் திரவியங்கள் முதலாகியதுங்கொ டுத்து அவ்விடத்தில் நவரத்தினமாய் ஒருசிவாலயமும் இராஜன் கட்டிவைத்து அனேக தீபதானமுஞ் செய்தார் இந்தராஜன் ஆலய த்தைச் சுற்றிலும் அனேகவினோதமாய் வில்வத் தோட்டங்களும் புட்பவனங்களும் உண்டு பண்ணினதை அந்த தேசத்திலுள்ள ஜெ னங்க ளெல்லாம் பார்த்து அவரவரிடத்திலிருந்த திரவியத்தைக் கொண்டுவந்து அனேகசிவாலயங்களும் புட்பவனங்களும் உண்டு பண்ணி வெகுகாலம் பூமியில் போகபாக்கியங்களை யநுபவித்து பின்பு சிவசாயுச்சிய பதவியை யடைந்தாரென்று கௌதம மகாரிஷி சுதாபகரென்கிற பிராமணனைப் பார்த்துச் சொல்லுகிறார்.

ஒருபிராமணன் அனேகம்பேரைக் கொன்று அவர்கள் சொத் துக்களைப் பிடுங்கி அனேக துன்மார்க்க மாகிய பர்வத்தைச் செய்த பிராமணனை ஒரு வேடன்கண்டு தான் பிழைக்கும்படியாய் பிராம

ணனிடத்தில் பணமிருக்குதென்று நினைத்து தன் கையில் வைத்திருக்கிற நிர்மதா லிங்கத்தினாலே பிராமணன்சிரசை உடைத்தான் உடனே பிராமணன் யமலோகப்தவியை யடைந்தான். இப்படியிருக்க தருமராஜாவானவர் சித்திராபுத்திரரைப் பார்த்து இந்தப்பிராமணன் செய்தகிருத்தியம் என்னவென்று கேட்க அவர் சொல்லுகிறார் இந்தப் பிராமணன் அனேகபாவத்தைச் செய்திருந்தபோதிலும் நிர்மதா லிங்கத்தினாலே கபால மோட்சமாகி இவ்விடம் வந்திருக்கிறானென்றுசொல்ல தர்மராஜாவானவர் சிம்மாசனத்தில் உட்காரும்படி மரியாதைசெய்தார் இப்படி யிருக்கும்போது சிவபடாள்வந்து பிராமணனை அழைத்துக் கொண்டுபோய் சிவகணங்களில் ஒருவராக யிருக்கும்படி சிவபெருமானாகிய எம்பெருமான் அனுக்கிறகஞ்செய்தார் மேற்சொல்லிய வேடன் நிர்ம்தாலிங்கத்தினால் அனேகம்பிராமணனைக் கொன்று அந்த லிங்கத்துக்கு இரத்தம் பட்டிருப்பதை நல்லசுத்தமாகிய சலத்தில் சுத்திசெய்து தன்கிரகத்தில் கொண்டுவந்து வைத்து உதிர்ந்திருக்கிற வில்வத்தினால் அந்த லிங்கத்தை மூடி வைத்துக்கொண்டு அனேகநெடுநாள் இப்படியா யிருந்தான் அந்த வேடனுக்கு சுவாமியாகிய சிவபெருமான் ரிஷபவாகன ரூடராய்வந்து தெரிசனங் கொடுத்து நீ இன்னஞ்சிலநாள் சென்று பூமியில் மகிழ்ச்சியால் வாழ்ந்திருந்து மருபடியும் கைலாசத்துக்கு வரும்படி எம்பெருமான் கட்டளையிட்டு போய்விட்டார் தான் ஆகாரஞ் செய்கிற விஷயத்தில் அனேகம்பேரைக் கொன்றபோதிலும் அபூர்வ்திபூர்வகமாய் நிர்மதாலிங்கத்தை தரிசித்து வில்வபத்திரத்தினாலே மூடிவைத்திருந்தபடியால் சுவாமியாகிய சிவபெருமான் தன்னைப் பூசித்தாரென்று அதிகமனக் களிப்படைந்து பாவியாகிய வேடனுக்கு கைலாசபதவியைக் கொடுத்தாரென்று அகத்தியமுனியானவர் ஒருபிராமணனுக்குச் சொன்னாரென்று கௌதமமகாரிஷி சுதாபகரென்கிற பிராமணனுக்கு அனுக்கிரகம் பண்ணினார்.

கௌதம மகாமுனி சொல்லுகிறார் பூர்வகாலத்தில் நிர்மதாமகாநதிக் கரையில் ஒருபிராமண னிருந்தார் அவர் பிர்மக்கியானி அனேகநாள் நிர்மதாநதி தீர்த்தகரையிலிருந்துகொண்டு பரமசிவனாகிய எம்பெருமானைப் பூசைசெய்துக் கொண்டிருந்தார் இப்படியிருக்கும்போது மகாபாவியாகிய ஒருவன் நிர்மதாநதிக் கரையில் வாசமாயிருந்தான் ஆகையால் பூசைசெய்கிற பிராமணனைக் கண்டு சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து இருகைகூப்பி வணக்கத்துடன் ஒருவர்

ர்த்தை சொல்லுகிறான் ஐயா சிவலிங்கார்ச்சனை செய்கிறவரே கனவானே தனவானே நான் அனேகபாவங்களைச் செய்திருக்கிறேன் அந்தபாவங்களை யறிந்து அதற்குத்தகுந்த பிராயச்சித்தஞ் சொல்லவேண்டியதென்று கேட்க பிராமணனவன் வந்தபாவியைப் பார்த்துச் சொல்லுகிறான் உனக்கு பாவங்கள் நிர்மதாநதி தெரிசனத்தினாலும் நசித்துப் போய்விட்டது சிவலிங்க தெரிசனத்தினாலும் பாவங்கள் நீங்கிவிட்டது யாதாமொருவன் சிவபெருமானாகிய எம்பெருமானை லிங்கரூபமாய் தெரிசனஞ் செய்கிறானோ அவனுக்கு நானாவிதமான பாவங்கள் உடனே நீங்கிப் போகின்றது இந்த நிர்மதாநதியில் அபரிமிதமான சிவலிங்கங்க ளிருக்கின்றது இந்த லிங்கங்களைத் தெரிசனஞ் செய்தால் பாவங்களெல்லாம் விமோசனமாகின்றது சிவலிங்க மனனத்தினாலே தானே அபரிமிதமாயும் விசித்திரமான பாவங்கள் நசித்துப் போய்விடும் சிவலிங்கங்களுடைய சம்பந்தமான காற்றுகள் மேலே பட்டமாத்திரத்தில் நானாவிதமாயும் அகோரமான பாவங்கள் விமோசன மாகிவிடும் சிவலிங்கம் எந்தயிடத்தி லிருக்கின்றதோ அந்த இடத்தைக் குறித்து ஆராவது போகப் பிரயத்தினப் படுகிறார்களோ அவர்களுக்கு சகல பாவங்களும் நிவாரணமாகின்றது என்று வேத சுருதி பிரமாண வாதிகளாயும் சிவபத்தாளானஎங்களுக்கு தர்மா தர்மவிசார சகிதமாக சுருதியைப் பிரமாணமாய்ப் பிடித்துக் கொண்டிருக்கிறோம் பரமசிவ விஷயமான சுருதிகள் சிவபத்தாளான எங்களாலே ஆக்கிரமிக்கப் பட்டிருக்கின்றது கள்: வேதங்களிலே சிவபெருமானாகிய எம்பெருமாள் சொன்ன பிரமாணத்தை சிவபத்தியிலாசை யுள்ளவர்களால் அறியத்தக்கது.

அடாமகாபாவி உன்னாலே கூடியவரையில் சாயுங்காலம் பிறதி தினமும் சீக்கிரமாய் சிவதெரிசனந் தப்பாமல் செய்தால் பாவங்களெல்லாம் பறந்தோடிப்போம் சிவபெருமானாகிய எம்பெருமானைத் தெரிசித்தபேர்கள் சகல சம்பத்தும் தீர்காயுளு மடைவார்கள் சிவபூசை எதாவிதியாய்ச் செய்தால் சகல பாவங்களும் நிவர்த்தியாகும் சிவசாரூப்பியத்தை யடைவார்கள் யாதாமொருவன் பிராதக்காலமுதலிய காலங்களில் சிவபூசை விசேஷமாய் செய்யவேண்டியது நடுராத்திரியில் யாதாமொருவன் அதிக பயத்தியுடன் வில்வ பத்திரத்தால் பூசைசெய்தால் அவனுக்கு கோடிஜென்மங்களில் செய்த பாவங்கள் போய்விடுகின்றது அதற்கு எவ்வளவேனுஞ் சந்தேகமில்லை சிவலிங்கார்ச்சனையினால் மகாகோடிதாகிய பாவங்கள் நாச

மாய்ப் போய்விடும் சிவலிங்கார்ச்சனை எவ்வளவு வரையில் செய்யவி ல்லையோ அவ்வளவு வரையில் மகா பாதகங்களிருக்கும் பூசைசெய் தால் பரிமிதமான பாவங்கள் நெருப்பிலகப்பட்ட பஞ்சுபோல பஸ்ப மாய்ப் போய்விடும். வேதசுருதியானது மகாதேவ பூசையினாலே ஞானம் ஐசுவரியம் ஆரோக்கியம் தத்துவக் கியான முண்டாகு மென்று சொல்லுகின்றது சிவலிங்கார்ச்சனை செய்கிறவா ளசாத்தி யமாகாமல் சாத்தியமான காரியங்களை சாதிப்பார்கள், சிவபூசையி னாலே சத்துரு நாசமாகும். அக்கியானம் போய்விடும், வித்தியாசித்தி புத்திர விர்த்தி வம்சவிர்த்தி உண்டாகு மென்று வேதசுருதி சொ ல்லுகின்றதென்று கையெடுத்துக்கொண்டு சத்தியம் சத்தியமென் றுசொன்னார். கௌதம முனியானவர் பரமசிவனாகிய எம்பெருமா னுடைய பிரசாத அனுக்கிரகத்தினால் மகாவிஷ்ணு வைகுண்ட பத வியை யடைந்தார் சிவபூசை செய்து மகாவிஷ்ணு சத்துருக்களைச் செயித்தார் பிர்ம்ம விஷ்ணு தேவதைகள் சிவப்பிரசாததுக்காராய் எப்பொழுதும் அதிக பிரயத்தினமாய் பூசைசெய்து கொண் டிருந்தார்கள்.

ஆகையால் பரமசிவனை எந்நாளும் ஸ்துதி செய்யத் தக்கவர் கள் ஒருகாலத்தில் பரமசிவனுக்கு இடதுபக்கத்தில் விஷ்ணுபிறந் தார் வலதுபக்கத்தில் பிர்ம்மா பிறந்தார் ஆனபடியால் சிவபெரு மானாகிய எம்பெருமானை சதாகாலமும் பூசைசெய்ய வேண்டியது ஒருக்கால் லோகரட்சகரான சிவபெருமானாகிய எம்பெருமான் யம தர்மராசனை மார்க்கண்டேய ரிஷிக்காக காலாலுதைத்து விழத்தள் ளின சர்வக்கியான தயாளகுண பத்தபார தீனராகையால் அந்த சிவபெருமானை ஸ்தோத்திரஞ் செய்து பிர்மா விஷ்ணு முதலான தேவர்கள் எம்பெருமானுடைய அடிமுடிகளை அறியவில்லையோ அந்தச்சிவபெருமானை என்னாளும் பூசைசெய்யவேண்டியது உலக த்தில் ஜெனங்கள் சிவபூசைசெய்து எம்பெருமானுடைய கைலாய பதவியை அடைகிறார்கள் சராசரமான உலகங்களை உண்டுபண் ணின சிவபெருமானாகிய எம்பெருமானை இடைவிடாமல் பூசைசெ ய்யவேண்டியது எம்பெருமான் உலகங்களை இரட்சித்து க்ஷணகா லத்தில் பஸ்பஞ் செய்து அந்தபஸ்பமாகிய விபூதியைப் பூசிக்கொ ண்டும் வேதவேதாந்தங்களினாலே அறியத்தக்கவராயும் பூரணமா யும் சச்சிதானந்த சொரூபியாயும் சர்வவியாபியாயும் பிரபுவாயும் விபுவாயும் நிர்க்குணராயும் சர்க்குணராயும் பரமானந்த விக்கிரக

ணையும் நாமகீர்த்தனையினால் போக மோட்சங்களை கொடுக்கத் தக்க வராயும் கதாசிரவணத்தி னுடனே பக்த சனங்களுக்கு சம்சார பந்தமாகிய கடலை நீக்கத் தக்கவராயும் அந்த பந்தத்துக்கு அவிழ் தமாயிருக்கிற பரமசிவ பூசையைச் சகலருக்குங் கேட்கத் தக்கதா யும் தியானம் பூசை சமாதி செம்பந்த பசுகள் யாதொரு பரமசிவ சந்துஷ்டரா யிருக்கிறாரோ அந்த சிவபெருமான் சதாகாலமும் பக் தர்களினால் பூசிக்கத் தக்கவர் சிவபூசையினால் பிர்மா விஷ்ணுமுத லான தேவர்கள் கடைத்தேறினவர்க ளாகிறார்களோ அவர்களும் சிவபெருமானை நமஸ்காரஞ் செய்து ஒருக்கால் சகல பாவங்களி னின்றும் விடுபடுகிறார்களோ அவர்களும் முனிகளிருதய கமலத்தில் ஆரைப் பூசைசெய்கிறார்களோ அவர்களும் மனிதர்கள் யாதாமொ ருவர் சிவபெருமானுடைய நாம மிருதாபனஞ் செய்கிறார்களோ அவர்களும் பரமசிவ பூசையினால் சிவகணாதி பத்தியத்தை யடைகி றார்களோ அவர்களும் பிர்மா விஷ்ணுமுதலான தேவர்கள் யாருக்கு வேலைக்கார னாகவேண்டுமென்று இச்சிக்கிறார்களோ அவர்களும் நிட்களமாய் நிரஞ்சனமாய் சாந்தமாய் முடிவில்லாதவனா யிருக்கி றானோ அவனும் கண்டங் கறுப்பாயும் சிரசில் தங்கவர்ணமான சனடயு முள்ளவனுயும் சொல்லுகிறானோ அவனும் பிர்மா விஷ்ணு வாதிகளைக் கொல்லுகிறவனைச் சொல்லுகிறானோ அவனும் அப்ப டிக்கொற்ற பரமசிவனை எப்போதும் பூசிக்கத்தக்கது. இதிகாச முதலானதுகள் பகவானாகியசிவபெருமானை அனேகவிதமாய் வரு ணித்துச் சொல்லுகின்றது அந்த பரப்பிர்ம சொரூப சிவபெருமா னாகிய எம்பெருமானை சதாகாலமும் பூசிக்கத் தக்கது அந்தசிவபெ ருமானை ரிஷபாரூடராயும் பார்வதியி னுடைய அர்தசரீர முள்ளவ ராயும் வேதசுருதிகள் சொல்லுகின்றது அந்தச்சிவபெருமானை எந் நாளும் ஆனந்தபாட்பத்துடன் சிரமேற் காங்குவித்து அஞ்சலிவ ணக்கமாய் துதித்து மதித்து அழுது தொழுது பூசித்து அவரை யேநேசிக்கவேண்டியது அவரைகிருபா சமுத்திரமாகவும் உமாபதி யாகவும் பக்தசன பந்துவர்க்க மாகவும் சொல்லுகிறார்களோ அவர் கள் தேவர்களினாலே யாதொருபகவான் ருத்திரனென்று அதர்வண வேதத்திலே சொல்லி யிருக்கின்றதோ அந்தச் சிவபெருமானைப் பூசிக்கத் தக்கது யாதொரு பரமசிவனுடைய தத்துவத்தை அரியா மல் தேவர்கள் மோகத்தை யடைந்திருக்கிறார்களோ அவர்கள் சிவ பெருமானை அறிந்து நித்தியாளாய் கெர்பத்தில் திரும்பவும் செனன மில்லாம லிருக்கிறார்களோ அந்தச் சிவபெருமான் வேதவேதா

த்மனென்று வேதாந்தத்தில் சொல்லத் தக்கவனுகையால் நித்திய மும் பூசிக்கத் தக்கவரென்று மகாவிஷ்ணு வசனத்தைக் கேட்டு பிர்மதேவன் நிர்மதாநதி தீர்த்தக் கரையில் சிவார்ச்சனை செய்துக் கொண்டு பிர்மதேவரிருந்தார்.

பின்பு சிவலிங்கார்ச்சனையால் பிர்மதேவன் முத்தனுனர் மோட்சம் வேண்டுமென்கிற இச்சையுள்ள சனங்கள் சதாகாலமும் சிவார்ச்சனை செய்யவேண்டியது இந்த விஷயத்தில் பூர்வகாலத்தில் ஒரு பிராமணன் சிவபூசாபராபிருந்துவிபூதிருத்திராட்சங்களை யணிந்து பஞ்சாட்சரஜெபராயும் எப்போதும்ருத்திரபாராயணஞ்செய்துகொண்டுசந்தோஷ சித்தமுள்ளவராயிருந்தார் பிரசித்தமானசிவயோகத்திலிருந்து அந்த பிராமண சேஷ்டனுனவன் இரவில் உபாவாசமாய் சாகாணஞ் செய்து மிகுந்த பத்திசிரத்தையோடு சிவயோகஞ் செய்துகொண்டிருந்தாரென்று மகாவிஷ்ணு சொன்ன வார்த்தையைக் கேட்டு தேவர்கள் சொல்லுகிறுர்கள்.

ஓய் மகாவிஷ்ணுவே சிவயோகமாவதென்ன லட்சியமாவதென்ன எங்களுக்கு விளங்கச் சொல்லுமையா ஆர்உபவாச சாகாணஞ் செய்து பலத்தை யடைந்தார்கள் அந்தப் பலன்களையெல்லாம் எங்களுக்குச் சவிஸ்தாரமாகச் சொல்லுமையாவென்று மகாவிஷ்ணுவை பார்த்து தேவர்கள் கேட்க மகாவிஷ்ணு சொல்லுகிறுர்.

ஓய் தேவர்களே விதிபாதந் திருவாதிரை சோமவாரங் கூடினுல் சிவயோகதினம் அந்த தினத்தில் சிவபெருமானுகிய எம்பெருமானை பத்தியோடு சத்திவரையில் பூசை செய்தால் சகல பலன்களும் உண்டாகும் ஸ்நானஞ் செய்து அஞ்சலி பயத்துடன் மனேசல்லிய மில்லாமல் துதிசெய்கிற வர்களுக்கு சகல பாவங்களும் சஞ்சரியாமல் விட்டு நீங்குகின்றது அவன் மன்மதனைப் போல அழகுள்ளவனுயும் கர்ணனைப்போல கொடையுள்ளவனுயும் சன்மார்க்க நடையுள்ளவனுயும் திக்கெங்கும் கீர்த்தி பெற்றவனுயும் எக்காலமுஞ் செல்வத்தி லுற்றவனுயும் தீர்க்காயுளைப் பெற்று இகத்தை விட்டு சுகத்தை யடைகிறுன் அந்த சிவயோக தினத்தில் மகாதேவராகிய எம்பெருமானை வெள்ளைக் கடுகு காட்டெள்ளு அட்சதை அகண்டவில்வம் இது முதலானதுகளினுல் பூசை செய்தால் சகல பாவங்களிலும் நின்று விடுப்பட்டு யோகவா

ணுயும் அதிக போகவாஞயும் புண்ணிவாஞயும் நன்மை எண்ணிய வாஞயும் ஆவான் யாதொன்றையுமேவான் துன்மார்கத்திற் போகான் இதற்கு யாதேனுஞ் சந்தேகமில்லை கோடாகோடி சூரியசந்திர கிரணங்களுக்கும் கோடி பவர்னமி தினங்களுக்கும் சமானமான சிவயோக தினத்தில் அதிக பிரயத்தினத் தோடும் யாதாமொருவன் தனங்களினுலே சிவபத்தாளை பூசைசெய்கிருனே அவனுக்கு மகாகொடிதாகிய பாவங்கள் அவனை விட்டோடிப் போகின்றது. அதற்கு எவ்வளவேனுஞ் சந்தேகமில்லை அந்த சிவயோகதினத்தில் உபவாசசாகாணஞ் செய்து நான்கு சாமங்களிலும் சிவார்ச்சனை செய்து அந்த சிவயோகத்தில் நிர்மதாநதிக் கரையில் ஞானவாஞய் பூசைசெய்துக்கொண்டு இராப்பகல் நித்திரையில்லாமல் பூசையில் அதிக ஆனந்தத்தோடும் சாகாணஞ் செய்துக்கொண் டிருக்கும் போது அந்தப்பிராமணனுக்கு பூதபவிழ வர்த்தமானகாலம் இந்தக் காலங்களில் நடந்த காரியங்களெல்லாம் ஞானவிஷயமாச்சுது இனி மேல் பிறக்கப்போகிற சென்மங்களுடைய வரிசைக்கிரமங்களை மனே இந்திரியங்களுக்கு பிரத்தியட்ச விஷயமாய் ஒன்றுந்தோன்ருமல் துக்கா கிரந்தஞ யிருந்தானென்று மகாவிஷ்ணுவானவர் தேவர்களைப் பார்த்துச் சொன்னுர்.

ஓய் தேவர்களே அந்தப்பிராமணன் எண்பத்தெட்டு லட்சம் துஷ்டமான யோனிகளில் ஆயிர மாயிரஞ் செனமம் ஒவ்வொரு யோனியில் உண்டாக வேண்டும்படி யமைத்திருக்கின்ற தென்று அந்தப் பிர்ாமணன் இந்த சென்மங்களை யெடுத்து நாம் துக்கப்படாமல் எப்படி யிருக்கப் போகிருமென்று அநேகவிதமாய் எண்ணிக்கொண்டு எதிலை அந்த செனமங்களை் யடைந்தாலும் நாம் மரணகாலத்தில் சிவஸ்மரணை பூர்வகமாய் செனமங்களிருக்க மாட்டாது உலகத்தில் எவன் தேசாந்தகாலத்தில் சிவஸ்மரணையோடுங் கூட துக்கமில்லாமல் பிராணனை விடுகிருனேஅப்படிப்பட்ட மகா புண்ணியவானுக்கு சென்மாந்த சம்பந்தங்களில்லை எவனுவது சிவஸ்துதியோடு தேகததைவிடுகிருனே அவன் பாக்கியவான் மகா யோக்கியவான் பாவத்தை செய்யாதவன் அனேகப் பிரகாரம் ஸ்ரீமகாதேவபூசை சேய்கிருனே அவனுக்கு சிவஸ்துதியோடு மரணபதவி யுண்டாகுமென்று நிர்மதாநதி தீர்த்தத்தில் பூசை செய்துக்கொண்டிருந்த பிராமணன் ஓய் தேவர்களே இந்தப்படி மனங்கசிந்து நசிந்து சிந்தித்து வந்தித்து அனேகவிதமான கிரிமி பதங்

கப் பட்சிபசாசம் பாம்பு பல்லி தேள் மட்சகம் மட்சிகம் மதகுண எரும்புமுதலான யோனிகளில்சென்மமெடுக்க ஆரம்பித்தாரென்று மகாவிஷ்ணுவானவர் சொன்னார்.

பின்பு அந்தப்பிராமணன் அனேக சென்மங்களெடுத்து கடைசியில் ஆண்ரூபம்நீங்கி பெண்ரூபமெடுத்துப் பறச்சியாய்ப் பிறந்து தத்துவ கியானங்களோடு சமர்த்தியாயிருந்தாள் ஒருநாள் நாய்மாமிசத்தை எடுத்துக் கொண்டுபோய் சுடுகாட்டுத் தீயில் சமயல் செய்துக் கொண்டிருந்தாள் இப்படி யிருக்கும்போது அவ்விடத்தில் ததீசிமகாரிஷி வந்தார் சண்டாளஸ்திரி அவரைப்பார்த்த வுடனே நாய் மாமிசம் சமயல் செய்கிற ஓட்டை தோலால் மூடினாள் அதைக் கண்டு ததீசிமகாரிஷி அதிக ஆச்சரியப்பட்டு இந்த பரச்சி சுடலை நெருப்பில் சாராயத்துடன் நாய்மாமிசம் சமயல்பண்ணுகிறாள் இவள் இதையேன் தோலாலே மூடுகிறாளென்று கியானதிருஷ்டியால் பரச்சியைப் பார்த்து ஓபறச்சி நீயிந்த நாய்மாமிசம் சமையல் செய்கிற ஓட்டை ஏன் தோலாலே மூடுகிறாய் இதுவே மிகவும் மாமிசங்களுக்குள் அதிககுரைவானது நாய்மாமிசம் ,தோலாலே மூடின காரணத்தை சொல்லென்று கேட்டார் ததீசிமகாரிஷியென்று மகாவிஷ்ணுவானவர் தேவர்களை பார்த்துச் சொல்லுகிறார்.

ஓதேவர்களே அந்தப் பறச்சி ததீசி மகாரிஷியைப் பார்த்து அதிக பயபத்தியோடு வணங்கி இணங்கி சண்டாள ஸ்திரி சொல்லுகிறாள் ஓய் ததீசிமகாரிஷியே லோகத்தில் தேவதேவோத்தமரான மகேசரரைத் தவிர அதிகமேலானதெய்வும் வேறேயிருக்குதென்று சொல்லுகிற சனங்கள் பார்க்கப் போகுதென்று பயத்தினால் தோலாலேமூடினேன் சிவபெருமானாகிய எம்பெருமானை உலகத்திலே விஷ்ணுபிர்மாமுதலான தெய்வங்களுக்குச் சமானமாய் சொல்லிக்கொண்டிருக்கிற சனங்கள் பார்க்கப் போகுதென்கிற பயத்தினால் தோலால் மூடினேன் சிவபத்தி சிவபூசை சிவத்தியானம் சிவனடியார்களுடைய பூசை விபூதி ருத்திராட்சங்களில்லாமல் சைவசாரப்பிரஷ்டராான நாமக்காரர்கள் பவுத்தன் துலுக்கன் கார்ப்பிரஷ்டன் சுவேதமுகன் இன்னம் அனேகமான ஆத்துமர் முதலான பாஷாண்டிகள் பாக்கப் போறார்களென்று பயத்தினாலே தோலால் ஓட்டைமூடினேனென்று ததீசிமகாரிஷியைப் பார்த்து பறச்சியானவள் சொன்னாளென்று மகாவிஷ்ணுவானவர் தேவர்களைப் பார்த்துச் சொல்லுகிறார்.

ஓ தேவர்களே இந்தப்படி பறச்சிசொன்ன வார்த்தையைக் கேட்டு ததீசிமகாரிஷி அதிகஆச்சரியப்பட்டு இந்தப்பறச்சி தத்துவக்கியானத்தை என்னமாய் அறிந்துக்கொண்டாளென்று தியானித்தார் பின்பு பறச்சியை வினயத்துடன் அதிகஆதரவோடும் வணங்கிச்சொல்லுகிறார் ததீசி மகாரிஷி நீதனியாய் கடைத் தேறினாய் தத்துவங்களை யறிந்தாய் நீ பிராமணசிரேஷ்டன் உன்னுருவம் எனக்குத்தெரியாது என்று ததீசி மகாரிஷி பறச்சியைப் பார்த்துச் சொன்னாரென்று மகாவிஷ்ணுவானவர் தேவர்களைப் பர்த்துச் சொல்லுகிறார் ஓ தேவர்களே இந்தப்படி பத்திவினயத்தோடு ததீசிமகாரிஷி சண்டாள ஸ்திரியைப் பார்த்து இந்தக் கேதாரீசுரருக்கு பூசைசெய்யவேணுமென்று வந்தேன் கேதாரீசுரரை பூசித்து அனேகம்பேர் தத்துவக் கியானங்களையும் நல்லலட்சணத்தையும் அடைந்தார்கள் பரமசிவனாகிய எம்பெருமானை ஸ்தோத்திரஞ் செய்தபேர்கள் நிருமலசித்தர்க ளாவார்களென்று ததீசிமகாரிஷி சொன்னார் நாய்மாமிசம் சமயல் பண்ணின சண்டாள ஸ்திரியானவள் அனேகசென்ம பூர்வகானத்துட னிருந்து கேதாரீசுரரைப் பூசைசெய்து பத்தியோடு முத்தியடைந்தாள்

பூர்வகாலத்தில் ஒருபிராமணன் காசியாத்திரை போகும்போது நடுவழியில் ஒருமகாபாவிவிஷந்தீண்டிற்றென்று பிராமணனைப் பார்த்துச் சொல்லி தன் பிராணனைவிட்டான் பிராமணன் அவனுக்கு விபூதியையெடுத்து திரேகமெல்லாம் பூசினான் அப்பாது எமகிங்கிராள் வந்து விபூதி தரித்தவனை நாம் என்னவிதமாய்க் கொண்டுபோகிறதென்று யோசித்தார்கள் இப்படி யிருக்கையில் சிவகிங்கராள் வந்து எடுத்துக் கொண்டுபோய் சிவசந்நிதானத்தில் சேர்க்க சிவபெருமானாகிய எம்பெருமான் சிவகணங்களோடுசேர்ந்துக்கொண்டார் காசிக்குப்போன பிராமணன் நிர்மதாநதி தீர்த்தம்போய் அங்கேசிவபூசை செய்துக்கொண்டிருந்த ஐம்பதுகோடி ரிஷீசுராளை அழைத்துக்கொண்டு காசி க்ஷேத்திரம் போய் கங்காஸ்நானஞ் செய்து தண்டாயுதபாணி தொண்டிவிநாயகர் விசுவேசர் விசாலாட்சி அன்னபூரணி காளபயிரவர் இவர்களை பூசைசெய்து அவ்விடத்தில் சிலநாளிருந்து சகலரும் மோட்சத்தை யடைந்தார்கள் இந்தப்படிசொன்ன மகாவிஷ்ணுவினுடைய வார்த்தையை பிர்மா முதலான தேவர்கள் கேட்டு கேதாரீசுரராகிய சிவபெருமானை ஸ்தோத்திரம் செய்தார்கள்பின்னும் விஷ்ணுவானவர் பிர்மா முதலானதேவர்களைப்பார்த்

துச் சொல்லுகிறார் நான் எக்காலமும் வைகுந்தத்திலிருப்பது எனக்கு திருப்தியல்லவென்று இந்த கும்பகோணமாகிய மகாஸ்தலத்தில் சதாகாலமும் ஆதிகும்பேசராகிய எம்பெருமானைப் பூசைசெய்துகொண்டிருக்கிறேனென்று சொல்ல பிர்மாமுதலான தேவர்களும் ஆதிகும்பேசராகிய சிவபெருமானை ஸ்துதிசெய்து அனேக பலன்களை அடைந்தார்களென்று விஷ்ணு பிர்மா முதலர்ன தேவர்களுக்கு சொன்ன கதையை கௌதமர் சுதாபகருக்குச் சொன்னாரென்றும் அகஸ்திய மகாமுனியானவர் காசியில் முகுத்தி மண்டபத்தில் சைவமகாமுனிக்கு சொன்ன கதையை கோமதி நதிதீர்த்தத்தில் சத்திரயாகஞ் செய்கிற காலத்தில் சவுனகாரிஷி மகா முனீஸ்பரர்களுக்கு சூதபுராணிக மகாரிஷி கும்பகோணஸ்தல மகாத்மியத்தை அனுக்கிரகம் பண்ணினார் இந்தக் கதையை வெறுப்பில்லாமல் விருப்போடு கேட்டவர்களும் எழுதிப் படித்தவர்களும் இதைமுடித்தவர்களும் அச்சடிததவர்களும் ஆதிகும்பேசருடைய அனுக்கிரகத்தினாலே அத்தியந்த பத்தியினால் முத்தியை அடைவார்கள்.

கும்பகோணம்

# மாமாங்கபுராண

## வசனம்.

முற்றுப்பெற்றது.

வெளியாய் விட்டது! வெளியாய் விட்டது

# பெரிய எழுத்து

# பகவத்கீதை வசனம்

18-அத்தியாயங்களும் அடங்கியது.

படங்களுடன் சுத்தப்பதிப்பு,

இதில் வேதாந்த ரஹஸ்யத்திற்கு உபமானமாய் ஸந்தர்ப்பானுசாரமாய் உபநிஷத்வாக்யங்கள் ஆங்காங்கு உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. யோகஞானங்களை விளக்கிக் காட்டும் நூற்களில் இதுவே முதன்மை பெற்றதுவாம். அலையுமனதை அகத்தில் அடக்குவதற்கு அரியபெரிய கருவியாகும். கற்றோரேயன்றி மற்றோரும் களிப்புடன் வாசிக்கத்தக்கதுவாம் ஏழைகளும் எளிதில் வாங்கும்பொருட்டே இதேயாதிரியான பெரிய எழுத்தில் ஆண், பெண், சிசு பால்யர்முதல் யாவரும் வாசிக்கத்தக்கது.

| | | | |
|---|---|---|---|
| அழகிய சித்திரப்படங்களுடன் | 0 | 10 | 0. |
| தலைவாங்கிய தனுவதி அல்லது தங்கமாளிகையின் இரகஸ்யம் | 0 | 12 | 0 |
| இரத்தினமாலை அல்லது இருகொலைகளின் இரகஸ்யம் | 0 | 6 | 0 |
| வனஜமோகனி or வனிதையின் உபாயம் | 0 | 6 | 0 |
| மணவாழ்க்கையின் மர்மம் | 0 | 8 | 0 |
| சகல தேவதை வசியமென்னும் மலையாள மாந்திரீக அரிச்சுவடி | 0 | 4 | 0 |

என். கணபதி புத்தகசாலை,

12. அருணாஜல முதலி வீதி

சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை.